
மன்னார்குடி வரலாறு

(மன்னார்குடியைப் பற்றிய
முதல் வரலாற்று நூல்)





பானுகுமார்

ராஜம் பதிப்பகம்

மன்னார்குடி வரலாறு

(மன்னார்குடியைப் பற்றிய முதல் வரலாற்று நூல்)

பானுகுமார்


ராஜம் பதிப்பகம்,
பி.58, ஏழாவது குறுக்குத் தெரு, அண்ணாநகர்,
செங்கற்பட்டு - 603 001.
E-mail: banukumar.v@gmail.com
Website : banukumar.in

நூல் குறிப்பு

நூல் பெயர்	:	மன்னார்குடி வரலாறு
ஆசிரியர்	:	பானுகுமார்
நூல் வகை	:	வரலாறு
பதிப்பாசிரியர்	:	வி.குமார், எம்.ஏ.எச்.டி.சி
முதல் பதிப்பு	:	2009 டிசம்பர்
மொழி	:	தமிழ்
உரிமை	:	ஆசிரியருக்கு
நூலின் அளவு	:	டம்மி
மொத்தப் படிகள்	:	1100
மொத்தப் பக்கங்கள்	:	316
தாளின் தன்மை	:	வெண்மை
கட்டுமானம்	:	சாதாரணக்கட்டு
நூல் வெளியீடு	:	ராஜம் பதிப்பகம் பி.58, ஏழாவது குறுக்குத் தெரு, அண்ணாநகர், செங்கற்பட்டு - 603 001.
ஒளி அச்சு மற்றும் அச்சிட்டோர்	:	Prompt Offset Printers, Chennai.
அட்டை வடிவமைப்பு	:	திருமதி. G. அம்பிகா, கோவை
விலை	:	**ரூ.160**

இந்நூலின் எந்தப் பகுதியைக் கையாண்டாலும் இந்நூலின் முறையைப் பின்பற்றி எழுதினாலும் ஆசிரியரின் முன் அனுமதி பெறவேண்டும்.

இந்தப் புத்தகத்தின் அடித்தளத்தை
எனக்கு அமைத்துக் கொடுத்ததற்காக
நான் என்னென்றும் நன்றி கடன் பட்டுள்ள
என் தாய் தந்தையர்க்கு சமர்ப்பனம்



வடிவேலு – எத்திராஜம்

பொருளடக்கம்

1. மன்னார்குடியின் புவியியல் அமைப்பு : 14-28

1. முன்னுரை, 2. நில அமைப்பு, 3. மன்னார்குடி அமைப்பு, 4. இயற்கை அமைப்பு, 5. எல்லைகள், 6. மக்கட்தொகையும் பரப்பளவும், 7. மண்ணின் அமைப்பு, 8. கனிம வளம் , 9. சீதோஷ்ண நிலை, 10. மழையளவு, 11. நாட்டுப் பிரிவுகள், 12. மன்னார்குடியும் நாட்டுப் பிரிவும், 13. மன்னார்குடி நகராட்சி, 14. தொகுப்புரை.

2. மன்னார்குடி ஊர்ப் பெயராய்வு : 29-46

1. முன்னுரை, 2. ஊர்ப் பெயர்களின் தோற்றமும் வளர்ச்சியும், 3. ஊர்ப் பெயராய்வின் பயன்கள், 4. மன்னார்குடி பெயர்க்காரணம், 5. ஊர்ப் பெயர்களின் முடிவுகள், 6. ஊர், 7. கல்வெட்டுச் சான்றுள்ள ஊர்கள், 8. மங்கலம், 9. கோட்டை, 10. புரம், 11. நத்தம், 12. தேவதானம், 13. தோட்டம், 14. கோயில், 15. கோட்டகம், 16. காடு, 17. குளம், 18. அக்ரஹாரம், 19. நெம்மேலி, 20. பெருக வாழ்ந்தான், 21. தற்போது மாறி வழங்கும் ஊர்கள், 22. சாதாரண மக்களால் வழங்குதல், 23. வரலாற்றுப் பெயரால் வழங்குதல், 24. முழுவதும் பெயரால் வழங்குதல், 25. சாதிப் பெயரால் வழங்குதல், 26. உள்ளிக்கோட்டை சரகம், 27. வடுவூர் சரகம், 28 கோட்டூர் சரகம், 29. பாலையூர் சரகம், 30. தலையாமங்கலம் சரகம், 31. மன்னார்குடி சரகம், 32. தொகுப்புரை.

3. மன்னார்குடி தொன்மை வரலாறு : 47-64

1. முன்னுரை, 2. பிரபஞ்ச வரலாறு, 3. பூமியின் வரலாறு, 4. ஒரே கண்டம், 5. பாரதம், 6. தமிழக வரலாறு, 7. இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம், 8. பழமொழிகள் தரும் வரலாற்றுச் செய்திகள், 9. செண்பகாரண்யம், 10. வண்டுவராபதி, 11. குலோத்துங்கச் சோழ விண்ணகரம், 12. தென்னகத்து துவாரகை, 13. வாசுதேவபுரி, 14. மண்ணில் மிக்கது மன்னார்குடி, 15.மறையோர் மிக்கது மன்னார்குடி, 16. மன்னர்கள் கோயில், 17. தஞ்சை அரண்மனையில்,

18. மன்னார்குடி, 19. மகாதேவப்பட்டிணம், 20. திருமக்கோட்டை, 21. இலட்சுமி நரசிம்மபுரம், 22. பூதமங்கலம், 23. தளிக்கோட்டை, 24. சித்தன்வாழூர், 25. தண்ணீர்குன்னம், 26. ஓவர்சேரி, 27. தொகுப்புரை.

4. மன்னார்குடியை ஆண்ட மன்னர்கள் : 65-102

1. முன்னுரை, 2. முதல் இராசாதிராசன், 3. முதலாம் குலோத்துங்கன், 4. மூன்றாம் குலோத்துங்கன், 5. மூன்றாம் இராஜராஜன் 6. மூன்றாம் இராஜேந்திர சோழன், 7. ஜடாவர்ம சுந்தரபாண்டியன், 8. குலசேகரபாண்டியன் 9. வீரபாண்டியன், 10. போசாளர் வீரராமநாதன், 11. பராக்கிரம பாண்டியன், 12. அச்சுதப்ப நாயக்கர், 13. இரகுநாத நாயக்கர், 14. விஜயராகவ நாயக்கர், 15. சகஜி மன்னன், 16. துக்கோஜி, 17. பிரதாப் சிங், 18. முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன், 19. தொகுப்புரை

5. சுதந்திரப் போரில் மன்னார்குடி : 103-134

1. முன்னுரை, 2. வாஸ்கோடகாமா, 3. வரலாற்றை மாற்றிய ஐந்து ஷில்லிங், 4. கிழக்கிந்தியக் கம்பெனி, 5. சுதந்திரப் போராட்டம், 6. தென்னாட்டு பர்தோலி, 7. வங்கப் பிரிவினை, 8. ஒத்துழையாமை இயக்கம், 9. மன்னார்குடியில் காங்கிரஸ் மாநாடு, 10. மன்னார் குடியில் மகாத்மா, 11. பாரதியாருக்கு அடைக்கலம், 12. உப்பு சத்தியாக் கிரகம், 13. மீண்டும் ஒத்துழையாமை இயக்கம், 14. நாடகத்தில் சுதந்திர எழுச்சி, 15. இரண்டாம் உலகப் போர், 16. வெள்ளையனே வெளியேறு, 17. சிறையும் - தண்டனையும், 18. சுதந்திரம், 19. தியாகச்சுடர் காகாஜி , 20. கே. பாஸ்யம் ஐயங்கார், 21. பென்சனர் நகரம், 22. தியாக தீபங்கள், 23. தொகுப்புரை.

6. மன்னார்குடி வழிபாட்டுத் தெய்வங்கள் : 135-156

1. முன்னுரை, 2. ஸ்ரீராஜகோபாலசாமி திருக்கோயில் வரலாறு, 3. மகாபாரதம், 4. பிரமாண்டபுராணம், 5. பாகவதமும் விஷ்ணு புராணமும், 6. கருடஸ்தம்பம், 7. கோயில் அமைப்பு, 8. புண்ணிய தீர்த்தங்கள், 9. கிருஷ்ண தீர்த்தம், 10. வழிபாடு, 11. மூலவர், 12. உற்சவர், 13.ஸ்ரீ வித்யா ராஜ கோபாலன், 14. ஸ்ரீ சந்தான கோபாலன் 15. கோயிலைப் பாடிய மகான்கள், 16. சுரங்கப் பாதை,

17. தீட்சிதர்கள், 18. கோயில் ஆட்சி, 19. பணியாளர்கள், 20. கைலாசநாதர் கோயில், 21. அமைப்பு, 22. திருவுண்ணாழிகை, 23. செப்புத் திருமேனிகள், 24. கல்வெட்டில் கைலாசநாதர் கோயில், 25. அண்ணாமலைநாதர் கோயில், 26. அமைப்பு, 27. சன்னதிகள், 28. செப்புத் திருமேனிகள், 29. கல்வெட்டில் அண்ணாமலைநாதர், 30. ஜெயங்கொண்டநாதர் கோயில், 31. அமைப்பு, 32. குழம்புப் பால் திருவிழா, 33. செப்பேடுகள், 34. சித்தர்களும், முனிவர்களும், 35. மேரு சித்தர், 36. சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள், 37. வண்டுவராபதி மடம், 38. திருமலை நம்பி தாத்தாச்சாரியார், 39. மணவாள மாமுனிகள், 40. உத்திரயோகி 41. தொகுப்புரை.

7. மன்னார்குடியில் பாடல் பெற்ற கோயில்கள் : 157-172

1. முன்னுரை, 2. பாமணி, 3. திருவெண்டுரை, 4. திருக்களர், 5. கோட்டூர், 6. தொகுப்புரை.

8. மன்னார்குடியும் திருவிழாக்களும் : 173-190

1. முன்னுரை, 2. சித்திரை, 3. வைகாசி, 4. ஆனி, 5. ஆடி, 6. ஆவணி, 7. புரட்டாசி, 8. ஐப்பசி, 9. கார்த்திகை, 10. மார்கழி, 11. தை, 12. மாசி, 13. பங்குனித் திருவிழா, 14. கண்ட பேரண்டபட்சி, 15. ராட்டிணம், 16. வெண்ணெய்த்தாழி, 17. தேர்த் திருவிழா, 18.கிருஷ்ணதீர்த்தம், 19. தெப்பத் திருவிழா, 20. தொகுப்புரை.

9. சமயமும் சமுதாயமும் : 191-208

1. முன்னுரை, 2. சமயங்கள், 3. சைவம் 4. வைணவம், 5. பௌத்தம், 6.சமணம், 7. கிறிஸ்தவம், 8. இஸ்லாம், 9. வாழும் மக்கள், 10. இருப்பிடங்கள், 11. குடும்ப வாழ்க்கை,12. உறவு முறைகள், 13. திருமணம், 14. சடங்குகள், 15. நம்பிக்கைகள், 16. நோன்புகளும் வழிபாட்டு முறைகளும், 17. வட்டார வழக்குச் சொற்கள், 18. பண்பாடு, 19. பழக்க வழக்கங்கள், 20. வெற்றிலை சீவல் 21. உணவு முறைகள், 22. விளையாட்டுகள் 23. தொகுப்புரை.

10. நீர்ப்பாசனமும் விவசாயமும் : 209-224

1. முன்னுரை, 2. பாசன வகைகள், 3. நிலத்தடி நீர், 4. ஆறுகள், 5. காவிரித்தாய், 6. கோரையாறு, 7. பாமணியாறு, 8. முள்ளியாறு, 9. பகிர்மானம், 10. பாலங்கள், 11. ஏரிப்பாசனம், 12. குளம், 13. கிணறுகள், 14. கால்வாய்கள், 15. கல்வெட்டுக்களில் கால்வாய்கள், 16. குடிநீர் வசதி, 17. வேளாண்மைத் தொழில், 18. வானிலையும் பருவங்களும், 19. சோழநாடு சோறுடைத்து, 20. நெல் உற்பத்தி, 21. மூன்று போக சாகுபடி, 22. தொகுப்புரை.

11. மன்னார்குடியில் கல்வியும் தொழிலும் : 225-248

1. முன்னுரை, 2. பள்ளிக்கூடம் 3. பின்லே உயர்நிலைப் பள்ளி, 4. ராஜு சாஸ்திரிகள், 5. தேசிய உயர்நிலைப் பள்ளி, 6. மன்னை நாராயணசாமி, 7. இதர பள்ளிக் கூடங்கள், 8. தொழிற்பயிற்சி நிலையங்கள், 9. கணிப்பொறி நிலையங்கள், 10. கல்லூரிகள், 11. முதியோர் கல்வியில் மூத்த மன்னார்குடி, 12. கனகசபையின் கல்வித் தொண்டு, 13. முதியோர் கல்வி பாடநூல், 14. கௌமார குருகுலம், 15. இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம், 16. கௌமார குருகுலத்தின் தொடர்பணிகள், 17. கோட்டூர் ரெங்கசாமி நூலகம் 18. தொழில்கள், 19. தொழிற் சாலைகள், 20. மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 21. தொகுப்புரை.

12. மன்னார்குடியும் வணிகமும் : 249-262

1. முன்னுரை, 2. வணிகர்களது குடியமர்வு, 3. சாரிகைக் கோட்டை, 4. மடிகைகள், 5. பதினெண் விஷயத்து நகரத்தார், 6. வரி வசூல், 7. வணிகர்களது கோயில் கொடை, 8. இன்றைய வணிகம், 9. சந்தைகள், 10. நாணயங்கள், 11. இராசகோபாலச் சக்கரம், 12. கோபாலச் சக்கரம், 13. செப்பேடுகளில் இராசகோபாலச் சக்கரம், 14. இலக்கியத்திலும் இராசகோபாலச் சக்கரம், 15. வங்கிகள், 16. சாலைகள், 17. போக்குவரத்து, 18. தொகுப்புரை.

13. மன்னார்குடியில் சுற்றுலா : 263-268


1. முன்னுரை, 2. கோயில்கள், 3. ஹரித்ராநதி, 4. வடுவூர் பறவைகள் சரணாலயம், 5. உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், 6. முத்துப்பேட்டை வனப்பகுதி, 7. விலங்குகள் சரணாலயம், 8. கேளிக்கைகள், 9. இளைப்பாறும் விடுதிகள், 10. தொகுப்புரை.

14. கலைகள் வளர்த்த மன்னார்குடி : 269-304

1. முன்னுரை, 2. சிற்பக் கலை, 3. சுதையில் இரகுநாதன், 4. விமானத்தில் சுதைச் சிற்பங்கள், 5. ஓவியம், 6. கூத்து, 7. நாட்டியம், 8. நட்டுவனார்கள், 9. நாடகக் கலை, 10. திரைப்படம் - பத்மஸ்ரீ மனோரமா, 11. இசை, 12. கதாகாலட்சேபம், 13. கொன்னக்கோல் பக்கிரிப் பிள்ளை, 14. நாதஸ்வரம்,15. மிருதங்கம், தவில் 16. இலக்கியம், 17. விறலி விடுதூது, 18. விஜய குணா சரிதம், 19. திருவாய்மொழி, 20. தி. ஜானகிராமன், 21. மண்வாசனை 22. சுவாமிநாத ஆத்ரேயர், 23. வடுவூர் துரைசாமி ஐயங்கார், 24, படைப்பாளிகள் பலர், 25. கவிதைகள், 26. உவமைக் கவிஞர் சுரதா, 27. தொகுப்புரை.

15. கல்வெட்டுகளும் செப்பேடுகளும்: 305-312

16. துணைநின்ற நூல்கள் 313-316



புலவர் **க. தியாகராஜன்**
பேராசிரியர்.

அறிவுத் திருக்கோயில்,
ஆழியார்.

காலப்பெட்டகம்

வரலாறு எழுதுவது என்பது வேறு. வரலாறாக வாழ்வது என்பது வேறு. இந்த இரண்டையும் செய்தவர்தான் புதுச்சேரியைச் சேர்ந்த நாட்குறிப்பு வேந்தர் ஆனந்தரங்கர்.

ஆனந்தரங்கப் பிள்ளை மட்டும் நமக்குக் கிடைக்காமல் போயிருந்தால் - பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு முழுமையான தமிழக வரலாறு நமக்குக் கிடைக்காமலேயே போயிருந்திருக்கும். இந்த வரலாற்று நாயகர் அவதரித்த யாதவ குலத் தோன்றல் தான் மன்னார்குடி பானுகுமார்.


தான் பிறந்த மண் மேன்மை பெற வேண்டும் என்பது அறிஞர்களின் ஆதங்கம். அவ்வகையில் மன்னார்குடி வரலாறு என்ற நல்ல வரலாற்று நூலினை ஞானச் செல்வர் பானுகுமார் வடிவமைத்து எழுதி உள்ளார்கள்.

கடமையை கடவுள் பணியாக ஆற்றி வருபவர். செய்வனவற்றைத் திருந்தச் செய்யும் பண்பாளர். காலத்தைப் பொன்போல் போற்றித் தொண்டாற்றி வருபவர். அவர் எண்ணத்தால், சொல்லால், செயலால், எழுத்தால் பலருக்கும் உதவி வரும் பெருந்தகையாளர்.

மண்ணில் மிக்கது மன்னார்குடி. அவ்வகையில் மன்னார்குடியை பற்றிய முதல் வரலாற்று நூல் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நூல் தென்தமிழ் போல் விளங்கி, உலக வரலாற்றுப் பக்கங்களில் காலப்பெட்டகமாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பது உறுதி.

அன்புடன்
புலவர் **க. தியாகராஜன்**

பானுகுமார்
Freelance Journalist / Writer.



தாய் மண்ணே வணக்கம்

நிகழ்காலத்தின் அறிவொளியை இறந்த காலத்தின் மீது பாய்ச்சி உண்மைகளை உயிர்த்தெழச் செய்வதே வரலாறு ஆகும்.

இன்றைய நம்முடைய வாழ்தலின் வேர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வாழ்வொளிகளில் நிலை கொண்டுள்ளது. வாழ்வியல் நெறிகளும், பண்பாட்டு மரபுகளும், சிந்தனை ஒளிர்வுகளும், செயலாக்கத் திறன்களும் என்ற அனைத்திலும் வரலாற்றின் - வகைகளின் - சாரம் இறங்கியுள்ளது.

பழம் பெருமையை அறிந்து வெட்டிப்பேச்சு புகழுரைக்காக அல்ல. வரலாற்றைத் தோண்டிப் பார்த்து - மாறாக இன்றைய வாழ்தலுக்கான தகவமைப்புக்காக - இன்றைய வாழ்தலைச் சரியாக நிலை நிறுத்திக் கொள்வதற்காக மூடிப்புதைந்து போயுள்ள வரலாற்று முகங்களை நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்.

வரலாறு என்பது இன்றைய அறிவியல் சமுதாயத்திற்குத் தேவையான ஒன்று. எப்படி வாழ்ந்தோம் என்பது அறியப்பட்டால் எப்படி வாழ வேண்டும் என்பது தெரிய வரும். எனவே ஒவ்வொரு மனிதனுடைய, ஒவ்வொரு ஊரினுடைய, ஒவ்வொரு பொருளுடைய வரலாற்றையும் அறிவது அவசியம்.

மன்னார்குடியில் எனது பால்ய கால நினைவுகளை "ஞாபகம் வருதே ஞாபகம் வருதே" என்ற புத்தகமாகப் பதிவு செய்த போது வரலாற்று நிகழ்வுகள் நிறையக் கிடைத்தன. இவற்றைச் சுருக்கி எழுதி இலக்கிய நூலாக, பயண நூலாக வடிவமைத்தேன். இப்புத்தகத்தைப் பார்த்து வியந்த எனது நண்பர் இயக்குனர் திரு.விசு இதனை வெளியிட்டார்கள்.

"புத்தகத்தில் ஊரைப்பற்றிய செய்திகள் விடு பட்டுள்ளனவே" என்று டாக்டர் அசோக்குமார் கேட்டார்கள். எல்லாவற்றையும் எழுதினால் வரலாறு ஆகிவிடுமே என்று பதிலளித்த போது தான் "மன்னார்குடி வரலாறு " எழுத வேண்டும் என்ற நினைவு. ஏற்கனவே விதைக்கப்பட்ட விதை முளைத்தெழுந்தது.

சொந்த மண், மண்ணின் மனித முகங்கள், அவர்களது சந்தோஷங்கள், சோகங்கள், கோபங்கள், எல்லாம் கலந்த கலவை வீச்சு- கலாச்சாரம் - சுலபமாக உதறிவிட முடியாது. இந்த மக்களைப் பார்க்கின்ற போது "இது நம் மண், நம் மக்கள்" என்று என்னையுமறியாமல் உணர்வுகள் மேலிடுகின்றன.

வேலை நிமித்தமாக, சூழ்நிலைகள் காரணமாக சொந்த மண்ணை விட்டு வெகு தூரம் வந்து விடுகிறோம். ஊரை விட்டு பிரிந்து தொலைதூரத்தில் இருப்பதால் ஏற்பட்ட ஒரு வித சோகம் தான், படைப்பாளியான எனக்கு வரலாற்று நூல் எழுத உந்து சக்தியாக அமைந்தது. "ஊர் எனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. ஊருக்காக நீ என்ன செய்தாய்," என்று என்னுள் அடிக்கடி எழுந்த கேள்வியும் இந்நூல் எழுதக் காரணமாக அமைந்தன.

மன்னார்குடி வரலாற்றை ஆய்வு நோக்கத்தில் எழுதி முடிக்க வேண்டும் என நினைத்துத் தொடங்கிய போது ஒரு மலைப்பாக இருந்தது. இம்மலைப்பு 25 மாதங்கள் இழுத்துச் சென்றது. தவம் கிடந்து நூல்களைப் பெற்று எழுதியது தனிச் சுமையாக இருந்தது. பல நேரங்களில் பசி பாராமல் சுற்றி அலைந்து திரிந்து தேனீ போல் தகவல்களைச் சேகரிக்க நேரிட்டது.

கன்னிமாரா நூலகத்திற்கும், ஆவணக் காப்பகத்திற்கும், தொல்லியல் துறைக்கும் பலமுறை சென்றுள்ளேன். இண்டர் நெட்டில் பல நாட்கள் எனை மறந்தேன். மன்னார்குடியைச் சுற்றியுள்ள பாதைகளில், வயல் வரப்புகளில், சேற்று நிலங்களில் இருந்தபடி ஆய்வுப் பணி தொடர்ந்தது. சாதிக்க வேண்டும் என்ற ஒரு உந்துதல். இன்னலிலே இன்பம் உள்ளது.

இயற்கை வனப்பில் மன்னார்குடி எழில் கொஞ்சுகிறது. சுதந்திரப் போராட்டத்தால் இந்தியாவின் புனித நகரமாகிறது. மன்னார்குடி நெடிய வரலாற்றுப் பின்னனியுடைய சிறப்பிற்குரியது. மகாத்மா காந்தி முதல் பேரறிஞர் அண்ணா வரை அரசியல்வாதிகள் மட்டுமல்ல, ஆன்மீகவாதிகள், விஞ்ஞானிகள் போன்ற பலரும் பாராட்டிய ஊர் மன்னார் குடியாகும். சான்றோர் பலர் வாழ்ந்த, வாழுகின்ற ஊர்.

மன்னார்குடியைப் பற்றிய பல செய்திகள் F.R. Himingwey என்ற ஆங்கிலேயர் தொகுத்த கெசட்டிலும் காண முடிகிறது.

சென்னை எழும்பூரில் உள்ள ஆவணக் காப்பகம், தஞ்சாவூர் அரண்மனை நூலகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் உள்ள மோடி ஆவணங்களிலும் மன்னை பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கண்டு வியப்படைந்தேன்.

நான் பணியாற்றிய காஞ்சிபுரத்திலும், பிறந்த மன்னார்குடியிலும் கால் வைத்த இடமெல்லாம் கோயில்கள்.

எண்ணற்ற சிற்பங்களும், கற்கோபுரங்களும் மனிதனுடைய ஐந்து விரல்களால் ஆனவை என்பதை எண்ணிப் பார்த்த போது எனக்கு வியப்பு இரட்டிப்பாயிற்று. அடடா, அற்புதமான சிற்பம், மண்ணையும் , விண்ணையும் இணைப்பது போன்ற கற்பனை. மாபெரும் மகான்களும், அறிஞர்களும், கலைச் சிற்பிகளும், நடமாடிய மன்னை மண்ணில் நடக்கும் போது, நம்மை அறியாமலேயே நம் நெஞ்சத்தில் பேருவுவகை ஏற்படுகிறது.

நான் பிறந்து வளர்ந்த மன்னார்குடியில் இதுவரை அறியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

இப்புத்தகத்தின் பிரதியைப் பார்த்த தமிழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர், தற்போதுள்ள ஆய்வு (Ph.D.) களை விடப் பிரமாதமாக படைக்கப்பட்டுள்ளது. இதை அப்படியே கொடுங்கள், டாக்டர் பட்டம் (Ph.D.) தருகிறோம் என்றார்கள். இந்தப் பாராட்டை விட டாக்டர் பட்டம் ஒன்றும் பெரியதல்லவே?

இதிலுள்ள பல வரலாற்று நிகழ்வுகளைப் பல அறிஞர் களிடம் பகிர்ந்து கொண்ட போது மன்னையின் நெடிய வரலாற்றுச் செய்திகளைக் கேட்டு வியப்படைந்தனர். இதில் சில செய்திகள் விடுபட்டிருக்கலாம். இக்குறைகள் என்னுடையதே. நிறைகள் அனைத்தும் இந்த மண்ணுக்கே.

இந்த இனிய முயற்சிக்கு எனக்கு அமைந்த சூழல்- சுற்று வட்டாரம், கிடைத்த நண்பர்கள், கற்ற கல்வி. செய்யும் தொழில், பல்வகை மக்கள் தொடர்பு, மூத்தோர் நட்பு, கிடைத்த வாய்ப்புகள், என் தனிப்பட்ட வாழ்க்கை முறை, மண்ணின் மீது எனக்கிருந்த

பாசம் எல்லாமே நூல் சிறப்பாக உருவாகக் காரணமாயிருந்தன. இப்பணிக்கு உந்து சக்தியாக இருந்த ஒரு சிலரையும் இங்கே குறிப்பிடுதல் எனது கடமையாகும்.


மன்னார்குடி செல்லும் போதெல்லாம் மறுப்புச் சொல்லாமல் என்னுடன் வந்து பல உதவிகள் புரிந்த இளவல் ஆறுமுகத்திற்கு நன்றி கூறியாக வேண்டும். கேட்கும் விபரங்களை எல்லாம் வெயில் மழை பாராது அலைந்து சேகரித்து காலத்தில் அனுப்பி வைத்து உதவினார்கள். அவருக்கு என் நன்றி, நன்றி.

வரலாற்று அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும், அடிப்படைத் தரவுகளாக இந்நூலினை படித்துப் பயனுறுவர் என்பதில் ஐயமில்லை. அதன் மூலம் தமிழக வரலாறு புதிய தரவுகளுடன் வலம் வரும் என்பதில் ஐயமில்லை.

வழக்கமான வணக்கங்களுடன்,

செங்கற்பட்டு,
25.12.2009

பானுகுமார்.



1. மன்னார்குடியின் புவியியல் அமைப்பு

1. முன்னுரை

மனிதன் இயற்கைச் சூழலோடு போராடியே தனது தேவைகளைப் பெற வேண்டிய நிலையில், (தற்காலம் வரை) நிலவியல் கூறுகள் வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

"பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்"

என்ற பாரதியாரின் வாக்குப்படி பாரத பூமி தொன்மை வாய்ந்த பழம்பெரும் பூமி. இப்பழம்பெரும் பூமியில் மன்னார்குடிப் பகுதியின் வரலாற்று நிகழ்வுகளில், நிலவியல் கூறுகளின் தாக்கத்தை அறிய வேண்டியது அவசியமாகும்.

2. நில அமைப்பு :

பூமி உருண்டையின் நில நேர்க்கோட்டில் (அட்ச ரேகை - Latitudes) 11.2833° நில குறுக்குகோட்டில் (தீர்க்க ரேகை - Longitude) 79.5500° -யில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 15.24 மீட்டர் உயரத்தில் உள்ளது.[1] இவ்வட்டம் **காவிரியின்** கழிமுகப் பகுதியில் இருப்பதால் மிகவும் செழிப்பு வாய்ந்த பகுதியாக விளங்குகிறது.

3. மன்னார்குடி அமைப்பு :

காவிரியின் கிளை நதியான **பாமினி** ஆற்றங்கரையில் அமைந்துள்ளது மன்னார்குடி. இந்திய வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த பழமையான ஊராகும்.

சென்னையிலிருந்து 322 கி.மீ. தூரத்திலும், திருவாரூரில் இருந்து 28 கி.மீ. தூரத்திலும், தஞ்சாவூர், கும்பகோணத்தி லிருந்து 40 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் சாலைகள் வழியாக நான்கு திசைகளிலும் இணைந்துள்ளது. 12 கி.மீ. தூரத்தில் இருக்கும் நீடாமங்க லத்திலிருந்து இரயில் வசதி உள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் (பழைய தஞ்சாவூர் மாவட்டம்) மன்னார்குடி ஒரு முக்கியமான வட்டமாக அமைந்துள்ளது. இவ்வட்டத்தில் 128 கிராமங்கள் உள்ளன. மன்னார்குடி பல மாட்சிமைகளைப் பெற்ற ஊராகும். தமிழ்நாட்டுக்கே, ஏன் பாரத நாட்டுக்கே பெருமை சேர்க்கும் ஆன்மீக அருளும், கனிம வளமும், பண்பு நலமும் கொண்ட ஊராகும்.

4. இயற்கை அமைப்பு :

இவ்வூர் சமவெளியான பகுதியில் அமைந்துள்ளது. இங்கு குன்றுகளோ, மலைகளோ, பெரிய காடுகளோ இல்லை.

ஆனால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சை பசேல் என்று இரத்தினக் கம்பளம் விரித்தாற் போன்ற நெற்பயிர்களைக் கொண்டுள்ளது.

மன்னார்குடி வட்டம் முழுவதும் செடிகள் அடர்ந்து காணப்படுகின்றன. இங்குள்ள தெப்பக் குளத்திற்கு வடபால் பாமணியாறு ஓடுகிறது. இவ்வூருக்கு வடக்கிலிருந்து வடமேற்கில்

மாலை போல இது ஓடுகின்றது. காவிரியின் கிளை நதியான வெண்ணாற்றிலிருந்து நீடாமங்கலத்திற்கு மேற்கே (முக்கொம்பு) மூன்று கிலோ மீட்டர் தொலைவில் பிரிகின்றது. கோரையாறும், முள்ளியாறும் இவ்வட்டத்தில் ஓடுகின்றன.

தற்போது இவைகளில் சுமார் ஆறு மாதங்களுக்குத் தண்ணீர் செல்கிறது. மன்னார்குடி நகரத்தில் 64 குளங்களும், ஏராளமான கிணறுகளும் இருந்துள்ளன. ஆனால், தற்போது 17 குளங்களே உள்ளன. குளங்கள் குறைந்து வருவது குறித்து மக்களிடையே கவலை அதிகரித்துள்ளது. இங்கு ஏரிகள் கிடையாது. இவ்வூருக்கு மேற்கே வடுவூரில் ஒரு பெரிய ஏரி உள்ளது. இங்கு நெற்பயிர்களும், வாழையும், கரும்பும், மக்காச்சோளமும், பருத்தியும் பயிர் செய்யப்படுகின்றன.

நகரின் உள்ளேயும் தென்னை, மா, புளிய மரங்கள் அழகு செய்கின்றன.

5. எல்லைகள் :

மன்னார்குடி நகரத்தின் எல்லைகளாக கிழக்கில் கைலாச நாதர் கோயிலும், முதல், மூன்றாம் சேத்திகளும், சேரன் குளமும், மேற்கில் மூவாநல்லூரும் நெடுவாக் கோட்டையும், வடக்கில் பாமணியாறும், இராமபுரமும், தெற்கில் கோபிரலியமும், அசேசமும் அமைந்துள்ளன.

வட்டத்தின் எல்லைகளாக கிழக்கில் திருத்துறைப்பூண்டி, திருவாரூர் ஒன்றியப் பகுதிகளும் மேற்கில் தஞ்சாவூர், ஒரத்த நாடு, பட்டுக்கோட்டை ஒன்றியப் பகுதிகளும், வடக்கில் நீடாமங்கலம், கொரடாச்சேரி ஒன்றியப் பகுதிகளும், தெற்கில் மதுக்கூர், முத்துப்பேட்டை ஒன்றியப் பகுதிகளும் அமைந்துள்ளன.

1910ஆம் ஆண்டிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்தின் வட்டமாகவும் 1-1-1997 முதல் திருவாரூர் மாவட்டத்தின் வட்டமாகவும் திகழ்கிறது.

6. மக்கட்தொகையும் பரப்பளவும் :

2001ஆம் ஆண்டின் கணக்குப்படி மன்னார்குடி நகர மக்கட்தொகை 61,478 பேர்கள். ஊரின் மொத்தப் பரப்பளவு 11.55 சதுர கிலோ மீட்டர்.[2] வட்டத்தின் மக்கட் தொகை 2,87,019 பேர்கள். இவர்களில் ஆண்கள் 1,42,543 பேர்களும் பெண்கள் 1,44,476 பேர்களும் உள்ளனர். 2001 Census வளர்ச்சி விகிதம் : 5.92 (1991-92) மக்கள் நெருக்கம் : 538 எழுத்தறிவு : 76.07% வட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1207 சதுர கிலோ மீட்டராகும்.[3]

7. மண்ணின் அமைப்பு :

மன்னார்குடி **காவிரி** டெல்டாவின் பழைய பகுதிகளில் ஒன்றாகும். இது குன்றுகள் அற்ற ஆற்று வண்டல் நிறைந்த சமவெளிப் பிரதேசமாகும். தமிழகத்தின் மத்திய மண் மண்டலப் பகுதியில் அமைந்துள்ளது. 1,000 மீட்டர் ஆழம் வரை வண்டல் மண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.[4] பாமணி ஆற்றுக்கு கிழக்கே உள்ள பகுதிகளில் களிமண்ணும் மேற்கே வடுவூர் வரை இருமண்பாடு அமைப்பாகவும் உள்ளது.

8. கனிம வளம் :

ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய அளவில் மன்னார்குடிப் பகுதிகளில் நிலக்கரி இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. இதுவரை 19,500 கோடி டன்கள் தரமான நிலக்கரி இருப்பது தெரிய வந்துள்ளது. [Moisture 40 to 50%, - Ash 4 to 12%, Volatile Matter 18 to 23%, Fixed Carbon 17 to 20%, Caloric Value 2200 to 3200 Kal/kg]

நிலக்கரி தோண்டி எடுக்கும் பணி இன்னும் தொடங்க வில்லை. விவசாய நிலங்கள் அதிகமிருப்பதால் இப்பணி தாமதமாகிறது. இப்பணியைத் தொடங்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மன்னார்குடிக்கு நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கிறது.[5] இவ்வூரில் நிலக்கரிப் படிவ வளம் இருப்பது வளரும் அறிவியல் உலகிற்கு இவ்வட்டம் அள்ளித்தரும் அற்புதச் செல்வங்கள் என்பதில் ஐயமில்லை.

9. தட்பவெட்ப நிலை :

மன்னார்குடி வட்டம் பூகோள ரீதியான அமைப்பில் சமவெளிப் பிரதேசமாக உள்ளது. காடுகளோ, மலைகளோ இல்லாதிருப்பினும், வளம் கொழிக்கச் செய்யும் ஆறுகளை நிரம்பப் பெற்றுள்ளது.

வடகிழக்குப் பருவக்காற்றின் மூலமே இவ்வட்டம் மழை பெறுகின்றது. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெருமளவிலான மழை பெய்கின்றது.

கோடைக் காலத்தில் சில இடங்களில் நீர் வறண்டு விடும் அளவிற்கு வெப்பம் உள்ளது. இவ்வட்டத்தின் வெப்ப அளவு அதிகபட்சமாக 36.6° சென்டிகிரேடாகவும், குறைந்தபட்ச அளவு 32.5° சென்டிகிரேடாகவும் உள்ளது. ஈரப்பதம் 68% ஆகும்.

குளிர்காலத்தில் அதிகபட்சமாக 23.5° சென்டிகிரேடும், குறைந்தபட்சமாக 22.8° சென்டிகிரேடும் குளிர் உள்ளது. மார்கழி, தையிலும் குளிர் உள்ளது.[6]

10. மழையளவு :

இங்கு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வட கிழக்குப் பருவக் காற்றால் மழை பெய்கிறது. சனவரி, பிப்ரவரி மாதங்களில் சற்றே அதிகமான குளிரும், மே, சூன், சூலை

மாதங்களில் வெயிலால் வெப்பம் மிகுதியும் இருக்கும். சூலை, ஆகஸ்டு மாதங்களில் வறண்ட மேற்கு காற்று வீசும். சூன் 1987லிருந்து மே 1988 வரை 1074.9 மில்லி மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது.[7] கடந்த ஆண்டு பெய்த மொத்த மழையளவு 1386.5 மி.மீ. ஆகும்.

11. நாட்டுப் பிரிவுகள் :

ஒவ்வொரு கிராமத்தின் நிர்வாகமும் அவ்வூரில் உள்ளவர் களாலேயே நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் இப்போது பல கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அந்த ஊருக்கு மட்டுமல்லாது, அதனை அடுத்துள்ள வேறு சில ஊர்களுக்கும் பொதுவான விஷயங்களைக் கவனிக்க அக்கிராமங்களின் பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி, அவற்றிற்கும் மேலாகப் பஞ்சாயத்து யூனியன்களையும் நிறுவியிருக்கிறார்கள்.

இம்முறை மிகப் பழங்காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வருகின்றன என்பதனைக் கல்வெட்டுக்களின் மூலம் அறிய முடிகிறது. ஒரு நாட்டைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதால் அந்நாட்டை ஆளும் அரசு எளிதாகவும், சிறப்பாகவும் நிர்வாகம் செய்யலாம்.

கி.பி.9ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் சோழப் பேரரசு தோன்றி படிப்படியாகத் தனதாட்சியைத் தமிழகம் மட்டுமல்லாது வெளியிலும் பரப்பியது. இதனால் சோழப் பேரரசில் ஆரம்பத்தில் மிகக் குறைவாக இருந்த நாட்டுப் பிரிவுகள் இடைக் காலத்திலும், இறுதியிலும் எண்ணிக்கையில் அதிகமாயின. புதியனவாகத் தோன்றிய பிரிவுகளுக்கு அரசர்களின் பட்டங்களும், அரச குடும்பத்தினரின் பெயர்களும், நாட்டுப் பிரிவின் பெயராக வைக்கப்பட்டன.

ஒவ்வொரு நாடும் இயற்கை அமைப்பை ஒட்டிப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 'கோட்டம்' என்றும், வளநாடு என்றும், கூற்றம் என்றும் அவை வழங்கப் பெற்று வந்தன. இவை பல கிராமங்களையும் தன்னுள் அடக்கிய பகுதியாக விளங்கின. இன்றைய வழக்கில் ஓரளவிற்கு ஒரு தாலுக்கா அளவில் இவை விளங்கியிருக்கலாம்.

இதைத் தவிர அந்தணர்களுக்கு வழங்கிய பகுதிகளாக "பிரம்மதேயம்", "சதுர்வேதி மங்கலம்" என்பனவும் இருந்தன. "தேவதானம்", "திருவிடையாட்டம்" என்பன கோவிலுக்குச் சொந்தமானவைகளாக விளங்கின.

வணிகர்கள் வாழ்ந்த பகுதி 'நகரங்கள்' என்று அழைக்கப் பட்டிருக்கிறது. ஓர் ஊரினுள் அடங்கிய சிற்றூர்கள் 'பிடாகை' எனப்பட்டிருக்கிறது.

12. மன்னார்குடியும் நாட்டுப் பிரிவும் :

மன்னார்குடியில் காணப்படுகிற எந்த ஒரு கல்வெட்டிலும் மன்னார்குடி என்ற பெயர் இடம் பெறவில்லை. கல்வெட்டில் காணப்படும் பாம்புணிக் கூற்றம்[8] என்பது இன்று பாமணி என்ற ஊராகத் திகழ்கிறது. இதுபோன்றே சுத்தமல்லி வளநாடு[9] என்பதும், சித்தமல்லி என்ற பெயரில் மன்னைக்கு அருகே உள்ளது.


இவ்வாறு இந்த ஊர்கள் இன்றளவும் இருக்கையில், இராசாதிராசச் சதுர்வேதி மங்கலம்,[10] குலோத்துங்கச் சோழ விண்ணகர்,[11] இராசேந்திர விண்ணகரம் என்றிருந்த மன்னையின் பழைய பெயர் அழிவுற்றதற்குக் காரணம் தெரியவில்லை. ஆனால் ஒரு கல்வெட்டில்[12] 'மன்னார் கோயில்' என்ற பெயர் வருகிறது. இதே போல் வேறு ஒரு கல்வெட்டிலும் உள்ளது.[13]

பேரிளமை நாடு :

ஜெயங்கொண்ட சோழப் பேரிளமை நாடு
ராஜாதிராஜப் பேரிளமை நாடு
நாலாயிரப் பேரிளமை நாடு
ஆளவந்தான் பேரிளமை நாடு
கங்கை கொண்ட பேரிளமை நாடு[14]

வளநாடு, கூற்றம் :

முதற்குலோத்துங்கன் கல்வெட்டில் சுத்தமல்லி வளநாடு[15] என்றும், **மூன்றாம் இராஜராஜன்** கல்வெட்டிலும் சுத்தவல்லி வளநாட்டு[16] தனியூர் கல்வெட்டிலும் அதே வளநாடு என்றும் மூன்றாம் இராசேந்திரனின் கல்வெட்டுகளில்[17] முறையே சுத்தமல்லி வளநாட்டு தனியூர், என்றும், ஒரு கல்வெட்டில் உய்ய கொண்ட வளநாட்டு கருவிலியான குலோத்துங்கச் சோழ[18] என்ற ஒரு வளநாடு என்றும் வருகிறது. மேலும் இவனுடைய 33ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றில் "இராசேந்திர சோழ வளநாட்டுப் புரங்கரம்பை நாட்டு, குலோத்துங்க சோழ விளாகத்து"[19] என்ற ஒரு வளநாட்டுக் குறிப்பு தெரிவிக்கிறது. மேலும் ஒரு (நாடு) நாட்டின் பெயரும் குறிப்பிடப்படுகின்றது.



சுந்தர பாண்டியன் கல்வெட்டிலும், சுத்தவல்லி வளநாட்டுத் தனியூர்[20] என்ற வளநாட்டுக் குறிப்பும் வந்துள்ளது.

பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு[21] இவ்வளநாட்டைக் கூறுகிறது. விக்கிரம பாண்டியனின்[22] கல்வெட்டும் இதனைக் குறிப்பிடுகிறது.

வீரகோடீஸ்வரன் கல்வெட்டும்,[23] வீர ராமநாதனின் கல்வெட்டும்,[24] இவ்வளநாட்டைப் பற்றி குறிப்பிடுகின்றன.

அரசன் பேர் காணப்படாத எண் கல்வெட்டில்[25]

"உய்யகொண்டார் வளநாட்டு கருவில நாட்டு
குலோத்துங்க சோழ நல்லூர்"
சுத்தவல்லி வளநாட்டு தனியூர் இராசாயிராஜச்
சது வெதங்கல"
"இராசேந்திர சோழ வளநாட்டு புரங்கரம்பை
நாட்டு....."

என்ற மூன்று வளநாடும் இடம் பெறுகின்றன.

தஞ்சை மாராட்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட நிலப் பகுதியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு பிரிவும் "சுபா" என்று அழைக்கப்பட்டது. இப்படி அமைக்கப்பட்ட சுபாக்களுள் மன்னார்குடியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.[26]

தற்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு கோட்டங்களுள் மன்னார்குடியும் ஒன்று. மன்னார்குடி வட்டத்தில் மன்னார்குடி, கோட்டூர் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும், ஆறு பிர்க்காக்களும், 94 ஊராட்சிகளும், 128 கிராமங்களும் உள்ளன.

13. மன்னார்குடி நகராட்சி :

மன்னார்குடி நகராட்சி பழம்பெருமை வாய்ந்தாகும். 1866-இல் 12 கவுன்சிலர்களுடன் இது செயல்படத் தொடங்கியது. 1883-இல் கவுன்சிலர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்தது. 1903-இல் எட்டாக குறைக்கப் பெற்றது. 1873 -74-இல் ரூ.21,940 செலவில் 12 மைலில் உள்ள வடவாறிலிருந்து வாய்க்கால் மூலம் நகரத்தில் உள்ள பல குளங்களுக்குத் தண்ணீர் நிரப்ப புதிய திட்டம் செயல் படுத்தப் பட்டது. ரூ.2,500 நிதி செலவீட்டில் மூன்று ஆரம்ப பள்ளிகளையும், 13 உதவி பெறும் பள்ளிகளையும், மருத்துவ மனையும் நிர்வகித்தது.[27]

நூற்றாண்டு கண்ட இந்நகராட்சி 23.03.1970-இல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 05.10.1978 முதல், முதல்நிலை நகராட்சியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் 64 குளங்களும், 190 தெருக்களும் உள்ளன. தெருக்களின் நீளம் 64 கிலோ மீட்டராகும். நகரில் 125 குப்பைத் தொட்டிகளும், குப்பைகளை அள்ள நான்கு வாகனங்களும், 140 சுகாதாரப் பணியாளர்களும், குப்பைகளைக் கொட்ட மூன்று யார்டுகளும், 6 கி.மீ. தூரத்திற்கு பாதாளச் சாக்கடையும், 11 கி.மீ. தூரம் திறந்த வெளிச் சாக்கடையும் சுற்றுப்புறச் சுகாதாரத்தை செம்மைப் படுத்துகின்றன. 2,287 தெரு விளக்குகள் உள்ளன. 8 ஆரம்பப் பள்ளிகளையும், 2 மகப்பேறு மருத்துவ மனைகளையும், 8 மருந்த கங்களையும், 8 சத்துணவு மையங்களையும், 226 பணியாளர் களையும் கொண்டு செம்மையாக நிர்வகிக்கப்படுகிறது. வரி விதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11,500 ஆகும்.[28]

14. தொகுப்புரை :

மன்னார்குடியின் தொன்மை வரலாறு அங்குள்ள நில அடுக்குகளால் அறிய முடிகிறது. கனிம வளங்களும், வண்டல் மண் படிந்த பகுதிகளும் ஊரை வளப்படுத்தும் காரணிகளாகும்.


இந்த வகையில் மன்னார்குடி அனைத்துச் சிறப்பும் பெற்ற இடமாகும். இதனைச் சுற்றி ஹரித்ராநதி, பாமணி, திருக்களார், வடுவூர் போன்ற சுற்றுலாத் தளங்கள் உள்ளன.

தெய்வீகப் பேரொளியைச் சிந்தி எழில் சிறந்து விளங்கும் வட்டம் மன்னார்குடி. தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றுகின்ற ஆன்மீகப் பலகனியாகவும், கலைக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. சுற்றிலுமுள்ள ஊர்களும் மன்னையின் பழமைக்குப் பழமை சேர்க்கச் சான்றுகளைத் தருகின்ற ஊர்களாக அமைந்து உள்ளன.


அடிக்குறிப்புகள்

1. இன்டர்நெட்டில் மன்னார்குடி பகுதிகள்
2. மன்னார்குடி நகராட்சியின் 2004-2005 நிர்வாக அறிக்கை, பக்.2
3. வட்ட தாசில்தார் அலுவலக தகவல் பதிவேடு
4. தமிழ்நாட்டின் புவியியல் - சக்தி வேங்கட குருசாமி - பக்.125
5. இன்டர்நெட்டில் மன்னார்குடி
6. தஞ்சாவூர், மணிமேகலைப் பிரசுரம், பக்.28
7. Statistical Hand Book of TamilNadu, 2005, Pg.57
8. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 96 /1897
9. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 103/1897
10. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 87 /1897
11. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 103 /1897
12. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 108 /1897
13. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 96 /1897
14. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 104/1897
15. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 103/1897
16. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 99, 98/1897
17. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 105A/1897
18. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 91/1897
19. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 92/1897
20. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 90/1897
21. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 87, 100/1897
22. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 86/1897
23. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 97/1897
24. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 85/1897
25. தெ.இ.க. பகுதி -6, A.R.No. 93A/1897
26. தி.மா.தொ.வரலாறு, பக்.87
27. Madras District Gazetteers Thanjavur Vol.I, Chapter XIV - Page.213
28. இன்டர்நெட்டில் மன்னார்குடி நகராட்சி

❖❖❖


மன்னார்குடி நகர வரைபடம்


NEEDAMANGALAM TALUK
ORATHANADU TALUK
PATTUKKOTTAI TALUK
THIRUTTHURAIPOONDI TALUK
MOOVARKHOTTAI
VADUVUR MEL PATHI
VADUVUR
EDANGAN KOTTAI KEE. LAYUR
PARUTHI KOTTAI
KALANJINEERA
VADA KARA VAYAL
KAZHANIYIR
VADUVUR ARARA-RAM
EDANGAN KOTTAI MELAIYUR
MOOVANALLUR
PAMANI
ARAYATHUR
GAVALA KARAN
VADUVUR THEN PATHI
KARANKOTTAI
KALLUR KEEZHAI
MELA VASAL
KAILASANATHA KAVIL
MANNARGUDI
MUDAL SETHI
MALAIYARAYA NALLUR
KUNNIYUR
SERU-MANGANAM
PERAIYUR
NEDUVAK KOTTAI
KOMBA KUDI
SERAH KULAM
NALASETHI
KANDA MANGALAM
ADHI CHA-PURAM
NEMMELI
THIRUPPALA KUDI
VADAPATHI
PANAIYUR
KATTUR
KOTTUR
KARUVAK-KURUCHI
MAHADEVA PATTINAM
ULLIKKOTTAI
THULASENDRA-PURAM
THALAYA MANGALAM
PAIN-GATTUR
VATTAN
THALIKKOTTAI
KOOPPACHI DEVA-KOTTAI
PAINGANADU
RAJENDRA-PURAM
PARAVAKKOTTAI
RAJA RAJESWARA PURAM
ORATHUR
NALLUR
VALLUR-PARAI
NELUVA-THUR
VENGA-THEN-KUDI
NARAYANAPURAM
MELA-NATHAM
THIRUMA-NIKOTTAI
PALAIYUR
NARAYELI NALAPPAI
THENKAL
PERUMBAI MARUTHUR
KULA MANICKAM
DEVA-DANAM
ELAVANUR
PERUGA VAYALUR
MANNUKKU MUNDAN
SITHA MALLI
SERU-KALATHUR
PUTHA KARAM
NACHIYUR


RAINFALL
NAGAPATTINAM
NANNILAM
1164
PONDI STATE
VALANGAIMAN
1066
1036
THIRUVARUR
THANJAVUR
KODAVASAL
NEEDAMANGALAM
1297
1053
MANNARGUDI
NAGAPATTINAM
1208
1287
THIRUTHURAI POONDI
PALK STRAIT
NORTH EAST MONSOON
WINTER
SUMMER
SOUTH WEST MONSOON
1208mm MEAN ANNUAL RAINFALL

2. மன்னார்குடி ஊர்ப் பெயராய்வு

1. முன்னுரை

ஓர் ஊர்ப் பெயரை ஆய்வு செய்வது ஊர்ப் பெயராய்வு எனப்படும். எப்போது அந்த ஊருக்கு இப்பெயர் வந்தது? இப்பெயர் எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? முன்னர் எப்படி வழங்கப் பட்டது? இப்போது எப்படி வழங்கப்படுகிறது என்பன போன்ற ஆய்வுகளைச் செய்வதுதான் ஊர்ப் பெயராய்வு. ஊர்ப் பெயராய்வு செய்வதின் மூலம் அந்த இடத்தைப் பற்றிய முழு வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

மன்னார்குடி பெயரின் தோற்றம் பற்றி அறிவதற்கு, அவற்றுடன் தொடர்புடைய புராணக் கதைகள், பழமொழிகள், பாடல்கள், கல்வெட்டுகள், சாசனங்கள், இலக்கியங்கள் போன்ற பல்வேறு பொருள்கள் துணை செய்தன. இவற்றின் துணை கொண்டு ஊரின் தோற்றத்தை ஆய்வு செய்தபோது சில உண்மைகள் தெரியவந்தன.

2. ஊர்ப் பெயர்களின் தோற்றமும் வளர்ச்சியும்

மனித இன வரலாற்றிற்கும் ஊர்ப் பெயர்களின் தோற்றத் திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாடோடியாக அலைந்து கொண்டிருந்த மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு ஓரிடத்தில் கூட்டமாக வாழத் தொடங்கியபோது பெயர்கள் தோன்றியிருக்கலாம் என்பதே ஊர்ப் பெயர்களின் தோற்றத்துக்கான தலையாய காரணம் எனலாம்.

மனித இனம் ஒரு குழுவாக - சமூகமாக ஆங்காங்கே ஏதேனும் ஒரு பகுதியில் சிறிது காலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்தான் இடப் பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும், ஒரு இனத்தை (விலங்கு, தாவரம்) இன்னொரு இனத்திடமிருந்து பிரித்துக் காட்ட இனப் பெயரையும் வழங்கியதைப் போன்று, நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்று வேறுபடுத்திக் காட்ட இடப் பெயர்களை அமைத்துக் கொண்டனர் ஆதிகால மக்கள் என வரும் கூற்று உறுதி செய்வதைக் காணலாம்.[1]

சிற்சில உறைவிடங்கள் சேர்ந்து ஊர்கள் உருவாகிய நிலை படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

ஆங்காங்கே பல ஊர்கள் காணப்பட்டதால் அவ்வூர்களை வேறுபடுத்தியுணர வேண்டிய அவசியம் அவர்களுக்கு நேர்ந்திருக்கலாம். குறிப்பிட்ட ஒரு ஊரைக் குறிப்பிடுவது எப்படி என்ற சிக்கல் அவர்களிடம் தோன்றியிருக்கும். அச்சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற முயற்சியின் பயனாகவே ஊர்ப் பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும்.

தமிழ் மொழியில் இன்றுள்ள நூல்களில் காலத்தால் பழமையானது தொல்காப்பியம். அவ்விலக்கண நூலிலேயே ஊர், தேயம், பதி ஆகிய சொற்களின் வழக்கைக் காண முடிகிறது.

> "ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்
> யாருஞ் சார்த்தி அவையவை பெறுமே"[2]

என்ற மரபியல் நூற்பாவில் யாவர்க்கும் உரியன எவையென்று கூறுமிடத்து ஊர், இயற்பெயர், சிறப்புப் பெயர், தத்தம் தொழிலுக்கேற்ற கருவி ஆகியன எல்லாரையும் சார்த்தி வரப்பெறும் என்று கூறுகிறார் **தொல்காப்பியர்.** எல்லோருக்கும் உரியன என்று குறிப்பிடும் அவர் முதலில் ஊரைக் குறிப்பிடுவதிலிருந்து ஊர் என்ற பெயர் அந்நாளிலேயே பெருவழக்கமாக இருந்துள்ளது என்பதனையும், எல்லோருமே ஏதேனும் ஓர் ஊரில் வாழ்ந்துள்ளார்கள் என்பதையும் உணர முடிகிறது.

சங்க இலக்கியங்களில் ஊர் என்ற சொல்லாட்சியைப் பல இடங்களில் காண முடிகிறது. அக இலக்கியங்கள், புற இலக்கியங்கள் யாவற்றிலுமே பெரும்பாலும் ஊர் என்ற சொல்லாட்சியைக் காண முடிகிறது.

"அரவச் சீறூர் காண"[3]

என்ற அகநானூற்று அடியும்,

"சான்றோர் பலர்யான் வாழும் ஊரே" [4]

என்ற புறநானூற்றுப் பாடல் அடியும் சான்றுகளாக அமையும். பிற அக, புற இலக்கியங்களிலும் ஊர் என்ற சொல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். தலைமகனை உணர்த்துவதற்கு ஊர் என்ற சொல்லே பயன்பட்டுள்ளது.

ஊர்களின் - இடங்களின் தன்மைக்கு ஏற்ப பெயர்கள் வழங்கப்பட்டன. நிலத்தின் வெவ்வேறு தன்மைக்கு ஏற்ப அவ்வவ்வியல்புகளைக் குறிக்கும் வண்ணம் நிலப் பகுதிகளையும் நீர்ப்பகுதிகளையும் பிரித்தறியும் வண்ணம் பெயர்கள் வழங்கப்பட்டன எனலாம். இவ்வகையிலேயே மலை, குன்று, பாறை, திட்டு. மேடு எனவும் குளம், ஏரி, கடல், ஓடை, புலம் எனவும் பெயர்கள் தோன்றின என அறிய முடிகிறது.

ஊரின் புறச் சூழலுக்கு ஏற்பவும் பெயர்கள் வழங்கப்பட்டன என அறிய முடிகிறது. ஊரைச் சுற்றி வளர்ந்து வரும் மரங்கள், கொடிகள், காடுகள், தோட்டங்கள் இவற்றின் காரணமாகவும், அங்கே காணப்படும் விலங்குகளின் காரணமாகவும் பெயர்கள் தோன்றுவது உண்டு. மருத மரங்கள் சூழ்ந்த பகுதி மருதவனம், மருதூர் எனவும், பனை மரங்கள் நிறைந்த பகுதி பனந்தாள், பனங்குடி எனவும் வழங்கப்பட்டன. இவ்வாறு புறச் சூழலுக்கு ஏற்பப் பெயர்கள் தோன்றுவதையும் காண முடிகிறது.

3. ஊர்ப் பெயராய்வின் பயன்கள்

ஊர்ப் பெயர்கள் மிகவும் பழமையானவை. புதை பொருட் களைப் போலவே ஊர்ப் பெயர்களும் பழம் பண்பாட்டினையும்

நாகரீகத்தையும் உணர்த்தும் சான்றுகளாய் விளங்குகின்றன. பழம் பண்பாட்டை உணர்த்தும் காரணத்தால் ஊர்ப் பெயராய்வு மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

"நாம் வாழும் இவ்வுலகம் இன்றைக்குச் சுமார் இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்னர், பெரிய செஞ்ஞாயிற்றினின்றும் பிளவுண்டு வீழ்ந்த ஒரு சிறு துண்டு. வீழ்ந்த துண்டு முதல் ஒரு நூறு கோடி ஆண்டு வரை அனற்பிழம்பாய்க் கொதிப்புற்றுக் கிடந்தது. பின்னர் அது படிப்படியே தணியத் தொடங்கியது. அனல் தணியத் தணிய நிலவகைகள், உயிர் வகைகள் முதலியன தோன்றலாயின.

நிலமும் உயிரும் தோன்றியவாறே பிண்டமாய்க் கிடந்திருப்பின் அவை என்றோ பட்டும் போயிருக்கும். அவை படாமல் வாழ் வடைந்து வருதல் கண்கூடு. காரணம் என்ன? காரணம் பலபடக் கூறலாம். ஈண்டைக்கு ஒன்றைச் சிறப்பாய்க் குறித்தல் நலம். அது நிலமும் உயிரும் "ஊரும் பேரும்" பெற்றமை என்க. ஊரும் பேரும் உலகை வாழ வைக்கும் பெற்றமை உடையன என்பதை உணர்க" என்னும் கூற்று ஊர்ப் பெயராய்வின் சிறப்பினை நன்கு புலப்படுத்தும்.[5]

1. பொதுவாக ஊர்ப் பெயராய்வினால் பழைய வரலாற்று உண்மைகளை அறிய முடிகிறது.

2. ஊர்ப் பெயராய்வின் மூலம் பழங்கால பண்பாட்டினையும், நாகரீகத்தினையும் அறிய முடிகிறது. பழங்காலத்தில் வாழ்ந்த இனங்கள்-குடிகள் பற்றியும், சாதி சமய வரலாறு பற்றியும், நில அமைப்பு பற்றியும், அக்கால இலக்கியங்கள் பற்றியும், தொல் பொருளாய்வுக்குத் துணை செய்யும் வகையில் நாடு, நகரங்கள் பற்றியும் நன்கு அறிய முடிகிறது. ஊர்ப் பெயராய்வினால் பலவிதமான நன்மைமிகு தகவல்களை அறிய முடிகிறது.

3. வரலாற்றுப் பெயர்கள், கல்வெட்டுப் பெயர்கள் ஆகியவற்றால் அக்கால அரசியல் அமைப்பு, நிர்வாகப் பிரிவுகள், மன்னர் காலம், நாட்டு நிலைமை போன்ற வற்றை அறிய முடிகிறது.

4. சதுர்வேதி மங்கலமாக அளிக்கப்பட்ட ஊர்கள் பலவற்றினால் மன்னனின் கொடைப் பண்பும், அந்தணர் களுக்கு இருந்த செல்வாக்கும், சில ஊர்ப் பெயர்களினால் மன்னர்களின் பட்டப் பெயர்கள் போன்றவையும் அறிய முடிகிறது.

5. ஊர்களை ஒருவருக்கு தானமாக வழங்கும்போது நிலத்தை அளப்பதால் அக்கால நில அளவை பற்றியும் அறிய முடிகிறது.

6. கூத்தாநல்லூர் போன்ற ஊர்ப் பெயர்களால் கூத்தர் முதலான கலைஞர்களுக்கு அவை மானியமாக வழங்கப் பட்டவை என்பதும், இதனால் இவர்கள் பாராட்டப்பட்ட தன்மையையும் அறிய முடிகிறது.

7. சாதிப் பெயர்களால், இடையர்நத்தம், எடமேலையூர், எடகீழையூர் ஆகியவற்றில் ஒவ்வொரு இனத்தவரும் ஒவ்வொரு தொழில் செய்வோரும் தனித்தனியே வாழ்ந்து வந்தனர் என காண முடிகிறது.

8. நில அமைப்பிற்கு ஏற்ப பெயரிட்டு வழங்கப்பட்ட அக்காலப் பண்பாட்டுக் கூற்றினை அறிய முடிகிறது.

9. பறவைகள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் பெயர்களால் இவ்வட்டத்தில் இருந்த - இருக்கின்ற விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றைப் பற்றி விளக்கமாக அறிய முடிகிறது.

இவ்வாறு ஊர்ப் பெயராய்வினால் பல்வேறு கோணங்களில் மொழி, இனம், பண்பாட்டு வளர்ச்சி, நாகரீக வளர்ச்சி, அரசியல் அமைப்பு, சமுதாய நிலைமை, மறைந்த பல உண்மைகள் போன்ற பல செய்திகளை அறிய முடிகிறது.

4. மன்னார்குடி பெயர்க்காரணம்

இராஜாதிராஜன் ஊரை உண்டாக்கியதால் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது.

புராண வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வூரில் பல மன்னர்கள் வசித்து வந்துள்ளனர். மன்னர்கள் வசித்து வந்ததால் மன்னர்கள் இருந்த இடத்தை 'மன்னர் கோயில்' என்று அழைத்து வந்தனர். தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட நாயக்க மன்னர்களும் இங்கு ஆட்சி புரிந்துள்ளனர். தெலுங்கில் **கோயில்** என்பதற்கு **குடி** என்று பொருள். எனவே, நாயக்கர் காலத்திலிருந்து மன்னார்கோயில் மன்னார்குடியாக அழைக்கப்பட்டு வருகிறது.

இது சோழர் காலத்தில் சிறப்புற்று இருந்தமையாலும் முதற் குலோத்துங்கச் சோழனால் இவ்வூரின் கோயிலின் சில பகுதிகள் கட்டப்பட்டமையாலும் **ராஜ** என்ற அடைமொழிப் பகுதியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

இவ்வூர் ராஜ மன்னார்குடி என்றழைக்கப்படுகிறது. சிதம்பரத்திற்கு அருகில் உள்ள காட்டுமன்னார்குடியில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவ்வூர் ராஜ மன்னார்குடி என்று அழைக்கப்படுகிறது.

படைகுடி நட்பு (குறள் - 381) என்ற குறளில் குடி என்னும் சொல் குறிப்பதை அறியலாம்.

குடி என்பது பழமையான சொல். குடி என்னும் சொல், ஊர் பெயர்களில் அமைந்து, குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியில் சேர்ந்து வாழும் இடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும்.

தஞ்சை நாட்டில் பேரளத்துக்கருகே சிறுகுடி என்னும் ஊர் உள்ளது. இளையான்குடியில் பிறந்த மாறன் என்ற சிறுத் தொண்டர் இளையான்குடி மாறன் என்று, பெரிய புராணத்தில்

பேசப்படுகிறார். மற்றொரு சிவனடியாராகிய சிறுத்தொண்டர் பிறந்த ஊர் செங்காட்டாங்குடியாகும்.

இன்னும் தேவாரத்தில் கற்குடி, கருக்குடி, விற்குடி, வேள்விக்குடி முதலிய பல குடியிருப்புகள் பாடல் பெற்றுள்ளன.

நெல்லை நாட்டில், சிறுகுறுங்குடி என்னும் வைணவத் திருப்பதி ஒன்று உண்டு. திராவிட மொழியின் தந்தை என்று புகழப்படுகின்ற கால்டுவெல் ஐயர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணி செய்த இடம் இடையான்குடி ஆகும். மன்னார்குடி வட்டத்தில் குடி என்ற முடிவில் ஊர்களும் உள்ளன. 1. வெங்காட்டான்குடி, 2. திருப்பாலக்குடி, 3. புழுதிக்குடி, 4. ஏத்தக்குடி.

மன்னார்குடி என்ற பெயருள்ள திருமால் கோயில் கொண்டுள்ள இடத்தைச் சுற்றி மக்கள் அமைத்துக் கொண்ட குடியிருப்புகளுக்கு மன்னார்குடி எனப் பெயர் வழங்கப் பட்டிருத்தலும் கூடும்.

5. ஊர்ப்பெயராய்வின் முடிவுகள்

வட்டத்தின் ஒவ்வொரு ஊரின் முடிவுகளையும் கொண்டு அவ்வூரின் பெயர்க்காரணத்தை ஆராய அம்முடிவுகள் ஓரளவிற்குத் துணை செய்கின்றன. பெரும்பாலான ஊர்ப் பெயர் முடிவுகள் இயற்கை நில அமைப்பினைக் காரணமாகக் கொண்டுள்ளன.

எல்லா மாவட்டங்களிலுமே ஊர்ப்பெயர்களுள், ஊர், நாடு, புரம், குடி, மங்கலம், குறிச்சி என்னும் முடிவுகள் பெரும்பாலும் வழங்கி வந்துள்ளதைக் காண முடிகிறது. இயற்கையாகவே தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு இயற்கை அமைப்பினை, நில அமைப்பினைப் பெற்றிருக்கிறது.

இவ்வாறு இருக்கும் ஊர்கள் பெரும்பான்மை மாவட்ட நில அமைப்பிற்கு ஏற்ப பெயர் முடிவுகளைக் கொண்டிருந்ததைக் காண

முடிகிறது. அதேபோல் மன்னார்குடி வட்டத்தின் இயற்கை நில அமைப்பிற்கு ஏற்ப குடி, ஊர், புரம் என்னும் முடிவுகளைப் பெற்றிருக்கிறது.

இந்த வகையில் மன்னார்குடி வட்டம் எல்லா வகையான இயற்கை அமைப்பினையும் பெற்றிருப்பதால் அதற்கேற்ப எல்லாவிதமான முடிவுகளையுமே கொண்டிருக்கிறது. இவ்வூர்ப் பெயர் முடிகின்ற அனைத்தையும் இருவகையாகப் பிரிக்கலாம்.

1. இயற்கைப் பெயர்கள் (இயற்கைக் கூறுகள்)

1. ஊர் 2. குடி 3. காடு 4. கோட்டம்
5. குளம் 6. வேலி 7. குறிச்சி 8. நத்தம்

2. செயற்கைப் பெயர்கள் (செயற்கைக் கூறுகள்)

1. புரம் 2. மங்கலம் 3. சேரி 4. கோட்டை
5. கோட்டம் 6. கோயில் 7. அக்ரஹாரம் 8. வாசல்

6. ஊர்

இவ்வட்ட ஊர்களில் மிகுதியான ஊர்கள் 'ஊர்' என்ற பொதுக் கூறு பெற்றே அமைந்துள்ளன. அது மட்டுமின்றி இவ்வட்டம் பற்றி பல்வேறு புவியியல், வரலாறு தொடர்பான செய்திகளையும் உணர்த்துவதற்கு **ஊர்** என்ற பொதுக்கூறு பெரிதும் துணை செய்கிறது.[6]

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோர் செய்யும் தொழில் உழவுத் தொழிலாகவே உள்ளதையும், அவர்கள் வாழும் பகுதி **ஊர்** என்றே பெரும்பாலும் அழைக்கப்படுவதையும் காணலாம். இதனடிப்படையில் ஆராய்ந்தால் தமிழகத்தின் பெரும்பகுதி மருத நிலமாகவே உள்ளது புலப்படும்.[7]

"நால்வகை நிலங்களிலும் பொதுவாக தமிழ் மக்கள் குடியிருந்து வாழ்ந்தாரேனும் மருதநிலமே சிறப்பாகக் குடியிருப்புக்கு ஏற்றதாகக் கொள்ளப்பட்டது. ஆதலால் ஊர் என்னும் பெயர் மருதநிலக் குடியிருப்பைக் குறிக்கும்"[8]

மன்னார்குடி வட்டமும், மருதநிலப் பகுதிகள் கொண்டதாகும். அதனால் வட்டத்தின் ஊர் என்ற பொதுக் கூறினைப் பெற்ற ஊர்களைக் காண முடிகிறது.

1. குன்னியூர்
2. மழவராயநல்லூர்
3. அலத்தூர்
4. பனையூர்
5. பைங்காட்டூர்
6. பாலையூர்
7. பெருவிடைமருதூர்
8. தெற்கு நாணலூர்
9. செருக்களத்தூர்
10. நொச்சியூர்
11. பாலையூர்
12. வல்லூர்
13. கெழுவத்தூர்
14. ஓரத்தூர்
15. நல்லூர்
16. மூவாநல்லூர்
17. கர்ணாவூர்
18. வடுவூர்
19. எடகீழையூர்
20. எடமேலையூர்
21. பேரையூர்
22. குன்னியூர்
23. கோட்டூர்
24. அரவத்தூர்

7. கல்வெட்டுச் சான்றுள்ள ஊர்கள்[9]

இன்றைய பெயர்		கல்வெட்டுப் பெயர்
1. ஆலிவலம்	-	ஆர்வலம்
2. எளநகர்	-	இளநகர்
3. எளவனூர்	-	இளவனூர்
4. குன்னியூர்	-	குன்றியூர்
5. கொத்தமங்கலம்	-	தலைக்கூரங்குடி
6. கோட்டூர்	-	கோட்டூர்
7. தோட்டமங்கலம்	-	கூற்ற மங்கலம்
8. சித்தம்பர்	-	சிற்றம்பர்
9. திருக்காரவாசல்	-	திருக்காரயில்

10. திருக்கோலக்காடு	-	கோலக்காடு
11. தேவங்குடி	-	தேவன்குடி
12. நீடாமங்கலம்	-	நீடூர்
13. பெருவிடமருதூர்	-	பெரும்பாலமருதூர்
14. மின்னாமநல்லூர்	-	மின்னாவநல்லூர்
15. வங்க நகர்	-	வங்க நகர்
16. வலவ நல்லூர்	-	வலவ நல்லூர்

8. மங்கலம்

"நன்மையானவற்றையெல்லாம் மங்கலம் என்னும் சொல் குறிப்பதாகும்" தமிழர்கள் மங்கலம் என்ற சொல்லைப் புனிதமாகப் போற்றி வந்துள்ளனர். மங்கல மொழிகளைப் பேச வேண்டும். மங்கலமான செயல்களே நடைபெற வேண்டும் என்று விரும்பியுள்ளனர். இதனடிப்படையில் நம்பிக்கையை வளர்த்து வந்துள்ளனர்.[10]

"மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்
கூறிய மருங்கில் கொள்ளும் என்ப" [11]

என்ற தொல்காப்பிய வரிகள் மூலம் தமிழரின் நாகரிகத்தைக் காண முடிகிறது.

மன்னார்குடி வட்டத்தில் காணப்படும் மங்கலங்கள் இதற்கு முன்னர்க் காணப்பட்ட ஊர்களிலிருந்து வேறுபட்டுள்ளன.

1. கோந்தமங்கலம்	3. செருமங்கலம்
2. கண்டமங்கலம்	4. தலையாமங்கலம்

"வான் மங்கலம், குண்டமங்கலம் என்பது போன்று தலையா மங்கலம் என்பதே வழக்கில் இவ்வாறு மாறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.[12]

9. கோட்டை

"கோட்டை என்பது அரணைக் குறிப்பதற்குப் பெரும் பான்மையாக வழங்கும் சொல்லாகும்" [13] அரசர்கள் ஆண்ட

பகுதியாக இம்மாவட்டம் உள்ளதால் அரண்கள் பல இப்பகுதியில் அமைந்திருக்க வாய்ப்புண்டு.

மன்னார்குடி வட்டத்தில் கோட்டை என்ற பெயரினைப் பெற்றுள்ள சில ஊர்கள் உண்மையிலேயே அவ்வூர் ஏதாவதொரு கோட்டையை உடையதாகவும், வேறு சில ஊர்கள் காரணமின்றி கோட்டை என்ற முடிவினை உடையதாகவும் உள்ளன.

1. நெடுவாக் கோட்டை
2. மூவர் கோட்டை
3. காரக் கோட்டை
4. தளிக் கோட்டை
5. உள்ளிக் கோட்டை
6. கூப்பாச்சிக் கோட்டை
7. பரவாக் கோட்டை
8. சுந்தரக் கோட்டை
9. திருமக் கோட்டை
10. பாளையக் கோட்டை
11. பருத்திக் கோட்டை

10. புரம்

மன்னார்குடி வட்ட ஊர்ப் பெயர்களில் புரம் என்ற பொதுக் கூற்றினைப் பெற்ற ஊர்களும் ஓரளவு மிகுதியாகக் காணப்படு கின்றன.

புரம் என்பது இடத்தைக் குறிக்கும் சொல்லாக நீண்ட காலமாக வழக்கில் உள்ளது. சந்தைப்புரம், அந்தப்புரம் போன்ற வழக்குகளையும் காணலாம். கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச்சங்கம் கடல்கோளில் அழிந்ததையும் வரலாறு கூறுகிறது. இதிலிருந்து புரம் என்ற பொதுக்கூறு தொன்மையானது என்பதும், தமிழகத்தில் பல ஊர்கள் இருந்துள்ளதும் தெரிகிறது.

"புரம் என்ற சொல்லும் சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும்"[14]
(ஊரும் பேரும், பக்.49)

"புரம் என்பது புரி எனவும் வழங்கப்படும்"[15]
(ஊரும் பேரும், பக்.50)

தெய்வங்களின் பெயரிலும், தனிமனித பெயரிலும், அரசர்களின் பெயரிலும், தாவரங்களின் பெயரிலும் இவ்வட்டத்தில் ஊர்கள் உள்ளன.

1. ராஜம்மாள்புரம்
2. துளசேந்திரபுரம்
3. ஆதிச்சபுரம்
4. ரெங்கநாதபுரம்
5. ராதா நரசிம்மபுரம்
6. ராமாபுரம்

11. நத்தம்

ஊர்ப் பொதுவாக அமைந்த இடம் நத்தம் எனப்படும். அத்தகைய இடம் குடியிருப்பாக மாறிய பின்னரும் பழைய பெயர் எளிதாக மறையவில்லை.[16] இதனால் இப்பெயரால் இன்றும் பல ஊர்கள் உள்ளன. தற்சமயம் சிறுபான்மையோர் வசிக்கும் இடத்திற்கு இப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

1. மேல நத்தம்
2. எடையர் நத்தம்
3. மாராச்சேரி நத்தம்
4. பெருமாள் கோயில் நத்தம்

12. தேவதானம்

"திருக்கோயிலுக்கு அரசர் இறையிலியாக விட்ட நிலங்களும், ஊர்களும் தேவதானம் எனப்பட்டன. இத்தகைய தானம் தமிழ்நாட்டில் சிறந்திருந்ததென்று சாசனங்களாலும் ஊர்ப் பெயர்களாலும் அறியப்படும்." (ஊரும் பேரும், ராபி, பக்.316)

மன்னார்குடி வட்டத்தில் பாலையூர் சரகத்தில் 84 தேவதானம் என்ற ஊர் உள்ளது.

13. தோட்டம்

பெரும்பாலும் கோயிலுக்கு மான்யமாக வழங்கப்பட்ட பெரிய நந்தவனம் அடங்கிய பகுதியே தோட்டம் என்ற ஊராகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கோட்டூர் சரகத்தில் இவ்வூர்களைக் காண முடிகிறது.

1. கோட்டூர்த் தோட்டம்
2. ஆசாப் பக்கிரத் தோட்டம்
3. நீலகண்ட காடேரால் தோட்டம்
4. பீகாஜி மபி கோவில் தோட்டம்
5. ரெங்கமாவுத்தன் தோட்டம்
6. வெங்கட்ராவ் தோட்டம்

14. கோயில்

கோவில் - கோயில் என இருவிதமாக இம்முடிவுகள் வழங்குகின்றன. இம் முடிவுகளைக் கொண்ட ஊர்களில் சில சிறப்பான ஒரு கோயிலை உடையதால், அப்பெயராலே அந்த ஊரும் வழங்குவதாக உள்ளன. மன்னார்குடி சரகத்தில் கைலாசநாதர் கோயில் என்று ஒன்று உள்ளது.

15. கோட்டகம்

கோட்டகம் என்பது ஆழ்நீர் நிலை, நீர் நிலை தேங்கியுள்ள பகுதி என்ற பொருளினை உடையது. பாலையூர் சரகத்தில் மானங்காத்தான் கோட்டகம் என்ற ஊர் உள்ளது.

16. காடு

"மயோன் மேய காடுறை உலகமும்" [17]

என்று முல்லை நிலத்தைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். தலையா மங்கலச் சரகத்தில் மரவாக்காடு என்ற ஊர் உள்ளது. மற்றொரு ஊர் வெட்டிக்காடு.

17. குளம்

நீர் தேங்கியுள்ள இடம் குளம் எனப்படும். அப்படிப்பட்ட குளங்களின் அருகில் அமைந்த ஊர்கள் குளங்கள் எனப்படுகிறது. பாமணி ஆற்றங்கரையில் அந்தணர்கள் வாழ்ந்த சேராங்குளம் புகழ் பெற்றது. ஆண்டிக்குளம் - செம்மங்குளம்.

18. அக்ரஹாரம்

வேதம் ஓதுவதற்கும், வடமொழியை இப்பகுதியில் பரப்புவதற்காகவும் அந்தணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்குவதற்காகப் புதிதாக உண்டாக்கப்பட்ட ஊர்கள் அக்ரஹாரம் எனப்பட்டுள்ளது. சில ஊர்களில் அந்தணர்கள் தங்கும் தெருக்கள் அக்ரஹாரமாக இன்றும் அழைக்கப்படுகின்றன. வடுவூர் அக்ரஹாரம் இப்பகுதியில் உள்ளது.

19. நெம்மேலி

நெம்மேலி என்பது நெம்மிலி, நெம்மேலி என்று பலவாறு பல பகுதி மக்களால் அழைக்கப்படுகிறது. நெம்மேலி என்ற சொல் நெம்மிலி என்ற சொல்லின் திரிபாக இருத்தல் வேண்டும். நெல் மிகுதியாக விளைந்த இடம் என்றிருந்த ஊர்ப்பெயர் பின்பு வேறுவிதமாக மாறியுள்ளது.

மன்னார்குடி வட்டத்தில் கோட்டூர் சரகத்தில் ஒரு நெம்மேலியும், உள்ளிக்கோட்டை சரகத்தில் ஒரு நெம்மேலியும் உள்ளன.

20. பெருக வாழ்ந்தான்

பெருவாழ்வு தந்த பெருமாள் சதுர்வேதி மங்கலம் என்பது அதன் முழுப் பெயராகும்.

21. தற்போது மாறி வழங்கும் ஊர்கள்

பண்டைய பெயர்	-	**இன்றைய பெயர்**
திரு. இராமன தீச்சுரம்	-	திருராமேசுரம்
களப்பாழ	-	(கோயில்) களப்பாள்
திருக்களர்	-	திருக்களர்
கோட்டூர்	-	கோட்டூர்
திருநட்டியத்தான்குடி	-	திருநட்டியாத்தன்குடி
பனையூர்	-	பனையூர்
பாம்புணி என்பது சாசனப் பெயர்		
பாம்புணி, பாதளீச்சுரம், பாதாள்	-	பாமணி
இராசராசச் சதுர்வேதி மங்கலம்	-	மன்னார்குடி
குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலம்	-	திருமக்கோட்டை
உவர்ச்சேரி	-	ஒவர்ச்சேரி
மதனஞ்சேரிச் சதுர்வேதிமங்கலம்	-	தண்ணீர்குன்னம்
மகாதேவப்பட்டணம்	-	மகாதேவப்பட்டணம்

22. சாதாரண மக்களால் வழங்குதல்

குமரபுரம்
பிஷ்வா தோட்டம்
மோகனராவ் தோட்டம்

23. வரலாற்றுப் பெயரால் வழங்குதல்

குலமாணிக்கம்
மழவராயநல்லூர்
விக்ரபாண்டியம்

24. முழுவதும் பெயரால் வழங்குதல்

பெருகவாழ்ந்தான்
மண்ணுக்கு முண்டான்

25. சாதிப் பெயரால் வழங்குதல்

நட்டுவனார்	-	நட்டுவன் கோயில் பத்து
ராயர்	-	மழவராய நல்லூர்
எடையர்	-	எடையர்நத்தம்

26. உள்ளிக்கோட்டை சரகம்

வ

எண். கிராமத்தின் பெயர்

1.	29 நெம்மேலி	11.	34 உள்ளிக்கோட்டை-2
2.	30 கருவாக்குறிச்சி-1	12.	35 கூப்பாச்சிகோட்டை
3.	30 கருவாக்குறிச்சி-2	13.	35/1, ராஜசாம்பாள்புரம்
4.	31 தளிக்கோட்டை	14.	35 பரவாக்கோட்டை-1
5.	32 மகாதேவப்பட்டிணம்-1	15.	35 பரவாக்கோட்டை-2
6.	32 மகாதேவப்பட்டிணம்-2	16.	பைங்காநாடு
7.	33 திருப்பாலக்குடி-1	17.	36/1, துளசேந்திரபுரம்
8.	33 திருப்பாலக்குடி-2	18.	36/2, சுந்தரக்கோட்டை
9.	33 திருப்பாலக்குடி-3	19.	36/3, எடையர்நத்தம்
10.	34 உள்ளிக்கோட்டை-1		

27. வடுவூர் சரகம்

வ
எண். கிராமத்தின் பெயர்

1. மூவர் கோட்டை
2. வடுவூர் வடபாதி
3. 3. வடுவூர் மேல்பாதி
4. 4. வடுவூர் அக்ராஹரம்
5. 5. வடுவூர் தென்பாதி-1
6. 5. வடுவூர் தென்பாதி-2
7. 5/1. காரக்கோட்டை
8. 6. எடமேலையூர்-1
9. 6. எடமேலையூர்-2
10. 6. எடமேலையூர்-3
11. 7. எடகீழையூர்-1
12. 7. எடகீழையூர்-2
13. 27. செருமங்கலம்-1
14. 27. செருமங்கலம்-2
15. 28. பேரையூர்-1
16. 28. பேரையூர்-2
17. 28. பேரையூர்-3
18. 28 பேரையூர்-4

28. கோட்டூர் சரகம்

வ
எண். கிராமத்தின் பெயர்

1. 41. மழவராயநல்லூர்
2. 42. குன்னியூர்
3. 43. பள்ளிவர்த்தி
4. 44. விக்கிரபாண்டியம்
5. 45. ஆலத்தூர்
6. 46. புழுதிக்குடி
7. 47. இருள்நீக்கி
8. 48. சேந்தமங்கலம்
9. 49. நெம்மேலி
10. 50. கோட்டூர்
11. 51. கோட்டூர்தோட்டம்
12. 52. ஆதிச்சபுரம்
13. 53. கண்டமங்கலம்
14. 59. ரெங்கநாதபுரம்
15. 60. பனையூர்
16. 61. கருப்புகிளார்
17. 62. வாட்டார்
18. 63. பைங்காட்டூர்
19. 75. அக்கரைக்கோட்டகம்
20. 76. திருக்களார்

29. பாலையூர்

வ
எண். கிராமத்தின் பெயர்

1. 70. பாலையூர்
2. 77. குறிச்சிமூலை-1
3. 77. குறிச்சிமூலை-2
4. 77/1. நாராயணபுரம் களப்பாள்
5. 78. வெங்காத்தான்குடி
6. 79. மானங்காத்தான் கோட்டகம்
7. 80. பெருவிடைமருதூர்
8. 81. தெற்கு நாணலூர்
9. 82. நருவளிகளப்பாள்

11. 83. குலமாணிக்கம்
12. 84. தேவதானம்
13. 85. மண்ணுக்குமுண்டான்
14. 86. பெருகவாழ்ந்தான்-1
15. 86. பெருகவாழ்ந்தான்-2
16. 87. செருகளத்தூர்
17. சித்தமல்லி
18. 89. நொச்சியூர்
19. 90. புத்தகரம்
20. 70. பாலையூர்

30. தலையாமங்கலம் சரகம்

வ

எண். கிராமத்தின் பெயர்

1. 38. சேரங்குளம்
2. 39. நாலாம்சேத்தி
3. 40. மூணாம்சேத்தி
4. 54. நெம்மேலி
5. 55. மரவாக்காடு
6. 56. வடபாதி
7. 57. தென்பாதி
8. 58. ஏத்தகுடி
9. 64. குறிச்சி
10. 65. தலையாமங்கலம்
11. 66. வல்லூர்
12. 66/2, ராதாநரசிம்மபுரம்
13. 67. திருமக்கோட்டை-1
14. 67. திருமக்கோட்டை-2
15. 68. மேலநத்தம்
16. 69. எளவனூர்
17. 70/1, பாளையக்கோட்டை
18. 71. தென்பரை
19. 72. கெழுவத்தூர்
20. 73. ஓரத்தூர்
21. 74. நல்லூர்

31. மன்னார்குடி சரகம்

வ

எண். கிராமத்தின் பெயர்

1. 8. பருத்திக்கோட்டை
2. 9. காளாஞ்சிமேடு
3. 10. மூவாநல்லூர்
4. 11. வடகாரவயல்
5. 12. பாமணி
6. 13. கர்ணாவூர்
7. 14. அரவத்தூர்
8. 15. சவளக்காரன்
9. 16. ராமாபுரம்
10. 17. கைலாசநாதர்கோவில்
11. 18. முதுல்சேத்தி
12. 20. கோபிரளயம்
13. 21. நெடுவாக்கோட்டை
14. 24. மேலவாசல் குரூப்
15. 37. அசேஷம்
16. 19. மன்னார்குடி

32. தொகுப்புரை

ஊரின் வரலாற்றை மானுடத்திற்கு தெரிவித்துக் கொண்டிருப்பவை கல்வெட்டுக்களே ஆகும். இவற்றைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை. சதுர்வேதி மங்கலம் என்று இருந்த ஊர் படிப்படியாக மன்னார்குடியாக மாறுதலடைந்ததைப் பார்த்தோம். வட்ட ஊர்களின் சிறப்பையும் காலப்போக்கில் மாறுதல் அடைந்த வரலாற்றையும் தெரிந்து கொள்கிறோம்.

அடிக்குறிப்புகள்

1. Place Names of Coimpatore Dt., Nachimuthu, K. - P-61
2. தொல்காப்பியம் மரபியல் நூற்பா : 75
3. அகநாநூறு பாடல் : 160
4. புறநாநூறு - பாடல் : 195
5. ஊரும் பேரும் -ரா.பி.சேதுப்பிள்ளை பக் : 3.4
6. மேலது பக் :63
7. செங்கை மா.ஊ.பெயர்கள் -உலக தமிழாராய்ச்சிநிலையம்
8. ஊரும் பேரும் -ரா.பி. பக் : 29
9. தஞ்சை மாவட்ட ஊர். பெயர்கள் - சந்திரசேகரன். மெய். பக் : 164
10. ஊரும் பேரும் -ரா.பி. பக் : 316
11. தொல்காப்பியம் - பொருளியல் - நூற்பா - 48
12. ஊரும் பேரும் -ரா.பி. பக் : 198
13. மேலது பக் : 29
14. மேலது பக் : 49
15. மேலது பக் : 50
16. மேலது பக் : 71
17. தொல்காப்பியம் - அகத்திணையியல் - நூற்பா - 5

*****

3. மன்னார்குடி தொன்மை வரலாறு

1, முன்னுரை

மனிதனுக்கு வரலாறு தேவைதான். அவன் தன் முன்னோரின் வரலாற்றைத் திரும்பிப்பார்க்க விரும்புகிறான். அறிவாற்றல் மிக்க சிந்தனையாளர்களுக்கு தகுதி உடைய பழைய வரலாறுகள் தேவைப்படுகின்றன. ஏன்? வாழ்கின்ற மனிதர்க்கு முன்னர் வாழ்ந்தவர்கள் பாடமாகிறார்கள்.

நம் பாரத பூமிக்கு ஒரு வரலாறு உண்டு. இது மிகவும் தொன்மை வாய்ந்தது. பல சிறப்புகள்உண்டு. கடல் கடந்து சென்று தமிழ்நாட்டின் பெருமையையும் பறைசாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அதே போன்று தமிழகத்தின் ஒவ்வொரு ஊருக்கும் வரலாற்றுச் சிறப்பு உண்டு. மன்னார்குடியின் மிகப் பழைய வரலாற்றை அறிவது மிகவும் ஆர்வம் மிக்கதாகும்.

2. பிரபஞ்ச வரலாறு

சூரியன் உதிப்பது யாராலே?
சந்திரன் திரிவது யாராலே?
காரிருள் வானில் மின்மினி போல
கண்ணிற் படுபவை அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே
பெருமழை பெய்வது எவராலே?
யாரிதற்கெல்லாம் அதிகாரி
அதை நாம் எண்ணிட வேண்டாமோ. [1]

இப்பிரபஞ்சத்திற்கு அதிகாரி யார்?

மானுடத்தை விழிப்படையச் செய்த கேள்வி

இப்பிரபஞ்ச தோற்றத்திற்கு மூல ஆற்றல் இறைவெளியே. இறைவெளியைப் பிரம்மம், மெய்பொருள், பரமபிதா, அல்லா என்று எல்லா மதங்களும், Unified Force என்று விஞ்ஞானமும் கூறுகிறது.

பிரபஞ்சம் தோன்றக் காரணம் இறைவனே என்று 1877 இல் சொன்ன முதல் விஞ்ஞானி சர் ஐசக் நியூட்டன் ஆவார். இறைவெளிதான் மூல ஆற்றல். விஞ்ஞானிகள் கிராவிட்டி (Gravity) என்ற வார்த்தையின் மூலம் பிரபஞ்சத்தின் மூல ஆற்றலைக் குறிப்பிடுகின்றார்கள்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்ற வளம் நான்கும், ஒன்றிணைந்த பெருவெளியே, இறைவெளி அல்லது தெய்வமாகும். இந்த மூல ஆற்றல் தன்னிருக்க சூழ்ந்தழுத்தும் ஆற்றல் கொண்டது.

இந்த சூழ்ந்து அழுத்தும் ஆற்றலில் திணிவு ஏற்பட்டு மடிப்பு விழுந்தது. இருப்பு நிலையான சிவமும், இயக்க நிலையான சக்தியும் (ஆற்றலும்) சேர்ந்த சூழலும் விண் என்ற துகளைப் பிரசவித்தது.

இந்த விண் இறை வெளியோடு சுழன்று நெருக்குகின்ற உரசல்கள் காந்தமாக மாறியது.

இந்த விண்ணும் இறைவெளியும் ஒவ்வொரு விகிதாச் சாரத்துடன் தன்மாற்றம் பெற்று நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களாகியது. இதுவே எண்ணற்ற விண்மீன்களாகியது.

கோடிக்கணக்கான விண்மீன்கள் அடங்கிய கூட்டத்தை அண்டம் (Galaxy) என்று அழைக்கின்றனர். அண்டத்தை முதலில் கண்டு பிடித்தவர் இத்தாலி நாட்டு வானவியல் அறிஞர் கலிலியோ (1564 - 1642)

இதுவரை எண்பது லட்சம் அண்டங்கள் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை முப்பதாயிரம் அண்டங்களே கண்டுபிடித்திருக்கின்றனர்.

நாம் இருக்கும் அண்டத்தின் பெயர் பால்வழி (Milk way). நமது அண்டம் சுருள்வில் (Spiral) வடிவத்தில் உள்ளது. நமது பால் வழி அண்டத்தின் வயது 12,000 முதல் 14,000 மில்லியன் ஆண்டுகள்.

3. பூமியின் வரலாறு

வெட்ட வெளியில் மிதந்து கொண்டிருக்கும் லட்சக் கணக்கான அண்டங்களில் நெபுளா என்ற கோள் வெடித்துச் சிதறியது. விளைவு? பல சூரிய குடும்பங்கள் தோன்றின. அவற்றில் ஒன்றாக நாம் காணும் சூரியக் குடும்பம். இது நீள வட்டப் பாதையில் அமைந்துள்ளது.

சூரியக் குடும்பத்தில் ஒன்று பூமி. நிலத்தில் இருந்து பிரிந்த நிலவு துணைக்கோளாக பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது.

அண்டத்தில் உள்ளதும் பிண்டத்தில் உள்ளதும் பஞ்ச பூதங்களே. பூமியில் உள்ள இந்த நிலம், நீர், நெருப்பு காற்று, ஆகாயம் என்ற ஐந்து பிரிவுகளும் ஒன்று சேர்ந்து கோடிக்கணக்கான ஆண்டுகளாக உள்ள வெப்பம், படிப்படியாக குறைந்தது. பூமியின் மேல்பகுதி மட்டும் முற்றிலும் குளிர்ந்தது.

பூமியின் தாழ்வான பகுதியில் மட்டும், மூன்று பங்கு கடல் நீராகவும், ஒரு பங்கு மேடான இடத்தில் நிலமாகவும் இருக்கின்றன. இதில் எட்டு விதமான மலைகளும், ஏழுவிதமான கடல்களும், ஐந்து விதமான கண்டங்களும் உள்ளன.

பூமி 25,000 மைல் சுற்றளவுள்ளது. இதன் விட்டம். 7,965 மைல். மண், இரசாயனங்கள், மற்றும் உலோகங்களால் ஆனது பூமி.

வெட்ட வெளியில் அந்தரத்தில் உருண்டையாக இருந்து, எண்ணிக்கையில் சுமந்து, தன்னைத்தானே மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்றுகிறது. சூரியனுடைய மூன்றாவது வட்டப் பாதையில் நாள் ஒன்றுக்கு சுமார் 16 இலட்சம் மைல் தூரம் ஓடுகிறது.

புவி ஈர்ப்பு விசை மற்றும் தள்ளு விசையுடன், முறையாக திட்டமிட்டபடி இயற்கையாக இயங்குகிறது.

4. ஒரே கண்டம்

உலகில் உள்ள கண்டங்கள் அனைத்தும் ஒன்றாக இருந்தன என்பதை முதலில் கண்டறிந்தவர் பிரான்சிஸ் பேகன். (கி.பி. 1561 - 1626) வெள்ளப் பெருக்கத்திற்கு முன்பாக அமெரிக்கா உலகின் மற்ற பாகங்களிலிருந்து பிரிக்கப்படவில்லை என்கிறார். ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் காணப்பட்ட புதைவடிவக்கல்[2] தாவரங் களைக் கொண்டு இரண்டும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தன என்கிறார்.

கண்டங்கள் இடம் பெயர்ந்தன கொள்கையில் ஆழமான உறுதியான கருத்தினை வெளியிட்டவர் ஜெர்மனி வானிலை ஆய்வாளர் கால்பிரட் வெஜினர் (கி.பி. 1880.1930) என்பவராவர்.

அமெரிக்காவைச் சார்ந்த எம்.பி டெய்லர் (1912) என்பாரும் கண்டங்கள் இடம் பெயர்ந்ததை ஆராய்ந்துள்ளார். அனைத்து புவியியல் வல்லுனர்களும் ஒத்துக் கொள்ளக்கூடிய ஆய்வினை வெளியிட்டவர் இவரே.

நிலமிருக்குமிடம் கடலாகவும், கடல் இருக்குமிடம் நிலமாகவும், மலையிருக்குமிடம் சமவெளியாகவும் மாறுவதுண்டு. இத்தகைய மாற்றங்கள் ஏன் நிகழ்ந்தன? கடல்கோள்களாலும் எரிமலைகளாலும் நிகழ்ந்தன.

ஒரு கண்டம் இரண்டாகப் பிரிந்தது. கண்டத்தின் மீது ஒரு கண்டம் மோதிச் சரிந்தன. இரு கண்டங்கள் ஒன்றாகின.

புவியியல் ஆய்வின் மூலம் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, அண்டார்டிகா, மடகாஸ்கர் முதலியன ஒரு காலத்தில் இணைந்திருந்தன எனத் தெரியவருகிறது.

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒன்றாக இணைந்திருந்தன. இதனைப் புதைவடிவமான மரங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கொண்டே உறுதி செய்துள்ளார்.[3]

நமது நாட்டில் கடல்கோளால் அழிந்துபட்ட கண்டத்தைக் குமரிக்கண்டம் அல்லது இலெமூரியா என்றனர். சுமார் ஏழு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இலெமூர் (Lemur) என்ற குரங்கு வாழ்ந்ததாக கூறுகின்றனர். இது ஓரடி உயரத்தில் இரவில் உணவு தேடும் வழக்கம் உடையது. இதே குரங்குகள் மடகாசுகர் தீவிலும் வாழ்ந்ததாக கண்டறிந்துள்ளனர். இந்தக் குரங்குகள் வாழ்ந்த இடமே இலெமூரியா கண்டம் எனப்பட்டது.

"வடிவே வெறிந்த வான்பகை பெறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கொடுங் கொடுங்கடல் கொள்ள"

என்றும் வரும் பாடலால் பஃறுளியாறு பாய்ந்த குமரிக்கோடும் கடலால் அழிந்துபோன வரலாறு தெரிகிறது. பஃறுளியாற்றின் கரையில் இருந்த பாண்டியன் தலைநகரும் தலைச்சங்கமும் அழிந்துபோயின. பின்னர் இரண்டாது மூன்றாவது கடல் கோள்களால் தென்இந்தியாவின் கடற்கரைப் பகுதி பெரும் பாதிப்புக்குள்ளாகியது.

5. பாரதம்

சர்வ வல்லமை பொருந்திய பரதன் என்ற மன்னன் ஆண்ட நாடு என்பதால் நம் நாட்டிற்கு **பரதக் கண்டம்** என்ற பெயர் வந்தது. எல்லா வளங்களும் நிறைந்த இந்நாட்டில் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடன் மக்கள் வாழ்ந்தார்கள்.

இதனைப் பார்த்த அறிவாற்றல் மிக்க எகிப்தியர்கள் 'பரதக்கண்டம்' என்று இருந்ததை நாளடைவில் மருள இந்தியா என்று மாற்றினர். ஆனால், இப்போது இந்தியாவை மீண்டும் 'பாரதம்' என்றுதான் அழைக்கிறோம்.

6. தமிழக வரலாறு

நாடு என்ற சொல், மனிதர்கள் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது. தமிழர்கள் வாழ்ந்த நாடு **'தமிழ்நாடு'** என்று அழைக்கப்பட்டது.

தமிழகத்தின் வரலாறு கீழ்க்காணும் காலப்பரப்புகளின் அடிப்படையில் செல்கிறது.

கி.மு 200	-	கி.பி.200	- சங்ககாலம்
கி.பி. 200	-	கி.பி.400	- பாணர்கள், களப்பிரர் ஆட்சிக்காலம்
கி.பி. 400	-	கி.பி.900	- பல்லவர் ஆட்சிக்காலம்
கி.பி. 900	-	கி.பி.1246	- சோழர் ஆட்சிக்காலம்
கி.பி. 1246	-	கி.பி.1351	- சம்புவராயர் ஆட்சிக்காலம்
கி.பி. 1351	-	கி.பி.1526	- விஜயநகரப் பேரரசு ஆட்சிக்காலம்
கி.பி. 1526	-	கி.பி 1605	- நாயக்கர் ஆட்சிக்காலம்
கி.பி. 1676	-	கி.பி 1855	- மராட்டியர் ஆட்சிக்காலம்
கி.பி. 1801	-	கி.பி 1947	- ஆங்கிலேயர் ஆட்சிக்காலம்
கி.பி. 1947 முதல்	-	சுதந்திர ஜனநாயக ஆட்சிக்காலம்	

7. இராசாதிராச சதுர்வேதி மங்கலம்

நாட்டு வரலாற்றை பல்வேறு கோணங்களில், நிலவியல் துணை கொண்டு ஆராயும்போது சோழராட்சியின் மத்திய காலம் வரை மன்னார்குடிக்குத் தெற்கே காட்டுப் பகுதிகளாக (முல்லை நிலம்) இருந்துள்ளதை அறிகிறோம். பஞ்ச ஆரண்ய தலங்கள் இவ்வூருக்கு மிக அருகாமையில் இருப்பது திருமறைக்காடு (வேதாரண்யம்) உள்ளது போன்ற காரணங்களும் இதனை வலியுறுத்துகின்றன.

காடு நீக்கி நாடு கொள்ளும் முயற்சியில் சோழ மன்னர்கள் முயற்சித்தபோது உருவான திருவூரே மன்னை நகரமாகும். இவ்வூரின் பழம் பெயர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்பதை கி.பி. 1070 - 1125 வரை ஆட்சி செய்த முதற்குலோத்துங்கனின் மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டு (கி.பி. 1118) உறுதி செய்கின்றது. சுத்தவல்லி வளநாட்டுப் பிரமதேயம் தனியூர் ஸ்ரீ ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்ற இக்குறிப்பே மன்னார்குடி நகரம் பற்றிய தொன்மைக் குறிப்பாகும்.[4]

இராஜாதிராஜன் என்ற சோழ மன்னன் ஒருவன் பெயரால் பிரமதேய ஊராகவும் (அந்தணர்களுக்காக வழங்கியதால்) சதுர்வேதிமங்கலம் என்ற மங்கலம் எனும் பகுப்புடைய ஊராகவும் ,தனியூர் என்ற சிறப்பு உரிமைகள் பெற்ற ஊராகவும் திகழ்ந்தது என்பதை இக்கல்வெட்டு வரிகள் எடுத்துக்காட்டு கின்றன. ஒவ்வொரு சோழ அரசரும் சதுர்வேதிமங்கலங்களை உருவாக்குவதை மரபாகக் கொண்டு திகழ்ந்தனர்.[5]

கி.பி. 1118 இல் வெட்டப்பட்ட மன்னார்குடி கல்வெட்டு இராஜாதிராஜன் எனும் சோழன் பெயரில் இவ்வூர் இருந்தது என்று சொல்வதாலும், கி.பி. 1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் முதலாம் இராஜாதிராஜன் என்ற ஒருவனே என்பதாலும், கங்கை கொண்ட சோழன் எனும் முதலாம் இராஜேந்திர சோழனின் மகனான இராஜாதிராஜ சோழனால்தான் இவ்வூர் தோன்றியது என்பதைத் தெள்ளத்தெளிவாக அறியமுடிகிறது.[6]

8. பழமொழிகள் தரும் வரலாற்றுச் செய்திகள்

நாட்டுப்புற மக்களின் நாவில் அசைந்து நாடெல்லாம் பரவி இன்பப் பொழுது போக்காக உலா வருவது பழமொழிகளும், புராணக்கதைகளும் ஆகும். நடப்பனவற்றையும் நடக்காதவற்றையும் கற்பனைக் கலவையால் கலந்து உயிரோட்டம் மிக்கவையாக இவை உருவாக்கப் படுகின்றன. அவற்றில் உண்மையும் உண்டு. பொய்மையும் உண்டு. இதில் உண்மையைப் பிரித்து எடுப்பது வைக்கோல் போரில் ஊசியை நழுவவிட்டு தேடிப்பிடிப்பது போலாகும். இருப்பினும் ஊசி இருப்பது உண்மை.

பழமொழிகளிலும் புராணக் கதைகளிலும் உள்ள உண்மைகள் வரலாற்று மூலங்களாகும். அவற்றைப் பிரித்து எடுப்பது அளவற்ற சிந்தனையின் ஆழமான பணியாகும். கதையின் சுவையைப் பெருக்கவும், தொடர்ச்சியை இட்டு நிரப்பவும் கற்பனை கலக்கப்படுகிறது.

மன்னார்குடி வட்டத்தில் பழமொழிகளும் புராணக் கதைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், விழாக்கள், வரலாற்றுச் செய்திகள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவை நிறைந்தே பழமொழிகளும் புராணக் கதைகளும் புனையப்பட்டுள்ளன. ஆகையினால் சமூகவியல், மானுட இயல் போன்றவற்றைப் பற்றிச் சிந்திப்போருக்கு நன்கு உதவும் களமாக அமைந்துள்ளன.

கதைகளிலுள்ள (பழமொழிகளிலும்) கற்பனைகளை நீக்கி உண்மைச் செய்திகளைத் தொகுத்து நுட்பமாகக் காணின் வரலாற்று உண்மைகள் தெளிந்து வருவதைச் சிறக்கக் காணலாம்.

மன்னார்குடி வட்டப் பழமொழிகளை முயன்று திரட்டி அவற்றில் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகளைக் காணலாம்.

9 செண்பகாரண்யம்

ஆரண்யம் என்னும் சொல், வடமொழிச் சொல், இதன் பொருள் காடு என்பதாகும். இராமாணத்தில் இராமன் காட்டுக்குச் செல்லும் பகுதி 'ஆரண்ய காண்டம்' என்பது குறிப்பிடத்தக்கது.

நறுமணமிக்க செண்பக மரங்கள் நிறைந்த காடாக இவ்வூர் அக்காலத்தில் விளங்கியுள்ளது. பின்னர் காடுகளை அழித்து நிலந்திருத்தி நாடாக்கி உள்ளனர். மன்னார்குடிக்கு செண்பகாரண்யம் என்ற பெயருமுண்டு.

10. வண்டுவராபதி

வண்டுவராபதி மன்னன் என்னும் தொடர் உள்ள ஆழ்வார் பாசுரங்கள் இத்திருத்தலத்தையே குறிப்பிடுவதாக அந்த ஆசார்யன் கருதியதாகச் சொல்லுவர். வண்டுவராபதி என்னும் தொடர் வண்டு வரா 1. வண் + துவராபதி என்றும் 2. வண்டு + வராத + பதி என்றும் பொருளில் வரலாம்.

இரண்டாவது பொருளில் வண்டு வராதபதி என்னும் தொடர் இடைக் குறையாக வண்டு வராதபதி என்று செய்யுளில் வந்ததாகக் கொள்ளலாம். (வண்டு+வரா+பதி எனப் பிரித்தால் வண்டுவராபதி என்று வர வேண்டுமே என்று சில தமிழறிஞர் ஆட்சேபிக்கலாம். எனவே வண்டுவராபதி என்னும் தொடரின் இடைக்குறை இது என்று ஒரு வழி). வண்டு வராதபதி என்றால் வண்டுகள் வராத இடம் என்று பொருள். வண்டுகள் செண்பகமலரை நெருங்கா. இத்திருப்பதி செண்பகக் காடு. (சம்பகாரண்யம் என்பர்.) எனவே, இத்திருப்பதிக்கு வண்டுவரா(த)பதி என்றும் பெயர் பொருந்தும். இதைக் குறிக்கவே ஆழ்வார் இத்தொடரை அமைத்திருக்க வேண்டும் என்று மணவாள மாமுனிகள் கருதி இருக்க வேண்டும்.

11. குலோத்துங்கச் சோழ விண்ணகரம்

செங்கல்லாக இருந்த பெரிய கோயிலைக் கற்கோயிலாகக் கட்டியவன் குலோத்துங்கச் சோழன். எனவே, இவனது பெயரில் ஊர் அழைக்கப்பட்டது. இதனை குலோத்துங்கச் சோழனது கல்வெட்டு தெரிவிக்கிறது.

12. தென்னகத்து துவாரகை:

துவாரயுகக் கடைசியில் கோபியர், கோபபிரயர் என்ற இரண்டு ரிஷிகளும் கிருஷ்ணனை தரிசிக்கப் புறப்பட்டனர். ஆனால் இவர்கள் போவதற்குள் கலியுகம் தொடங்கிவிட்டது. கிருஷ்ணரும் வைகுந்தம் சென்று விட்டார்.

கவலையுற்ற இரண்டு ரிஷிகளிடமும் "தென்னகத்து **துவாரகையான மன்னார்**குடி ஹரித்ராநதியில் ஓராண்டு தவமியற்றி கிருஷ்ணனை தரிசிக்குமாறு" நாரதர் சொன்னார். ரிஷிகளும் அவ்வாறே செய்து கிருஷ்ணனின் தரிசனத்தைப் பெற்றனர். எனவே, மன்னார்குடியைத் தென்னகத்து துவாரகை என்றும் அழைக்கின்றனர்.

13. வாசுதேவபுரி :-

பரவாசுதேவர் இயற்கையாகவே இம் மண்ணில் இருந்து தோன்றியதால் **'வாசுதேவபுரி'** என்றும் இவ்வூர் அழைக்கப் பட்டுள்ளது. 'புரி' என்ற பின் இணைப்புச் சொல்லைக் கொண்டு விளங்கும் ஓர் ஊர் தருமபுரி ஆகும். மேலும் தேவாரத்தில் காணலாகும் திருநெல்வாயில் என்னும் ஊர் இன்று சிவபுரி என்றழைக்கப்படுகிறது. ஆழ்வார்களில் ஒருவராகிய சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்னும் ஆண்டாள் பிறந்த ஸ்ரீவில்லிபுத்தூர் கோதைபுரி என்று வைணவப் பெரியோர்களால் குறிப்பிடப் படுகின்றது.

14. மண்ணில் மிக்கது மன்னார்குடி

உலகில் சிறந்த நாடு என்றால் அது இந்தியாவாகத்தான் இருக்கும். இந்திய நாட்டில் சிறந்த நாடு என்றால் தமிழகம் தான் சிறப்பாக இருக்கும். தமிழ்நாடு என்றால் (தஞ்சை பழைய மாவட்டம்) திருவாரூர் மாவட்டம் சிறப்பாக இருக்கும். திருவாரூர் மாவட்டம் என்றால் மன்னார்குடி குறிப்பாக சிறப்பாக இருக்கும். இந்த மண் பல சிறப்புகளை உடையதால், **'மண்ணில் மிக்கது மன்னார்குடி'** என்ற பழமொழி தொடர்ந்து வழக்கத்தில் இருக்கிறது.

15. மறையோர் மிகுந்தது மன்னார்குடி,

மறையோர் என்றால் வேதம் உணர்ந்தவர்கள் என்று பொருள், வேதத்தைப் படித்த, வேதத்தை உணர்ந்த சான்றோர்கள் நிறைந்த ஊர் இவ்வூராகும்.

16. மன்னர்கள் கோயில்

நறுமணமிக்க செண்பகாரண்ய இடத்தில் சோழ மன்னர்களும், நாயக்க மன்னர்களும் வசித்து வந்துள்ளனர். சோழர்கள் இங்கு தங்கியிருந்ததற்கு தஞ்சாவூர் அரண்மனையில் இருக்கும் சுரங்கங்களை ஆதாரமாகக் கொள்ளலாம்.

17 தஞ்சை அரண்மனை

இங்கு ஒன்பது சுரங்கங்கள் இருந்தன. தற்சமயம் 6 சுரங்கங்கள் இருக்கின்றன. மற்றவை அழிந்துவிட்டன. சேத மடைந்து விட்டன.

1. மன்னார்குடி செல்லும் வழி - நீளம் 22 மைல்கள்
2. ராணிமார்கள் குளிக்க குளத்திற்குச் செல்வது ¾ மைல் நீளம்
3. நாகப்பட்டிணம் - அரசர்படைகள் - பல்லக்குபோகும் வழி 40 மைல் நீளம்.
4. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வழி - ஒருமைல் நீளம்
5. மாரியம்மன் கோயிலுக்குப் போகும் சுரங்கம் - 3 மைல் நீளம்
6. திருவையாறு கோயிலுக்குச் செல்லும் சுரங்கம் - 7 மைல் நீளம்

இச்சுரங்கங்கள் இருக்கும் இடங்களுக்கு மேலே வழிகாட்டி கைகள் இருக்கின்றன.

நம் வீட்டுத் திண்ணை மாதிரி ஒரு வழி இருக்கிறது. அதன் வழியே ஏணியைத் தொங்க விடுவார்களாம். விரோதிகள் வந்தாலும் சரி எதிரிகள் வந்தாலும் சரி அல்லது ஆபத்துக் காலங்களிலும் சரி - ஏணிமரங்கள் வழியாக இறங்கிப் பாது காத்துக் கொள்வார்கள். அங்கே பல்லக்கு ரெடியாக இருக்கும். இதில் முதன்மையானதும் பெரியதுமான சுரங்கம் மன்னார்குடி சுரங்கமே. எனவே, பெரும்பாலான அரசர்கள் இங்கு குடியிருந்ததை அறிய முடிகிறது.

மன்னார்குடியை உருவாக்கிய ராஜாதிராஜ சோழன் செங்கல்லாக இருந்த கோயிலைக் கற்கோயிலாக கட்டிய மூன்றாம் குலோத்துங்கன் போன்ற சோழ மன்னர்கள் இங்கு இருந்துள்ளார்கள்.

நாயக்கர் காலத்தில் அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், விஜயரகுநாத நாயக்கர் போன்றவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் எல்லாம் இங்கு குடியிருந்ததினால் மன்னர்கள் கோயில் என்றழைத்தனர்.

18 மன்னார்குடி

நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மன்னர்கள் இங்கு இருந்தார்கள். தெலுங்கில் கோவில் என்றால் "குடி" என்று பொருள்,அதனால் மன்னார் கோயில் மன்னார்குடி என்று பெயரிடப்பட்டு விளங்கியது.

19. மகாதேவப்பட்டிணம்

மன்னார்குடிக்குத் தென்மேற்கே இவ்வூர் உள்ளது. இவ்வூரில் ஐந்து வேலி நிலப்பரப்பில் கோட்டை ஒன்று உள்ளது. இக்கோட்டைக்குள் பெரிய அரண்மனை, சிறிய அரண்மனை எனப்படும் பகுதிகள் முற்றிலும் அழிந்த நிலையில் உள்ளன. முதலாம் துளசாவால் (1728-1736) கட்டப் பட்டவையாகும். இக்கோட்டைக்குள் ஆதிவராகசுவாமி கோயில் ஒன்றுள்ளது. இவ்வூரின் வடக்கே உள்ள சம்போ மகாதேவர் கோயிலால்தான் இவ்வூருக்கு மகாதேவபட்டணம் என்ற பெயரே ஏற்பட்டிருக்கிறது.

இவ்வூரில்தான் துக்கோசியால் "சிவகாமசுந்தரி பரிணயம்" என்ற தெலுங்கு நாடகநூல் எழுதப்பட்டது. சிவபெருமான் பார்வதியை மணந்த வரலாற்றைக் கூறும் இந்நாடகம் ஆதிவராகசுவாமி கோயில் திருவிழாவில் நடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவ்வூரில் தஞ்சை மராட்டிய மன்னராட்சிக் காலத்தில் சத்திரம் ஒன்றும் செயல்பட்டுள்ளது. இச்சத்திரம் உமாபாயிசாகேப் சத்திரம் என்றழைக்கப்பட்டுள்ளது.[7]

தஞ்சை சரபோஜி மன்னர் தம்பியான துக்கோஜியுடன் ஆட்சி நடத்தி வந்தபோது இருவருக்குள் மனவேறுபாடு ஏற்பட, அதன் காரணமாக துக்கோஜி தன் மூத்த சகோதரரிடமிருந்து ஆட்சிப் பரப்பில் ஒரு பகுதியைத் தனக்கெனப் பெற்று குடும்பத்தோடு மகாதேவபட்டணத்தில் இருந்து வந்ததாக போன்சே வம்ச சரித்திரம் கூறுகிறது. இங்குள்ள ஆதிவராகசுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு (கி.பி. 1728) இறைவனின் பல பெயர்களையும் கூறி வழிபாட்டுச் செய்தியையும் வளம் வேண்டும் வழிபாட்டையும் கூறுவதாக அமைந்துள்ளது.[8]

20. திருமக்கோட்டை

மன்னார்குடியிலிருந்தும் திருத்துறைப்பூண்டியிலிருந்தும் முத்துப்பேட்டை செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது. இவ்வூரிலுள்ள சோழர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இராசேந்திர சோழவளநாட்டு தென் கரம்பை நாட்டுப் பிரமதேயம் குலோத்துங்கச் சோழச் சதுர்வேதி மங்கலத்தினைச் சார்ந்த சிற்றூராக விளங்கியிருக்கிறது. மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு இவ்வூரை "திருமையான மும்முடிச்சோழநல்லூர்" என்று குறிப்பிடுகிறது. விசயநகரவேந்தர் காலத்தில் இது திருமேற்கோட்டை என்று வழங்கப்பட்டுள்ளது.

இவ்வூர் ஞானபுரீசுவரர் கோயில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் முதல் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் ஆகும். இதில் முதல் இராசராசசோழன், முதலாம் குலோத்துங்கசோழன், மூன்றாம் இராசராசன், மாறவர்மன் புவனேகவீரன் குலசேகரபாண்டியன், அச்சுததேவராயர் ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் இச்சிவன் கோயில் திருமெய்ஞானமுடையார் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு நிலக்கொடை மற்றும் நந்தாவிளக்கு எரிப்பதற்குப் பலர் கொடையளித்தமை பற்றித் தெரிவிக்கின்றன. இங்குள்ள அம்மன் கோயிலைக் கட்டியவன் பல்லுராவுத்தன் புத்திரன் திம்மப்பன் என்று கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

இவ்வூரில் இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. கி.பி. 1519-ஆம் ஆண்டைச் சார்ந்த செப்பேடு திருமெய்க்குஞான சுவாமிக்காக ஆவிக்கோட்டை, கழிஞ்சாங்கோட்டை, உலையக் கொன்றல், கணியாகுறிச்சி, சொக்கநாதநல்லூர் என்ற ஐந்து ஊர்கள் தானமாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. இரண்டாவது செப்பேடு இச்சுவாமிக்கு உச்சிக்கட்டளைக்கும் கயிலாசவாகன மண்டகப்படிக்கும் தானம் அளித்ததைத் தெரிவிக்கிறது.

இவ்வூர்ப் பகுதியில் கிடந்தகோலத்தில் விளங்கும் ரெங்கனாதப் பெருமாள் கோயில் என்றழைக்கப்படும் கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயில் பழம்பெருமை படைத்தது. இக்கோயிலில் ஏழு கல்வெட்டுகள் உள்ளன.[9]

21. இலட்சுமி நரசிம்மபுரம்

இவ்வூர் கோட்டூர் அருகில் உள்ளது. தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் "கோட்டூர் மாகாணம்" என்ற பிரிவிற்குட் பட்டிருந்தது. தஞ்சை மராட்டிய மன்னன் ஏகோஜியின் மூன்றாவது மகனாகிய துக்கோஜியாகிய துளசாவால். மதவ வாசாரியர், சீனிவாச்சாரியர் ஆகிய மூன்று வேதம் வல்ல அந்தணர்களுக்கு சுரோத்திரியமாக வழங்கப்பட்டது. ஐந்து வேலி நிலப்பரப்புடையதாக இருந்தது. எனவே, இவ்வூர் தஞ்சை மராட்டிய மன்னர் காலத்திலிருந்து வருகிறது எனலாம்.

22. பூதமங்கலம்

மன்னார்குடிக்கு அருகில் உள்ள பூதமங்கலம் களப்பிரர் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் தலைசிறந்த பௌத்தத் தலமாக விளங்கியுள்ளது. சங்க காலத்திற்குப் பின்னர் களப்பிரர் சோழ நாட்டைக் கைப்பற்றியாண்டனர். அக்காலத்தில் களப்பிரர்கள் பௌத்த சமயத்தை ஆதரித்துப் போற்றியுள்ளனர். கி.பி. நான்காம் நூற்றாண்டில் அச்சுதவிக்கந்தன் என்ற களப்பிர **அரசன் காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து சோழநாட்டை ஆட்சிபுரிந்தான்.** இவனது காலத்தில் புகழ்பெற்ற பௌத்த சமய நூல்களை எழுதிய புத்ததத்தர் என்ற பௌத்த துறவி வாழ்ந்துள்ளார். இவரது ஊர் பூதமங்கலம் ஆகும்.

மன்னார்குடி வட்டத்திலுள்ள பூதமங்கலமே புத்ததத்தரின் ஊராகும் என்று பல்லவர் வரலாற்றை எழுதிய மீனாட்சி அவர்கள் கருதுகிறார். இவ்வூரில் வேணுதாசர் என்பவரால் கட்டப்பட்ட பெரிய புத்தவிகாரம்ஒன்று இருந்துள்ளது. இவ்வூரில் தங்கியிருந்த காலத்தில்தான் பாலி மொழியில் புத்ததத்தர் 'விநயவிநிச்சயம்' என்னும் நூலை இயற்றினார்.

பூதமங்கலத்தின் சிறப்பினையும் அவ்வூரில் இருந்த பௌத்த விகாரம் பற்றியும் புத்ததத்தர் இந்நூலில் எடுத்துக்கூறியுள்ளார். **"பூதமங்கலம் சோழநாட்டிற்குக் கொப்பூழ் போன்று** (நாபிக் கமலம்) இருந்தது. இது மரங்களாலும் சோலைகளாலும் பல்வேறு நீர்ப்பூக்கள் நிறைந்த குளங்களாலும் சூழ்ந்திருந்த ஊராக இருந்திருக்கிறது. மன்னார்குடி சமணர் கோயிலில் புத்தரின் சிற்பம் ஒன்று இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இது வளமுடைய ஊராக விளங்கியது. காவிரி பாயும் இவ்வூரில் அகழியால் சூழப்பெற்ற வேணுதாசரால் கட்டப்பட்ட பௌத்தவிகாரம் இருந்தது என்று புத்ததத்தர் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

" காவேரி ஜலஸம்பாத பரிபூத மஹிதலே
இத்தே ஸப்பங்க ஸம்பன்னே மங்கலே பூதங்கலே
பவராகார பாகார பரிஃகா பரிவாரிதே
விஹாரே வேணுதாஸஸ்ஸ தஸ்ஸனீய மனோரமே"

புத்ததத்தரின் நூலில் இருந்து பூதமங்கலம் அவரது காலத்தில் பெரியபட்டணமாக விளங்கியிருக்கிறது என்று அறியமுடிகிறது. தற்போது இவ்வூரில் பௌத்த சமயம் தொடர்பான சான்றுகள் எதுவும் இல்லாமல் அழித்துவிட்டன. இவ்வூரில் அழிந்துவிட்ட பழமையான இரண்டு மண்மேடுகள் காணப்படுகின்றன. செங்கல் கட்டடம் இங்கு இருந்து அழிந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவற்றில் அகழாய்வு செய்தால் பழமையான பௌத்த சமய சான்றுகள் கிடைக்க வாய்ப்புள்ளது. பூத மங்கலத்திற்கு அருகில் **பள்ளிவிருத்தி** என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூர் பௌத்த, சமயத்தவர்க்கு அளிக்கப்பட்ட நிலங்களைக் கொண்டிருந் தமையால் இப்பெயர் பெற்றது என்று மீனாட்சி கருதுகின்றார்.[10]

23. தளிக்கோட்டை

சோழநாட்டிற்கும் சீனாவிற்கும் இடையிலான வணிக உறவுகள் சீன அரச மரபினர்களான சோங் (1127 - 1279) யுவான், (1271 - 1368) ஆகியோர் காலங்களில் சீரோடு நடைபெற்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் பட்டுக்கோட்டை, மன்னார்குடி வட்டங்களில் 2165 சீன நாணயங்கள் கிடைத்துள்ளன. இக் காசுகள் புதையலாகக் கிடைத்த இடங்களில் தளிக்கோட்டையும் ஒன்று.[11]

24. சித்தன்வாழூர்

பிற்காலச் சோழராட்சிக் காலத்தில் இவ்வூர் நித்தவினோத வளநாட்டில் முடிச்சோழ நாட்டிற்குட்பட்ட ஊராக இருந்திருக்கிறது. சோழப் பெருவேந்தர் காலத்தில் ஊரின் பெயர் " சிற்றினாவாழ்" என்று வழங்கியிருக்கிறது. இப்பெயரே காலப் போக்கில் "சித்தன் வாழூர்" என மருவியிருக்கிறது. இவ்வூரைச் சேர்ந்த இடையர்கள், புஞ்சை சாத்தன் இவன் மகன் சாத்தன், இராமன் சாத்தன் ஏறன் என்போர் சோழப்பெருவேந்தன் முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில், தஞ்சைப் பெருங்கோயிலின் திருவிளக்குக்கு நெய்யளந்த செய்தி தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.[12]

25. தண்ணீர்குன்னம்

இவ்வூர் சோழப்பெருவேந்தர் காலத்தில் மதனமஞ்சரிச் சதர்வேதிமங்கலம் என அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வூர் நென்மலி நாட்டுப் பரிவுக்குட்பட்டிருந்திருக்கிறது. இவ்வூர் இறைவனுக்கு உருத்திரகோடீசுவரர் என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது. தற்போது இறைவனுக்கு ஜலகிரிநாதர் என்ற பெயர் வழங்கி வருகிறது. இக்கோயிலிலுள்ள அம்மன் சன்னதி கி.பி. 1839-இல் கேசவப்பெருமாள் என்பவரால் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.[13]

26. ஒவர்ச்சேரி

தஞ்சை மாராட்டிய மன்னர் முதலாம் சரபோஜி ஆட்சிக் காலத்தில் 15-7-1722 அன்று கோட்டூர் கொழந்தீஸ்வர சுவாமிக்கு அபிடேகக் கட்டளையாக பெருமாத்தேவர்,

திருமலைத் தேவர் என்னும் இருவர் உவரிச்சேரி என்னும் இடத்தில் முக்கால்வேலி நிலத்தைக் கொடையாக அளித்த செய்தி கோட்டூர் கொழந்தீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் காணப்படுகிறது. இந்த உவரிச்சேரி என்ற பெயரே இன்று ஒவர்ச்சேரி என மருவி வழங்கி வருகிறது.[14]

27. தொகுப்புரை.

ஒரு தேசத்தை - இனத்தை விழிப்படையச் செய்ய வேண்டுமானால் அதன் பழைய வரலாற்றை திரும்பிப் படிப்பதும், திருத்திப் படிப்பதும், இளைய தலைமுறையினருக்கு அதைக் கற்பிப்பதும் தலையாய கடமையாகும். மன்னார்குடி, நெடிய வரலாற்றைக் கொண்ட சிறப்புடையது. மன்னார்குடி மக்கள் எங்கிருந்தாலும் இம்முயற்சியை வரவேற்பார்கள். வரவேற்கிறோம். துணை நிற்போம்.

அடிக்குறிப்புகள்

1. நாமக்கல் கவிஞர் பாடல்கள் - பூம்புகார் பதிப்பகம் - பக் 17
2. Fossil Plants - A.C. Seward - P.55
3. The Word Book Encyclopaedia - S.sn. Vol.17 Page 377-World Book Child Craft International - Chicago
4. ராஜகோபாலசாமி மலர் 1995 - பக் 6
5. மேலது - பக் 6
6. மேலது - பக் 6
7. தி.மா.தொ.வ. - பக் 78
8. மேலது - பக் 79
9. தி.மா.தொ.வ. பக் - 75
10. மேலது - பக் 79
11. தி.மா.தொ.வ. - பக் 71
12. மேலது - பக் 88
13. மேலது - பக் 21
14. மேலது - பக் 22

*****

4. மன்னார்குடியை ஆண்ட மன்னர்கள்

1. முன்னுரை

மன்னார்குடியை சோழர்களும், பாண்டியர்களும், நாயக்கர்களும், மராட்டியர்களும் ஆட்சி செய்துள்ளனர். இவர்களின் வரலாற்றை விரிக்கின் பெருகும் என்பதால் மன்னார்குடியில் சிறப்புடைய மன்னர்களை மட்டும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

2. முதல் இராசாதிராசன் (கி.பி.1018-1054)

இம்மன்னன் முதல் இராசேந்திரனின் முதல் மகனாவன். இராசகேசரி என்ற பட்டமுடையவன். கி.பி. 1018-இல் இளவரசுப் பட்டம் பெற்றதிலிருந்தே தந்தையுடன் ஆட்சியை மேற்கொண்டு பல போர்களில் வெற்றி பெற்றவன். கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து ஆட்சி செய்தவன்.

தந்தையின் காலத்தில் இராசாதிராசன் பெற்ற வெற்றிகள்:

மானாபரணன், வீரசேரளன், சுந்தரபாண்டியன் என்ற மூன்று பாண்டியர்களை வென்றான்.

வேணாட்டரசரையும், இராமகுட மூவரையும் தோற்றோடச் செய்து, காந்தளூர் சாலையில் சேரனின் கப்பற்படையை அழித்தான்.

மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனை வென்றான். அவனுக்குச் சொந்தமான கொள்ளிப்பாக்கை என்னும் நகரை எரித்தான்.

இவ்வாறு தந்தையோடு கழித்த இருபத்தாறு ஆண்டுகளில் இம்மன்னன் பெற்ற வெற்றிகள் இவைகளேயாம்.

இராசாதிராசன் தனியரசு செய்தபோது பெற்ற வெற்றிகள்

இராசாதிராசன் இலங்கை அரசனாகிய விக்கிரம பாகுவையும் பிற அரசையும் வென்று ஈழ மண்டலத்தைக் கைப்பற்றினான்.

கன்னரன் வழிவந்தவரும் ஈழ நாட்டிலிருந்தவருமான சீவல்லவன், மதனராசன் என்பவர்களைப் போரில் தோற்றோடச் செய்தான்.

கி.பி. 1046-ல் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுடன் இரண்டாவது முறையாக போரிட்டான். போரில் கண்டர் தினகரன், கணபதி, மதுசூதனன் ஆகிய சாளுக்கியத் தலைவர்களைப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தான். சாளுக்கியத் தலைநகரான கம்பிலியைக் கைப்பற்றி, அங்கு வெற்றித் தூணொன்று நட்டான்.

மூன்றாம் முறையாகச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனோடு கொப்பம் என்ற இடத்தில் பெரும்போர் செய்தான். இராசாதிராசன் பட்டத்து யானைமீதிருந்து போர் செய்யும்போது பகைவர் விட்ட அம்புகள் மார்பில் பாய யானைமீதே இறந்தான்.[1]

மன்னார்குடியை உருவாக்கியவன்

கி.பி. 1118-ல் வெட்டப்பட்ட முதற்குலோத்துங்கனின் மன்னார்குடி இராஜகோபாலசாமி கல்வெட்டு இராஜாதிராஜன் எனும் சோழன் பெயரில் அவ்வூர் இருந்தது என்று சொல்வதாலும், கி.பி.1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் என்ற ஒருவனே என்பதாலும் கங்கை கொண்ட

சோழன் எனும் முதலாம் இராஜாதிராஜன் சோழனால்தான் இவ்வூர் தோன்றியது என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.[2]

இராஜாதிராஜன் தன் பெயரால் தோற்றுவித்த தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலத்தில் மூன்று பெருங் கோயில்கள் இம்மன்னன் பெயரால் எழுந்தன. இவை இராஜாதிராஜ விண்ணகரம் எனும் வைணவ ஆலயம், ஜெயங்கொண்ட என்ற இவனது விருதுப் பெயரில் எழுப்பப் பெற்ற ஜெயங்கொண்ட என்ற கோடீஸ்வர முடையார் கோயில், ஸ்ரீ கைலாசம் எனும் இராஜாதிராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்பவையாகும்.[3]

சிறப்பியல்புகள்

மறையருள் திறைலோக்கியமுடையார் என்பவளே இவனது பட்டத்தரசியாவாள். இவனுக்கு அகலமல்ல குலாந்தகன், கலியாணபுரம் கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயர்கள் உண்டு. இவன் கொப்பத்துப் போரில் யானைமீதே இறந்ததால் "யானை மேல் துஞ்சியத் தேவர்" என்று கல்வெட்டுகளில் பெயர் பெற்றான்.

3. முதலாம் குலோத்துங்கன் (கி. பி.1070 - 1120)

முதலாம் குலோத்துங்கன் சோழப் பேரரசை மேலும் வலிவுடையதாக்க முயற்சிகள் மேற்கொண்டான். தொண்டை மண்டலத்தில் தமது பார்வையைச் செலுத்தினான். மன்னார்குடி கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளான்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கி.பி.1030 - இல் பூசத்திருநாளில் பிறந்துள்ளான். இவன் முதல் இராசேந்திர சோழனுக்குப் பேரன் ஆவான். பாட்டனைப் போலவே இருந்ததால் இவனுக்குப் பாட்டன் பெயராகிய இராசேந்திரன் என்றே பெயர் சூட்டினர்.

சோழநாட்டில் ஆதிராசேந்திரன் நோயுற்று இறந்துவிட்ட பிறகு. வேங்கி நாட்டிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் வந்து அரசுரிமையைக் கேட்டான். அங்கிருந்த அமைச்சர், படைத்தலைவர், சான்றோர்கள் இவனுக்கு கி.பி 1070 - இல் ஜூன் திங்கள் 9-ஆம் நாளில் முடிசூட்டிச் சிறப்பித்தனர். அந்நாள் முதலே இவன் குலோத்துங்கன் என அழைக்கப்பட்டான்.

மெய்க்கீர்த்திகள்:-

1. "திருமன்னி விளங்கும் இருகுவடனையதன்"
2. "பூமேல் அறிவையும் போர்ச் செய்ப் பாவையும்"
3. "புகழ் சூழ்ந்த புணரி அகழ்சூழ்ந்த புவியல்"
4. "புகழ் மாது விளங்க சயமாது விரும்ப"
5. "பூமியும் திருவும் தாமெய்ப் புணர"
6. "பூமன்னு பாவை காமுற்று முயங்க"

என்னும் தொடக்கங்களையுடைய ஆறு மெய்க் கீர்த்திகள் இவனுடையதாக முழுமையாகக் கிடைக்கின்றன.

கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டாலும், காஞ்சிபுரத்திலும் தலைமையிடம் அமைத்துக் கொண்ட போது தொண்டை மண்டலத்தின் பெரும்பகுதி இவனுடைய நேரடிப் பார்வையின் கீழ் இருந்தது. குறிப்பாகத் திருவக்கரை பல சிறப்புகளைப் பெற்றது.

மன்னார்குடி இராசகோபாலசாமி கோயில் எனும் பெயரில் திருமால்கோட்டம் ஒன்றை நிறுவினார். அது அவர் காலத்தில் குலோத்துங்கச் சோழ விண்ணகரம் என வழங்கிற்று. இவர் காலத்திலிருந்து இக்கோயில் இறைவனுக்கு "வண்டுவராபதி ஆழ்வார்" என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது. இராசேந்திர சோழப் பெரும்பள்ளி என்னும் பௌத்த விகாரத்திற்கு நிலங்களைத் தானமாகக் கொடுத்தார். கொற்கைச் சிவன்

கோயிலும் சூரியனார் கோயிலும் இவர் காலத்தில் கட்டப்பட்டன.

இவரின் ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி.1076) தொடங்கி 45-வது ஆட்சியாண்டுவரை (கி.பி.1115) கல்வெட்டு அமைக்கும் பணி தொடர்ந்துள்ளது.

மேலும் "திருமகள் செயமகள் திருப்புயத் திருப்ப" (14 ஆம் ஆண்டு) திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு **(47ஆம் ஆண்டு)** போன்றவை இரண்டொரு அடிகளோடு முடிவனவாகவும் கிடைத்துள்ளன.[4]

இங்கு 'புகழ்மாது விளங்க ஜெயமாது விரும்ப' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியினை உடைய கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன.

மற்றொரு கல்வெட்டின் வாயிலாக குலோத்துங்கச் சோழ விண்ணகரத்தாழ்வார் கோயிலில் எழுந்து அருளியுள்ள வண்டுவராபதி ஆழ்வார் சிறுகாலை சந்தி, உலா எழுந்தருளும் போது திருப் போனசம், அமுதுபடி, தளிகை ஆகியவற்றிற்கு சபையார் நில தானம் கொடுத்தது. இறையிலியாகச் செய்தது போன்ற நிகழ்ச்சியைக் கூறுகிறது.

இம்மன்னனது காலத்தில் ராஜகோபாலசாமி கோயிலின் முன்னர் மாமரம் ஒன்று இருந்திருக்கிறது. இம்மாமரத்தின் கீழே கி.பி.1018-ல் இராசாதிராசச் சதுர்வேதி மங்கலத்து சபையார் கூடி காடு, நாடு, நகரம், கள்ளப்பற்று ஆகியவற்றில் 30,000 காசுகள் வசூலித்துக் கோயிலுக்குக் கொடுக்க முடிவு செய்தனர்.[5]

4. மூன்றாம் (கி.பி.1178 - 1218) குலோத்துங்கன்

இவர் இரண்டாம் இராசராசனின் புதல்வன் என்பதைக் குடுமியான் மலைக் கல்வெட்டு கூறுகிறது.

இவனுடைய மெய்க்கீர்த்திகள் " புயல் வாய்த்து வளம் பெறுக" எனவும் "புயல் வாய்த்து மண்வளர" எனவும் "புயல் பெருக வளம் பெருக" எனவும் தொடங்குகின்றன.

இம்மன்னனின் வரலாற்றில் சிறப்பாகப் பேசப்படுவது பாண்டிய நாட்டுப் போராகும்.

இராஜகோபாலசாமி கருவறை அர்த்த மண்டம், மூன்றாம் கோபுரம் ஆகியவற்றை கட்டினார்.

குலோத்துங்கன் கி.பி 1178-ல் முடிசூட்டப்பெற்று சோழ நாட்டிற்குச் சக்கரவர்த்தியானார்.

வெற்றிச் சிறப்புகள்

மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் சோழநாட்டிற்கு உள்ளடங்கி இருந்த பிற நாட்டதிகாரிகளும், அரசர்களும் தனிப்பட்ட உரிமைகளை நாட்டிவரலாயினர், எனவே குலோத்துங்கன் அவர்களை வென்று சோழப் பேரரசை நிலைநாட்ட வேண்டியதாயிற்று. ஆதலின் முதற்கண் தன் படைகளைப் பெருக்க முயன்றான். இவனது ஊக்கத்தால் உருவான சோழப்படைகளுள் அறுபதாயிரம் போர் யானைகள் கொண்ட படையே மிகச் சிறந்ததாகும். குலோத்துங்கன் தக்க வலிமையைப் பெருக்கிக் கொண்டவுடன் பகைவரை ஒடுக்கத் தலைப்பட்டான்.

முதலில் வடநாட்டில் வடுகரை வென்று அடக்கினார். அதன் பயனாக ஏழுகலிங்கமும், கொல்லாபுரமும் இவர் ஆட்சிக்கு உட்பட்டன. பின்பு மூன்றாவது பாண்டியநாட்டுப் போரிலும் வெற்றி பெற்றார். குலோத்துங்கன் வெற்றிமேல் வெற்றிபெற்று பெரு வீரனாக ஆட்சி செய்தார்.

சமய நிலையும் திருப்பணியும்

மூன்றாம் குலோத்துங்கன் சிவபக்தியிற் சிறந்தவர். திருவாரூர்த் தியாகேசனிடத்தும், தில்லையில் திருமுக மண்டபத்தையும் அம்மன் கோயில் கோபுரத்தையும் கட்டினார். மதுரைச் சொக்கநாதப் பெருமானுக்குத் திருவீதியும், திருநாளும் அமைத்தார். திரிபுவனத்தில் கம்பகரேசுவரர் கோயிலைச் சிற்பத்திறன் விளங்கப் புதிதாகக் கட்டினார்.

வேலூரில் உள்ள திருமால் கோயிலுக்கு மூன்று ஊர்களைத் தானமாகத் தந்தார். சைனக் கோயிலொன்றினுக்கு இருபது வேலி நிலத்தைப் பள்ளிச்சந்தமாக அளித்தார்.

5. மூன்றாம் இராஜராஜன் (1216 - 1256)

மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சி காலத்திலேயே மூன்றாம் இராஜராஜன் இளவரசு பட்டம் பெற்றிருந்தார். குலோத்துங்கன் இறந்த பிறகு சோழப் பேரரசின் மன்னரானார். அரசமுறைப்படி இச் செய்திகளை நோக்க மூன்றாம் குலேத்துங்கன் மகன் மூன்றாம் இராஜராஜன் என்று சொல்லப்படுகிறது. மேலும் சோழ மன்னர்கள் மரபுப்படி மூன்றாம் குலோத்துங்கன் பரகேசரி பட்டமும் மூன்றாம் இராஜராஜன் இராஜகேசரி பட்டமும் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது.

மெய்க்கீர்த்திகள்

1. சீர் மன்னி இருநான்கு திசை விளங்க திருமடந்தையும்

2. உத்தம நீதி உயர்பெருங்கீர்த்தி என்னும் தொடக்கத் தினை உடைய இரு மெய்க் கீர்த்திகள் இவருக்கு உண்டு. மன்னார்குடியில் இவர் கல்வெட்டுக்கள் 5 உள்ளன.[6]

இவரது கல்வெட்டுக்கள் ராஜராஜன் சதுர்வேதி மங்கலத் தாளும் சபையாரும், ஐந்து பேரிளமை நாட்டவர்களும் கூடி எடுத்த ஒரு முடிவினைப் பற்றி பேசுகின்றன.

சமயநிலை

சோழரின் வழிவழியாக வரும் சிவத்தொண்டினையே மூன்றாம் இராசராசனும் பின்பற்றினார். எனினும், வைணவ, சமணக் கோயில்களையும் ஆதரித்தார். இவர் காலத்தில் சிறப்பாக எழுந்த சமயநூல் சிவஞானபோதமாகும்.[7]

குடும்பம்

மூன்றாம் இராசராசனின் பட்டத்தரசி புவன முழுதுடையாள் என்பவளாவள். போசள மன்னன் வீரநரசிம்மனுடைய மகளையும் இம்மன்னன் மணந்திருந்தான். இவருக்கு இராசேந்திரன் என்ற மகனொருவன் உண்டு.

தன் மகனை கி.பி 1246லேயே இராசராசன் இளவரசனாக்கி இருந்தார். இவ்வாறு சோழ நாட்டளவில் ஆட்சியை 33 ஆண்டுகள் விட்டும் தொட்டும் நிகழ்த்திய மூன்றாம் இராசராசன் கி.பி.1256ல் இறந்தான், இவனுடைய ஆட்சிக் காலம் சோழ நாட்டின் தாழ்ச்சிக்கு அடிகோலியது எனலாகும்.

மன்னார்குடி ராஜகோபாலசாமி கோயிலில் மூன்றாம் இராஜராஜ சோழனின் சாசனங்கள் உள்ளன. இதில் ஒரு சாசனம் வேறு எங்கும் சொல்லப்படாத அரிய வரலாற்றுச் செய்தி ஒன்றினைத் தருகின்றது.[8]

திரிபுன சக்ரவர்த்திகள் இராஜராஜ தேவர்" என குறிப்பிடப் பெற்றுக் காணப்படும் (கி.பி 1239) கல்வெட்டு நகல் மன்னார்குடி கைலாசநாதர் கோயிலிலும் உள்ளது.[9]

கைலாசநாதர் கோயிலான ராஜாதிராஜீஸ்வர முடையார் கோயிலில் இவ்வூர் சபையார், மகாசபையார் மற்றும் ஜெயங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், ராஜாதிராஜப் பேரிளமை நாட்டவர், கங்கைகொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், நாலாயிரப் பேரிளமை நாட்டவர், ஆளப்பிறந்தான் பேரிளமை நாட்டவர் ஆகியோர் கூடி ஒரு முடிவு எடுக்கின்றார்.

வரி வசூலிக்கும் அரசு அதிகாரிகள் தங்களுக்குத் தோன்றியபடி எல்லாம் வரி வசூலித்து குடிகளுக்கு இன்னல்கள் செய்தால் மகாசபையோரும், நாட்டோரும் கூடி எவ்வகை வரி கொள்வது, எவ்வாறு கொள்வது என்பது பற்றியும் ஸ்ரீ கைலாசமுடையார் கோயில் திருவிழாவுக்கும், வண்டுவராபதி மன்னார் கோயில் திருவிழாவுக்கும் உரிய வருவாய் வகைகள் பற்றியும் தெளிவாக முடிவெடுத்து அதன்படி நடப்பதாக அனைவரும் ஒப்புக்கொண்டு, இரண்டு கோயில்களிலும் சாசனம் வெட்ட வேண்டும் என்று கூறி இக்கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். இச்சாசனம் எழுதி கையொப்பம் இட்ட ஊர் கணக்கு அலுவலர்கள் சேகல் எனும் ஊரினைச் சேர்ந்த கருணாகரப்பிரியன், உத்தமப்பிரியன் என்பவர்களே இவர்கள் என்பதை இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[10]

அடுத்து இராஜகோபாலசுவாமி கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டில் மன்னன் பெயர் குறிக்கப் பெறாமல் "கோனேரி மேல் கொண்டான்" என்ற குறிப்போடு தொடர்கிறது. இவ்வாறு எழுதப்பெறும் கல்வெட்டுக்கள் ஒரு மன்னனது நேரடியான அரசாணையைக் குறிப்பதாகும்.

இதில் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலத்து இராஜாதி ராஜ விண்ணகரத்து எம்பெருமானுக்கு (இராஜகோபால பெருமானுக்கு) சொந்தமான பன்னிரண்டு மாநிலத்தை இம்மன்னனது 13 வது ஆட்சியாண்டிலிருந்து வரியில்லாத நிலமாக மாற்றி ஆணையிட்டு, தன்னுடைய பிறந்த நாளான புரட்டாசி மூல நட்சத்திர தினத்தன்று பெருமாளுக்கு திருவிழா நடத்தித் தீர்த்தம் அருளிச் செய்வதற்கும், மாதந்தோறும் மூல நட்சத்திர தினத்தன்று பெருமாள் எழுந்தருளவும், எல்லா வாகனங்களிலும் பெருமான் எழுந்தருளவும் வைத்த அறக்கட்டளை பற்றி விவரிக்கின்றது. மன்னனது ஆணையை நிறைவேற்றும் தலைவனாக மன்னனால் இக்கல்வெட்டில் குறிப்பிடுபவன் சேகல் எனும் ஊரினைச் சேர்ந்த உத்தமப் பிரியன் என்பனாவான்.

அரசு அலுவலன் பெயரை இக்கல்வெட்டில் அறியும் நாம், மன்னன் பெயரை இக்கல்வெட்டால் அறிய முடியாவிட்டாலும், மன்னன் யார் என்பது அறிய நாம் மன்னார்குடி கைலாசநாதர் கோயில் கல்வெட்டுக்களின் துணையை நாட வேண்டியுள்ளது. ஸ்ரீ கைலாசமான ராஜாதி ராஜீஸ்வரம் எனும் அச்சிவாலயத்தில் மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. இவை நான்குமே அம்மன்னனின் 23ஆம் ஆண்டு கல்வெட்டுகளாகும்.

இதில் ஒன்று இராஜகோபாலசாமி கோயிலில் உள்ள கல்வெட்டின் நகலாகும். அதன் இறுதிப் பகுதியில் கையொப்பம் இட்ட அலுவலர்கள் பெயர் வரிசையில் சேகல் ஏனும் ஊரைச் சேர்ந்த கருணாகரப் பிரியன், உத்தமப் பிரியன் ஆகிய இருவர் பெயர்களும் காணப்படுகின்றன. மூன்றாம் இராஜ ராஜ சோழனின் மற்ற கல்வெட்டுக்களிலும் இவர்களது பெயர்கள் காணப்படுகின்றன.

எனவே 'கோனேரின்மை கொண்டான்' என்ற பெயரோடு குறிக்கப் பெற்றுள்ள அரசன் ஆணையைக் குறிக்கும் கல்வெட்டின் அதிகாரியாக சேகல் எனும் ஊரைச் சேர்ந்த உத்தமப்பிரியனின் தலைவனான மூன்றாம் இராஜராஜனே என்பது தெளிவாக நிரூபணமாகிறது.

மூன்றாம் இராஜராஜனின் பிறந்த நாள் புரட்டாசி மூலம் என்பதைத் தமிழக வரலாற்றுக்கு இக்கல்வெட்டு ஒன்றே அறிவிக்கின்றது. மேலும் ஒரு பேரரசன் தன் பிறந்த நாளான புரட்டாசி மூல நட்சத்திர நாளில் ஆண்டுதோறும் இராஜகோபாலப் பெருமாளை திருவீதி உலா வரச் செய்து தீர்த்தம் அருளி திருவிழாக் கொண்டாடச் செய்ததோடு, மாதந்தோறும் மூல நட்சத்திர நாளில் பெருமாளை திருவீதி

எழுந்தருளச் செய்தும், எல்லா வாகனங்களிலும் உலா வரச் செய்தும் கொண்டாடினான் என்பதை இங்கு மட்டுமே நாம் காண முடிகிறது.[11]

6. மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1246-1279)

இம்மன்னன் மூன்றாம் இராசராசனுடைய மகனாவன், பரகேசரி என்னும் பட்டத்துடன் சோழ நாட்டாட்சியை ஏற்றவன்.

இவன் அந்தணர்களை மிகவும் போற்றியவனாவன். வீரமும் ஆற்றலும் ஒருங்கே பெற்ற வீரனாகவும் இவன் விளங்கினான்.

மெய்க்கீர்த்திகள்

1. பூமியும் திருவும்

2. பூமருவிய திருமடந்தை என்னு தொடக்கத்தினை உடைய இரண்டு மெய்க்கீர்த்திகள்

இங்கு இவனுடைய கல்வெட்டாக நான்கு உள்ளன.[12]

இவற்றில் வண்டுவராபதி மாமுனிகள் மடம் ஒன்று பற்றியும், திருப்பரிகலன்கள் அளித்ததும் அண்ணா மலைநாதரை எடுப்பித்த செய்தியும், நிலக்கொடைகள் பற்றியும் கூறுகின்றன.

மூன்றாம் இராஜேந்திர சோழனது இருபத்தொன்றாம் ஆண்டு (கி.பி. 1267) சாசனமொன்று ராஜகோபாலசாமி திருக்கோயிலிலுள்ளது. இத்திருக்கோயிலோடு இணைந்து நிகழ்ந்த மண்டலத்தார் மடத்தின் தலைவராகத் திகழ்ந்த **வண்டுவராபதி மஹாமுனிகளுக்கும்** அவரது சிஷ்யை பெரிய பிராட்டிக்கும் இத்திருக்கோயில் மடப்புரமாக அளித்த நிலத்தை, அவர்கள் காலத்திற்குப் பின்பு முறையாகப் போற்ற வேண்டி அம்மஹாமுனிகள் எழுதிய சாசனமே இக்கல் வெட்டாகும். இக்கல்வெட்டால் தவசீலர் ஒருவர் இக்கோயிலோடு இணைந்த மடத்தில் இருந்து தொண்டு செய்தார் என்று அறிகிறோம்.[13]

சோழ அரசை கி.பி. 1256-ல் ஏற்றவுடன் தக்கமுறையில் படைவலிமையைப் பெருக்கி வந்தான். பாண்டியன் இராஜேந்திரனிடம் தோல்வி அடைந்து கப்பம் செலுத்தும் வீரஅரசனான். பாண்டியருக்கு அடங்கிய நிலையில் பல ஆண்டுகள் சோழநாட்டை ஆட்சிபுரிந்து கி.பி.1279-இல் இறந்தானென்றும் தெரிகிறது.[14]

மூன்றாம் இராசேந்திரன் பட்டத்தரசி சோழகுலமாதேவி என்ற பெயருடையவள். இவன் காலத்தில் தஞ்சைவாணன் கோவை ஆசிரியரான பொய்யாமொழிப் புலவரும், நளவெண்பா ஆசிரியரான புகழேந்திப் புலவரும் வாழ்ந்தவராவர்.

மூன்றாம் இராசேந்திரசோழனின் 27வது ஆட்சியாண்டில் (கி.பி. 1267) இராசகோபாலசுவாமி கோயில் இறைவனுக்கு ஈச்சோப்பி (விசிறி?) ஆழி, சங்கு, பகல்விளக்கு, சின்னம், (எக்காளம்) போன்ற பல திருப்பரிகலன்கள் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இவனது ஆட்சிக் காலத்தில் மன்னார்குடியில் 'வண்டுவராபதி மாமுனிகள் மடம் என்ற மடம் இருந்திருக்கிறது. இம்மடத்தின் தலைவர் வண்டுவராபதி மகாமுனிகளும் அவரது சிஷ்யையான பெரிய பிராட்டி என்பவரும் தங்களது செல்வத்தை இட்டுக்கொண்டு இராசாதிராசச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகையான சோழநல்லூரில் மடப்புற இறையிலியாய் நிலத்தினை அனுபவித்து வந்தனர். இம்மகாமுனிகள் தாம் இறந்த பிறகு அந்நிலத்தினையும் மடத்தினையும் தன் சிஷ்யை நிர்வகிக்கவும், மடத்தின் பணிப்பெண்களின் (வெள்ளாட்டி) உணவுக்கும் உடைக்கும் இந்நிலத்தினைப் பயன்படுத்தி வரவும் வழிவகை செய்திருந்தார்.

7. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1252 - 1267)

மாறவர்மன் சுந்தர பாண்டியனை அடுத்து சில மன்னர்கள் பாண்டிய நாட்டை ஆண்டுள்ளனர். ஆனால் புகழ்பெற்றவர்களாக உடையவர் காணப் பெறவில்லை.

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி 1257 ஆம் ஆண்டில் முடி சூட்டப்பெற்று பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தான். சித்திரைத் திங்கள் மூலநாளில் பிறந்தவன்.

இவர் இன்னார் மகன் என்றும், பிறமன்னர்களோடு இவரது உறவுமுறைகள் இவை என்றும் குறிப்பிட இயலவில்லை.

பாண்டியப் பேரரசு உச்சநிலை அடையச் செய்த பெருவீரன் இவன் என்பது குறிப்பிடத்தக்கது. கடப்பை ஜில்லாக்கள் முதல் தெற்கே குமரிமுனை வரையிலும் பரவியுள்ள பெருநிலப்பரப்பில் இவன் கல்வெட்டு எங்கும் காணப்படுகிறது.

அதுபற்றியே 'எம்மண்டலமுங்கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர் என்று இவன் வழங்கப் பெற்றான் போலும்.

மெய்க்கீர்த்தி

இவனுடைய மெய்க்கீர்த்தி,

"பூமலர்வளர் திகழ் திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப" என்ற தொடக்கத்தினை உடையது.

இங்கு இவனுடைய கல்வெட்டு இராசகோபாலசுவாமி கோயில் இரண்டாம் கோபுரச் சுவரில் தென்பகுதி நிலையில் காணப்படுகின்றது. வழிபாட்டில் ஏற்பட்ட தடையினை நீக்கி தொடரச் செய்தது பற்றி கூறப்பட்டுள்ளது.

8. குலசேகரபாண்டியன் :-(கி.பி.1268 - 1311)

இந்தக் கல்வெட்டில் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் "ஸ்ரீ குலசேகர தேவர்க்கு ஆண்டு முப்பத் தொன்றாவது" என்று

வருகிறது. இந்த குலசேகர பாண்டியன் 1190 - 1218ல் ஆட்சி செய்த முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியனா? அல்லது முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனா (1268 - 1311) என்பது இங்கு ஐயத்திற்குரிய ஒன்றாகும். இவன் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனாக இருக்கலாம் என்பதற்கு இரு காரணங்கள் உள்ளன.

ஒன்று, இரண்டு புவனேகவீரன் என்றும் வழங்குவர்.

இந்தப் புவனேசுவீரன் பெயரில் இவ்வூரில் ஒரு மடிகை இருந்துள்ளது. இதனை, ஜெயங்கொண்டநாதர் கோயில் கல்வெட்டால் அறியலாம்.

அடுத்து முன்னைய குலசேகரனின் ஆட்சி ஆண்டுகள் 28 ஆகும். மேலும் மூன்றாம் குலோத்துங்கனின் பேராதரவால் அவன் அளித்த பாண்டிய நாட்டைப் பெற்று அங்கு அரசாண்டு கொண்டிருந்த மாறவர்மன் விக்கிரம பாண்டியனுடைய புதல்வன் ஆவான்.

மூன்றாம் குலோத்துங்கன் மதுரையில் வீராபிஷேகம் செய்துகொள்ள விரும்பும்போது இவன் எதிர்த்து போரிட்டு தோல்வியுற்றான். சுற்றத்தினரோடு ஓடி ஒளிந்து கொண்டான்.

முதல் மாறவர்மன் குலசேகரபாண்டினின் ஆட்சியாண்டுகள் 43 ஆகும். எனவே இக்கல்வெட்டில் காணலாகும் மன்னன் இவனே எனக் கருத இடமுண்டு. கல்வெட்டுச் செய்திகள் ஒன்றுமில்லை. பெயரும் ஆண்டும் தான் தெளிவாக உள்ளன.

9. வீரபாண்டியன் (கி.பி.1253 - 1268)

மன்னார்குடி அண்ணாமலைநாதர் கோயிலில் வீரபாண்டியன் கல்வெட்டு காணப்படுகிறது. அம்மை பெரியாச்சி, இறைவனின் பெயரால் திருநாமத்துக் காணியாக 155 வேலி நிலம்

விலைக்குப் பெற்று வழங்கியிருக்கிறார். நான்குதிசை பதிணென்விஷயத்தார் என்ற வணிகக் குழுவினர் சாரிகைக் கோட்டை புவனேகவீரன் மடிகையில் கூடி இக்கோயில் இறைவன் திருவண்ணாமலை உடையாருக்குத் திருப்பணிக்கும், கறியமுதுக்கும், தங்களது வணிகப்பண்டங்களான மிளகு முதலிய வற்றின் மீது தீர்வை விதித்துக் கொடுக்க முடிவெடுத்த செய்தி அண்ணாமலைநாதர் கோயில் முன்மண்டப தெற்குச் சுவரிலுள்ள வீரபாண்டியனின் கல்வெட்டொன்றில் காணப் படுகிறது.[15]

செயங்கொண்ட சோழீசுவர முடையார்கோயில் திருமுன் மண்டபம் " விக்கிரம பாண்டியன், செயங்கொண்ட சோழீசுவரர் கோயில் தன் பெயரால் சந்தி ஏற்படுத்தி தன் பிறந்த நட்சத்திர நாளை இறைவன் தீர்த்தமாடும் நாளாகக் கொண்டு விழா ஏற்படுத்தி, அமுதுபடி, சாத்துபடி உள்ளிட்ட செல வினங்களுக்காக வளத்தாமங்கலத்திலிருந்து வந்த நிலத்தின் வரி வருமானத்தை வழங்கியிருக்கிறான்.

இவனது காலத்தில் மன்னார்குடியில் வணிகக் குழுவினர் பாதுகாப்பாக தங்கி செயல்பட்டனர். வணிகர்கள் தங்கியிருந்த இடம் 'புவனேசுவீரன் மடிகை'என்றும் 'விக்கிரம பாண்டியன் மடிகை' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

10. போசாளர் வீரராமநாதன் (கி.பி. 1254-1295)

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் சமயபுரத்தினைத் (கண்ணனூர்) தலைநகரமாகக் கொண்டு போசாளர் ஆட்சி ஏற்பட்டது. போசாள மன்னன் சோமேசுவரன், வீரராமநாதன் கல்வெட்டுக்கள் சோழநாட்டின் மேற்பகுதியில் காணப்படுகின்றன. மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலில் போசாள மன்னன் வீரராமநாதனின் கல்வெட்டு காணப்படுகிறது. இது இவன் பெயரில் சிறப்பு வழிபாடு செய்ய சந்தி ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.[16]

11. பராக்கிராம பாண்டியன் (கி.பி. 1422 - 1463)

இம்மன்னனின் கல்வெட்டுக்கள் கைலாசநாதர் கோயிலிலும், ஜெயங்கொண்டநாதர் கோயிலிலும் காணப்படு கின்றன. ஜெயங்கொண்டநாதர் கோயிலில் அத்தியயனம் பண்ணும் பட்டர்கள் ஆறு பேருக்கு இவ்வூரின் பாடாகையான காறைகற்பு நல்லூரில், இறைவனின் திருநாமத்துக்காணி நிலத்திலிருந்து 12 மாநிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதை கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது.

12. அச்சுதப்ப நாயக்கர் கி.பி. (1564 - 1600)

விஜய நகரப் பேரரசு தளர்ச்சியுற்ற காலத்தில் அதன் ஆளுநர்களாக நியமிக்கப்பட மதுரை, செஞ்சி, வேலூர், போன்ற மகாமண்டலேஸ்வரர்கள், பேரரசுக்குக் கட்டுப்படாது சுயாட்சி நிறுவினர். ஆனால் தஞ்சை நாயக்கர்கள் விஜயநகர அரசர் களுக்கு விசுவாசம் உடையவர்களாகவே இருந்தனர்.

தஞ்சை நாயக்க மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேவப்ப நாயக்கர் (கி.பி. 1530-1560) அச்சுதப்ப நாயக்கர்(கி.பி. 1500 - 1614) ரகுநாத நாயக்கர் (கி.பி. 1600 - 1634) விஜயராகவ நாயக்கர் (கி.பி. 1633 - 1673) ஆகியோராவர்.

இவர்கள் தஞ்சைப்பகுதியில் பல்வேறு திருப்பணிகள் செய்துள்ளனர். மன்னார்குடியில் இராஜகோபால சுவாமி கோயிலில் அச்சுதநாயக்கரது ஆணையின்படி இறைவனுக்கு உணவு 2½ தளிகை படைக்க ஏற்பாடு செய்தனர்.

இவரது சாசனங்களாக ராஜகோபாலசாமி கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. கி.பி 1577 ஆம் ஆண்டான சகாப்தம் 1499 இல் வெட்டப்பெற்ற முதற் கல்வெட்டில் தஞ்சை மன்னரான அச்சுதப்ப நாயக்கர் தனது இராஜ குருவாகத் திகழ்ந்த திருமலநம்பி திருமால் தாத்தாச்சாரியர் என்பவருக்கு ஒரு குளம்

உட்பட ஆறு வேலி நிலத்தினை வேட்கோவனூர் எனும் ஊரில் அளித்ததைக் குறிப்பிடுகின்றது. இத்தாத்தாச்சாரியாரின் செப்புச்சிலை இராஜகோபலசாமி கோயிலிலேயே இருப்பதைக் காணலாம்.[17]

அச்சுதப்ப நாயக்கரின் மற்றொரு கல்வெட்டில் இராஜகோபாலசாமி கோயிலுக்காக இரண்டு வேலி நிலத்தினை அச்சுதப்ப நாயக்கர் கட்டளையாக அளித்து இறைவனுக்குக் குறிப்பிட்ட சில வகை தளிகைகள் நடத்த ஏற்பாடு செய்ததை விவரிக்கின்றது.

13. இரகுநாத நாயக்கர் (கி.பி. 1600 - 1645)

இரகுநாத நாயக்கர் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களில் தலை சிறந்தவராகவும் அழியாப் புகழ் பெற்றவராகவும் விளங்கினார். தஞ்சையின் பொற் காலத்தைத் தந்தவர் இரகுநாத நாயக்கர் என்று வரலாற்றேடுகள் கூறுகின்றன.

கோல்கொண்டா சுல்தானால் 1590 இல் பேரரசர் வேங்கடபதிக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதனால் தஞ்சையின் உதவியைப் பேரரசர் நாடினார். தந்தை அச்சுதப்ப நாயக்கருடன் அரசியலில் பங்கேற்றிருந்த இரகுநாதன் தலைமையில் தஞ்சைப் படை உதவிக்குச் சென்றது.

இந்தப் பெணுகொண்டா போரில் இரகுநாத நாயக்கரின் பேராற்றலால் வேங்கடபதிக்கு வெற்றி கிட்டியது.

இந்த முதல் வெற்றிக்குப் பின் கி.பி. 1600 முதல் தஞ்சையின் ஆட்சியை மேற்கொண்ட இரகுநாத நாயக்கர் தானே பல பெரும் போர்க் களங்களைக் கண்டு வெற்றிகளைக் குவித்தார்.

கடல் தாண்டிய யுத்தங்களையும் மேற்கொண்டு வெற்றி களைக் குவித்தார் இரகுநாத நாயக்கர். தேவி பட்டினத்தைக் கடந்து மன்னார் வளைகுடாவில் படகுகள் மூலம் கடலைக் கடந்து யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசியர்களுக்கு எதிராக இரகுநாதன் போரிட்டார்.

போர்த்துக்கீசியர்கள் தோல்வி கண்டு உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர். யாழ்ப்பாண மன்னன் சங்கிலி குமரன் தஞ்சை மன்னனின் அவைக்கு வந்து அவர் உதவியுடன் மீண்டும் மன்னரானான்.

பொன், செம்பு, வெள்ளி போன்ற உலோகங்களில் இரகுநாத நாயக்கரும் காசுகளை வெளியிட்டார். இரகுநாதர் பெயர் பொறித்த காசுகளும் தனது குருவான கோவிந்த தீட்சதர் பெயரில் அச்சடித்த நாணயங்களும், இராமர் லட்சுமணர் உருவம் பொறித்த நாணயங்களும் புழக்கத்திலிருந்தன.

இரகுநாத நாயக்கர் இளம் வயதிலிருந்தே பாட்டனார், தந்தை ஆகியோரின் அரசியல் வாழ்க்கையைக் கண்டு பெற்ற அனுபவ அறிவோடு, அமைச்சர் கோவிந்த தீட்சதரிடம் பெற்ற கல்வி மற்றும் இசைத் துறையில் நிறைந்த ஞானமுடையவராகவும் திகழ்ந்தார்.

இரகுநாத நாயக்கர் சிறந்த ராம பக்தராக வாழ்ந்து பல வைணவத் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார்.

கும்பகோணத்தில் கி.பி. 1620இல் இராமசுவாமி திருக்கோயில் இவரால் கட்டப்பட்டது. இத்திருக்கோயில் மிகச் சிறந்த கலைக் கூடமாகத் திகழ்கிறது.

முன் மண்டபத்தில் உள்ள தூண்களில் சிறந்த வேலைப் பாடுகளுடன் கூடிய சிற்பங்கள், திருமாலின் பல அவதாரங் களைச் சித்தரிக்கும் நிலையில் அமைந்துள்ளன. உள் பிரகாரத்தில் இராமாயணம் முழுவதும் சித்திர வடிவில் வரையப் பட்டுள்ளது.

இராம பட்டாபிஷேக கோலத்திலேயே திருமேனிகளை அமைத்து வழிப்பட்டார். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும் ஸ்ரீ சீதாப்பிராட்டியும் ஒரே ஆசனத்தில் அமர்ந்து காட்சி தருகிறார்கள். பரதன் குடை பிடிக்க - சத்ருக்கனன் சாமரம் வீச-இலக்குமணர் கோதண்டத்தைத் தாங்கிய வண்ணம் கரம் குவித்து இராமச்சந்திர மூர்த்தியின் ஆணையை எதிர்பார்ப்பது போலக் காட்சி தருகின்றான்.

மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயிலின் சன்னதிக்கு முன்புள்ள மண்டபத் தூண்களில் இரகுநாத நயக்கர் செய்த துலாதானம், ஹிரண்ய பாவத தானம், கோதானம் ஆகியவற்றைக் காட்டும் சிற்பங்களுடன் மனைவியர் இவருடன் இராஜகோபாலனை வணங்கும் சிற்பமும் உள்ளது.

இரகுநாத நாயக்கர் சங்கீதத்தில் 'ஜெயந்தசேனா' என்ற ராகத்தை உருவாக்கியுள்ளார். மேலும் 'இரகுநாகேந்திர வீணை' என்ற புது வீணையையும் இவர் உருவாக்கியுள்ளார்.

வீணையின் மேல் அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டதற்கான குறிப்பு இவர் எழுதிய 'சிருங்கார சாவித்திரி' என்ற நூலில் உள்ளது.

'ராமானந்தா' எனும் தாளத்தினையும் கண்டுபிடித்த பெருமை இரகுநாதநாயக்க மன்னரையே சாரும்.

இசை மரபில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமின்றி, தஞ்சை வீணை மரபின் தந்தையாக இரகுநாத நாயக்கர் விளங்கினார். சிறந்த இசைவாணராகவும் இலக்கியப் படைப்பாளி யாகவும் விளங்கிய இரகுநாத நாயக்கர் சமஸ்கிருதத்திலும் கவி இயற்றும் வல்லமை பெற்றவராக விளங்கினார். ஓர் இரவுக்குள் 'பாரிஜாத பகரணம்' என்ற காவியத்தை எழுதி முடித்தார் என்பதற்காக அவரது தந்தை அச்சுதப்ப நாயக்கர் கனகாபிஷேகம் நடத்திப் பெருமைப்படுத்தியதாக இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன.

இரகுநாத நாயக்கர் சில கோபுரங்களையும் மண்டபங் களையும் இங்கு தோற்றுவித்துள்ளார். இராஜகோபாலனின் கருவறைக்கு முன் உள்ள மகாமண்டபத்தில் பல்வேறு தானங்களை அமைச்சர் கோவிந்த தீட்சிதருடன் இருந்து இம்மன்னன் செய்தான் என்பதை அங்குள்ள சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுவர்ணமேரு தானம், கோதானம், துலாபார தானம் போன்றவற்றை இம்மன்னன் அளிக்கும் காட்சிகளோடு தேவியர் களுடன் இவர் இறைவனை வணங்கும் காட்சியும் நான்கு பெருந்தூண்களில் இடம்பெற்றுள்ளன.[18]

14. விஜயராகவ நாயக்கர் (கி.பி. 1633 - 1675)

விஜயராகவ நாயக்கர் கி.பி. 1633 ஆம் ஆண்டில் தஞ்சை மன்னனாக முடிசூட்டிக் கொண்டார்.

'ராகவன் வம்சாவளி' என்ற நூலில் விஜயராகவ நாயக்கர் முடிசூட்டிய ஆண்டில் ஒரே நாளில் பதினாறு பெரிய தானங்கள் செய்ததாகச் செய்தி உள்ளது.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் ஒருபுறமும், முகமதிய மன்னர்கள் ஒரு புறமும், விஜயராகவ நாயக்கருக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்தனர்.

பீஜப்பூர் படைத் தலைவர்கள் தஞ்சையைக் கைப்பற்றினர்.

தஞ்சையின் செல்வத்தை அவர்கள் கொள்ளையடித்தனர். நாட்டில் பஞ்சம் தலைதூக்கியது. தஞ்சை மன்னன் மதுரை மன்னனை உதவிக்கு அழைத்தான். இனியும் தஞ்சையில் இருந்தால் ஆபத்து என்று முடிவு செய்த பீஜப்பூர் படைத் தலைவர்கள் தஞ்சையை விட்டு ஓடினர்.

விஜயராகவ நாயக்கர் தஞ்சையைக் கைப்பற்றிக் கொண்டார். அதன் பிறகு மதுரை மன்னராக முடிசூட்டிக் கொண்ட சொக்கநாத நாயக்கர் தஞ்சை மீது கி.பி. 1661இல் படையெடுத்து வந்து தஞ்சையைக் கைப்பற்றினார்.

தன் எதிரிக்கு விஜயராகவ நாயக்கர் உதவி செய்ததற்குப் பழிவாங்குவதற்கு மதுரை மன்னன் இரண்டாம் முறையாகத் தஞ்சை மீது படையெடுத்து வந்தான்.

திருச்சிக்கு அருகில் 50 கல் தொலைவில் மாமலை என்ற ஊரில் இருந்து கருங்கற்களை கொண்டுவந்து மன்னார்குடி ராஜகோபாலசாமி கோயிலுக்கு ஐந்து பெரிய கோபுரங்களையும் பல வண்ணச் சிற்ப வேலைப்பாடுகளையும் செய்தார். கோயிலுக்கு நந்தவனங்களையும், ஹரித்ராநதி படிக்கட்டுக்களையும் அமைத்தார்.

இராஜகோபாலசாமிக்கு நவரத்தின கவசம், வைரமுடி ஆகியவை செய்து சமர்ப்பித்து வழிபட்ட பெருமையும் விஜயராகவ நாயக்கருக்கே உரியதாகும்.

இக்கோயிலின் திருப்பள்ளியறையில் முன்னால் உள்ள தூணின் அடிவாரத்தில் அச்சுதப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர் அவர் மனைவி செண்பகலெட்சுமி ஆகியோர் கூப்பிய கரங்களுடன் சிற்பமாக விளங்குகிறார்கள். உற்சவக் காலங்களில் பெருமாள் இச்சிலையருகே எழுந்தருளி நிற்கும்போது தீட்சதர்கள், "அனைத்துலகும் ஆண்ட அச்சுத விஜயராகவ மன்னார்தாசனுக்கு அருளிப்பாடி" என்று அருட்பா பாடுவர்.

தஞ்சை நாயக்கர் மன்னர் விஜயராகவ நாயக்கர் உடலையும் மற்றும் அவரது மைந்தர் மன்னாருதேவன் உடலையும் எடுத்து அரச மரியாதையுடன் அடக்கம் செய்தார்.

மதுரை சொக்கநாத நாயக்கர் இந்த நிகழ்வுகள் குறித்துத் தஞ்சை அவையில் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்.

15. சகஜி மன்னன் (கி.பி. 1684 - 1712)

'சஹஜி' என்று மராத்தியிலும், சகசி என்று தமிழிலும் அழைக்கப்பட்ட இம்மன்னர் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராத்திய மன்னர்களின் வரிசையில் இரண்டாவதாக முடிசூடியவர்.

சகஜி தஞ்சை அரண்மனையில் செங்கோலோச்சும்போது கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டையில் முதலாம் சரபோசியும், மன்னார்குடிக்கு அருகில் உள்ள மகாதேவப் பட்டினத்தில் துளசாவும் இருந்துகொண்டு அந்தந்தச் சுபாக்களைத் (நாட்டுப் பிரிவுகளை) திறம்பட நிருவகித்தனர். கர்நாடக மாநிலத்தில் பிறந்த இவர், தமது இளம் வயதிலேயே தம் தந்தையுடன் தஞ்சை அரசுப் பணிகளைக் கவனித்ததால், தமது ஆட்சியில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தினார். தஞ்சை மராத்தியர் அரசர்களின் வரிசையில் மிகச்சிறந்த அரசர் என்ற பெயரையும் பெற்றார். சகம் 1633 நந்தன வருடம் கி.பி. 1712 இல் தஞ்சையை அடுத்த வல்லத்தில் இயற்கை எய்தினார்.

சகஜி எனும் பெரும்புலவன்

சோழ நாட்டிலுள்ள சைவ, வைணவ ஆலயங்களுக்குச் சென்று பல பாடல்களைப் பாடியுள்ளார். முறையான இசையோடு இவர் யாத்த பாடல்கள் பக்திச் சுவையும், இனிமையும் உடையவையாகும். மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானின் திருவிழாவைக் கண்டுகளித்த சகஜி மன்னன் அவர்மீது பல தெலுங்குப் பாடல்களைப் பாடியுள்ளார்.

இராஜகோபாலர் கருட வாகனத்தில் பவனி வருதல், செங்கமலவல்லியின் சிறப்புகள், குதிரை வாகனத்தில் எழுந்தருளுதல், திருத்தேர் மெதுவாக ஊர்ந்தபோது கோபாலன் கீர்த்தி உரைத்தல், சிருங்காரப்பாடல் என்று சகஜிமன்னன் பாடியவை இனிமை பயப்பவையாய்த் திகழ்கின்றன.

திருச்சியில் மதுரைப் படையைச் சுல்தான் படை தோற்கடித்து, தஞ்சை மன்னருக்கு நிம்மதியை ஏற்படுத்தினார்.

மீண்டும் மதுரை நாயக்க மன்னர் தஞ்சை மீது படையெடுத்தார். மதுரைப் படையைத் தடுத்து நிறுத்தத் தனது

தளபதி வெங்கடாத்திரி தலைமையில் ஒரு படையை விஜயராகவ நாயக்கர் அனுப்பி வைத்தார். அப்படையும் தோல்வியைச் சந்தித்தது.

விஜயராகவ நாயக்கர் தமது அரண்மனைப் பெண்டிர் அந்நியர் கைவசம் சிக்கி விடக் கூடாது எனக் கருதி பெண்கள் வசிக்கும் பகுதியில் வெடி மருந்து நிரப்பித் தீ வைத்துவிட்டு, தன் மகன் மன்னாரு தேவனுடன் மதுரைப் படையைத் தஞ்சை இராஜகோபால சுவாமி கோயிலுக்கு எதிரில் எதிர்த்து நின்றார். அப்போரில் எண்பது வயதையடைந்த விஜயராகவ நாயக்கரும் அவரது மகனும் உயிர் நீத்தனர். [19]

சிறந்த ஆட்சியாளராக, இலக்கிய கர்த்தாவாக **'சாபித்யராயன்'** என்ற பட்டத்துடன் திகழ்ந்த விஜயராகவ நாயக்கர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார்.

இவர் எழுதிய பிரகலாதம் என்ற நாடகத்தை இங்கே அரங்கேற்றினார். இவரது அவையை மோஹனாங்கி, ரூபாவதி, சந்திரலேகா, லோகநாயகி, சண்பகவல்லி, கோமளவல்லி போன்ற ஆடற் கலைஞர்கள் அலங்கரித்தனர்.

முந்தைய தஞ்சை நாயக்க மன்னர்கள் போலவே, விஜயராகவ நாயக்கரும் தன்னுடைய பெயரிட்ட காசுகளை அச்சிட்டு வெளியிட்டார்.

கி.பி. 1658இல் டச்சுக்காரர்கள் நாகப்பட்டினத்தில் இருந்த போர்த்துக்கீசியர்களை விரட்டி விட்டுத் தங்கள் வணிக மையத்தை ஏற்படுத்துவதில் முனைந்தனர்.

விஜயராகவ நாயக்கர் டச்சுக்காரர்களுடன் 5.1.1662 இல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன் காரணமாகப்

போர்த்துக்கீசியர் வசம் இருந்த நாகப்பட்டினம் கோட்டையும் பத்துக் கிராமங்களும் டச்சுகாரர்கள் வசம் வந்தன. டச்சுக்காரர்கள் நாகப்பட்டினத்தில் பத்துச் சிறிய கிறிஸ்துவக் கோயில்களையும், ஒரு மருத்துவமனையையும் ஏற்படுத்தினர்.

திருக்கோயிற்பணிகள்

விஜயராகவ நாயக்கரின் உள்ளம் கவர்ந்த தனிப்பெருந் தெய்வமாக விளங்கியவர் **மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானாவார்.** இராஜாதிராஜ விண்ணகரம் என்றும், குலோத்துங்க சோழவிண்ணகரம் என்று அழைக்கப் பெற்ற மன்னார்குடி திருமால் ஆலயம் இம்மன்னவனின் காலத்தில் மிக விரிவு பெற்ற பெருங்கோயிலாக மாறியது. ஏழு பிரகாரங்க ளோடும். தேரோடும் திருவீதிகள், புகழ் பெற்ற திருக்குளங்கள் ஆகியவற்றோடும், விஜயராகவனின் அரசு மாளிகை ஒன்றினையும் பெற்று இவ்வூர் பேரழகு வாய்ந்ததாக மாற்றம் பெற்றது.

விண்ணுயர்ந்த கோபுரங்கள், திருமதில்கள், மண்டபங்கள் எனப் பலவிதமான கட்டடங்கள் இம்மன்னவனால் எடுக்கப் பெற்றன. இவை கலை நயம் வாய்ந்தவை. இவற்றுள் குறிப்பிடத் தக்கது நூற்றுக்கால் மண்டபமாகும். அழகிய அரங்க மேடையோடு திகழும் இம்மண்டபத்துத் தூண் ஒன்றில் விஜயராகவ நாயக்கர் மற்றும் அவனது தேவியர் இருவரது உருவச் சிற்பங்கள் இடம் பெற்றுத் திகழுகின்றன.

இராஜகோபாலப் பெருமானின் கருவறை முன்பு உள்ள மண்டபத்தில் விஜயராகவனும் அவனது தேவியும் சன்னதிக்கு எதிரே வீழ்ந்து வணங்கும் கோலத்தில் உள்ள சிற்பப் பலகை ஒன்றைத் தலையில் பாவச் செய்து, என்றென்றும் தனது பக்தி நிலைபெறுமாறு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் எனும் இராஜகோபாலனின் மீது கொண்ட அளவிடற்கரிய பக்தியின் காரணமாக "மன்னாருதாசன்" என்ற பெயரினைத் தனது சிறப்புப் பெயராகச் சூட்டிக்கொண்டான். இப்பெயரால் பெருமிதம் கொண்ட இம்மன்னவன் பல செப்புத் திருமேனிகளை இக்கோயிலுக்காகச் செய்தளித்தான். அவற்றின் பீடத்தில் "அச்சுத விஜயராகவ மன்னாருதாசன் சதா சேவை" என்று தமிழில் பொறிக்கச் செய்தான். ஆழ்வார்களின் படிமங்களிலும், சில இறை உருவங்களிலும் இதனை இன்றும் காணலாம்.

இராஜகோபாலனின் தேவியான செங்கமலவல்லி நாயகிக்கு உரிய தேர் கோயிலின் உட் பிராகாரத்திலேயே பவனி வருவதாகும். இதற்கெனத் தனித்தேர் ஒன்றினைச் செய்தளித்த இம்மன்னவன், தேர் ஏற்று கூடம் (தேர்மண்டபம்) ஒன்றினையும் உருவாக்கித் தந்து அம்மண்டபத்திலேயே தம் தேவியோடு உள்ள தனது உருவச் சிலையையும் அமைத்துள்ளான்.[20]

ரங்காஜம்மா எழுதிய மன்னாருதாசவிலாசம் எனும் நாடக நூல் மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயிலுக்கும், விஜயராகவனுக்கும் உள்ள தொடர்பை விரிவாகக் கூறுகின்றது. இந்நாடகத் துவக்கத்தில் பங்குனித் திருவிழாவுக்காக மன்னன் விஜயராகவனிடமிருந்து முதல் தேங்காய் வாங்குவதற்காகச் செங்கோல் பாருபத்யக்காரன் ஐஞ்சுவகை நிருவாகத்து நம்பிமார், தலத்தார், ஜியாள், ஏகாங்கிகள், வயிராவிகள், கொத்தியாள் ஸ்ரீபாதந்தாங்கிகள், திருவாபரண கணக்கப்பிள்ளை, இராஜபோகத்தூர் ஆகிய அனைவரும் புடைசூழ யானை மீது இராஜகோபால சாமியின் ஸ்ரீமுகத்தினை வைத்துக்கொண்டு தஞ்சை வந்து மன்னனிடம் சமர்ப்பித்ததாகக் கூறுகின்றது. இங்குக் கூறப் பெறும் ஸ்ரீமுகம் என்பது மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானே மன்னன் விஜயராகவனுக்கு எழுதுவது போன்று எழுதப் பெற்ற கடிதமாகும்.

விஜயராகவ நாயக்கரின் ஜென்ம நட்சத்திரமும் மன்னார்குடி பிரமோத்ஸவமும்

தஞ்சாபுர அன்னதான மகா நாடகம் எனும் நூல் புருஷோத்தம தீட்சிதர் என்பவரால் எழுதப்பெற்றதாகும். இந்நாடகத்தில் ஒரு காட்சியாக இறைவனுக்கு முன்பு விஜயராவ நாயக்கர் நின்று கொண்டு அர்ச்சனை செய்யும் காட்சி இடம்பெற்றுள்ளது. அப்போது செய்யப் பெறும் சங்கல்பத்தில் விஜயராகவ நாயக்கரின் நட்சத்திரமாகத் துலாராசி சுவாதி நட்சத்திரம் கூறப் பெற்றுள்ளது.[21]

இதே போன்று மன்னார்தாச விலாச நாடகத்தில் மன்னார்குடி இராஜகோபாலப் பொற்காசுகளும் குத்தகையாகக் கிடைத்தன என்பதை மன்னாரு எனும் நூல் வாயிலாக அறியமுடிகிறது.

இராஜகோபாலன் என்றாலேயே நம் மனக்கண் முன் நிற்பவன் விஜயராகவ நாயக்கர்தான். கி.பி. 1532 லிருந்து 1575 வரை வாழ்ந்த இம்மன்னவன் இக்கோயிலுக்குச் செய்த அளவு வேறு எந்த மன்னர்களும் செய்யவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை. இவன் 1675 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ம் நாள் தஞ்சை இராஜகோபாலசாமி கோயில் வாசலில் ஏகோஜி என்ற மராட்டிய படைத் தலைவனோடும், இரண்டு பீஜப்பூர் முகமதிய தளபதிகளுடனும் கடும் சண்டையிட்டு வீரமரணம் அடைந்தவன். இவனது வீர மரணத்தைக்கூட தஞ்சை இராஜகோபாலசாமிக்கே காணிக்கை ஆக்கியவன்.

தற்போது காணும் பெரிய வெளிக் கோபுரங்கள் நான்கினையும், ஆயிரங்கால் மண்டபத்தையும், கிருஷ்ண தீர்த்தத்தையும், இன்ன பிற மண்டபங்களையும், அகழியையும், கோட்டையையும் உருவாக்கியுள்ளான். திருமலை நம்பி தாத்தாச்சாரியார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் போன்ற செப்புத்திருமேனிகளை செய்தளித்தவன் இவனே. மேலே

குறிப்பிட்ட இச்சிலைகளின் பீடத்தில் அச்சிலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அருகே "அச்சுத விஜயராகவ மன்னாருதாசன் சதாசேவை" என்று எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மன்னவன் காலத்தில் இராஜகோபலசுவாமி கோயிலுக்கு உரிய நிலங்களிலிருந்து மூன்று இலட்சம் கலம் நெல்லும், முப்பதினாயிரம் பொற்காசுகளும் குத்தகையாகக் கிடைத்தன என்பதை மன்னாருதாச விலாசம் எனும் நூல் வாயிலாக அறிய முடிகிறது.

மிகச்சிறந்த இசை வல்லுநராகவும் நாடக மேதையாகவும் வாழ்ந்த இவன் தன் கலை ஆற்றல் முழுவதையுமே மன்னார்குடி இராஜகோபாலானுக்கே அர்ப்பணித்தான். "பிரகலாத நாடகம்" எனும் தெலுங்கு பாகவதமேளா நாடகத்தை இயற்றி இராஜகோபாலன் முன்பு ஆயிரங்கால் மண்டபத்தில் நடைபெறச் செய்தான். தொண்டரடிப் பொடியாழ்வார் கதை திருவரங்கத்திற்கே உரியதாயினும் அக்கதையின் ஒரு பகுதி மன்னார்குடி இராஜகோபாலன் கோயிலில் நிகழ்வதாக நாடகத்தை அமைத்து "விப்ரநாராயணன் சரித்திரம்" என்ற பெயரில் மன்னார்குடி கோயிலில் நடைபெறச் செய்தான்.

இவ்வாறு இசை, நாட்டியம், நாடகம் போன்ற பல்வேறு கலைகள் இவன் காலத்தில் பரிணமித்த அளவு மன்னார்குடி வரலாற்றிலேயே நிகழ்ந்ததில்லை என்று நிச்சயமாகக் கூறலாம். இக்கோயில்களுக்குப் புதிய தேர்கள் அளித்தும், திருவிழாக்கள் நடத்தியும் சிறப்பித்ததைப் பல்வேறு நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

இன்றும் இராஜகோபாலசுவாமி ஆண்டுதோறும் திருவிழாக்களின் போது நான்கு முறை விஜயராகவ நாயக்கர் அலங்காரம் பூண்டு சேவை சாதிப்பது கண் கொள்ளாக் காட்சியாக

விளங்குகின்றது. இவ்வலங்காரத்தில், இம்மன்னனின் உருவச் சிலைகளில் காணப்படுவது போன்றே இராஜகோபாலனும் சாய்ந்த கொண்டையுடன் திகழ்வார்.

விஜயராகவனின் மைந்தனான மன்னாரு தேவன் என்பானும் தன் தந்தையைப் போல பல்வேறு பணிகளை இக்கோயிலுக்கு புரிந்துள்ளான். இவன் செங்கமலவல்லி மீது எழுதிய ஹோமாப்ஜ நாயிகா சுயவரம் எனும் நூல் இவனது இராஜகோபலா பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். [22]

பெருமானின் பிரமோத்ஸவம் நடைபெறும் நாட்கள் எப்போது என்ற குறிப்பு காணப்பெறுகின்றது. அதில் சுபக்ருது வருடம் பால்குண மாதம் பகுள் பஞ்சாமி குருவாயிரம் சுவாதி நட்சத்திரத்தன்று பிம்ம திருநாள் துவஜா ரோகனம் (கொடி யேற்றுதல்) நடைபெறுவதாகவும் அதிலிருந்து 18ஆம் நாளில் தேர்விழா நடைபெறும் என்றும் குறிப்பு காணப்பெறுகின்றது. கி.பி.1663 ஆம் ஆண்டு மன்னரின் பிறந்த நட்சத்திர நாளிலேயே விழா துவங்கியுள்ளது. மன்னாருதாச விலாச நாடகம் கி.பி.1663 ஆம் ஆண்டில் எழுதப் பெற்றது என்பதனை மேலேகண்ட சான்றால் உறுதிசெய்ய முடிகிறது.[23]

இராஜகோபாலனின் விஜயராகவ நாயக்கர் அலங்காரம்

மன்னார்குடி இராஜகோபாலசுவாமிக்கு மார்கழி அத்யயந உத்சவம் 20 நாட்கள் ஆண்டுதோறும் நிகழ்கின்றது. இதில் வைகுண்ட ஏகாதேசிக்கு முன் பத்து நாட்கள் நடைபெறும் விழா பகல்பத்து என்றும், பின் பத்து நாட்கள் நடைபெறும் விழாவுக்கு இராப்பத்து என்றும் பெயர். பகல் பத்தில் ஆறாம் நாள் விழாவன்று இராஜகோபாலப் பெருமானுக்கு விஜயராகவ நாயக்கர்

அலங்காரம் செய்யப்படுகிறது. சுவாமிக்கு இடப் பக்கம் சரிந்த கொண்டையிட்டு, விஜயராகவ நாயக்கர் உருவம் போன்றே அலங்காரம் அமைகின்றது. நாயக்கர் ஆட்சிக் காலத்திலிருந்து இவ்விழா தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்கும் விஜயராகவ நாயக்கருக்கும் உள்ள தொடர்பை இன்றளவும் இது எடுத்துக்காட்டும் சான்றாகும். மேலும் சுவாமி வீதி உலாப்போகும் வேளையில் உட்கோபுர வாயிலுக்கு அருகே வரும்போது, மன்னர் விஜயராகவ நாயக்கர் பெயர் கூவப் பெற்று, விருதுகள் சொல்லப் படும் மரபு இன்றும் தொடர்ந்து நிகழ்கின்றது.

கோபாலன் வருகின்றான்! சகஜி மன்னரின் இல்லத்திற்கு இராஜகோபாலன் வருகிறான்! லஷ்மி தேவியுடன் அனைவருக்கும் காட்சி தர அழகாக வருகிறான்.

வேலைப்பாடுடன் அமைந்த கருடன் மீது அமர்ந்த வண்ணம் மன்மத அழகோடு வருகிறான்...! காண்பவர்க்கு நீண்ட ஆயுளும், சுகங்களும் அள்ளி வழங்க வருகிறான். இனிய இராகங்களோடு, எல்லாக் கலைகளும் தழைக்க பூமாதேவியோடு குழல் ஊதி வருகிறான்...! கேட்கும் செல்வங்களையும் வேண்டும் வரங்களையும் வழங்கிக் கொண்டு வருகிறான். அவன் கீர்த்திஉலகமறிய கிரீடம் அணிந்து வருகிறான். தீயோரை மாய்க்க தியாகேசன் நண்பன் வருகிறான்.

மராட்டி மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இம் மன்னவன், தஞ்சையில் வாழ்ந்து, மன்னார்குடி இராஜகோபாலன் மீது அளவிலா பக்திபூண்டு தெலுங்குமொழியில் பாடியுள்ள இசைப்பாடல்களை நோக்கும்போது இம்மன்னனின் மாட்சிமையையும், மனித நேயத்தையும், பக்தி வெளிப் பாட்டையும் நாம் காண முடிகிறது.[24]

16. துக்கோஜி கி.பி.(1729 - 1735)

மன்னார்குடிக்கு தென் மேற்கே 10.கி.மீ. தொலைவில் உள்ளது மகாதேவப்பட்டிணம். துக்கோஜி என்று அழைக்கப்பட்ட முதலாம் துளசா மன்னர் தன் காலத்தில் இங்கு ஒரு பெரிய கோட்டையைக் கட்டி வாழ்ந்தார். இன்றும் இங்கு 5வேலி பரப்பளவில் பெரிய கோட்டை உள்ளது. கோட்டையுள் பெரிய அரண்மனை, சிறிய அரண்மனை எனப்படும் பகுதிகள் இடிந்து சிதைந்து கிடக்கின்றன.[25]

ஊரின் வடக்கே கிழக்கு நோக்கி சம்போ மகாதேவர் கோயில் உள்ளது. அக்கோயிலால் தான் இவ்வூருக்கு மகாதேவர் தேவப்பட்டிணம் என்று பெயர் ஏற்பட்டது. இங்கு உமாபாயி சாகேப் சத்திரம் எனப்படும் மராட்டியச் சத்திரமும் உள்ளது.

துக்கோஜி பெரிய பக்தராகவும், இசை மேதையாகவும் கவிஞராகவும், மருத்துவ நிபுணராகவும் திகழ்ந்தார். இவர் காலத்தில் பல கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டன.

தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாபசிங் காலத்திய (11.5.1757) செப்பேடு, இராசராசவளனாடு, ராசேந்திரசோழ வளனாடு, பொய்யூர்க் கூற்றத்துப் பாப்பாகுடினாடு, செறுநல்லிக்கோட்டை நென்மேலி வாடியிலிருக்கும் நல்லவன் விசையதேவரவர்கள் குமாரர் ராமலிங்க விசையா தேவரவர்கள் பாப்பானாட்டவர்களுக்குக் காணிக்கையாக இருக்கிற செயங்கொண்டனாத சுவாமி" என்று குறிப்பிடுகிறது. செயங் கொண்டநாதர் கோயிலில் பாப்பா நாடு சமீன்தார் ஒருவரின் சிற்பம் வழிபாட்டிலிருந்து வருவதும் ஈண்டு கவனத்திற்குரியது.

இராமலிங்க விசையாத்தேவர் அவர்கள் செயங் கொண்டநாத சுவாமியின் அர்த்தசாம பூசைக்காக 46 பொன் இராசகோபாலச் சக்கரத்தை மூலப்பொருளாக வழங்கியிருக்கிறார்.

பிரதாபசிங் காலத்திய மற்றொரு செப்பேடு (12.5.1758) பாப்பாக்குடி நாட்டில் (வெண்ணாற்றுக்கு மேற்கே உள்ள) மேல்வரை (வெண்ணாற்றுக்கு கிழக்கே உள்ள) கீழ்கரையிலிருக்கும் பதினாறு கரைக்குட்பட்ட பேர்கள் சகலரும் சேர்ந்து செயங்கொண்டநாதரின் உச்சிக்கால பூசைக்காக 45 பொன் இராசகோபாலச் சக்கரம் அளித்தமையைக் குறிக்கிறது.

17. பிரதாப் சிங்

பிரதாபசிங் காலத்திய பிறிதொரு செப்பேடு (26.6.1758) செயங்கொண்டநாத சுவாமிக்குக் காலைச் சந்திக்கும், சுக்கிரவாரக் கட்டளைக்கும், சங்கவனம் சமீனைச் சேர்ந்த ஸ்ரீ சவ்வாயி விசைய ரெகுநாத வாளோசி மெய்க்கன் கோபாலர் அவர்கள் கொடையளித்திருந்த விபரத்தைத் தெரியப்படுத்து கிறது.

செயங்கொண்டநாதர் காலைச் சந்திக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு பணம் வீதம் ஆண்டொன்றுக்கு 120 பணம் என்ற கணக்கில் ஆண்டொன்றுக்கு 72 பொன் இராசகோபாலச் சக்கரம் வழங்கப்பட்டிருக்கிறது. சுக்கிரவாரக் கட்டளைக்கு மாதம் ஒன்றுக்கு பொன் 1, பணம் 6, ஆக வருடம் ஒன்றுக்கு 19 பொன் இரண்டு பணம் வழங்கப்பட்டிருக்கிறது.

31.1.1760க்குரிய பிரதாபசிங்கின் மற்றுமொரு செப்பேடு சிங்கவனம் சமீன்தார் சவாயி விசையரெகுநாத மெய்க்கன் கோபாலர் செயங்கொண்டநாதருக்கு சாயரட்சைக்கு (மாலை வழிபாட்டிற்கு) ஆண்டொன்றுக்கு 40 பொன் வழங்கிய செய்தியைப் புலப்படுத்துகிறது. கோட்டூர் கொழுந்தீஸ்வரர் கோயிலுக்கு அபிடேகக் கட்டளைக்கு தோட்டநிலம் கொடையாக அளித்துள்ளார்.[26]

இவர் காலத்தில் வடங்கை கிடங்கைச் சாதி தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. சமய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினார். பல கோயில்களுக்கு கொடைகள் அளித்துள்ளார். கோட்டூர்க் கொழுந்தீஸ்வரர் கோயிலுக்கு அபிஷேகக் கட்டளைக்கு கோட்ட நிலம் கொடையாக அளித்துள்ளார். இவரால் நாகூர் தர்க்காவின் 11 நிலைக்கோபுரம் கட்டப் பட்டது. கோயில் கொடை நிலங்கள் உள்ள இடங்களுக்குச் சென்று அரசு அலுவலர்களும் பொதுமக்களும் சேர்ந்து அளந்து பார்த்தனர்.

18. முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் கி.பி. 1251 - 1268

போர்த் திறமை மிகுந்தவனாக இருந்தார். பாண்டிப் பேரரசு நிலைப்பதற்கு அடிக்கோபுரம் செய்தார். தமிழகத்தையும், தமிழகத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளையும் வென்றார். மங்கிக்கிடந்த பாண்டியர்களின் புகழைத் தூண்டக் கூடிய ஒளி விளக்காகவும் திகழ்ந்தார். ஈழப் படையெடுப்பில் வென்றார். [27]

"எம் மண்டலமும் கொண்டருளியவன்" "எல்லாம் தலையான பெருமாள்" போன்ற விருதுகளைப் பெற்றார்.

இவரது ஆட்சிக் காலத்தில், அம்மன்னனின் பிறந்த நட்சத்திரமான புரட்டாசி மாதம் மூலத்திலே ராஜகோபாலசாமி இறைவன் திருநாள் எழுந்தருளித் தீர்த்தம் பிரசாதிக்கவும், திங்கள் தோறும் திங்கள் திருநாள் எழுந்தருளவும், சர்வ வாகனங்களிலும் ஏறியருளி எழுந்தருளவும், வழிவகை செய்துள்ளார்.[28]

19. தொகுப்புரை

மன்னார்குடியை உருவாக்கிய முதலாம் இராஜராஜன் (கி.பி.1018) தொடங்கி ஏறக்குறைய 15 ஆம் நூற்றாண்டு வரை 17ஆம் நூற்றாண்டு வரை, பல்வேறு மன்னர்கள் செய்வித்த கல்வெட்டுக்கள் மூலமாக பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். இப்பதிவுகள் நிலைத்து இன்றும் மன்னார்குடிக்கு புகழைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. தெ.இ. கல்வெட்டு	பக் 6
2. ராஜகோபாலசாமி மலர்1995	பக் 6
3. மேலது	பக் 7
4. தெ.இ.க.	பக் 6-57
5. திருவாரூர் மா.தொ.வ.	பக் 85
6. தெஇக	பக்- 96, 98, 99, 1044/1897.
7. சோழர் வரலாறு	பக் 70
8. ராஜகோபாலசாமி மலர் 1995	பக் 7
9. மேலது	பக் 7
10. மேலது	பக் 8
11. மேலது	பக் 9
12. தெ.இ.க. தெ. 6 - 91,92,93, 94 / 1897	
13. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995	பக் 9
14. சோழர் வரலாறு.	பக் 72
15. தெ.இ.க. தொ.6 - 260, 262, 263 / 1917.	
16. தி.மா. தொ.வ.	பக் 5
17. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995	பக் 9
18. நாயக்க மன்னர்களும் சேதுபதிகளும் - ஜெகதா	பக் 106
19. மேலது	பக் 117
20. தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு கு.ப.	பக் 282
21. மேலது	பக்கம் 28
22. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995	பக்கம் 10
23. தஞ்சாவூர் நயக்கர் வரலாறு கு.ப.	பக்கம் 285
24. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995	பக்கம் 46
25. மராட்டியர் கல்வெட்டுக்கள் - தஞ்சை த.ப.கழகம்	பக்கம் 165
26. ARE 462 / 1912	
27. தமிழக வரலாறு - இராமனாதன் பதிப்பகம்	பக்கம் 230
28. தி.மா.தொ.வ.	பக்கம் 85







அச்சுதப்ப நாயக்கர், முத்தம்மாள், இரகுநாத நாயக்கர்
மன்னார்குடி இராஜகோபால சுவாமிதிருக்கோயிலில் உள்ள உருவச்சிலைகள்



மூன்றாம் குலோத்துங்க சோழன்




இரகுநாதனும் தேவியாரும் - மன்னார்குடி



இரகுநாதனும் தீட்சிதரும் கோதானம்
அளிக்கும் காட்சி - மன்னார்குடி

இரகுநாதநாயக்கர் வெற்றி கண்ட போர்க்களங்கள்



1. பெணுகொண்டா போர் கி.பி. 1590
2. தேவிக்கோட்டை போர் கி.பி. 1615
3. யாழ்ப்பாணத்தப் போர் கி.பி. 1616
4. தோப்பூர் போர் கி.பி.1616

5. சுதந்திரப் போரில் மன்னார்குடி

1. முன்னுரை

ஆடுவோமே பள்ளிபாடுவோமே! ஆனந்த சுதந்திரத்தை அடைந்து விட்டோமே என்று மகிழ்ச்சியடைந்தாலும், சுதந்திரம் பெறுவதற்காக குண்டடிபட்டும், ரத்தத்தைச் சிந்தியும், பல தியாகங்கள் செய்த மன்னார்குடி தியாகிகளின் வரலாற்றையும், சுதந்திரப் போரில் மன்னையின் பங்கினையும் தெரிந்து கொள்வது அவசியமானதாகும்.

2. வாஸ்கோடாகாமா

பாரத நாட்டின் வாழ்வும் வளமும் மேலோங்கி இருந்த நாளில், தமிழகத்தின் பொருள் வளங்கள் தொலைதூர வணிகர்களின் கவனத்தைக் கவர்ந்து வந்தன. இந்தியாவுடன் வாணிபம் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் 'இந்தியாவிற்கு வழிகண்டுபிடிக்கும்' பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன. இந்த வேட்கையில் புறப்பட்ட ஐரோப்பிய மாலுமிகளான கொலம்பஸ் போன்றவர்கள் முயற்சியின் போது வழிதவறிப் போய்க் கண்டுபிடிக்கப்பட்ட கண்டங்கள்தான் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகும்.[1] எப்படியோ 1498ஆம் ஆண்டு வாஸ்கோடாகாமா இந்தியா வந்தடைந்தார். அந்நியவகைக் கம்பெனிகளும் நம் நாட்டில் காலூன்றின.

3. வரலாற்றை மாற்றிய 5 ஷில்லிங்

வாலாற்றில் ஒருநாள் டச்சு வணிகர்களிடம், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு பவுண்டு மிளகிற்கு 5 ஷில்லிங் அதிகமாகப் பணம் கேட்டனர். அதன் விளைவு? இதை ஏற்க மறுத்தனர் 24 ஆங்கிலேய வியாபாரிகள். இலண்டனில், 1599 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் 125 பங்குதாரர்கள் ஒன்று கூடினர். 72,000 பவுண்டு மூலதனத்தில் கிழக்கிந்திய கம்பெனியைத் தொடங்கினர்.[2]

இது ஒரு சிறுகதை அல்ல. ஒரு நெடிய வரலாறு. 24 வியாபாரிகள் திடீரென கோடீஸ்வரர்களான மாயாஜாலக் கதையல்ல. சின்னஞ்சிறிய ஆங்கிலேய நாடு 54 கோடி மக்களை உள்ளடக்கிய, சூரியன் மறையாத சாம்ராஜ்யத்தை 200 ஆண்டுகள் ஆண்ட நீண்ட உலக வரலாறு.

4. கிழக்கிந்தியக் கம்பெனி

1600ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாள் மேஃபிளவர் என்ற கப்பலில் கிழக்கிந்தியக் கம்பெனியினர், இந்திய வரலாற்றை அடுத்த முன்னூறு ஆண்டுகளுக்கு முற்றிலுமாக மாற்றப்போகிறோம் என்ற எண்ணம் சிறிதுமின்றி இந்தியா நோக்கிப் புறப்பட்டனர்.

5. சுதந்திரப் போராட்டம்

அரசியல், ஜாதி, மத, இன வேற்றுமைகள், கல்வி அறிவின்மை, பொருளாதார நலிவு போன்ற குறைபாடுகளுடன் சிதறுண்டு இருந்த இந்தியர்களைக் கண்டனர். வடமேற்கே சீக்கியர்கள், டெல்லியில் முகமதியர்கள், மகாராட்டிரத்தில் மராட்டியர்கள், தக்காணத்தில் பாமினி, விஜயநகர அரசுகள், தமிழகத்தில் பாளையக்காரர்கள் என்று நாடே பல துண்டுகளாகச் சிதறுண்டு இருந்ததைக் கண்டார்கள்.

இந்திய அரசியலில் ஆங்கிலேயர்கள் தலையிட்டு தங்களின் பேராசை, சதித்திட்டம், நம்பிக்கைத் துரோகம், மோசடி, நயவஞ்சகம், ஆகியவைகளைச் சாதுரியமாக பயன்படுத்திக் கொண்டு இந்தியாவின் பெரும்பகுதியை 1757க்குள் கைப்பற்றி விட்டனர். இந்தக் கால கட்டத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்கிலேய ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இதனை இரும்புக் கரம் கொண்டு அடக்கினார்கள். சுதந்திரப் போராட்டம் நாடெங்கும் வீறு கொண்டு வெடித்தது.

6. தென்னாட்டு பர்தோலி

அந்நியரின் ஆதிக்க வெறியால் முற்றி முளைத்த தமிழ் பரம்பரை சந்தியில் விழுந்து துடித்தது. முல்லைக்குத் தேரை ஈந்த பரம்பரை, பிள்ளைக்கு பாலில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. பிழைக்க வந்தவன் ஆட்சி செய்யப் புறப்பட்ட கோலங்கள். மக்கள் போராடத் துவங்கினர். விடுதலைப் போரைத் துவக்கினர்.

குஜராத் மாநிலம் பரோலி தாலுக்காவில் 1925ஆம் ஆண்டு வெள்ளமும் வறட்சியும் ஏற்பட்டது. இதனால் பயிர் உற்பத்தி குறைந்து விவசாயிகளின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஆனால், அப்போதைய பம்பாய் பிரசிடன்சி நிர்வாகம் 30 % வரியை உயர்த்தியது. வரியைக் குறைக்கக் கோரிய உள்ளூர் மக்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மக்கள் வரிகொடா இயக்கம் நடத்தினர். இதனால் அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

சர்தார் வல்லபாய் படேல் ஆலோசனையின்படி புரட்சி வெடித்தது. ஆதிக்க வெறியர்கள் வீடு புகுந்து சொத்துக்களையும் கால்நடைகளையும் பறிமுதல் செய்தனர். அவற்றை ஏலம் விட்டனர். குஜராத் மாநிலத்தில் மட்டும் அல்ல.

இந்தியாவிலிருந்து ஒருவர் கூட ஏலம் எடுக்க முன்வரவில்லை. தாலுக்கா முழுவதும் மக்கள் வெளியேறியதால் வெறிச்சோடிக் கிடந்தது. இறுதியாக 1928ஆம் ஆண்டு பம்பாய் நிர்வாகம் அந்த ஆண்டு வரியையும், உயர்த்தப்பட்ட 30% வரியையும் ரத்து செய்தது.

குஜராத்தின் பர்தோலி மக்கள் போராட்டம் தான் நாடெங்கும் விடுதலைப் போருக்கு வேகம் கொடுத்தது. இந்தியாவில் சர்தார் வல்லபாய் படேலும் நாட்டின் முக்கிய தலைவராக உருவெடுத்தார்.[3]

இதேபோன்று விடுதலைப் போரில் மன்னார்குடி மக்கள் வெகுண்டு எழுந்தனர். இம்மக்களின் எழுச்சியே ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராடும் தென்னகத்து மக்களுக்கு வேகத்தை ஊட்டியது. இதனைக் கண்ட மகாத்மா காந்தியடிகளே "மன்னார்குடியைத் தென்னாட்டு பர்தோலி" என்றழைத்தார்.

பேரறிஞர் அண்ணா மன்னார்குடியில் பேசும் போதெல்லாம் "காந்தியடிகளால் தென்னாட்டு பர்தோலி என்றழைக்கப்பட்ட மன்னார்குடி" என்று இவ்வூரைப் பாராட்டி மகிழ்வார்கள்.

7. வங்கப் பிரிவினை

1905ன் வங்கப் பிரிவினை நிகழ்வின் போது தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை பிரிவினைத் திட்டத்திற்கு எதிராக இருந்தது. தமிழகமெங்கும் போராட்டம் வெடித்தது.

தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தில் பிரபல உள்ளூர் வழக்கறிஞரான என்.கே. இராமசுவாமி ஐயர் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தார். கும்பகோணத்தில், ஆங்கில அரசுக்கு எதிரான உணர்ச்சியூட்டும் பேச்சுக்களையும். எதிர்ப்பினையும் கொண்ட ஒரு நிகழ்வாக, மாணவர் அமைப்பினரால் நடத்தப்பட்ட

ஒரு பொதுக்கூட்டம், "பரபரப்பான, எழுச்சியான" எடுத்துக்காட்டாக அமைந்தது.

மன்னார்குடியின் துணை கலெக்டரான மீர் சுல்தான் சாகிப் இளைஞர்களிடையே அதிகரித்து வந்த பிரிவினைக்கு எதிரான உணர்வுகள் குறித்து சென்னை அரசுக்கு அறிக்கை அனுப்பினார். அன்னிபெசன்ட் அம்மையார், பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியின் ஒழுங்கற்ற போக்கு குறித்து விமர்சனம் செய்து ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய போது, மன்னார்குடி இளைஞர்கள் அதை உகந்ததாக ஏற்கவில்லை. அவருடைய கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்னிபெசன்டின் உருவப் பொம்மையை எரித்தனர்.[4]

8. ஒத்துழையாமை இயக்கம் (1920)

நாட்டின் விடுதலைப் போருக்கான இயக்கத்தில் மன்னார்குடியிலிருந்து பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சென்னை திருவல்லிக்கேணி ஜிம்மா மசூதிக் கூட்டத்தில் காந்திஜி பேசிய பேச்சில் கவர்ந்திழுக்கப்பட்டு மன்னார்குடி கே. சந்தானம் அய்யங்கார் இந்திய தேசீய காங்கிரசில் சேர்ந்தார்.

மன்னார்குடி கே. கீர்த்திவாஸ் இவ்வியக்கத்தில் சேர்ந்து 1923 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற கொடி அணிவகுப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.[5] இதே போன்று சுதந்திரப் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் மன்னார்குடி மக்கள் பங்கு கொண்டனர்.

கல்கத்தாவில் 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறப்பு காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் காந்திஜியால் நிறைவேற்றப்பட்டது. இது நாடு தழுவிய போராட்டமாக அறிவிக்கப்பட்டது.

மகாத்மா ஆரம்பித்த ஒவ்வொரு போராட்டத்திற்கும் மன்னார்குடி மனப்பூர்வமான ஆதரவை நல்கியது. ஒத்துழையாமை இயக்கத்தின் இறுதித் தீர்மானமாகிய கதர் இயக்கத்தில் மன்னார்குடி தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டது.

கதர் இயக்கத்தின் முதல் செயலாளராக திரு.கே. சந்தானம் அய்யங்கார் 1921 ஆம் ஆண்டில் பதவி ஏற்றார். இவருக்குத் துணையாக தஞ்சை சர்வோதய எடிட்டர் திரு. என். இராமசாமி, திரு கே. ஏ. சுப்பிரமணியன், திரு ராமநாதன், திரு இக்னேசியஸ், திரு வாசுதேவாச்சாரி ஆகியோரும் கதர் இயக்கத்தில் பங்கு கொண்டனர். இவருக்குப் பின் கல்கி கிருஷ்ணமூர்த்தி செயலாளராகப் பணிபுரிந்தார்.[6]

ஒத்துழையாமை இயக்கத்தில் மன்னார்குடி மாணவர்களும் பெரும்பங்கேற்றனர். திலகர் இறந்ததற்காக - பின்லே காலேஜ் மாணவர்கள் ஒரு நாள் துக்க விடுப்பு கோரினார்கள். இதனைக் கல்லூரி முதல்வர் நிராகரித்ததோடு, திலகர் பெயருக்கு களங்கம் தரும் சொற்களையும் கூறினார்.

இதனால் மாணவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. திலகர் பற்றி அவர் கூறிய வார்த்தைகளைத் திரும்பப் பெறக் கோரிப் போராடினார்கள். இந்த நேரத்தில் காந்திஜி (16.8.1920) நீடாமங்கலத்திற்கும் நாகப்பட்டிணத்திற்கும் இடையில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

மன்னார்குடி மக்களும், மாணவர்களும் நீடாமங்கலம் இரயில் நிலையத்தில் காந்திஜியைச் சந்தித்து மன்னார்குடியின் நிலைமைகளை எடுத்து விளக்கினார்கள். மன்னார்குடி வரும்படி கோரிக்கை விடுத்தனர். பயணத் திட்டத்தில் மாறுதல் செய்ய இயலாத காரணத்தினால் காந்திஜியால் வர இயலவில்லை. ஆனால், இப்போராட்டத்தில் மன்னார்குடி மக்கள் வென்றனர். [7]

9. மன்னார்குடியில் காங்கிரஸ் மாநாடு (1924)

மன்னார்குடியில் 1924-ம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. இது மன்னார்குடி வரலாற்றில் சிறப்புமிக்க அத்தியாயமாகும். முக்கியத் தலைவர்களான திரு. ராஜகோபாலாச்சாரியாரும் திரு. எஸ். சத்தியமூர்த்தியும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர்.

ஆங்கிலேய அரசு, இம்மாநாட்டில் கலந்து கொள்ள பல தலைவர்களுக்கு தடைவிதித்தது. ஆனால், இத்தடையாணை வழங்குவதற்கு முன்னர் திரு.எஸ். சத்தியமூர்த்தி தனது மாநாட்டு உரையை நிகழ்த்தி முடித்துவிட்டார்.[8]

இத்தடையை மீறி எஸ். சத்தியமூர்த்தி, சி. ராஜகோபாலாச்சாரியர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இம்மாநாட்டினால் மன்னார்குடியில் காங்கிரஸ் பெரும் வளர்ச்சியடைந்து, தேசிய இயக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வும் ஏற்பட்டது. மன்னை மக்களின் மனதில் தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

பின்னாளில் 1927-ல் காந்திஜி மன்னார்குடி வரும்போது காட்டப்போகும் ஆதரவுக்கும் 1930-ல் உப்பு சத்தியாகிரகிகளுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுவதற்கும், சட்ட மறுப்பு இயக்கத்திற்கும், கதர் இயக்கத்திற்கும், வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கும், 15.8.1942-ல் புரட்சி வெடிப்பதற்கும் இந்த மாநாடே அடிப்படையாக அமைந்தது.

10. மன்னார்குடியில் மகாத்மா காந்திஜி (1927)

சட்டை, தலைப்பாகை அணிந்து கொண்டிருந்த மகாத்மாவை அரைத்துண்டு கட்டி 'அரை நிர்வாணப் பக்கிரியாக்கியது' தமிழகம். இப்பெருமை பெற்ற தமிழகத்திற்கு கதர்நிதி திரட்டுவதற்காகவும் கதர்பிரச்சாரம் செய்வதற்காகவும் 1927ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இச்சுற்றுப்பயணத்தின் போது 15.9.1927 அன்று காந்திஜி மன்னார்குடி வந்தார். வரும் வழியில் மன்னையின் எல்லையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜப்பையன்சாவடியில், பஞ்சாயத்துப் போர்டு தலைவர் திரு. ப. நடராஜப்பிள்ளை பொன் முடிப்பினைத் தந்தார்.

மன்னை நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. காந்திஜியின் வருகையை முன்னிட்டு பின்லே காலேஜ், தேசிய உயர்நிலைப் பள்ளி இரண்டுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது. இந்த இரண்டு கல்வி நிறுவனங்களுக்கும் காந்திஜி விஜயம் செய்தார். தேசிய உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், பின்லே காலேஜ் முதல்வர் ரெவரண்ட் ஸ்மைல் ஆகியோர் சிறப்பான வரவேற்பு தந்தனர்.

"கீதையை மாணவர்களும், மாணவிகளும் கற்க வேண்டும்" என்று காந்திஜி வருகைப் பதிவேட்டில் எழுதி கையொப்பமிட்டார்.

அன்று மாலை பின்லே காலேஜ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற திறந்தவெளி பொதுக்கூட்டத்தில் காந்திஜி நீண்ட நேரம் பேசினார். தேசிய உணர்வுமிக்க இப்பேச்சைக் கேட்க மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது.

கே.எஸ். சாம்பசிவ ஐயர் (எம்.எல்.சி) மன்னை மக்கள் சார்பில் நன்கொடை அளித்தார். [9]

மன்னார்குடி நகராட்சி,தாலுக்காபோர்டு, ராஜாஜி படிப்பகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பேசினார்கள். காந்திஜியின் வருகை இந்நகர மக்களின் மனதில் சுதந்திர தாகத்தை கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

மன்னார்குடியில் உள்ள ஆர்.பி. சிவம் நகரில் உள்ள திரு சடகோப முதலியார் பங்களாவில் தான் தேசப்பிதா இரண்டு நாட்கள் தங்கினார். [10]





மன்னார்குடியில் அடைக்கலம் புகுந்த பாரதியார்

காந்திஜி தங்கிய இந்த இடம் இப்போது நினைவிடமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இன்றும் காந்திஜி பிறந்த நாளன்று மன்னைநகர அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இவ்விடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்துகிறார்கள்.

பாலையூர் சக்தி ஆஸ்ரமத்தின் பி. ராஜகோபால அய்யங்கார் காந்திஜியை சந்தித்து, மக்கள் ராட்டைக்கு அளித்து வரும் அமோக ஆதரவு குறித்துத் தெரிவித்தார். இவ்வட்டத்தில் உள்ள பல காங்கிரஸ் தலைவர்களும் மன்னார்குடியில் காங்கிரசின் நிலைமையை எடுத்துக் கூறினார்கள்.

திருமதி கஸ்தூரிபாய் காந்தியை பஜாஜ் நூலகத்தில் பஜாஜ் திருவுருவப்படத்தை திறக்கவருமாறு பல காங்கிரஸ்காரர்கள் அழைப்பு விடுத்தனர். இதனை ஏற்றுக் கொண்டு திரு. பஜாஜ் திருவுருவப்படத்தை நூலகத்தில் அம்மையார் திறந்து வைத்தார்.

11. பாரதியாருக்கு அடைக்கலம் தந்த மன்னார்குடி

இந்தியா இதழில் 1908-ல் ஆங்கிலேயருக்கு எதிராக வெளியான கட்டுரைகளைக் காரணம் சாட்டி அவ்விதழின் உரிமையாளரை ஆங்கிலேயர் கைது செய்தனர். தம்மையும் கைது செய்ய ஆங்கிலேயர் முனைந்துள்ளனர் என்று கேள்விப்பட்ட பாரதியார் புதுச்சேரிக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புதுச்சேரியில் இந்தியா இதழைத் தொடர்ந்து நடத்தியதோடு சுதந்திரப் போராட்ட வீரர் பலரோடும் தொடர்பு கொண்டிருந்தார்.

பாரதியாரை எப்படியும் கைதுசெய்யும்படி இரகசியப் போலீசாரை பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பியது. இச்சூழ்நிலையில் பாரதியாருக்கு இரகசியமாக அடைக்கலம்

தந்தது மன்னார்குடி. ஆம்! மன்னார்குடிக்கு அருகில் உள்ள நாகை கிராமத்தில் கோடியாளம் சகோதரர்கள் வீட்டில் மறைவாக மாறு வேடத்தில் பாரதியார் தங்கியிருந்தார். [11]

12. உப்பு சத்தியாக்கிரகம் (1930)

வடக்கே காந்திஜி தலைமையில் தண்டியை நோக்கியும், தமிழகத்தில் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் நோக்கியும் உப்புசத்தியாக்கிரகிகள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்த 98 சத்தியாகிரகிகள் திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் வீட்டில் கூடினர்.

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" எனும் நாமக்கல் கவிஞரின் பாடலைப் பாடிக்கொண்டே, வேதாரண்யம் நோக்கிப் புறப்பட்டனர்.

இத்தியாகிகளின் 150 கிலோ மீட்டர் பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டரும் மாஜிஸ்ட்ரேட்டுமான ஜே. த்ரோன் ஊர்வலத்திற்குத் தடை விதித்தார். இத்தடையையும் மீறி தஞ்சை மாவட்ட மக்கள் வழி நெடுகிலும் உற்சாக வரவேற்புக் கொடுத்தனர். சுவையான உணவும், மக்களின் சுதந்திர எழுச்சியும் சத்யாகிரகிகளுக்கு எழுச்சியைத் தந்தது.

உப்பு சத்தியாகிரகத் தியாகிகளை வரவேற்க மன்னார்குடியில் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. திருவாளர்கள் பி.வி. முத்து கிருஷ்ண ஐயர், என். ஜி. பொன்னுசாமி பிள்ளை, குஞ்சு முதலியார், சோமசுந்தரத் தேவர் ஆகியோர் வரவேற்புக் குழுவில் இடம் பெற்றனர்.


1930ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் உப்புசத்தியாக்கிரகிகள் மன்னார்குடி வந்தடைந்தனர்.

வரவேற்பு குழுவினருடன் பெருமளவில் பொதுமக்களும் திரண்டு,பாமணி ஆற்றங்கரையில் பூரண கும்பம் வைத்து உற்சாகத்துடன் வரவேற்றனர்.[12] புகழ் பெற்ற ஓவியர் திரு பரமசிவம் பிள்ளை அழகிய பாரதமாதா ஓவியத்தை வரைந்து அளித்தார். பாமணி ஆற்றங்கரையில் "உபன்யாசத்திற்கு" வரவேற்புக் குழுவினர் ஏற்பாடும் செய்திருந்தார்கள். திரு.சி. ராஜகோபாலச்சாரியார் ஒரு மணிநேரம் சிறப்பான உபன்யாசம் செய்தார்கள்.

மன்னார்குடி வணிகர்கள் சத்தியாக்கிரகிகளுக்கு ராஜமரியாதை தந்தனர். தங்கள் கடைகளின் முன்பு பல்வேறு நிறமுள்ள பூக்களைப் பரப்பிவைத்தனர். சத்தியாக்கிரகிகளுக்கு மாலையிட்டு வரவேற்பு அளித்தனர். மக்கள் தாராளமாக நன்கொடைகள் தந்தனர். மன்னை மக்களின் சார்பாக ரூ 1500/- பணமாகவும், நகைகளாகவும், நன்கொடையாக வழங்கப்பட்டது. பாலம்பாள் பத்துபவுன் சங்கிலியை நன்கொடையாக அளித்தார். [13]

நன்னிலம் வட்டத்தின் சார்பில் திரு. நாராயணசாமி ஐயர் ரூ 500/- ரொக்கமாகவும் இருபது மூட்டை அரிசியும் தந்தார். அன்று முழுதும் சத்தியாக்கிரகிகள் மன்னையில்தான் தங்கியிருந்தனர். மன்னார்குடி மக்கள் இவர்களுக்கு சுவையான உணவு வழங்கினார்கள்.[14] உப்புசத்தியாக்கிரகிகள் இரண்டாவது தலைவரான திரு.கே.சந்தானம் ஐயங்கார் எல்லாப் பணிகளையும் மேற்பார்வையிட்டார். உப்புக் காய்ச்சும் பேரணியில் மன்னார்குடி மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அயோத்தியராம ரஷித், கே. சந்தானம் அய்யங்கார், கணேச ஐயர், ராஜகோபால அய்யங்கார், சோமசுந்தரத் தேவர், பி.வி. முத்துகிருஷ்ணன், மகாலிங்கம் பிள்ளை, நடராஜப் பிள்ளை ஆகியோர் மன்னார்குடி சார்பில் வேதாரண்ய உப்புசத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



நாடு விடுதலைக்காக அரும்பாடு பட்ட மன்னார்குடி சுதந்திரப்போராட்டத் தியாகிகள் சிலர்

திரு சி. ராஜகோபாலாச்சாரியருக்கு அடுத்த நிலையில் இருந்த திரு.கே. சந்தானம் அய்யங்கார் 12-05-1930 ஆம் நாளன்று கைது செய்யப்பட்டார்.[15]

இப்பேரணியில் கலந்து கொண்ட மன்னார்குடியைச் சேர்ந்த திரு. அயோத்யா ராமா ராவுத் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதே போல் திரு எஸ். கணேச ஐயர், திரு பி. ராஜகோபால அய்யர், திரு சோமசுந்தரத்தேவர், திரு என்.ஜி. நடராஜப்பிள்ளை, டாக்டர் பி.வி. முத்துகிருஷ்ண அய்யர், திரு எஸ்.கே. மகாலிங்கம் பிள்ளை போன்றவர்களும் உப்புக் காய்ச்சிய போராட்டத்தில் பங்கேற்றதற்காக வேதாரண்யத்தில் கைது செய்யப்பட்டனர். [16]

உப்புசத்தியாக்கிரக ஊர்வலம் திருத்துறைப்பூண்டி, ஆயக்காரம்புலம் வழியாக, பதினாறாவது நாளன்று அதாவது 28.04.1930ஆம் நாளன்று மாலை வேதாரண்யத்தை அடைந்தது. நகரின் எல்லையில், இவர்களை சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் தலைமையில் வரவேற்புக் குழுவினர், 21 பீரங்கி முழக்கத்தோடு ராஜமரியாதையுடன் வரவேற்றனர். மறுநாள் (29.04.1930) ஓய்வு நாளாக அமைந்தது.

மறுநாள் 30.04.1930ஆம் நாளன்று திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் சத்தியாக்கிரகிகள் பேண்டு வாத்தியத்துடன் அகஸ்தியம் பள்ளி உப்பளத்தில் இறங்கி உப்பை எடுத்தனர். அந்த இடத்திலேயே அவர்களைக் கைது செய்து அகஸ்தியம் பள்ளியில் முகாமிட்டிருந்த மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர்படுத்தினார்கள். திர.ராசகோபாலச்சாரியாருக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனையும் ரூ 200/- அபராதமும் விதிக்கப்பட்டது. [17]

திரு. சி. ராஜகோபாலபச்சாரியார் அபராதத்தை செலுத்த மறுத்ததால் மேலும் மூன்று மாதத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.[18]

திரு சி. ராஜகோபாலாச்சாரியார் கைது செய்யப்பட்ட பின்னர், திரு கே.சந்தானம் அய்யங்கார் தலைமையில் சத்தியாகிரகக்குழு உப்பளத்தில் இறங்கிய போது. கைது செய்யப்பட்டனர். ஆறு மாத சிறைத்தண்டனையும் ரூ 200/- அபராதமும் விதிக்கப்பட்டது.[19]

இதே போன்று மாதம் முழுவதும் குழுக் குழுவாகச் சென்று உப்பளத்தில் இறங்கி கைதானார்கள். இப் போராட்டம் 29.05.1930ல் முடிவுற்றது. வேதாரண்ய உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய வந்த டாக்டர் டி.எஸ்.எஸ் ராஜன் கடைசி நாளன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரால் கைது செய்யப்பட்டார்.

வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புசத்தியாக்கிரகப் போராட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 375 பேர்கள் கைது செய்யப்பட்டனர். [20]

திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் தஞ்சாவூரில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் மிகப் பெரிய அளவில் அமைப்புரீதியாக ஒத்துழையாமை இயக்கத்திற்குத் துணைபுரிந்தது. இந்நிகழ்வின் மூலம் நாட்டுப்பற்றின் உணர்வினை மக்கள் உணர்ந்தனர்.

சி.ராஜகோபாலாச்சாரியாரும் அவரது உப்பு சத்தியாக்கிரகப் போராட்டக்காரர்களும் போராட்டத்தின் போது ஒழுங்கையும் நன்னடத்தையையும் பின்பற்றினார்கள் என்று இப்போராட்டம் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுமான திரு ஜே.ஏ. தோரன் (ஐ.சி.எஸ்) பாராட்டினார். [21]

13. மீண்டும் ஒத்துழையாமை இயக்கம் (1932)

காந்திஜியும் காங்கிரஸ் இயக்கமும் 1932-ல் மீண்டும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார்கள். ஆனால், கட்சி இதனை அறிவிக்கும் முன்னரே தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிர பிரச்சாரம் செய்தார்கள். உப்புசக்தியாக்கிரகப் போராட்டம் முடிந்தபிறகு, தனிநபர் சத்தியாக்கிரக இயக்கமும், கள்ளுக்கடை மறியலும் தொடங்கியது. [22]

இப்போராட்டம் தஞ்சை மாவட்டம் முழுவதும் எல்லா நகரங்களிலும் நடைபெற்றது. மன்னார்குடி, தஞ்சாவூர் மற்றும் இதர இடங்களில் உள்ள காங்கிரஸ் இயக்கம் சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுகின்றதென்று கூறி அரசு இவர்களது கட்டடங்களையும், நிதிகளையும் குற்றவியல் சட்டம் 16-ன் கீழ் பறிமுதல் செய்தது. [23]

அரசின் இந்த நடவடிக்கையை மன்னார்குடி வட்ட காங்கிரஸ் கண்டுகொள்ளவில்லை. இவர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிக் கொண்டும், பகவத்சிங் குறித்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டும், உப்பு சத்தியாக்கிரகப் பாடல்களைப் பாடிக் கொண்டும் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். [24]

மன்னார்குடி நகரத்திலும் உப்புசத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றது. 1930ஆம் ஆண்டு மே மாதம் 18ம் நாள் மன்னார்குடி காங்கிரஸ் கமிட்டி செயலாளராக இருந்த பாலையூர் ராஜகோபால ஐயர் பந்தலடியில் ஒரு கூட்டம் போட்டார்.

கோபிநாதன் குளத்தில் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் செய்யப் போவதாக இக்கூட்டத்தில் அறிவித்தார். மறுநாள் 600 சத்தியாக்கிரகிகளுடன் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். உப்பு சத்தியாக்கிரகத்திற்கு மன்னார்குடி காட்டிய ஆதரவு அளவிடற்கரியது. இந்திய பீனல் கோடு 117-ன் கீழ் [25] இவர்

கைது செய்யப்பட்டார். 18 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.[26]

14. நாடகத்தில் சுதந்திர எழுச்சி

பாரதியார் பொதுமேடை மூலமாகவும், இதழ்களின் மூலமாகவும், தேசீய உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருந்தார். 1906 முதல் விபின்சந்திரபாலின் வந்தேமாதரம் நாடெங்கும் போர்க்குரலாக முழக்கப்பட்டது. 1907இல் விபின் சந்திரபாலின் சென்னைப் பயணம் சுதந்திர இயக்கத்தின் தீவிரவாதத்திற்குத் தூண்டு கோலாய் அமைந்தது. [27]

மன்னார்குடியில் என்.ஜி.நடராஜப் பிள்ளை தமது நாடகத்தின் மூலமாகவும் பாட்டின் மூலமாகவும் சுதந்திர எழுச்சியை மக்கள் மனதில் விதைத்தார். நாடகத்தின் மூலம் சுதந்திர எழுச்சியை ஊட்டி வந்தார். விடுதலை இயக்கத்தில் பத்திரிக்கைகளும், நாடகங்களும், பாடல்களும், திரைப்படங்களும் பங்கேற்று எழுச்சியூட்டின.

15. இரண்டாம் உலகப்போர் எதிர்ப்பு இயக்கம்

இரண்டாம் உலகப்போரில் இந்தியாவை பிரிட்டிஷ் அரசு ஈடுபடுத்தியதை எதிர்த்து நாடெங்கும் போராட்டம் நடைபெற்றது.

மன்னார்குடி எம்.எல்.ஏ. திரு.கே. சந்தானம் இந்த போர் எதிர்ப்பு இயக்கத்தை மன்னார்குடியில் தொடங்கினார். போராட்டம் நடைபெறும் இடம், தேதி, நேரம் முதலியவை குறித்து உரிய அதிகாரிகளுக்கு முறைப்படி அறிவிப்பு கொடுத்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முறையற்ற போர் குறித்து, 12.12.1940-ல் பந்தலடியில் ஆக்ரோஷமாக மக்களிடையே பேசினார். இரண்டாம் உலகப்போருக்கு ஆட்களோ பணமோ

என்று எந்த வகையிலும் உதவ வேண்டாம் என்று மன்னை மக்களைக் கேட்டுக்கொண்டார். அந்த இடத்திலேயே இ.அ.அ சட்டத்தின்படி இவர் பீனல் கோடு 38(s)ன் கீழ் கைது செய்யப்பட்டு, ஓராண்டு கடுமையான சிறைத் தண்டனைக்கு ஆளானார். [28]

சந்தானம் அய்யங்கார் கைது செய்யப்பட்டதும் மன்னார்குடி மக்கள் உலகப்போருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். மன்னார்குடிக்கு அருகில் உள்ள களப்பாலைச் சேர்ந்த திரு அய்யப்ப முதலியார் நகரக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தார். போராட்டம் நடத்தும் இடம், நாள், நேரம் முதலியவற்றை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படியும், கமிட்டியின் ஒப்புதல் பெறும்படியும் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

தனிநபர் சத்தியாக்கிரகத்திற்கு அடுத்த பொறுப்பாளராக திரு காக்காஜி டி. ராமசாமி அய்யங்காரை நியமித்தார். மன்னார்குடியின் முக்கிய கடைவீதியில் உலகப்போருக்கு எதிரான கோஷங்களை எழுப்பி சத்தியாக்கிரகம் செய்தார். இந்தியச் சட்டம் பீனல் கோடு 38(S)-ன் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். [29]

இவரைப் போலவே திரு எஸ் சோமசுந்தரத்தேவர், டாக்டர் பி.வி. முத்துகிருஷ்ண ஐயர், திரு எஸ். எஸ் ஆறுமுகம் பிள்ளை, திரு சேதுராமன், திரு ராமசாமி உடையார், திரு.எஸ் என். கல்யாணசுந்தரம் பிள்ளை போன்றவர்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர். சிலருக்கு குறைந்தபட்சம் மூன்று வாரங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். [30]

மன்னார்குடி நகரக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் திரு காக்காஜி டி.ராமசாமி அய்யங்கார் தன்னுடைய தனிநபர் சத்தியாக்கிரகம் குறித்து காவல் துறை அதிகாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுத்தார், அதன்படி 19.02 1941-ல் மன்னார்குடி கடை வீதியில் போர்எதிர்ப்பு முழக்கமிட்டார். பந்தலடியில் இவர் போலீசாரால் அடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். இதனால், இவரது காது செவிடாகிப் போனது. மூன்று வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு மன்னார்குடி சிறையில் அடைக்கப்பட்டார். [31]

16. வெள்ளையனே வெளியேறு (1942-47)

தேசப்பற்றுள்ளவர்கள் அதிகமிருந்த பகுதி மன்னார் குடியாகும். எனவே, தேசிய எழுச்சி எப்போதெல்லாம் எங்கெல்லாம் தொடங்கப்பட்டாலும் உடனே அது மன்னார்குடியில் எதிரொலிக்கும்.

1942ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாடெங்கும் தொடங்கியது. இந்தியாவில் தமது அதிகாரம் முழுவதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதே போராட்டத்தின் குறிக்கோள். காந்தியின் அகிம்சா முறை இறுதியில் வன்முறையாக மாறியது. சாம,பேத ,தான, தண்டத்தின் இறுதிநிலையில் போராட்டம் வலுப்பெற்றது.

கோயம்புத்தூரில் இருந்த விமானதளம் முழுமையாக எரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியால் சுற்றுப்புற மக்கள் பாதிக்கப்பட்டனர். இப்போராட்டத்தில் கடுமையுடன் தமிழக நகரங்கள் குதித்தன. இராமநாதபுரம், தஞ்சாவூர், மன்னார்குடி, கும்பகோணம், திருவையாறு ஆகிய இடங்களில் இறுதிக்கட்டப் போராட்டம் வன்முறையாக வடிவெடுத்தது.

தஞ்சையில் வன்முறை, பொதுக்கூட்டம், கடையடைப்பு அரசுக்கு எதிரான பிரச்சாரம், மாணவர்கள் ஆர்ப்பாட்டம் இவை யாவும் நடந்தன. திருவையாறில் நூற்றுக்கணக்கில் மக்கள் கடைத்தெருக்களில் சென்று கடைகளை அடைக்குமாறு வன்முறையில் ஈடுபட்டனர். மாணவர்களைப் பள்ளிக்குச் செல்லாமல் தடுத்தனர். தொலைபேசி, தந்திக் கம்பங்கள் சேதப்படுத்தப்பட்டன. கற்களை நட்டு சாலைகளை மறித்தனர். அரசு அலுவலங்கள் தாக்கப்பட்டன.

மகாத்மா காந்தியின் மன்னார்குடி வருகையும், மன்னார்குடி வழியாகச் சென்ற உப்பு சத்தியாக்கிரக ஊர்வலமும் இதுபோன்ற ஏனைய நிகழ்வுகளும் மன்னார்குடி மக்களிடம் தேசிய உணர்வைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து கொண்டிருந்தன. இந்த கிளர்ச்சித் தீயானது 1942 ஆகஸ்டு 15-இல் பற்றி எரியத் தொடங்கியது.

தஞ்சை மாவட்டத்தின் மையப்பகுதியில் மன்னார்குடி இருந்ததால், தமிழகத்தில் எங்கு சுதந்திரப் போராட்டம் நடைபெற்றாலும் அது உடனே மன்னார்குடியில் எதிரொலிக்கும். மேலும், ஏனைய பகுதிகளைவிட மன்னார்குடியில் தேசப்பற்றுமிக்கவர்கள் அதிகமிருந்தனர்.

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் மன்னார்குடி நகரக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காகாஜி டி. ராமசாமி ஐயர் தலைமையில் கோபாலசாமி தென்கொண்டார், கே. சந்தானம் அய்யங்கார், பி.வி. முத்துக்கிருஷ்னண் அய்யர், குழந்தைவேலு எம்.எல்.ஏ. கோபாலசாமி சேனை கொண்டார், பி. கோவிந்தசாமி போன்றவர்கள் காசுசெட்டித் தெருவில் இருந்து ராஜகோபாலசாமி கோயில் வரை அமைதி ஊர்வலமாகச் சென்றனர். ஆனால், இந்த ஊர்வலம் ரயில்வே நிலையம் அருகே வன்முறையாக மாறியது. மன்னார்குடி உணர்ச்சிப்பிழம்பாய்த் திகழ்ந்தது.

சுமார் 1000 பேர்கள் கையில் அரிவாள் தடிகளை ஏந்தித் தொலைபேசி வயர்களை அறுத்தனர். ரயில் நிலையம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. ரயில்வே ஸ்டேசனில் பிஷ் பிளேட்டுக்கள் அகற்றப்பட்டன. வழியில் இருந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த கோப்புகள் எரிக்கப்பட்டன. தபால் பெட்டிகள் உடைக்கப்பட்டன. முனிசிபல் அலுவலகம் சேதப்படுத்தப்பட்டது. அனைத்து ஆவணங்களும் எரிக்கப்பட்டன.[32]

17. சிறையும் தண்டனையும்

உள்ளூர் காவல் நிலையத்தில் 42 போலீஸ்காரர்களே இருந்தனர். காவல்துறை ஆய்வாளர் ஜனாப் ஜாபர் மாவட்ட கலெக்டருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விவரித்தார்.

தஞ்சை மாவட்ட கலெக்டரும், மாஜிஸ்ட்ரேட்டுமாகிய ப.சிவராமன் ஆயுதம் தாங்கிய போலீசுடன் மன்னார்குடி வந்து மூன்றுமுறை தடியடி நடத்தி வன்முறையை அடக்கினார். நூற்றுக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். [33]

இப்போராட்டத்தினால் மன்னார்குடிக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 33,150 /என்று சப்- மாஜிஸ்ட்ரேட் கண்ணப்ப முதலியார் தனது மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். சென்னை மாநகரத்திலேயே குண்டூருக்கு அடுத்து அதிக இழப்பு ஏற்பட்டது மன்னார்குடியில் தான். [34]

போலீசாரின் கொடி அணிவகுப்பு மிரட்டலுடன் இத்தண்டனைத் தொகையை மன்னார்குடி மக்களிடம் வசூலித்தனர். வரி வசூலிக்கும் பில் கலெக்டர்களான திரு வைத்தியநாதன், திரு ராதாகிருஷ்ணன், திரு கோபால் அய்யர் ஆகியோர் இந்த அபராதத் தொகையை வசூலித்தனர். [35]

இந்த இழப்புகள் குறித்து ஆய்வு செய்ய அரசாங்கம் 1944-ல் திரு. வைத்தியநாதன் தலைமையில் ஒரு குழுவை

அனுப்பியது. இழப்பீடுகளை ஆய்வு செய்த குழு, விதிக்கப்பட்ட அபராதத் தொகையில் 17% சதவீதத்தைக் குறைத்து மதிப்பிட்டு இதனை உரியவர்களிடம் திருப்பி வழங்கப் பரிந்துரைத்தது.

18. சுதந்திரம்

இரண்டாம் உலகப்போர் 1945-ல் முடிவுற்றது இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சி ஆட்சியில் ஏறியது. இந்தியாவிலும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. விடுதலைக்கு முன்னேற்பாடாக 1945-ல் தேர்தல் நடைபெற்றது. ஆந்திர சிங்கம் பிரகாசம் தலைமையில் இடைக்காலக் காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது.

இந்திய வைஸ்ராயாயிருந்த மவுண்ட்பேட்டன் இந்திய தலைவர்களைக் கலந்தாலோசித்து இந்தியாவை (இந்தியா, பாகிஸ்தான்) இரண்டு நாடுகளாகப் பிரித்தார். 1947 ஆம் ஆண்டு சுதந்திரமும் வழங்கப்பட்டது.

19. தியாகச் சுடர் காக்காஜி

மன்னார்குடியின் மூத்த சுதந்திரப்போராட்டவீரர்களான தேசிகாச்சாரி, கோமளத்தம்மாள் தம்பதிகளுக்கு 9.3.1909 அன்று மகனாகப் பிறந்தார்.

மகாத்மா காந்தி மன்னார்குடி வந்தபோது, பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ராமசாமி, காந்திஜியின் பார்வையிலும், பேச்சிலும் ஈர்க்கப்பட்டார். அன்று இரத்தத்தோடு ஊறிய சுதந்திர உணர்வு இறுதிவரை அவர் உடலில் ஓடியது.

பதினைந்து வயதில் பொதுவாழ்வில் ஈடுபடுத்திக் கொண்டார். இவருக்கு வழிகாட்டியாகவும் குருவாகவும் இருந்தவர் முன்னாள் இரயில்வே அமைச்சர் கே. சந்தானம் ஆவார்.

மூதறிஞர் ராஜாஜி, காமராஜ், முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர். வெங்கட்ராமன், டாக்டர் சுப்பராயன், ஹாலாசியம் போன்றவர்கள் காகாஜியின் உணர்வுக்கு உரமூட்டி வந்தார்கள்.

சுதந்திரப் போராட்டக்காலத்தில் எந்தக் காரியத்தைக் கொடுத்தாலும், பறந்து பறந்து, ஓடியாடி, சுறுசுறுப்போடு செய்வார், "ஏனப்பா, காக்கா மாதிரிபறக்குறே" என்று நண்பர்கள் சொல்ல காக்காஜியை, "காக்கா" என்று அழைத்தவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை.

1932ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் நாள் காந்தி இர்வின் ஒப்பந்தம் முறிந்ததை ஓட்டி, மன்னையில் நடந்த போராட்டத்தில் இவர் கைது செய்யப்பட்டார். ஆறு மாத காலம் சிறைத் தண்டனை. இவரது முதல் சிறைத்தண்டனை அனுபவம் இதுவே ஆகும்.

1940ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஒருமாத சிறைத்தண்டனை பெற்றார். 1941ஆம் ஆண்டு கொழுந்து விட்டு எரிந்த போராட்டத்தில் பல தழும்புகள் பெற்றார். போலீசாரின் சித்ரவதைக்கு ஆளானார். முட்டிக்கு முட்டி தட்டியதில் முழங்கால் எலும்புகள் இரண்டும் முறிந்தன.

வெள்ளையனே வெளியேறு (1942) போராட்டத்தில் ஒரு ஆண்டு தண்டனை பெற்றார். எளிமையான வாழ்வு நடத்தி 8.1.1995-ல் இயற்கை எய்தினார்.

20. கே.பாஷ்யம் அய்யங்கார் (1907) (கோட்டையில் கொடி ஏற்றியவர்)

இவர் 1907-ல் மன்னார்குடிக்கு அருகில் உள்ள சேரன் குளத்தில் பிறந்தவர். பட்டதாரி . சிறந்த ஓவியர். இவர்தம் கையாலேயே தீட்டிய மூவர்ணக் கொடியை 1932 ஜனவரி 25-ல் வெள்ளையன் ஆட்சிக் காலத்திலேயே சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உட்புறத்தில் இருந்த வயர்லஸ் நிலையத்தின் நீண்டு உயர்ந்த 200 அடிக் கம்பத்தில் கட்டினார். நள்ளிரவில் ஸ்தம்பத்தின் ஒளி வினாடிக்கு வினாடி சுற்றி வரும்போது கம்பத்தோடு உடலைக் கட்டிக் கொண்டு உச்சியில் ஏறி, யார் கண்ணிலும் படாமல் கொடியைக் கட்டினார். ஜனவரி 26-ல் அதிகாலையில் ஆணவம் பிடித்த ஆங்கிலேயர் கொடியைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.

பெல்லாரி சிறையில் தேச பக்தர் மகாவீர் சிங் குல்லாய் போட மறுத்தார். சிறை அதிகாரி மேஜர் ஜெனரல் இன்ஸின் 30 கசை அடி கொடுக்க உத்திரவிட்டார். மற்றக் கைதிகளையும் அச்சுறுத்த சிறையில் மத்தியப் பகுதியில் அனைவரும் பார்க்கும்படி மகாவீர் சிங்கின் கை, கால்கள் கட்டப்பட்டு கசை அடி கொடுக்கப்பட்டது. ஆர்யா எனும் பாஷ்யமும் அங்கு விலங்கிட்டுக் கொண்டு வரப்பட்டார்.

தக்க சமயத்திற்காக சிலநாட்கள் காத்திருந்த பாஷ்யம், பேதி மருந்து கேட்டு வாங்கி அதை வாயில் அடக்கி வைத்துக் கொண்டார். கழிப்பறைக்குச் செல்ல விலங்கை விலக்கினர். பேதி மருந்தை அங்கு துப்பிவிட்டு வெளியே வந்தார். யாரும் எதிர் பார்க்காத வகையில் இன்ஸ்துரையின் உச்சந்தலையில் ஓங்கி பூட்ஸினால் அடித்து, தங்கள் தோழர் மகாவீர் சிங்கை அடித்ததற்குத் தண்டனை வழங்கினார்.

அடுத்த நிமிடமே பாஷ்யத்தை அறையில் தள்ளி அதிகாரிகள் அடித்தனர். இன்ஸ்துரை பல முறை பூட்ஸ் காலால் உதைத்தான். மகாவீர் சிங் மற்றக் கைதிகள் பார்க்கும்படி இடுப்பிற்கு கீழே மாறி மாறி சவுக்கடி கொடுத்தனர். சதை பிய்த்துக்கொண்டு ரத்தம் பீறிட்டது. பாஷ்யம் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை. ஒவ்வொரு அடிக்கும் வந்தேமாதரம் ஜெய பேரிகை கொட்டடா என்று முழங்கினார். கசையடி முடிந்து தள்ளாடி நடந்த போது 'ஜயமுண்டு பயமில்லை மனமே' என்ற பாரதியின் பாடலைப் பாடினார்.

தற்போது புழக்கத்தில் இருக்கிறதே பாரதியார் படம். இதை வரைந்தது யார் தெரியுமா? ஆர்யா என்கிற பாஸ்யம் தான்.[36]

இவர் வரைந்த காந்தியடிகள், பாரதியார் ஓவியங்கள் பிரபலமானவை. தீரர் சத்திய மூர்த்தியின் சிலை இவர் வடித்ததுதான்.

21. பென்ஷனர் நகரம்

தமிழகத்தில் அதிகமான சுதந்திர தியாகிகள் இருந்துள்ள நகரம் மன்னார்குடியாகும். அதிகமானோர் பென்சன் தொகைகள் பெறுவதும் மன்னார்குடியில் தான். இதனால் தான் மன்னார்குடிக்கு பென்ஷனர் நகரம் என்ற பெயரும் உண்டு.

பென்சன் தொகைகள் பெறுபவர்களைத் தவிர சுதந்திரப் போராட்டத்தில் சிறை செல்லாமல் பங்காற்றியவர்கள், சிறைக்குச் சென்றும் அரசு கெஜட்டில் பல்வேறு காரணங்களினால் இடம் பெறாதவர்கள், வெளியில் இருந்தபடி பொருளாலும், தியாகிகள் குடும்பத்திற்கு துணையாக இருந்தவர்கள் எனப் பலர் இருந்துள்ளனர்.

22. தியாக தீபங்கள்[37]

வ. எண்	சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் பெயர்	போராட்ட ஆண்டு	பங்கு பெற்ற நிகழ்ச்சி	சிறைச்சாலையின் பெயர்	யார் யார் நூல் ப எண்
1	ஆச்சாரியார் நாகப்பா	1914	கள்ளுக்கடைமறியல்	அலிபுரம்	428
2	அமிர்தலிங்கம்	1921	வெள்ளையனே வெளியேறு	வெல்லூர்	428
3	ஆசாரி முத்துசாமி	1930	உப்புச்சத்தியாக்கிரகம்டஅலிபுரம்	431	
4	ஆசாரி நாகப்பா	1942	வெள்ளையனே வெளியேறு	அலிபுரம்	431
5	அயோதி.எஸ்	1930	உப்புச் சத்தியாகிரகம்	பெல்லாரி	132
6	பாலகிருஷ்ணன்.எஸ்	1924	உப்புச் சத்தியாகிரகம்	திருச்சி&அலிபுரம்	433
7	செல்லையா.என்	1930	உப்புச் சத்தியாகிரகம்	பெல்லாரி	435
8	செட்டியார் நாராயணசாமிஜி	1930	உப்புச் சத்தியாகிரகம்	பெல்லாரி	437
9	செட்டியார்சண்முகம்.எம்	1930	உப்புச்சத்தியாகிரகம்	பெல்லாரி	438
10	தேசிகன்.ஆர்	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	பெல்லாரி	441
11	துரைராஜ்.எஸ்	1942	வெள்ளையனே வெளியேறு	அலிபுரம்	442
12	பெனண்டஸ்வின்சென்ஷீப்	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	பெல்லாரி	443
13	கணபதி தாஸ்.ஆர்	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	கடலூர்புகண்ணனூர்	443
14	கணேசன்கே	1942	வெள்ளையனே வெளியேறு	அலிபுரம்	443
15	கோபாலசாமி.எம்	1942	வெள்ளையனே வெளியேறு	அலிபுரம்	444
16	கோபலசாமி.வி	1942	வெள்ளையனே வெளியேறு	அலிபுரம்	444
17	கோவிந்தன்.பி	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	பெல்லாரி	444
18	கோவிந்தராஜ்.ஆர்.எஸ்.ஆர்.	1929	சட்டம்ஒழுங்கு மீறல் வெள்ளையனேவெளியேறு	மெட்ராஸ்	
19	கோவிந்தசாமி.பி	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	மதுரை	446
20	கோவிந்தசாமி.ஆர்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	446
21	அய்யங்கார்,பாஷ்யம்	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	அலிபுரம்	449
22	அய்யங்கார்,ராமசாமி	1942	வெள்ளையனேவெளியேறு	திருச்சி	449
23	அய்யங்கார்,ராமசாமி	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	திருச்சி	449
24	அய்யங்கார்,கிருஷ்ணசாமி.ஆர்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	440
25	அய்யங்கார்சந்தானம்.கே	1919	ஒத்துழையாமைஇயக்கம் சட்டம்ஒழுங்கு மீறல் வெள்ளையனேவெளியேறு கள்ளுக்கடைமறியல் ஒத்துழையாமைஇயக்கம்,		
26	கந்தசாமி.எஸ்	1930	சட்டம்ஒழுங்கு மீறல்	பெல்லாரி	450
27	அய்யர்மணிவி.எஸ்	1920	ஒத்துழையாமைஇயக்கம், சட்டம் ஒழுங்கு மீறல்	திருச்சி	452

28	அய்யர் முத்துகிருஷ்ணபிவி	1919	மறியல்வெள்ளையனேவெளியேறு ஒத்துழையாமை இயக்கம், சட்டஒழுங்கு மீறல்,கள்ளுக்கடை மறியல்வெள்ளையனேவெளியேறு		452
29	அய்யர் ராஜகோபாலா.பி	1921	ஒத்துழையாமைஇயக்கம், சட்டஒழுங்குமீறல்,கள்ளுக்கடை மறியல்வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	454
30	அய்யர் ராமச்சந்திரா. எஸ்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கடலூர்	454
31	அய்யர் ராமகிருஷ்ணா.பி	1920	ஒத்துழையாமை இயக்கம் சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	454
32	அய்யர் ராமநாதா.வி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	454
33	அய்யர் ராமசாமிவி	1930	சட்டஒழுங்கு மீறல்	பெல்லாரி	454
34	அய்யர் சாமிநாதன்.வி.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	455
35	அய்யர்சேதுராமா.கே	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	455
36	அய்யர் சீனிவாசஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கோயம்புத்தூர்	455
37	அய்யர் வைத்தியநாதாஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	457
38	அய்யர் வெங்கடரமணிகே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	457
39	அய்யர் வெங்கடரமணாஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கண்ணனூர்	457
40	கல்யாணசுந்தரம்.எம்.எஸ்.எம்.	1941	தனிநபர் சத்தியாக்கிரகம்	மெட்ராஸ்	460
41	கண்டியர் தங்கவேலுஎம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	461
42	கண்ணப்பன்வி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	461
43	கண்ணையன்ஆர்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	461
44	கிருஷ்ணசாமிகே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	466
45	கிருஷ்ணசாமிபி	1942	வெள்ளையனேவெளியேறு	பெங்களூர்	466
46	கீர்த்திவாஸ்கே	1920	ஒத்துழையாமைஇயக்கம்	வார்தா & திருச்சி	467
47	மகாலிங்கம்பி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	469
48	மந்திரம்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	470
49	மாணிக்கம்.ஏ.எம்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	470
50	முதலியார் கோவிந்தசாமிபி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	474
51	முதலியார் முத்துசாமிஆர்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	475
52	முதலியார் சுப்பிரமணியகே	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	475
53	முருகையன்ஜி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	476
54	முருகையன்பி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	476
55	முருகையன்பி	1942	வெள்ளையனேவெளியேறு	பெல்லாரி	476
56	நாடார் கோபாலசாமிஎம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	482
57	நாடார் காசிநாதா.எஸ்	1941	வெள்ளையனேவெளியேறு	மெட்ராஸ்	482
58	நாகநாதன்.எஸ்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	483
59	நாயக்கர் கோவிந்தசாமிவி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	அலிபுரம்	483
60	நாயக்கர் வெங்கடசாமிகே	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	483
61	நாயுடு ரெங்கராஜுவி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	485
62	நாயுடு வேணுகோபால்என்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	486
63	நாய்னார் குழந்தைஎன்	1941	தனிநபர் சத்தியாக்கிரகம்	திருச்சி	486

64	நாயர் ராமன்.என்.பி.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	486
65	நல்லப்பன்டி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	486
66	நடேசன்.வி	1925	ஒத்துழையாமைஇயக்கம்	திருச்சி	489
	சட்ட ஒழுங்கு மீறல்				
			வெள்ளையனேவெளியேறு		
67	நாயர் கருணாகரா.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	490
68	பழனிசாமி.எஸ்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	493
69	பழனிவேல்.ஏ	1920	ஒத்துழையாமை இயக்கம்,	பாளையங்கோட்டை,	494
			சட்ட ஒழுங்கு மீறல்,		
			கள்ளுக்கடைமறியல்,		
			வெள்ளையனேவெளியேறு		
70	பிச்சை.வி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	497
71	ரிச்சார்டுராவுத்தம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	498
72	பிள்ளை அமிர்தலிங்கம்.எஸ்		சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	498
73	பிள்ளை ஆறுமுகம் எஸ்.எஸ்.	1927	சட்ட ஒழுங்கு மீறல்	மெட்ராஸ்	499
			தனிநபர் சத்தியாக்கிரகம்		
74	பிள்ளை கோவிந்தராஜு ஆர்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	501
75	பிள்ளை கோவிந்தசாமி.கே	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	501
76	பிள்ளை கல்யாணசுந்தரம்.பி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	502
77	பிள்ளை மாடசாமிஜி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	503
78	பிள்ளை மாகலிங்கம்.ஜி	1930	சட்ட ஒழுங்கு மீறல்		
	திருச்சி & வெல்லூர்	504			
79	பிள்ளை மகாலிங்கம்.எஸ்.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	504
80	பிள்ளை முருகையாஜி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	505
81	பிள்ளை நடராஜா.என்.ஜி.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கடலூர்,திருச்சி	506
82	பிள்ளை ராஜகோபாலா.என்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி, பெல்லாரி	508
83	பிள்ளை ராஜகோபாலா.என்.எம்.	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	508
84	பிள்ளை ராஜி.ஆர்	1931	சட்ட ஒழுங்கு மீறல்	அலிபுரம்	508
85	பிள்ளை ராமையா.பி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	509
86	பிள்ளை சங்கரன்.வி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	510
87	பிள்ளை சுப்பிரமணியன்.டி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	511
88	பிள்ளை வெங்கடராமா.எஸ்.ஜி.	1928	சட்ட ஒழுங்கு மீறல்தனிநபர்	அலிபுரம்	515
			சத்தியாகிரகம்கள்ளுக்கடை மறியல்		
			வெள்ளையனேவெளியேறு		
89	ரகுபதி.என்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	515
90	ராஜகோபால்.எஸ்	1942	சட்டம் ஒழுங்கு மீறல்	அலிபுரம்	516
91	ராஜி.எம்	1930	சட்டம் ஒழுங்கு மீறல்	பெல்லாரி	518
92	ராஜி ஸ்ரீராமா.ஜி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	518
93	ராமகிருஷ்ணன்.ஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	519
94	ராமன்.டி.கே.வி	1920	ஒத்துழையாமைஇயக்கம்	திருச்சி	520
			சட்ட ஒழுங்கு மீறல்		

95	ராமசாமி.டி.காகாஜி	1920	சட்ட ஒழுங்கு மீறல், தனிநபர் சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல், வெள்ளையனேவெளியேறு	மெட்ராஸ், திருச்சி & டெல்லரி	521
96	ராமசாமி.வி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	522
97	ராமசாமிநாயக்கவாடியார்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	523
98	ரகுநாதன்.எஸ்.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கோயம்புத்தூர்	525
99	ரெங்காராவ்.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	527
100	ரவித்அயோத்திராமா.வி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	529
101	சாம்பசிவம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	532
102	சந்தானம்.ஆர்.	1937	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	532
103	சேனைகொண்டர்கோபாலசாமிஆர்	1932	சட்ட ஒழுங்கு மீறல் தனிநபர் சத்தியாக்கிரகம் கள்ளுக்கடை மறியல், வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்,திருச்சி	532
104	சேவைராமு.டி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	டெல்லரி	533
105	சண்முகம்.எம்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	டெல்லரி	534
106	சோமசுந்தரம்.எஸ்	1930	சட்ட ஒழுங்கு மீறல் தனிநபர் சத்தியாக்கிரகம் கள்ளுக்கடை மறியல் வெள்ளையனேவெளியேறு	வெல்லூர்டெல்லரி&திருச்சி	536
107	சுப்பிரமணியபாகவதர்.எம்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	டெல்லரி	540
108	சுப்பிரமணியம்.கே.ஏ.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	அலிபுரம்	540
109	சையத் அமீர்.எம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	542
110	தியாகராஜன்.என்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	543
111	தங்கவேல்.எஸ்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	543
12	தென்கொண்டார்கோபாலசாமி.எம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	544
113	தென்கொண்டாரநாராயணசாமிஎம்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	544
114	தேவர்நாராயணசாமி.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	கோயம்புத்தூர் & அலிபுரம்	546
115	தேவர்வீரைய்யா.ஏ	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	549
116	திருகம்.எஸ்.பி.ஆர்.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	டெல்லரி	549
117	திருகணம்.என்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	549
118	திருவேங்கடம்.ஜி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	549
119	திருகணம்.எஸ்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	550
120	ஊமையன்.சி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	551
121	வைரமுத்து.என்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	553
122	வாண்டையார் ரெத்தினம்.வி	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	554
123	வாண்டையார் முத்துசாமி.எஸ்	1942	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	554

124	வன்னியர்கோபால்சாமி.கே	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	554
125	வன்னியர்நடேச.வி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	வெல்லூர் & அலிபுரம்	555
126	வரதராமநாதன்.வி	1930	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	556
127	வரதவேம்பையர்	1913	சுதேசஇயக்கம்சட்டஒழுங்குமீறல்		
128	வீரய்யா இருங்களர்.என்	1928	சட்ட ஒழுங்கு மீறல் வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	557
129	வெங்கடாசலபதி.ஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	அலிபுரம் & பெல்லாரி	559
130	வெங்கடராமன்.கே	1932	சட்ட ஒழுங்கு மீறல்	திருச்சி	559
131	வெங்கடராமன்.ஆர்	1930	சட்ட ஒழுங்கு மீறல்	பெல்லாரி	560
132	வெங்கடராமன்.ஜி	1942	வெள்ளையனேவெளியேறு	மன்னார்குடி	560
133	வெங்கடாமையா.ஆர்	1922	ஒத்துழையாமைஇயக்கம்	திருச்சி	560
134	வெங்கடேசன்.என்	1938	வெள்ளையனேவெளியேறு	அலிபுரம்	560
135	வெங்கடேசன்.வி	1940	தனிநபர்சத்தியாக்கிரகம் வெள்ளையனேவெளியேறு	மெட்ராஸ்	561
136	வேணுகோபால்.கே	1942	வெள்ளையனேவெளியேறு	பெல்லாரி	561
137	வைத்தியநாதன்(செல்லு).ஆர்.	1930	சட்ட ஒழுங்கு மீறல்	மெட்ராஸ்	562

23. தொகுப்புரை

சுதந்திரப் போரில் மன்னார்குடியின் பங்கு பெருமைப்படக் கூடியதாகும். அந்நிய நாட்டினர் ஆதிக்க ஆசையுடன் காலடி வைத்த போதெல்லாம் இம் முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிந்து அவர்களை முறியடித்ததில் மன்னார்குடி மக்களுக்கு பெரும் பங்கு உண்டு. அதிகாரப்பூர்வமாக சில நூறு தியாகிகளை மன்னார்குடி கொண்டிருந்தாலும் பலநூறு தியாகிகள் நமது விடுதலைக்கு உறுதுணையாக இருந்துள்ளனர்.

அடிக்குறிப்பு

1. நூறு கோடி மக்களின் நூற்றாண்டு வரலாறு------ இளங்கோ, பக். 7
2. மேலது, பக்.7
3. இண்டர்நெட்டில் பரோலி
4. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் - இராஜேந்திரன். நா. பக். 32
5. யார் - எவர் - பக். 467
6. தமிழ்நாட்டில் காந்தி - ராமசாமி ஏ. பக்.35
7. மேலது பக்.30
8. G.O. No. 853 dated 5.12.1924 Pubic (Confdl)

9. தமிழ்நாட்டில் காந்தி - ராமசாமி - ஏ. பக்.518
10. புதிய பூமி 26.1.2001 நாளிதழ், பக்கம். 3
11. சித்திரபாரதி - பாரதியார் சங்கம் 1982 - பத்மனாபன் அ. பக். 134
12. பாரதியாரின் வரலாறு - ராமசாமி.வ - பக்.24
13. வேதாரண்யம் உப்புசத்தியாகிரகம் - ராஜாஜி - பக்.121
14. மேலது, பக்.123
15. மேலது, பக்.123
16. G.O. No 2093 (ms) dated 15.5.1930
17. G.O No 3947 (ms) dated 15.5.1930
G.o No 3423 (ms) dated 15.5.1930
G.O. No 2849 (ms) dated 9.7.1930
G.O. No 5365 (ms) dated 22.71930
G.O. No 2548 (ms) dated 18.7.1930
18. G.O. No. 2091 (ms) dated 12.5.1930
19. U.S.S.F. No. 687, dated 31.5.1930
20. G.O. No. 2093 (ms) dated 12.5.1930
21. Thanjavur District Hand Book - P.108
22. The Civil Disobedience Movement - 1930-31 (Confdl) Pp.158-163
23. G.O. No. 515 & 525 dated 15.1.1932 Public (Confdl)
24. G.O. No. 286 dated 19.7.1932 Public (Confdl)
25. Judgement in the Calender Case No.47/1930 dated 26.5.1930 S.D.M. Court
26. மேலது
27. விடுதலைப்போரில் தமிழகம் 1982. ம.பொ.சி. பக். 72
28. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 10.12.1940
29 இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 27.1.1941
30. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 30.1.1941 - 22.2.1941 - 1.5.1941
31. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள். 19.2.1941
32. Fortnightly Report, 1st Haff August 1942, 25.8.1942
33. Distict calender of Events, August December, 1942 P. 99
34. Fortnightly Report, 1st Haff September 1942, 25.9.1942
35. Freedom Movement Mannarkudi - Poornachandran S P.85
36. இணையற்ற சாதனையாளர்கள் - பாகம் 2 2001 - முக்தா சீனிவாசன் பக். 267
37. Who's who freedom Fighters Vol II - Govt. of Tamil Nadu August 1973 No's 427 - 562

*****



Amount of Rs.100/- paid by Sri. Gopalsamy Senadigondar as fine for his participation in the individual satyagraha

6. மன்னார்குடி வழிபாட்டுத் தெய்வங்கள்

1. முன்னுரை

சோழ மண்டலச் சிறப்புகளுக்குக் காரணம் அங்கிருக்கும் கோயில்களேயாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஔவையார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. தமிழகத்தில் மக்களை நன்னெறிப்படுத்தும் கோயில்களுக்கு பஞ்சமில்லை. இதனால் மக்கள் பக்தியில் திளைத்து இன்பமுற்றனர். ஒருமுகச் சிந்தனையை வளர்த்து வாழ்வில் அமைதி அடைந்தனர்.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது பழமொழி. ஆறு இல்லை என்றால் அந்த ஊருக்கு அழகு இல்லை. எனவேதான் நம் முன்னோர்கள் ஆற்றங்கரையில் ஊரை அமைத்தனர். வடக்கே ஓடும் பாமணி ஆற்றங்கரையில் மன்னார்குடியை அமைத்து கோயில் கட்டினார்கள். கோரையாறு, முள்ளியாறு கிளைகளிலும் வட்டப் பகுதிகளை உருவாக்கினார்கள். இந்த ஆற்றங்கரைகளில் தொல் நாகரீகம் கொண்ட ஊர்தான் மன்னார்குடி.

2. ஸ்ரீ ராஜ கோபாலசாமி திருக்கோயில் வரலாறு

மன்னார்குடியின் அடையாளம் இராஜ கோபாலசாமி கோயில்தான். ஆயிரம் ஆண்டு கால வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலை இராஜாதி இராஜ சோழன் கட்டினார். மூன்றாம் இராஜாதி இராஜ சோழன் கல்வெட்டில் "விண்ணகரம்" என்பதுதான் இக்கோயிலின் மூலப்பெயராகும்.[1] ஒரு நூற்றாண்டு சென்ற பிறகு கி.பி. 1113-இல் முதலாம் குலோத்துங்கன் செங்கற்களால் கட்டப்பட்ட இக்கோயிலை கருங்கற்கள் கொண்டு திருப்பணி செய்து தன் பெயருடன் **"ஸ்ரீகுலோத்துங்க சோழ விண்ணகரம்"** எனப் பெயரிட்டார்.

முதல் குலோத்துங்கச் சோழனால் எடுப்பிக்கப்பெற்ற கருவறையுடன் இக்கோயில் பின்வந்த பல மன்னர்களால் வளர்ந்து மன்னர்களின் உள்ளத்தைக் குடிகொண்டு மன்னார்குடியாகத் திகழ்ந்தது.[2]

அச்சுதப்ப நாயக்கர், அவர் மகன் இரகுநாத நாயக்கர், அவரது மகன் விஜயராகவ நாயக்கர், அவர் மகன் மன்னாரு தேவன் போன்ற தஞ்சை நாயக்கர்கள் இக்கோயிலை 7 பிரகாரங்களோடு மிக விரிவுடையதாகச் செய்து மண்டபங்கள், திருக்குளங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து எழிலுறச் செய்தனர்.[3]

விஜயராகவ நாயக்கர் திருச்சிக்கருகில் 50 கல் தொலைவிலிருக்கும் மாமலை என்ற ஊரிலிருந்து கருங்கற்களைக் கொணர்ந்து ஐந்து பெரிய கோபுரங்களையும், பல வண்ணச் சிற்பகளுடன் கூடிய வேலைப்பாடுகளையும் செய்தார்.[4]

3. மஹாபாரதம்

மஹாபாரதத்தில் புலஸ்தியர் பீஷ்மரிடம் சம்பகாரணிய க்ஷேத்திரப் பெருமையைக் கூறும் போது "தத் ரோஷ்ய ரஜநீ

மேகாம் கோஹைஸ்ர பலம் பவேத்" என்று கூறுகிறார். அதாவது இத்தலத்தில் ஓரிரவு தங்கினாலும் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிட்டும் என்பது இதன் பொருளாகும்.

4. பிரம்மாண்ட புராணம்

வேதவியாஸர் அருளிய பிரம்மாண்ட புராணத்தில் காணப்பெறும் சம்பகாரணிய ஷேத்திர மாகத்மியம் (வடமொழி மூலம்) கி.பி. 1903 இல் T.S. வாமனராவ் என்பவரால் அச்சிடப்பெற்றது.[5] 1959 இல் இத்திருக்கோயில் வெளியீடாக அதன் மொழி பெயர்ப்பு பிரசுரிக்கப் பட்டது. அதன் சுருக்கம் 1965 இல் இத்திருக்கோயிலில் வெளியிடப்பெற்ற தல வரலாற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளது. பிரமாண்ட புராணத்தின் உத்தரகாண்டத்தில் விஷ்ணு ஷேத்திர விபாகம் என்ற எட்டு அத்தியாயங்கள் உள்ளன. அதிலேயே தட்சிணதுவாரகை என்னும் சம்பகாரணிய மான்மியம் கூறப்பட்டுள்ளது.[6] இத்திருத்தலம் மகான்கள் பலரின் திருப்பாதங்களால் புகழ் பெற்ற பதியாகும்.[7]

5. பாகவதமும் விஷ்ணுபுராணமும்

புராணங்களில் இத்திருத்தலங்களைப் பற்றிய குறிப்புகளில் இங்கு தவம் செய்த முனிவர்கட்கு எம்பெருமாள் தன்னுடைய குரவைக் கூத்தினை (ராஸ்கரீடையை) மீண்டும் ஒரு காட்சியாகக் காட்டியருளியதாக கூறப்பட்டுள்ளது. பெருமாள் ராணிகதீடை என்னும், குரவைக் கூத்தினை அன்றைய நாள் ப்ருந்தாவனத்திலே செய்து மகிழ்ந்த பின், குரவைக் கூத்தினில் தன்னுடன் ஆடிய கோபிமார்களுடன் ஜலக்கிரீடை செய்தான் என்று பாகவதமும் விஷ்ணுபுராணமும் கூறுகின்றன.

6. கருடஸ்தம்பம்


இக்கோயிலுக்கு முன்னர் அச்சுதப்ப நாயக்கரால் கட்டப்பட்ட கருடஸ்தம்பம் மிகவும் சிறப்புடையது. மேலே 5'X5' அளவுடைய பலகைக்கல் தலையோடு 54 அடி உயரமுடைய இக்கருடஸ்தம்பம் வியப்பிற்குரியதாகும். கருங்கற்களே இல்லாத இம்மாவட்டத்திற்குப் புதுக்கோட்டை குன்னாண்டார் கோயில் மலைப் பகுதிகளிலிருந்து இக்கல்லைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது மகத்தான சாதனையாகும். கம்பத்தின் மேல் தளத்தில் கருடனுக்கு ஒருசிறிய அழகிய கோயிலும் உள்ளது. கருடன் கை கூப்பிய கரங்களுடன் மேற்கு நோக்கி விளங்குகிறார். இக்கம்பத்தில் இராஜகோபாலன், அனுமன், அச்சுதப்ப நாயக்கர், அவரது தேவி மூர்த்திமாம்பா அகியோரது சிற்பங்கள் இடம் பெற்றிருப்பது போற்றுதற்குரியது.[8]

7. கோயில் அமைப்பு


தமிழகத்தில் தலைசிறந்த இந்த வைணவக் கோயிலைக் கட்டி முடிக்க '50 ஆண்டுகள் ஆனது' என வரலாறு கூறுகிறது.

23 ஏக்கர் பரப்பளவில் 16 கோபுரங்களுடன் பிரம்மாண்ட முறையில் அமைந்துள்ளது. கிழக்குப் பகுதி ராஜகோபுரம் 154 அடியில் விண்ணைத் தொடும் உயரமுடன் கம்பீரமாய் காட்சியளிக்கிறது.

அழகான ஏழு பிரகாரங்கள், 24 சந்நிதிகள், நீண்ட நெடிதுயர்ந்த மதில்கள், மண்டபங்களுடன் 18 விமானங்களும் கொண்ட இம்மாபெரும் திருக்கோயில் கவின்மிகு சிற்பங்களும் கட்டடக்கலை நுட்பங்களும் கொண்ட காலப் பெட்டகம். இக்கோயில் பாஞ்சாராத்திர ஆகம விதிப்படி நடப்பவை ஆகும்.



திருக்கோயில் கோபுரத்துடன் அமைந்த புனித திருக்குளம்



கோபுரமும் கருடஸ்தம்பமும்

8. புண்ணிய தீர்த்தங்கள்

மன்னார்குடியைப் பற்றி வரலாற்றாசிரியர் திரு. கே. சொக்கலிங்கம் குறிப்பிடும்போது 'The following are proven about this place' - **'மன்னார்குடி மதில் அழகு', 'கோயில் ஒருபாதி குளம் ஒரு பாதி', மறையோர் மிகுந்தது மன்னார்குடி'** என்று கூறுகிறார்.[9]

மன்னார்குடி குளக்கரை பற்றியும், காவிரியாறு பாய்ந்து வளம் செய்யும் தஞ்சை மாவட்டத்தில் இவ்வூர் மிகுதியான 64 குளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது பற்றியும் கூறுகிறார். இக்குளங்களில் பல குளங்களும், பாமணியாறும்

'கோயிலின் புனித தீர்த்தங்களாக உள்ளன.

"எண்ணில்லாத் தீர்த்தமும் எம்பெருமான் ஸேவையும்
கண்ணினால் கண்டால் போதுமே
புண்ய நதியாம் ஹரித்ரா நதி பாமணியும்
கண்யமான க்ருஷ்ண கஜேந்திர கோப்பிரளமும்
கண்ணுக்குகந்த கோபி ருக்மணி சங்கு சக்கரமும்
பண்ணின வினையைத் தீர்க்கும் பாற்கடலும் தாங்கி நிற்குமே"[10]

9. கிருஷ்ண தீர்த்தம்

பங்குனி மாத பிரமோற்சவ நிறைவில் கோயிலுக்கு அருகில் உள்ள கிருஷ்ணதீர்த்தத்தால் ஸ்ரீராஜகோபாலன் தெப்போற்சவம் கண்டருளுவார். கோயிலிலுள்ள கோபுரங்கள் மீது விழும் மழைநீர், பரந்த முற்றவெளியில் பெய்யும் மழைநீர் அனைத்தும் இத்திருக்குளத்தில் சேகரமாகும் வண்ணம் இத்திருக்குளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜெயம் கொண்டநாதர் கோவில்



அண்ணாமலை நாதர் கோவில்



10. வழிபாடு (பாஞ்சராத்திர முறைப்படி)

கோயில்களில் எழுந்தருளியிருக்கப் பெற்ற இறைவனும், மனிதனைப் போலவே துயிலெழுந்து நீராடி, உணவு உண்டு மக்களைக் காத்து கலையின் அம்சங்களை அனுபவித்து உறக்கம் செல்வதாகக் கருதி ஆகம முறைப்படி வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. நாள்தோறும் இக்கோயிலில் ஏழுகால வழிபாடு இன்னும் நடைபெற்று வருகிறது.

11. மூலவர்

பரவாசு தேவப்பெருமாள், ஸ்ரீதேவி பூமிதேவியுடன் மிகவும் கம்பீரமாக விளங்குகிறார். இவர் நின்ற திருக்கோலத்தில் சங்கு, சக்கரம் கதையுடன் வெள்ளிக் கவசம் பூண்டு நம் தீ வினையகற்றி அருள் பாலிக்கின்றார்.

தாயார் : செங்கமலத் தாயார்.

12. உற்சவர்

ஸ்ரீ செங்கமலத்தாயார் (ஹேமாப்ஜ நாயகி, ஏப்தாவ்ஜ நாயகி) படிதாண்டாப் பத்தினியாக செங்கமலத்திலேயே வீற்றிருக்கின்றார். ராஜநாயகி, துவாரகா நாயகி எனும் இரு தோழிகளுடன் காட்சியளிக்கின்றார்.

ஆதிசங்கரர், ஸ்ரீ வித்யா ராஜ கோயில் என்ற பெயரில் பகவானின் விக்ரகத்தை அமைத்து, ஸ்ரீவித்யா என்னும் இயந்திரத்தையும் அமைத்துக் கொடுத்தார்.

13. ஸ்ரீ வித்யா ராஜகோபாலன் ருக்மணி,

சத்தியபாமாவுடன் பசு மாடு, கன்றுகளுடன் மேய்க்கும் திருக்கோலமாய் பசுவிடம் சிறிது சாய்ந்து கொண்டு ஒற்றை அடையுடன் ஒரு காதில் ஓலையும், ஒரு காதில் குண்டலமும் விளங்க ஒரு கையின் நுனியில் மும்மடிப்புள்ள சாட்டையுடன்

கூடிய தங்கக் கோலை ஏந்தியும், இடது திருக்கரத்தைச் சத்திய பாமாவின் திருத்தோளிலே பதியச் செய்தும் திரிபங்க லலிதாகாரமாய் உள்ளம் கவர் பேரழகனாய் அருள்மிகு ஸ்ரீவித்யா ராஜகோபாலன் காட்சியளிக்கின்றார். மன்னார்குடி ராஜகோபாலனார் வடிவழகு உலகப் புகழ் பெற்றது.

14. ஸ்ரீ சந்தான கோபாலன்

கோயிலின் பெருமாள் சன்னதியில் பாலசுவாமிகளால் பூஜிக்கப்பெற்ற 5 தலை நாகத்தின் அணைப்பில் கால் விரலை வாயில் வைத்துக் கொண்டு குழந்தையாக காட்சி தரும் ஸ்ரீ சந்தான கோபாலனை கையில் வாங்கிப் பிரார்த்தனை செய்பவர்களுக்கு வேண்டிய வரம் அருள்வான் என்கிறது தலவரலாறு.[11]

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலேயே அதிக அளவு ஆபரணங்கள் உள்ள திருக்கோயில் இது தான்.

15. கோயிலைப் பாடிய மகான்கள்

ஆழ்வார்களோ நாயன்மார்களோ இத்திருக்கோயிலைப் பாடவில்லை. முனிவர்களும் அரசர்களும் பாடியுள்ளனர். இத்திருத்தலம் மகான்கள் பலரின் திருப்பாதங்களால் புகழ்பெற்ற பதியாகும். பல மகான்களால் பாடப்பெற்ற கோயிலாகும்.

வ. எண்.	முனிவர்கள்/ அரசர்கள்/ திருக்கோயிலைப் விபரங்கள்	ஸ்ரீ ராஜ கோபாலசாமித் பாடிப் பரவசமடைந்த
1.	மணவாள மாமுனிகள்	கோபால விம்சதி - கமலா ஸ்துதி ராஜகோபால மங்கலம்
2.	மன்னாரு தேவன்	இராஜகோபால விலர்சமு செங்கமலவள்ளி
3.	விஜயராகவ நாயக்கர்	பரிணய - இராஜகோபால தண்டகம். தட்சிண துவாரகசதள பரணயமு. மன்னர் மோகனப் பள்ளு - ஹேமாப்ஜ நாயகி ஸவாம் வரமு.

4.	புலவர் ரங்காஜம்மா (விஜயராகவ நாயக்கர் அவைப்புலவர்)	மன்னாரு விலாசம்
5.	வேளாங்குடி வரதாசார்ய ஸ்வாமி	ஸ்ரீ ராஜகோபால மீது எட்டெதுகைக் கவிதைகள்
6.	நம்மாழ்வார்	பாசுரம்
7.	சகஜி மன்னன்	இசைப் பாடல்கள் விஷ்ணு பல்லக்கி சேவா பிரபந்த
8.	ஸ்ரீ ராஜி சாஸ்திரிகள்	ராஜகோபால நவரத்ன மாலிக ஸ்ரீ ராஜ கோபால மஹாரித்வை அனுக்ரமானிகா - 623 சுலோகங்கள் 18 நாள் ஹசலத்தைப்பா
9.	செண்டலங்காரப் பிள்ளை	விறலிவிடுதூது - வண்ணங்கள் இரண்டு காப்புமாலை ஒன்று - தனிப்பாடல்கள்
10.	சுத்தானந்த பாரதியார்	தனிப்பாடல்கள்
11.	ஸ்ரீ முத்துசாமி தீட்சதர்	பல பாடல்கள் பாடியுள்ளார்
12.	ஸ்ரீ தியாகராஜர்	பல பாடல்கள் பாடியுள்ளார்
13.	செங்கல்வ கவிகள்	ஹேக்ரக்ஞர் பல பாடல்கள் பாடியுள்ளார்
14.	முத்துசாமி தீட்சதர்	ராஜகோபாலனை பல்வேறு ராகத்தில் பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். தன்னுடைய புகழ்பெற்ற கீர்த்தனைகளில் ஹரித்ராநதி குளத்தையும் பங்குனித் திருவிழாவின் மோகினி அலங்காரத்தையும் பரவசத்துடன் பாடியுள்ளார்.
15.	ஸ்ரீ பராங்குச தேசிகர்	பல பாடல்கள் பாடியுள்ளார்
16.	ஊத்துகாடு வெங்கடய்யர்	இவருடைய (கீதகோவிந்தத்தில் பூரி ஜெகந்நாதனைப் பாடியது போல் மன்னன் ராஜகோபாலனைப் பற்றி கர்நாடக இசையில் தன்னுடைய கிருஷ்ண கானத்தில் பாடியுள்ளார். பல தமிழ் தெலுங்குப் பாடல்களை இயற்றி உள்ளார்.

16. சுரங்கப் பாதை

நிருத்த மண்டபத்தின் தென் பகுதியில் உள்ளது. இது திருக்கோயிலின் மேல கோபுர வாசல் வரை உள்ளதாக தெரிகிறது. சுமார் 10 அடி அகலமும் 50 அடி நீளமும் கொண்டதாக உள்ளது.

17. தீட்சதர்கள்

பூஜை செய்ய 21 தீட்சதர்கள் உள்ளனர். ஊதியம் கிடையாது. பக்தர்கள் தருவதையே பெறுகிறார்கள்.

18. கோயில் ஆட்சி

1926 ஆம் ஆண்டு தேவஸ்தான பரிபாலன குழுவின் ஆளுகைக்குப்பின் 1951 ஆம் ஆண்டு முதல் சென்னை அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இது இரண்டாம் நிலைத் திருக்கோயில்.

19. பணியாளர்கள்

அலுவலகத்தின் நான்கு பணியாளர்கள் உட்பட 50 பணியாளர்கள் பணி புரிகின்றனர். இக்கோயிலுக்கு 1000 ஏக்கருக்கு மேல் நிலங்கள் உள்ளன.

துவைத, அத்வைத, விஷிஷ்ட வேறுபாடின்றி அனைவரும் போற்றி வணங்கி சிறப்பு மிக்க மன்னையம்பதி என்னும் இத்திருத்தலப் பெருமையினை எண்ணி மகிழ்வோமாக.

20. கைலாச நாதர் கோயில்

மன்னார்குடி நகரத்தின் கீழப்பாலம் பகுதியின் பாமணியாற்றங்கரையின் கரையில் இச்சிவாலயம் அமைந்துள்ளது. சிறிய கருங்கல் கட்டுமானக் கோயிலாகத் திகழ்ந்தாலும் மிக அழகான அமைப்போடு திகழ்கின்றது.

21. அமைப்பு

இக்கோயிலுக்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. விமானம், அரித்த மண்டபம், முன் மண்டபம், உட்பகுதியில் மேற்கு நோக்கிய நடராஜர் சந்நிதி, தெற்கு நோக்கிய வடபுறமாய் அமைந்த அம்மன் கோயிலுடன் இணைந்த மகாமண்டபம் அகிய அமைப்புகளைக் கொண்டது.

22. திருவுண்ணாழிகை

கைலாசநாதர் என்றழைக்கப்படும் சிவலிங்கம் உள்ளது. இது சுமார் 5½ அடி உயரமுடையது. வட்டமான ஆவுடையைக் கொண்டுள்ளது. இதன் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு. இறைவன் உலா வருதல் போன்ற பெரிய திருவிழாக்கள் கிடையாது.

சிறப்புப் பெயரான 'ஜெயங்கொண்டான்' என்ற பெயரில் ஜெயங்கொண்ட சோழீஸ்வரமுடையார் என்று இச்சிவாலயம் பெயர் பெற்றது.

23. செப்புத் திருமேனிகள்

கோயிலில் சுமார் 26 செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை 12 ஆம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரை பல காலங்களில் உருவாக்கப்பட்டவை. இதிலுள்ள நடராஜப் பெருமாள் திருவுருவத்தின் பேரழகைக்காண கண் கோடி வேண்டும்.

24. கல்வெட்டில் கைலாசநாதர் கோயில்

1. "உடையார் சீகயிலாய முடையார்
   இராஜாயி ராஜ் பலரமுடையார் கோயிலில்"[12]
2. "உடையார் ராஜாயிராஜ்வர முடையார்
   கோயிலில்[13]
3. உடையார் ஸ்ரீ கைலாஸயிகமுடையாரான
   இராஜ வர முடையார் கோயிலிலே"[14]
4. "ஸ்ரீ கைலாசநாதமுடையார் கோயில்"[15]

இத்திருக்கோயிலின் எண் முளையே போசாள அரசன் வீர சோமீஸ்வரன், மூன்றாம் இராஜராஜன்[16], அரசன் பெயர் அறியப்படவில்லை. பராக்கிரம பாண்டியன் காலத்தியது.

25. அண்ணாமலை நாதர் கோயில்

மன்னார்குடியின் மேற்குப் பகுதியில் பேருந்து நிலையத்திலிருந்து 2கி.மீ. தூரத்தில் அமைந்த எழில் மிகுந்த சிவாலயம்.

26. அமைப்பு

சுதைச் சிற்பங்கள் சிதைந்தும், செங்கற்கள் பல்லைக்காட்டியும் பரிதாபமாகத் தோற்றம் தருகிறது. 35 அடி கோபுரத்துடன் கிழக்கு நுழைவாயிலாக திகழ்கிறது. 15 அடி உயரம் கொண்ட மதிலும், ஒரே திருச்சுற்றினையும் கொண்டுள்ளது. இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம், மகா மண்டபம் என்ற அமைப்பினை உடையது. கோயில் திருமுற்றம், மடை வளாகம், தீர்த்தக்குளம் ஆகியவை இரண்டு வேலி நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

27. சந்நிதிகள்

அண்ணாமலையார் சன்னதி, உண்ணாமலை தேவி அம்மன் சன்னதி (இது கி.பி. 4ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்). விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், நந்தி, பைரவர் சந்நிதிகளும் உள்ளன.

28. செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் 15 செப்புத் திருமேனிகள் உள்ளன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைக் கொண்டுள்ளன. மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சண்டீஸ்வரர் முதலிய செப்புத் திருமேனிகள் குறிப்பிடத்தக்கன.

29. கல்வெட்டில் அண்ணாமலை நாதர்

"உடையார் திரு அண்ணாமலை உடையார்"[17]

"திருவண்ணாமலையுடையார் கோயில்"[18]

என்று மூன்றாம் இராஜேந்திரனின் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"உடையார் திருவண்ணாமலை உடையாற்கு"[19]

என்று வீரபாண்டியன் கல்வெட்டிலும் இப்பெயர்கள் இடம் பெறுகின்றன. இங்குள்ள ஆறு கல்வெட்டுகள் வெளியிடப் பட்டுள்ளன.

30. ஜெயங்கொண்டநாதர் கோயில்

பாமணியாற்றங்கரையின் வடகரையில் 19,602 சதுர அடியில் அமைந்துள்ளது. சோழ மன்னன் இராஜாதிராஜனின் சிறப்புப் பெயரான 'ஜெயங்கொண்டான்' என்ற பெயரில் ஜெயங்கொண்ட சோழீஸ்வரமுடையார் என்று இச்சிவாலயம் பெயர் பெற்றது.

31. அமைப்பு

கோயில் 18 அடி உயரமுடைய மதிலைக் கொண்டுள்ளது. இக்கோயில் பலமுறை திருப்பணிகளுக்கு உட்பட்டதால் சோழர்களின் கல்வெட்டு எதையும் முழுமையுடன் காணமுடியவில்லை.

சுமார் 6 அடி உயரத்தில் மேடைபோல் அமைத்து அதில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன. ஒரு கோபுரமும் ஒரு வாயிலும் உள்ளன. அம்மன் பெயர் பிரகான் நாயகியாகும். நடனசம்மந்தர், சோமாஸ்சுந்தர் (சிவன்) போன்ற செப்புத்திருமேனிகள் உள்ளன.

32. குழம்புப்பால் திருவிழா

ஆண்டு தோறும் வைகாசி மாதம் ரோகிணி நாளில் இத்திருவிழா நடைபெறுகிறது. அப்போது பசும்பாலில் நாட்டுச் சர்க்கரை, குங்குமப்பூ, ஏலக்காய் முதலிய நறுமணப்

பொருட்களைச் சேர்த்துக் காய்ச்சி, குழம்புப்பால் செய்து ஜெயங்கொண்டநாதருக்கு படைத்து வழிபட்டு, பின்பு இராஜ கோபாலுக்கு அனுப்புவது வழக்கமாக உள்ளது.

இதனை சிவபெருமான் பெருமாளுக்கு பால் அனுப்புவதாக மக்கள் நம்பினர். இக்கோயிலில் இது மிகப்பெரிய திருவிழாவாகும்.

33. செப்பேடுகள்

தஞ்சை மராட்டிய அரசர் பிரதாபசிம்மன் காலத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பெற்ற அறக்கொடைகளை நான்கு செப்பேடுகள் கூறுகின்றன. இக்கோயிலின் ஏழு கல்வெட்டுக்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

34. சித்தர்களும், முனிவர்களும்


சித் என்றால் உயிர். உயிரை உணர்ந்தவர்கள் சித்தர்கள். மானுடம் உய்வதற்காக சித்தர்கள் சமாதியானபின்பும் உடலில் இருக்கிற. தங்கள் ஆற்றலை வெளியிட்டுக் கொண்டிருப்பார்கள்.

35. மேருசித்தர்


சத்ரபதி சிவாஜியின் ஆன்மிககுரு ராமதாஸ் ஸ்வாமிகள். தஞ்சையை ஆண்ட ஏசோஜிக்கும் ஆன்மீக போதனைகள் செய்தார். இச்சுவாமிகள் தன்னுடைய மூன்று சீடர்களை தஞ்சைக்கு அனுப்பி ராமபக்தி பிரச்சாரக் கேந்திரத்தை அமைக்கச் சொன்னார்.

அதன்படி மன்னார்குடியில் பிரச்சாரக் கேந்திரத்தை அமைத்த **அனந்தமௌனி** சுவாமிக்கு இரண்டு சீடர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரான மேரு சுவாமிகள் தனது குருவிடம் நீங்காத பக்தியும், அன்பும் கொண்டு பல நூல்களைக் கற்றார். அனந்தமௌனி சுவாமிக்குப் பிறகு மன்னார்குடி பிரச்சார கேந்திரத்திற்கு தலைவராகவும் அமர்ந்தார்.


மகாராட்டிர அந்தணர் குலத்தில் பிறந்த மேரு சுவாமிகள் மன்னையில் தங்கி சமயப்பணிகள் கற்றார். இராம சோகளா, பீமோ உபகேச, அவதூத கீது, சிவானந்தலகிரி, ஆத்ம சாட்சாத்கார பூரணம் ருதகர, சோடசகலா, பிரம்மசமவீதி, ஆனந்த வால்மீகி




மாயாண்டி சித்தர்




கூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள்



வேதாந்த தேசிகன்



மணவாள மாமுனி



நம்மாழ்வார்



திருமலைநம்பி தாத்தாச்சாரியார்

இராமாயணம் போன்ற சிறந்த நூல்களையும், ஆயிரத்திற்கு மேற்பட்ட சபங்க, பத பாடல்களையும், கவிதைகளையும் எழுதினார்.

அனந்தமௌனி சமாதிக் கோயிலும், மேருசுவாமிகளின் சமாதிக் கோயிலும் அவருக்குப் பின் வந்த சேது சுவாமிகளின் சமாதிக் கோயிலும் போற்றப்பட்டு பாதுகாத்து வரப்படுகின்றன.[20]

36. சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள்

மன்னார்குடியில் ஐயர் சமாதி எனப்படும் இடத்தில் இச்சித்தரின் ஜீவசமாதி அமைந்துள்ளது. நூற்றாண்டுக்கு முன்னர் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் மன்னையில் தங்கி பல்வேறு சித்து விளையாட்டுக்களின் மூலம் மக்களின் துன்பம் போக்கியுள்ளார்.

தன்னை நாடிவரும் நோயாளிகளுக்கு தன்னிடம் இருந்த சூட்டுக்கோல் மூலமும், மூலிகைகள் மூலமும் வைத்தியம் செய்துள்ளார். குஷ்டம் முதலிய பெரும் வியாதி உள்ளவர்களிடம் பேசிக்கொண்டே நோயாளிகளின் கவனத்தை வேறுபக்கம் திசை திருப்பி, அவர்கள் அறியாதவாறு தன்னிடம் உள்ள நெருப்பில் பழுக்கச் காய்ச்சிய இரண்டு கம்பிகளால் அந்த அடியாரின் தொடையில் ஒரு இழுப்பு இழுத்து விடுவார்.

சுடப்பட்ட கம்பி மூலம் பிணியைப் போக்கியதால் சூட்டுக்கோல் ராமலிங்கம் என்று அழைக்கப்பட்டார். தன்னை நாடி வந்தவர்களுக்கு சுடச்சுட அன்னம் வழங்குவார்.

இவரது அருள்வாக்குப்படி இவர் முக்தி அடைந்தபோது, மன்னார்குடி நகரத்தில் நெசவுத்தறிகளும், எண்ணெய் கட்டும் செக்குகளும் சில விநாடிகள் நின்றன. தான் எப்படி எங்கு அடக்கம் செய்ய வேண்டும் என்று உயிருடன் இருந்தபோது கூறியிருந்தவாறு அடக்கம் செய்யப்பட்டார்.[21]

இவரது சீடரான **மாயாண்டிச் சித்தரின்** ஜீவ சமாதியும் இவரது சமாதியருகே அமைந்துள்ளது. மன்னார்குடியில் வாழ்ந்த டாக்டர் மேனன் குடும்பத்தால் ஆதரிக்கப்பட்ட **வாட்டார் மௌன குரு சுவாமிகள்** சமாதியும் நகரின் தெற்கே அமைந்துள்ளது.[22]

37. வண்டுவராபதி மடம்

மன்னையில் உள்ள **வண்டுவராபதி மாமுனிகள்** மடத்தில் சில குறிப்புகளைக் கொண்ட, கல்வெட்டு ஒன்றுள்ளது.

அம்மடத்துத் தலைவரும் அவரது சிஷ்யை பெரிய பிராட்டி என்பவரும் மட அபிவிருத்திக்காக தங்களது செல்வத்தைச் செலுத்தியுள்ளனர். மடநிலம் வரி நீக்கப்பட்டு அவர்கள் சேர்த்த நிலங்கள் மடத்துக்காக அனுபவிக்கப்பட்டன. அந்நிலத்தின் எல்லைகளும், இருப்பிடமும் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நிலம் இறைவனது நிலமாக திருநாமத்துக் காணியாக ஸ்ரீ சேனாபதியாழ்வார் பெயரில் கொடுக்கப்பட்டது.

இம் மாமுனிகள் தான் இறந்த பிறகு தன் சிஷ்யை மடத்தை நிர்வகிக்க வேண்டுமென்றும். மடத்து வேலைக்காரப் பெண்களுக்கு உணவுக்கும், உடைக்கும் உபயோகப்படுத்த வேண்டுமென்றும். அதன் பிறகு நல்ல சிஷ்யர்கள் நிலத்தை மடத்துக்காக அனுபவிக்க வேண்டுமென்றும் ஒரு வேளை மடம் அழிந்துபோனால் நிலம் எப்படிப் பராமரிக்கப் படவேண்டும் என்ற குறிப்பு உள்ள இடம் கல்வெட்டில் அழிந்துவிட்டது.[23]

உணவுக்கும் உடைக்கும் என்று இக்கல்வெட்டு கூறுமிடத்து.

"துக்கும் புடவைக்கும் ஜீவனத் னாளொன்று(க்கு) பதக்காக வந்து நெல்லு"[24]

என்று குறிப்பிடப்படுகின்றது.

38. திருமலை நம்பி தாத்தாச்சாரியார்

அச்சுதப்ப நாயக்கரின் மன்னார்குடி கல்வெட்டுக்களை ஆராயும் போது கி.பி. 1577 இல் மன்னார்குடியில் **திருமலை நம்பி தாத்தாச்சாரியார்** என்ற வைணவ குரு ஒருவருக்கு நிலங்கள் அளித்த செய்தி தெரிய வருகின்றது.[25] அச்சுதப்ப நாயக்கர் "நம் திருமலை நம்பி திருமலதாத்தாச்சாரியார்" என்று குறிப்பிட்டிருப்பதும், அவருக்குச் சிறப்புகள் செய்திருப்பதும் கொண்டு அவர் நாயக்கரால் மதிக்கப்பெற்ற **வைணவ குரு** என்பதை நன்கு அறியலாம். மேலும் இராஜகோபாலசாமி

திருக்கோயிலில் இவரது உருவச் சிலையும் செப்புத் திருமேனியும் வழிபாட்டில் இன்றும் உள்ளன. செப்புத் தெருமேனியின் பீடத்தில் **திருமலைநம்பிதாத்தாச்சாரியார்** என்ற கிரந்த எழுத்துக்களில் எழுதப் பெற்றுள்ள பொறிப்பு காணப்படுகிறது.

பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் கூப்பியகரங்களுடன் காணப்பெறும் திருமலை நம்பி தாத்தாச்சாரியாரின் நெற்றியிலும் புஜங்களிலும் திருமணக்குறிகளும், தோள்களில் சங்கு சக்கரப் பொறிப்புகளும் காணப்படுகின்றன.

39. மணவாள மாமுனிகள்

ஐப்பசி திருமூலத்தில் திருநகரியில் அவதரித்த அந்தமில் சீர் மணவாள மாமுனிகள் மன்னை திருத்தலத்திலே பல்லாண்டு தங்கியிருந்ததாகவும் இப்பெருமாளிடம் போரில் ஈடுபட்டிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

ராஜகோபால பெருமாளின் அன்றாட வழிபாட்டு முறைகளை முறைப்படுத்தினார். நாள்தோறும் திருவாய்மொழி பாசுரங்களை ஒழுங்குபடுத்தினார். இம்முறையே இன்றும் நடைபெற்று வருகிறது.

இப்பெருமாளைப் பற்றி சிறப்புகளை, **"கோபால விம்சதி," 'கமலா ஸ்துதி' "ராஜகோபால மங்கலம்"** என்ற நூல்களில் எழுதியுள்ளார். ஆழ்வார்கள் இப்பெருமாளை பாடாதுவிட்ட குறையைப் போக்கினார்.

யாதவாப் யுதய வர்ணனைகளையும் விம் சதியிபாயும் சேவித்ததால் சுவாமி தேசிகன் இப்பெருமாளின் வடிவினை உள்ளத்தில் கொண்டு இந்நூல்கள் இயற்றியதாக தோன்றுகிறது.

பெருமாளின் பெருமைகளை இந்நூலில் எடுத்தோதி ஏழை ஏதிலன் கீழ்மகன் என்னாது யாவர்க்கும் சேவை சாதிக்கும் இறைவனின் பெருமைகளை விளக்கியுள்ளார்.

செங்கமலத்தாயார் என்றும் செண்பகலெட்சுமி என்றும் இச்செண்பகாரண்யத் திருத்தலத்தில் எழுந்தருளி அருள் பாளித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீதாயாருக்கு ஆடிப்பூரத் திருவிழா கொண்டாட அருளச் செய்துள்ளார். மணவாள மாமுனிகளின் ஏற்பாட்டின்படிதான் திருத்தேர் நடைபெற்று வருகிறது.

40. உத்திரயோகி


150 ஆண்டுகளுக்கு முன்னர் வேதாரண்யம் செம்போடையில், ரங்காச்சாரி - ஜானகியம்மாளுக்கு 27.9.1829ல் வாசுதேவர் பிறந்தார். சிறுவயதிலேயே வாசுதேவர் மன்னார்குடிக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் பட்டுக்கோட்டை சாலையில் உள்ள நாகை என்ற அமைதியான கிராமத்தில் வந்து தங்கினார். நாகை மனித நேயமும் மனித இரக்கமும் நிறைந்துள்ள பகுதி. சுத்தமான நீர் நிறைந்த மந்தாகினி என்ற புனித தீர்த்தம் உள்ளது. ஜபம் செய்யவும், தவமியற்றவும் பொருத்தமான பகுதியாகும்.

வாசுதேவர் நாள்தோறும் ஜபம், தியானம் செய்து வந்தார். நாகையைச் சுற்றியுள்ள மக்கள் வாசுதேவன் ஆதி உத்ரயோகி என்றழைத்ததோடு, குருவாகவும் ஏற்றுக்கொண்டு **நாகை ஜப்தா** என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர். இவர்கள் தவம்செய்ய பிரணவ சக்ர வடிவில் **குஸ்மாகரகம்** கட்டப்பட்டது. இவரது சீடர்கள் இங்கு தியானம் செய்தனர்.


நாகை ஜப்தாவை உருவாக்கிய உத்ரயோகி 35வது வயதில் தனது சீடர்களின் வற்புறுத்தலின் பேரில் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு ஒரு மகளும் பிறந்தார்.

திருமணம் செய்த சிறிது காலத்திலேயே ஆதிஉத்ரயோகி சமாதியாகிவிட்டார். சமாதியாவதற்கு முன் தன் சீடர்களிடம் "எனக்குப் பிறகு வடக்கிலிருந்து ஒரு உத்ரயோகி வந்து தெற்கில் தங்குவார்" என்று கூறியிருந்தார்.

மூன்று தலைமுறைகளுக்குப் பிறகே ஆதிஉத்ரயோகி கூறிய யோகி பாண்டிச்சேரியில் வந்து தங்கிய **அரவிந்தர்** என்பதை நாகை ஜப்தாவில் தோன்றிய கோடியாளம் சகோதரர்கள் கண்டுணர்ந்தார்கள்.



நாகை ஜப்தா - குஸ்மாகரகம்



குஸ்மாகரகம் - (மேற் பகுதி)

ஸ்ரீ அரவிந்தர் தனது வரலாற்றை முதலில் எழுதிய "YOGIC SADHAN" என்ற புத்தகத்தில் நாகை ஜப்தா, குஸ்மாகரகம் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.


மன்னார்குடி முதல்தெருவில் உள்ள A. சீனிவாச அய்யங்கார் தனது வீட்டில் ஆதிஉத்ரயோகியின் பாதுகைகளை பத்திரமாக பத்திரப்படுத்தி வழிபட்டு வருகின்றார்.[26]


ஆதிஉத்ரயோகியைப் போன்று அகோபில மட 39வது ஜீயர் மன்னார்குடி அழகியசிங்கர், ஆன்மீக குரு தென்பறை ஆண்டவன் சுவாமிகள், காஞ்சிமடாதிபதி, ஜெயேந்திர சுவாமிகள் போன்ற பல மகான்களை பிரசவித்தது மன்னார்குடி வட்டமாகும்.

41. தொகுப்புரை

சோழ மண்டலக் கோயில்களில் தொல்புகழ் கொண்டது மன்னார்குடி கோயில். இங்குள்ள ராஜகோபாலசாமி கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருகிறது. வழிபாட்டுக்குரிய தலமாக மன்னார்குடி திகழ்கிறது.

******





அடிக்குறிப்புகள்

1. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995 - பக். 7
2. ராஜகோபாலசாமி கோயில் தலவரலாறு - பக். 2
3. மேலது - பக். 9
4. தஞ்சாவூர் ஜெட்டியார் 1906 - பக்
5. ராஜகோபாலசாமி கோயில் மலர் - பக். 13
6. மேலது பக். 13
7. மேலது பக். 26
8. மேலது பக். 10
9. The Temples of Tamil Nadu - K. Chocklingam vol. 2 - p. 327.
10. இராஜகோபாலசாமி கீர்த்தனம் - செங்கமலய்யா - பக். 7
11. இராஜகோபாலசாமி தலவரலாறு - பக் 8.
12. தெ.இ.க. த14-B dues (A/c wise).6 A.R. No. 97/1897
13. தெ.இ.க. த 6 A.R. No. 96 /1897
14. தெ.இ.க. த 6 A.R. No. 99/101/1897
15. தெ.இ.க. த 6 A.R. No. 100A/1897
16. தெ.இ.க. த 6 A.R. No. 96,98,99/1897
17. தெ.இ.க. த 6 A.R. No. 92/1897
18. தெ.இ.க. த 6 A.R. No. 93,93A/1897
19. தெ.இ.க. த 6 A.R. No. 95/1897
20. இராஜகோபாலசாமி கோயில் மலர் - பக். 128
21. ஞாபகம் வருதே - ஊர் ஞாபகம் வருதே - பானுகுமார் - பக்.8
22. மேலது - பக். - 9
23. தெ.இ.க. த 6 - A.R. No. 105/1897
24. தெ.இ.க. த .6 - A.R. No. 105/1897
25. தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு - கு.பா. - பக். 137
26. நூலாசிரியரிடம் நேரில் தகவல் கூறியவர் மன்னார்குடி திரு. எஸ். ரெங்கநாதன்

*****

7. மன்னார்குடியில் பாடல் பெற்ற கோயில்கள்

1. முன்னுரை

தமிழகத்துத் திருக்கோயில்களை பண்ணாரப் பாடித் தொழுதனர் கெழுதகையாளர் பலர். இப்பிறவியின் பயனே இறைவனைப் புகழ்ந்து பாடுவது தான் என்ற இலட்சியத்துடன் சமயப் பெரியவர்கள் தமிழ்ப்பதிகங்களைப் பாடிப் பரவசமடைந்தனர். பாட்டோடு தமிழிசையையும் சேர்த்தே வளர்த்தனர்.

திருக்கோயில்களில் உறையும் இறைவனைப் பாடும்போது, இடையிடையே அத்தலத்தின் வரலாற்றையும் பதிவு செய்துள்ளனர். பாமணி, கோட்டூர், திருக்களர், திருவெண்டுதுறை முதலிய பாடல் பெற்ற கோயில்கள் மன்னார்குடி வட்டத்தில் உள்ளன.

2. பாமணி (திருப்பாதாளீச்சரம்)

இவ்வூருக்குத் **திருஞானசம்பந்தர் வந்து பதிகம் (கி.பி. 640-656)** பாடியிருப்பதால் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே இவ்வூரும், இவ்வூரிலுள்ள சிவாலயமும் இருந்து வருவதும்

தலமாகப் போற்றப்படுவதும் தெரியவருகிறது இத்தலம் மன்னார்குடி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே இரண்டு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. பாமணி, பாம்பணி சர்ப்பபுரம் எனப் போற்றப்படும் இவ்வூரிலுள்ள சிவாலயம் **பாதாளீச்சரம்** என்ற பெயரில் வழங்கி வருகிறது.[1]

பிற்காலச் சோழர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் கல்வெட்டுகளிலும் இவ்வூர் சுத்தவல்லி வள நாட்டில் பாம்புணிக் கூற்றத்திலிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளதால், இவ்வூரின் பெயரில் ஒரு கூற்றம் இருந்தமை புலனாகிறது. ஊரின் பெயர் "திருப்பாம்புணி" என்றும், சிவாலயம் "திருப்பாதாளீச்சரம்" என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. "பாம்புணி" என்று சோழர் காலத்தில் வழங்கி வந்த இவ்வூர்ப் பெயர் காலப்போக்கில் மருவி இன்று "பாமணி" என்ற பெயரில் வழங்கி வருகிறது. இதனுடைய தலவிருட்சம் மாமரம். அம்பிகை அமிர்தநாயகி.

ஆதிசேடன் தனஞ்சயராக வந்து பூசித்த ஸ்தலம், அன்னமகாராஜா அன்னமும் சொர்ண மகாராஜாவென்பவர் சொர்ண தானமும்செய்த இடம். இம்மூவருடைய பிம்பங்களும் இங்கேயுண்டு.[2]

திருப்பாதாளீச்சரம் இன்றைய தினம் நாகநாதசுவாமி திருக்கோயில் என்ற பெயரில் வழங்கி வருகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தாருள் ஒக்கூர் திரு. இலட்சுமணன்செட்டியார் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளார். விழுப்பரையர் மகள் கங்காண்டார் என்பவர் இக்கோயிலில் தாம் எழுந்தருளிய இறைவன் திருமேனியின் வழிபாட்டிற்காக நிலக்கொடை வழங்கியுள்ள செய்தி சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் காணப்படுகிறது. இங்குள்ள இரண்டு கல்வெட்டுக்களில் 'ஸ்ரீபூதி விண்ணகராழ்வார்' என்ற பெருமாள் கோயிலில் விளக்கெரிக்க 96 ஆடுகள் வழங்கப்பட்ட

செய்தியும், தினமும் ஒருவருக்கு உணவளிக்கக் கொடை வழங்கப்பட்டிருந்த செய்தியும் காணப்படுவதால் முதலாம் இராசராசசோழனின் ஆட்சிக்காலத்தில் இக்கோயில் இருந்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது. 'பூதி விண்ணகராழ்வார்' என்ற பெயரில் இப்பகுதியில் பெருமாள் கோயில் ஒன்றிருந்ததும் புலப்படுகிறது.

திருஞானசம்பந்தர் பாடல்கள்

1. மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி
மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப்
பொற்பமரும்
அன்னம் அனநடையாள் ஒருபாகத்து
அமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினான் உறைகோயில்
பாதாளே.

2. நீடலர் கொன்றையொடு நிரம்பா
மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில்நல்ல குழையான்
சுடுநீற்றான்
ஆடரவம் பெருக அனலேந்திக்
கைவீசி வேதம்
பாடலி னால்இனியான் உறைகோயில்
பாதாளே.

3. நாகமும் வான்மதியும் நலமல்கு
செஞ்சடை யான்சாமம்
போகநல் வில்வரையாற் புரமூன்று
எரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல்
தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தான் உறைகோயில்
பாதாளே.

4. அங்கமு நான்மறையும் அருள்செய்து
அழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன்
உறைகோயில்
செங்கயல் நின்று உகளும் செறுவில்
திகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றுஅலரும் வயல்சூழ்ந்த
பாதாளே.

5. பேய்பல வும்நிலவப் பெருங்காடு
அரங்காகஉன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவும்
திகழ்வித்துத்
தேய்பிறை யும்அரவும் பொலிகொன்றைச்
சடை தன்மேற் சேரப்
பாய்புன லும்உடையான் உறைகோயில்
பாதாளே.

6. கண்ணமர் நெற்றியினான் கமழ்கொன்றைச்
சடைதன்மேல் நன்று
விண்ணியல் மாமதியும் உடன்வைத்
தவன் விரும்பும்
பெண்ணமர் மேனியினான் பெருங்காடு
அரங்காக ஆடும்
பண்ணியல் பாடலினான் உறைகோயில்
பாதாளே.

7. விண்டலர் மத்தமொடு மிளிரும்இள
நாகம் வன்னி திகழ்
வண்டலர் கொன்றைநகு மதிபுல்கு
வார் சடையான்
விண்டவர் தம்புரமூன்று எரிசெய்துரை
வேத நான்கும் அவை
பண்டிசை பாலினான் உறைகோயில்
பாதாளே.

8. மல்கிய நுண்ணிடையாள் உமைநங்கை
மறுகஅன்று கையால்
தொல்லை மலைஎடுத்த அரக்கன்தலை

தோள்நெரித்தான்
கொல்லை விடை யுகந்தான் குளிர்திங்கள்
சடைக்குஅ ணிந்தோன்
பல்லிசை பாடலினான் உறைகோயில்
பாதாளே.

9. தாமரை மேல்அயனும் அரியும்தமது
ஆள்வினையால் தேடிக்
காமனை விடுவித்தான் கழல்காண்பிலர்
ஆய் அகன்றார்
பூமரு வும்குழலாள் உமைநங்கை
பொருந்தியிட்ட நல்ல
பாமரு வும்குணத்தான் உறைகோயில்
பாதாளே.

10. காலையில் உண்பவரும் சமண கையரும்
கட்டுரை விட்டுஅன்று
ஆல விடநுகர்ந்தான் அவன்றன்னடி
யே பரவி
மாலையில் வண்டினங்கள் மதுஉண்டு
இசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தான் உறைகோயில்
பாதாளே.

11. பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த
பாதாளைச் சேரப்
பொன்னியல் மாடமல்கு புகலிநகர்
மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான
சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லார் எழில்வானத்து
இருப்பாரே.

3. திருவெண்டுறை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் 112-வது தலமான திருவெண்டுறை, மன்னார்குடி வடபாதிமங்கலம் சாலையில் மன்னார்குடியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பிரம்மேசுவரர், பிரமபுரீசர்,

மதுவனேசர் என்றழைக்கப்படும் திருவெண்டுறைநாதர் திருக்கோயிலைத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் போற்றியிருப்பதால், இவ்வாலயம் கி.பி. ஏழாம் நூற்றாண்டி லிருந்தே சிறப்புடன் விளங்கி வருவதை அறியலாம். "வேலன் கண்ணி" என ஞானசம்பந்தர் இவ்வூர் இறைவியைக் குறிப்பிட்டுப் பாடியிருப்பது போலவே, இன்றளவும் இறைவியின் பெயர் வேனெடுங்கண்ணி (வடமொழியில் சத்தியாயதாட்சி, பிரகதாம்பாள்) என்றழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.[3]

திருஞானசம்பந்தர் பாடல்கள்

1. ஆதியின் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும் பரமாபரமன்
போதிய லும்முடிமேல் புனலோருஅர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும்இடம் வெண்டுறையே.

2. காலனை ஒருதையில் உயிர்வீடுசெய் வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடிய பண்டரங்கன்
மாலைமதி யொடுநீர் அரவம்புனை வார்துடையான்
வேலன் கண்ணியொரும் விரும்பும்இடம் வெண்டுறையே.

3. படைநவில் வெண்மழுவான் பலபூதப் படையுடையான்
கடைநவில் மும்மதிலும் எரியூட்டிய கண்னுதலான்
உடைநவி லும்புலித்தோல் உடையாடை யினான்கடிய
விடைநவி லும்கொடியான் விரும்பும் இடம் வெண்டுறையே.

4. பண்ணமர் வீணையினான் பரவிப்பணி தொண்டர்கள்தம்
எண்ணமர் சிந்தையினான் இமையோர்க்கும் அறிவரியான்
பெண்ணமர் கூறுடையான் பிரமன் தலையிற் பலியான்
விண்ணவர் தம்பெருமான் விரும்பும்இடம் வெண்டுறையே.

5. பாரிய லும்பலியான் படியார்க்கும் அறிவரியான்
சீரிய லும்பலையாள் ஒருபாதமும் சேரவைத்தான்

போலிய லும்புரமூன்று டன்பொன்மலை யேசிலையா
வீரிய நின்றுசெய்தான் விரும்பும்இடம் வெண்டுறையே.

6. ஊழிகளாய்உல காய் ஒருவர்க்கும் உணர்வரியான்
போழிள வெண்மதியும் புனலும் அனி புன்சடையான்
யாழின் மொழியுமையாள் வெருவவ் வெழில்வெண் மருப்பின்
வேழம் உரித்தபிரான் விரும்பும்இடம் வெண்டுறையே.

7. கன்றிய காலனையும் உருளக்கனல் வாய் அலறிப்
பொன்றமுன் நின்றபிரான் பொடியாடிய மேனியினான்
சென்றிமை யோர்பரவும் திகழ்சேவடி யான்புலன்கள்
வென்றவன் எம்இறைவன் விரும்பும்இடம் வெண்டுறையே.

8. கோல மலர்அயனும் குளிர்கொண்டல் நிறத்தவனும்
சீலம் அறிவரிதாய்த் திகழந்தோங்கிய செந்தழலான்
மூலம் தாகிநின்றான் முதர்புன்சடை வெண்பிறையான்
வேலை விடமிடற்றான் விரும்பும்இடம் வெண்டுறையே.

9. நக்குரு வாயவரும் துவராடை நயந்துடையாம்
பொக்கர்கள் தம்உரைகள் அவைபொய்யென எம் இறைவன்
திக்கு நிறைபுகழார் திருதேவர் பிரான்கனகம்
மிக்குயர் சோதியவன் விரும்பும்இடம் வெண்டுறையே.

10. திண்ணம ரும்புரிசைத் திருவெண்டுறை மேயவனைத்
தண்ணம ரும்பொழில்சூழ் தருசண்பையர்தம் தலைவன்
எண்ணமர் பல்கலையான் இசைநானசம் பந்தன் சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினையாயின பற்றறுமே.

இத்தலம் பிரமபுரி என்று வடமொழியில் வழங்கப்பெறும். இத்தலத்தில் பிருங்கி முனிவர் வண்டின் உருவமெடுத்துச் சிவபெருமானை மட்டும் பூசித்தனர். இன்றும் கர்ப்ப கிரகத்தின் அருகில் வண்டின் ரீங்கார ஒலி கேட்கிறது. வெண்டும் - வண்டும்.[4]

4. திருக்களர்

மன்னார்குடியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. காவிரித் தென்கரைத் தலம். 105ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பராசரமுனிவர், துர்வாசமுனிவர், கால பைரவர் பூசித்துப் பேறு பெற்றது. இத்தலத்தின் வேறு பெயர்கள்: பாரிஜாதவனம், தருவனம், கற்பகவனம், துர்வாசமுனிவருக்குப் பெருமான் நடனக்காட்சி தந்தது.[5]

சுவாமி : களர்முனை நாதர், பாரிஜாதவனேஸ்வரர்
அம்பிகை : இளங்கொம்பன்னாள், அமுதவல்லி, அழகேஸ்வரி
தீர்த்தம் : துர்வாசர் தீர்த்தம், பிரமதீர்த்தம், ருத்ரதீர்த்தம், ஞான தீர்த்தம்
தல மரம் : பாரிஜாதம் (பவளமல்லி)
பண் : சீகாமரம்

திருஞானசம்பந்தர் பாடல்கள்

1. நீருளார்கயல் வாவிசூழ்பொழில்
நீண்ட மாவயல்ஈண்டு மாமதில்
தேரினார் மறுகில்
விழாமல்கு திருக்களர்
ஊருளார்இடு பிச்சைபேணும்
ஒருவனேயொளிர் செஞ்சடைம்மதி
ஆர நின்றவனே
அடைந்தார்க்கு அருளாயே.

2. தோளின் மேலொளி நீறுதாங்கிய
தொண்டர்வந்தடி போற்ற மிண்டிய
தாளினார் வளரும்
தவமல்கு திருக்களருள்

வேளினோர் விசயற்கருள்புரி
வித்தகா விரும்பும்அடியாரை
ஆளுகந் தவனே
அடைந்தார்க்கு அருளாயே.

3. பாடவல்லநன் மைந்தரோடு
பனிமலர்பல கொண்டு போற்றிசெய்
சேடர் வாழ்பொழில்சூழ்
செழுமாடத் திருக்களருள்
நீடவல்ல நிமலனே யடி
நிரைகழல்சிலம்பு ஆர்க்க மாநடம்
ஆடவல் லவனே
அடைந்தார்க்கு அருளாயே.

4. அம்பினேர்தடங் கண்ணினாருடன்
ஆடவர்பயில் மாடமாளிகை
செம்பொ னார்பொழில்
சூழ்ந்தழகாய திருக்களருள்
என்புபூண்டதோர் மேனியெம்இறைவா
இணையடி போற்றி நின்றவர்க்கு
அன்பு செய்தவனே
அடைந்தார்க்கு அருளாயே.

5. கொங்குலாமலர்ச் சோலை வண்டினம்
கெண்டிமாமது உண்டுஇசைசெயத்
தெங்கு பைங்கமுகம்
புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கை தன்னொடும் கூடியமண
வாளனேபிணை கொண்டொர் கைத்தலத்து
அங்கை யிற்படையாய்
அடைந்தார்க்கு அருளாயே.

6. கோலமாமயில் ஆலக்கொண்டல்கள்
சேர்பொழிற்குல வும்வயலிடைச்
சேலிளங் கயலார்
புனல்சூழ்ந்த திருக்களருள்

நீலமேவிய கண்டனேநிமிர்
புன்சடைப்பெரு மான்எனப்பொலி
ஆல நீழலுளாய்
அடைந்தார்க்கு அருளாயே.

7. தம்பலம்மறி யாதவர்மதில்
தாங்குமால்வரை யால்அழல்எழத்
திண்பலங் கெடுத்தாய்
திகழ்கின்ற திருக்களருள்
வம்பலர்மலர் தூவிநின்னடி
வானவர் தொழக் கூத்தகந்தபோர்
அம்பலத் துறைவாய்
அடைந்தார்க்கு அருளாயே.

8. குன்றடுத்தநன் மாளிகைக்கொடி
மாடநீடுயர் கோபுரங்கண்மேல்
சென்ற டுத்துயர்வான்
மதிதோயும் திருக்களருள்
நின்றடுத்துயர் மால்வரைத்திரள்
தோளினால்எடுத் தான்றன் நீள்முடி
அன்றடர்த் துகந்தாய்
அடைந்தார்க்கு அருளாயே.

9. பண்ணியாழ்பயில் கின்றமங்கையர்
பாடலாடலொடு ஆரவாழ்பதி
தெண்ணி லாமதியம்
பொழில்சேரும் திருக்களருள்
உண்ணிலாவிய ஒருவனேஇரு
வர்க்குநின்கழல் காட்சி ஆரழல்
அண்ண லாயஎம்மான்
அடைந்தார்க்கு அருளாயே.

10. பாக்கியம்பல செய்த பக்தர்கள்
பாட்டொடும்பல பணிகள் பேணிய
தீக்கியல் குணத்தார்
சிறந்தாருந் திருக்களருள்

வாக்கினான்மறை யோதினாய்அமண்
தேரர்சொல்லிய சொற்களானபொய்
ஆக்கி நின்றவனே
அடைந்தார்க்கு அருளாயே.

11. இந்துவந்தெழு மாடவீதி
எழில்கொள்காழிந் நகர்க்கவுணியன்
செந்து நேர்மொழியார்
அவர்சேரும் திருக்களருள்
அந்தியன்னதொர் மேனியானை
அமரர்தம்பெரு மானைஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும்
பாடத் தவமாமே.[6]

5. கோட்டூர் (கொழுந்தீஸ்வரர் ஆலயம்)

திருத்துறைப்பூண்டிக்கும், மன்னார்குடிக்கும் நடுவில் அமைந்துள்ள இவ்வூருக்குத் திருஞானசம்பந்தர் வந்து பதிகம் பாடியிருக்கிறார். எனவே கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே இவ்வூர் சிறப்புமிக்க ஊராகத் திகழ்ந்திருப்பது தெளிவாகிறது. திருஞானசம்பந்தரின் பதிகத்தில் இவ்வூர் இறைவன் 'கோட்டூர் நற்கொழுந்தே' என்றழைக்கப்படுகிறார். இன்றும் இவ்வூர் இறைவனுக்குக் கொழுந்தீசர் என்றும் கொழுந்துநாதர் என்றும் பெயர் வழங்குகிறது.

எனவே கோட்டூர் என்ற இவ்வூர்ப் பெயரும் கொழுந்து என்ற இவ்வூர் இறைவனின் பெயரும் ஏறத்தாழ 1300 ஆண்டுகாலப் பழமைமிக்கவை. இவ்வூர் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் எழிலோடும், வளத்தோடும், மாடமாளிகைகள் நிறைந்த ஊராகவும் இருந்துள்ளதைத் தேவாரத் தொடர்கள் தெளிவுபடுத்துகின்றன.

பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் நென்மலி நாடு (இன்று இப்பகுதியில் நெம்மேலி என்றழைக்கப்படும் ஊரை மையமாகக் கொண்டமைக்கப்பட்டிருந்தது) என்ற நாட்டுப்

பிரிவிற்குட்பட்ட ஊராக இருந்திருக்கிறது. முதலாம் இராசராசசோழன் தஞ்சைப் பெருங்கோயில் திருவிளக்குகளுக்கு நெய்யூற்றி வருவதற்காகப் பற்பல ஊர்களைச் சேர்ந்த இடையர்களிடம் கால்நடைகளை ஒப்படைத்து அவற்றின் மூலம் நாள்தோறும் தஞ்சைப்பெருங்கோயிலுக்கு நெய்யூற்றி வரச் செய்தான்.

அங்ஙனம் அவன் கால்நடைகளை வழங்கியபோது, முடிச்சோழ நாட்டு சிற்றினவாழ் (தற்போது மன்னார்குடி வட்டத்தில் உள்ள சித்தன்வாஞ்சூர்) ஊரைச்சேர்ந்த இடையன் புஞ்சைசாத்தனிடம் 48 பசுக்களை ஒப்படைத்தான். இவனது தலைமைப் பொறுப்பில் இவன் மகன் சாத்தன் ராமன். சாத்தன்ஏறன், கோட்டூர் இடையன், அரங்கன் மனத்தான், ஆவூர்க்கூற்றத்துப் பட்டம் என்ற ஊரைச் சேர்ந்த இடையன் விளவன், கலியன் ஆகியோர் தஞ்சைப் பெருங்கோயில் விளக்குக்காக நாள் ஒன்றுக்கு உழக்கு நெய் அளந்து வந்திருக்கிறார்கள்.

இவ்வூரிலுள்ள கல்வெட்டுகளில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டில் பூதிவிண்ணகர் ஆழ்வார் என்ற கோட்டூர் பெருமாள் கோயில் குறிப்பிடப்படுகிறது.[7]

சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்கள் கல்வெட்டுக்கள் இக் கோயிலில் உள்ளன. இவ்வூர் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டே சேக்கிழார் காலம் உறுதி செய்யப்பட்டது.[8]

அமுதம், முள்ளியாறு, சிவகங்கை, பிரமதீர்த்தம், இந்திர தீர்த்தம், சிவ தீர்த்தம், விசுவகர்ம தீர்த்தம், அரம்பை தீர்த்தம், மண்டைத் தீர்த்தம் என ஒன்பது தீர்த்தங்கள் இங்கு உள்ளன. இதனுடைய தலமரம் - வன்னி.[9]

திருஞானசம்பந்தர் தேவாரம்

1. நீல மார்தரு கண்டனே நெற்றியோர்
கண்ணனே ஒற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம்
பொழில்கள்சூழ்ந்து அழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற்
கொழுந்தே யென்று எழுவார்கள்
சால நீள்தலம் அதனிடைப் புகழ்மிகத்
தாங்குவர் பாங்காவே.

2. பங்கயம்மலர்ச் சீறடிப்பஞ்சுறு
மெல்விரல் அரவல்குல்
மங்கை மார்பலர் மயில்குயில் கிளியென
மிழற்றிய மொழியார்மென்
கொங்கை யார்குழாம் குணலைசெய் கோட்டூர்நற்
கொழுந் தேயென்று எழுவார்கள்
சங்கை ஒன்றில ராகிச்சங் கரன்திரு
வருள்பெறல் எளிதாமே.

3. நம்பனார்நல மலர்கொடு தொழுதெழும்
அடியவர் தமக்கெல்லாம்
செம்பொ னார்தரும் எழில்திகழ் முலையவர்
செல்வமல் கியநல்ல
கொம்ப னார்தொழுது ஆடிய கோட்டூர்நற்
கொழுந்தேயென்று எழுவார்கள்
அம்பொ னார்தரும் உலகினில் அமரரோடு
அமர்ந்தினிது இருப்பாரே.

4. பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா
மாங்கனி பயில்வாய

கலவ மஞ்சைகள் நிலவுசொற் கிள்ளைகள்
அன்னம் சேர்ந்து அழகாய
குலவு நீள்வயற் கயல்உகள் கோட்டூர்நற்
கொழுந்தேயென்று எழுவார்கள்
நிலவு செல்வத்த ராகிநிள் நிலத்திடை
நீடிய புகழாரே.

5. உருகு வாருள்ளத்து ஒண்சுடர் தனக்கென்றும்
அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமுது எனநின்று பரிவொடு
பத்திசெய்து எத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தேயென்று எழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும்போய்
அவன்அருள் பெறலாமே.

6. துன்றுலூர்சடைத் தூமதி மத்தமும்
துன்னெருக் கார் வன்னி
பொன்றி னார்தலைக் கலனொடு பரிகலம்
புலியுரி உடையாடை
கொன்றை பொன்னென மலர்தரு கோட்டூர்நற்
கொழுந்தே யென்று எழுவாரை
என்றும் ஏத்துவார்க்கு இடரிலை கேடிலை
ஏதம்வந்து அடையாவே.

7. மாட மாளிகை கோபுரம் கூடங்கள்
மணியரங்கு அணிசாலை
பாடு சூழ்மதில் பைம்பொன்செய் மண்டபம்
பரிசொரு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
பொழுந்தேயென்று எழுவார்கள்

கேடது ஒன்றில் ராகிநல் லுலகினில்
கெழுவுவர் புகழாலே.

8. ஒளிகொன் வாளெயிற்று அரக்கன்அவ் வுயர்வரை
யெடுத்தலும் உமையஞ்சிச்
சுளிய ஊன்றலும் சோர்ந்திட வாளொடு
நாள்அவற்கு அருள்செய்த
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர்கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெருந்
தவமுடை மவர்தாமே.

9. பாடி யாடு மெய்ப் பத்தர்கட்கு அருள்செயு
முத்தினைப் பவளத் தைத்
தேடிமாலயன் காணவொண் ணாதவத்
திருவினைத் தெரிவைமார்
கூடி யாடவர் கைதொழு கோட்டூர்நற்
கொழுந் தேயென்று எழுவார்கள்
நீடு செல்வத்தர் ஆகிஇவ் வுலகினில்
நிகழ்தரு புக ழாரே

10. கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர்நற்
கொழுந்தினைச் செழுந்திரளைப்
பூனல் செய்தடி போற்றுமின் பொய்யிலா
மெய்ய(ன்)நல் லருள்என்றும்
காணல் ஒன்றிலாக் காரமண் தேரர்குண்
டாக்கர் சொற் கருதாதே
பேணல் செய்துஅர னைத்தொழும் அடியவர்
பெருமையைப் பெறுவாரே.

11. பந்து லாவிரற் பவளவாய்த் தேன்மொழிப்
பாவையோடு உருவாரும்

கொந்து லாமலர் விரிபொழில் கோட்டூர்நற்
கொழுந்தினைச் செழும்பவளம்
வந்து லாவிய காழியுள் ஞானசம்
பந்தன்வாய்ந்து ஊரைசெய்த
சந்து லாந்தமிழ் மாலைகள் வல்லவர்
தாங்குவர் புகழாலே.

6. தொகுப்புரை

மன்னார்குடிக்கு வந்து திருகுலத்தில் நீராடி செங்கமலத்தாயார் சமேதரான ஸ்ரீவித்யா ராஜகோபாலனை தரிசித்தால், கோடி பசுக்களைத் தானம் செய்த பலனும், கோடி திருமணம் செய்து வைத்த பலனும் கிடைக்கும் என்கிறது தலவரலாறு. பாடல்கள் பல பெற்ற திருத்தலங்கள் நிறைந்த மன்னார்குடி பழமையான ஊராகும். திருஞானசம்பந்தர் முதல் பல முனிவர்களாலும், சித்தர்களாலும் பாடப் பெற்ற கோயில்களின் அரிய செய்திகளின் வழியே மன்னார்குடியின் புகழை அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு 2000 - பக். 76
2. திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை 2003 பாகம் II - வர்த்தமானன் வெளியீடு பக். 780
3. தி.மா. தொ.வ. 2000 - பக் 75
4. திருத்தலங்கள் வரலாறு பாகம் I - 2000 - உ.வே.சா. நூல் நிலையம் - பக். 447
5. திருஞானசம்பந்தர் தேவாரம் மூன்றாம் திருமுறை வர்த்தமானன் வெளியீடு 2003 - பக். 492
6. திருஞானசம்பந்தர் தேவாரம் இரண்டாம் திருமுறை வர்த்தமானன் வெளியீடு 2003 - பக். 386
7. திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு2000 - பக். 72
8. தஞ்சாவூர் மாவட்டம் - சோமலே - பக் 197
9. திருஞானசம்பந்தர் தேவாரம் இரண்டாம் திருமுறை - வர்த்தமானன் வெளியீடு பக். 831

*****

8. மன்னார்குடியும் திருவிழாக்களும்

1. முன்னுரை

இறைவனின் புகழை உலகோர் உணர்ந்து கொள்ளவும், அவனுடைய அழகுமிக்க வீதிவலத்தைக் கண்டு உள்ளத்தை பண்படுத்திக் கொள்ளவும், ஊர் மக்கள் வேற்றுமை மறந்து ஒன்று சேருவதற்குமாக சான்றோர்களால் கோயில்களில் திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன.

திருவிழா நிகழ்ச்சிகள் மூலம் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும். திருவிழாக்கள், அருகில் உள்ள ஊர் மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பெரிதும் உதவுகின்றன. வீட்டில் வணங்கப்படும் திருமால் வடிவத்தை தன்நலனுக்காக (ஸ்வார்த்தம்) என்றும், திருக்கோயில்களில் வணங்கப்படும் வடிவத்தை நாட்டின் நலனுக்காக என்றும் கருதுகின்றனர். இவ்வகையில் கோயிலில் நடைபெறும் விழாக்கள் நாட்டின் நலன் கருதியே நடத்தப்படுகின்றன எனலாம். ஆகவே, மன்னார்குடி கோயிலில் நடைபெறும் திருவிழாக்களை வகைப்படுத்திக் காண வேண்டியது அவசியமானதாகும். சித்திரையில் தொடங்கி பங்குனி வரையில் உள்ள விழாக்களைப் பார்ப்போம்.

2. சித்திரை

கோடைத்திருவிழா என்னும் இத்திருவிழா 10 தினங்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பக்தியின் அடிப்படையிலும், கோடையின் வெப்பத்தைப் போக்கி குளிர்ச்சிபெற வேண்டியும், வாட்டும் வறுமை ஒழிந்து நல்வாழ்க்கை பெறும் நோக்கத்திலும் இந்த நகரமக்கள் இக்கோயிலுள்ள இறைவனுக்கு விழா எடுக்கின்றனர். அட்சயதிருதியை என்னும் புண்ணிய நாளில் அகிலம் புகழும் அகோபிலமடத்தினரால் புகழ்மிக்க கருடவாகனத்தில் சுவர்ண வைரமுடிசேவையுடன் வீதி உலாக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இதுமட்டுமன்றி இம்மாதத்தில் ஸ்ரீராமநவமி, சித்ரா பௌர்ணமி போன்ற விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

3. வைகாசி

வசந்தவிழா என்னும் பெயரால் 10 தினங்கள் ஆலயத்திற்குள் வெகு விமர்சையாக சுவாமி புறப்பாடும், இதர வைபவங்களும் முறையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நிறைவு நாளன்று அதிகாலை 5.00 மணியளவில் 'உதயகருடன்' ஆன்மீகர்களால் போற்றப்படும் முறையில் சுவாமி வீதிஉலா கீழராஜவீதியில் கைலாசநாதர் கோயில் வாயிலில் எழுந்தருளி சூரியனுக்கு உதயநேரத்தில் அருள்பாலிப்பது போல் அமைந்த ஒரு முக்கியமான விழாவாக நடைபெற்று வருகிறது. இம்மாதத்தில் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி, உதய கருட சேவை, நம்மாழ்வார் திருநட்சத்திரம் போன்ற விழாக்களும் நடைபெறுகின்றன.

4. ஆனி

புகழ்மிக்க ஹரித்திராநதி என்று போற்றப்படும் தடாகத்தில் தெப்பத் திருவிழா வெகு விமரிசையாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவிற்கு முன்னர் கொடியேற்றத்துடன் முக்கியமான வாகனங்களில் இறைவன் எழுந்தருளி இத்தடாகத்தைச் சுற்றியுள்ள பக்தர்கள் அனைவருக்கும் தரிசனம் தருகிறார். இத்திருக்குளத்தில் ஆனிமாதம் நடைபெறும் தெப்பத்திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. 10 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 9ம் நாள் பௌர்ணமி நிலவு ஒளியில் ஹரித்திராநதி திருக்குளத்தில் ஸ்ரீராஜகோபாலன் ருக்மணி சத்யபாமாவுடன் தெப்பத்தில் பவனி வரும் தெப்பத்திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

மன்னார்குடி தீர்த்தங்களில் நீராடினால் காசிக்குச் சென்ற புண்ணியம் கிடைக்கும்.

மன்னை நகருக்கு புண்ணிய தீர்த்தங்கள் உடைய நகர் என்றும் காசியை விட அதிக புண்ணியம் உடைய நகர் என்றும் கூறப்படுவதுடன், இங்குள்ள தீர்த்தங்கள் "மஞ்சள் நதி" என்று தமிழிலும், வடமொழியில் "ஹரித்திராநதி" என்றும் அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலின் திருக்குளத்தில் ஸ்ரீகோபாலன் கோபிகைகளுடன் ஜலக்கிரீடை கண்டதாலும் அவனது திருமேனி சம்பந்தப்பட்டதாலும் இத்திருக்குளம் கூடிய சிறப்புடையதாகும். இந்த தீர்த்தத்திலும் ஐப்பசி மாதம் பாமணி ஆற்றிலும், கார்த்திகை மாதம் அக்னி தீர்த்தமான கோபிரளய தீர்த்தத்திலும், மார்கழி மாதம் கிருஷ்ண தீர்த்தத்திலும், தை மாதம் திருப்பாற்கடல் தீர்த்தத்திலும் புனித நீராடினால் பல புண்ணியங்களை அடையலாம்.

திருமணமாகாதவருக்கு திருமணமும், மக்கட்பேறு இல்லாதவருக்கு மக்கட்பேறும் பெற்று மேலும் தோஷம், வியாதிகள் நீங்கி வாழலாம் என நாரத முனிவருக்கு பிரம்மா கூறியதாக **பிரமாண்ட புராணம், நாரத புராணங்களில்** அறிய முடிகின்றது.

5. ஆடி

அருள்மிகு செங்கமலத்தாயாருக்கு நடைபெறும் மிக முக்கியமான திருவிழா இம்மாதத்தில் கொண்டாடப்படுகிறது. 'திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே' என்று போற்றப்படும் ஆண்டாளே செங்கமலத் தாயாராக அருள்பாலிக்கிறாள் என்பது ஐதீகம். அதன்படி பூர நட்சத்திரத்தில் விமரிசையாக திருவிழாக்கொண்டு திருத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறாள்.

திருத்தேரினை பொதுமக்கள் இழுப்பதைத்தான் பல்வேறு ஊர்களில் நாம் பார்ப்போம். ஆனால் மன்னார்குடியில் ஆடிப்பூரத் தாயார் திருத்தேர் விழாவின் போது சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக மன்னை தேசிய மேல்நிலைப்பள்ளி மாணவர்களே தேரினை இழுத்து நிலைக்கு கொண்டு வந்து சேர்ப்பர். ஆடி 18 ஆம் நாளிலோ 28 ஆம் நாளிலோ அருள்மிகு இராசகோபாலன் ஆடிப்பெருக்கு விழாவாக பாமணி ஆற்றிற்குச் சென்று தீர்த்தவாரி கண்டருளி தரிசனம் தருகிறார். பின்னர் அருள்மிகு லட்சுமிநாராயணப் பெருமாள் சன்னதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

6. ஆவணி

'திருப்பவித்ரோத்சவம்' என்னும் புகழ்மிக்க திருவிழா இம்மாதத்தில் 10 தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் முக்கியத்துவம் என்னவெனில் அன்றாட பூஜைகளில் குறைகளிருப்பின் அவைகளைக் களைவதற்காக 10

தினங்களில் 365 விசேஷபூஜைகள் நடத்தப்பெற்று வருவது சிறப்பு அம்சமாகும். கண்ணன் பிறப்புத் (ஜெயந்தி) திருவிழாவும், உரியடித் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.

7. புரட்டாசி

நவராத்திரித் திருவிழா ஆண்டுதோறும் இம்மாதத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. கலைமகள், மலைமகள், நிலமகள் ஆகியோருக்கு விசேஷபூஜைகள் நடைபெற்று இறைவன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அருள்மிகு கோபிநாதன் ஆலயத்திற்கு சென்று பக்தர்களுக்கு அருள்வழங்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

8. ஐப்பசி

தீபாவளித் திருநாள் அன்று தொடங்கி 10 தினங்கள் கோலாட்டத் திருவிழா சிறப்புற நடைபெற்று வருகிறது. இவ்விழாக் காலங்களில் கண்ணனின் லீலைக் காட்சிகள் இடம்பெறுவது சிறப்பு அம்சமாகும்.

9. கார்த்திகை

திருக்கார்த்திகை தீபத் திருவிழா வைணவத் தலங்களில் கொண்டாடப்படும் முறைமைக்கேற்ப சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

10. மார்கழி

மாதங்களில் சிறந்த மார்கழியாகத் திகழும் இத்திங்களில் கண்ணபிரானுக்கு தனுர்மாத அதிகாலை பூஜைகளும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடல்களைக் கேட்டருள ஏதுவாக, திருமொழி திருநாள் 10 தினங்களாகவும், திருவாய்மொழித் திருநாள் 10 தினங்களாகவும் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

11. தை

அருள்மிகு தாயாருக்கு சிறப்பான முறையில் ஊஞ்சல் திருநாள் 10 தினங்கள் நடைபெற்று வருகிறது. தை மாதம் முதல் நாள் தொட்டு நான்கு நாட்கள் முறையே சங்கராந்தி, சணப்பரிவேட்டை, மட்டையடித் திருவிழா, ஏகசிம்மாசன சேவையும் மிகச் சிறப்பு வாய்ந்தது.

12. மாசி

மாசி மகத்தன்று பூர்த்தியடையும் வகையில் கோபாலனுக்கு ஊஞ்சல் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. 7 ஆம் நாள் திருவிழாவில் தாயார் கோபாலன் சன்னதிக்கு எழுந்தருளி சேவை சாதிப்பதுடன் இரவு ஊஞ்சலில் பெருமாளுடன் சேர்ந்து சேவை சாதித்தல்.

13. பங்குனித் திருவிழா

மன்னார்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம மக்களை உற்சாகப்படுத்துகின்ற மாதிரி பங்குனித் திருவிழா மற்றும் பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பல மண்டகப்படிகள் இருக்கும்.

ஸ்ரீராஜகோபாலனுக்கு ஆண்டுதோறும் ஆண்டு முழுவதும் உற்சவங்களே. அதனாலேயே **நித்ய உற்சவப் பெருமாள்** என்றழைக்கப்படுகிறார். அதில் பங்குனி ப்ரம்மோற்சவம், ஆனிதெப்போற்சவம், வைகுண்ட ஏகாதசி ஆகியன மிக முக்கியமானவையாகும்.

பங்குனி ப்ரம்மோற்சவம் என்பது பிரம்மாவே முன்னின்று நடத்திய திருவிழாவாகும். இன்றளவும் பிரம்மாவே திருவிழாவை நடத்துவதாக ஐதீகம்.

பங்குனித் திங்களில் சிறிய திருவிழாக்கள் எட்டு நாட்களும் பெரிய திருவிழாக்கள் பத்து நாட்களும் நடைபெறுகின்றன. பங்குனித் திங்கள் திருவிழா கண்ணனுடைய இளமைப் பருவத்தை நினைவூட்டும் வகையிலே கொண்டாடப்படுகிறது என்று ஹெமிங்வே (Hemingway) என்பவர் குறிப்பிடுகின்றார்.[1]

வேறெங்கும் இல்லாத வகையில் பங்குனித் திருவிழா (30 நாட்கள்) நடைபெறுவது தனிச் சிறப்பாகும். 18 நாட்கள் திருவிழாவும் தொடர்ந்து 12 நாட்கள் விடாயாற்றி விழாவும் மன்னார்குடியில் எங்கு காணினும் விழாக்கோலம்தான்.

புன்னை வாகனம், ஹம்ச வாகனம், கோவர்த்தன கிரி, பஞ்சமுக அனுமார், கண்ட பேரண்ட பட்சி, பல்லாக்கு, ரிஷிமுக பர்வதம், சிம்ம வாகனம், சூரியப் பிரபை, சேஷ வாகனம், ஹனு வாகனம் என்று பல வாகனங்களில் நாள்தோறும் பெருமாள் பவனி வருவார்.

14. கண்ட பேரண்டபட்சி

விலங்குகளில் யானையை விட சிங்கம் வலிமையுடையது. சிங்கத்தைவிட யாளி (சரபம்) வலிமை மிக்கது. இவை எல்லாவற்றையும் விட கண்ட பேரண்டபட்சி (இருதலைப்பறவை) வலிமையுடையது.

அத்தகைய கண்டபேரண்ட பட்சியையே தன் வாகனமாக ஸ்ரீராஜகோபாலன் கொண்டிருப்பதால், அனைவரையும் காக்கும் மஹாசக்தி படைத்தவனாகிறான்.

ஐந்து தலைகளையுடைய ஸ்ரீஹனுமார் வாகனம் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். ஐந்து முகங்களும் ஐந்து வெவ்வேறு வண்ணங்களில் இருக்கும்.

மேலும் தங்க கருட சேவை, தங்கக் குதிரை வாகனம், தங்க சூர்யப்பிரபை, வெள்ளிசேஷ வாகனம், வெள்ளி ஹனுமந்த வாகனம், கோரதம், திருத்தேர் முதலியன சிறப்பு வாய்ந்த திருவிழா நாட்களாகும்.

திருமலையைப்போல மன்னார்குடி பெருமாளுக்கு ஒவ்வொரு நாளும் கண்ணைக் கவரும் அலங்காரம் பார்க்க அழகாக இருக்கும். வேணுகோபாலன் அலங்காரம், இராஜ அலங்காரம், கிருஷ்ண திருக்கோலம், மரவுரி ராமர் திருக்கோலம், மாட்டையடி அலங்காரம், பட்டாபிராமன் திருக்கோலம், வைரமுடி சேவை, தங்க கருட சேவை, காளிங்க நர்த்தன சேவை, ஆண்டாள் திருக்கோலம், கோதண்டராமர் சேவை, திருக்கல்யாணம், செட்டியார் திருக்கோலம் என்ற இத்தகைய **அலங்காரங்கள் வேறு எந்த ஊரிலும் பார்க்க முடியாது.**

நாள்தோறும் இரவு ஏழுமணிக்கு சாமி புறப்பாடு நடைபெறும். முன்னே தீப்பந்தமும், யானையும், ராஜாராணி பொம்மைகளும், செல்ல, பல்லக்கில் விதவிதமான அலங்காரங்களில் பெருமாள் வருவார். பந்தலடியில் ஒருமணி நேரம் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் சமயத்தில் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறும்.

புகழ்பெற்ற வித்வான்கள், தவில், நாதஸ்வரம், கிளாரனட், புல்லாங்குழல், வீணை, வாய்ப்பாட்டு என்ற பல்வேறு கச்சேரிகள் நடைபெறும். கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமையும்.

தினந்தோறும் வாணவேடிக்கைகள் இருக்கும். குறிப்பாக சூர்யப்பிரபை, கருடசேவை, வெட்டுங்குதிரை விழாக்களில் விதவிதமான வாணவேடிக்கைகள் நடைபெறும். ஒரு மணி நேரம் நடக்கும் வாண வேடிக்கை கண்ணைப் பறிக்கும் வண்ணம் இருக்கும்.

பெரிய கோயில் வாசலில் இரண்டு புறமும் திடீர்க் கடைகள் அமைக்கப்பட்டு. விளையாட்டுப் பொம்மைகள், பந்து, தண்ணீர் பந்து, வேடிக்கைச் சாமான்கள், மணிகள், வளையல்கள், குங்குமம், பலகாரங்கள் என வியாபாரம் களைகட்டும். பக்கத்திலேயே பொரிகடலை, சர்பத் வண்டி, மிளகாய் பொடி கலந்த மசாலா பொரி, சுண்டல், வறுத்த கடலை, கரும்புச்சாறு, பஜ்ஜிகள் கடைகளில் கூட்டம் அலைமோதும். அங்கங்கே அலைந்து கொண்டிருக்கும் மக்கள். இளைஞர்களின் விளையாட்டு, இளம் ஜோடிகளின் காதல் - வியப்பூட்டு விஷயங்கள் நிறைய இருக்கும்.[2]

15. ராட்டினம்

விதவிதமான ராட்டினங்கள் இருக்கும். குடை ராட்டினம், ராட்சச ராட்டினம் என்று குதிரை, புலி, சிங்க பொம்மைகள் மீது ஏறிச் சுற்றி மக்கள் மகிழ்வார்கள்.

பெரிய பூமி போன்ற கூண்டுக்குள் மோட்டார் சைக்கிள் சுற்றும் இடத்தில் 'ரிங்ரிங்' என்று சத்தம் ஒலிக்கும். மனிதத்தலை, பாம்பு உடல் அதிசயக் காட்சி, குட்டி சர்க்கஸ் ஆங்காங்கே கட்டணம் செலுத்திப் பார்க்க மக்கள் கூட்டம் அலைமோதும்.

16. வெண்ணெய்த்தாழி

கோகுலத்தில் ஆயர்கள் வீட்டில் உள்ள வெண்ணெயை எல்லாம் திருடிச் சாப்பிடுவது கண்ணனது வழக்கம். வெண்ணெய் மீது கண்ணனுக்கு விருப்பம் அதிகம். எனவே, கண்ணனுக்கு இத்திருக்கோயிலில் வெண்ணெய்த்தாழி திருவிழா கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவை நவநீத சேவை என்றும் அழைப்பார்கள்.

வெண்ணெய்த்தாழியன்று காலையில் கண்ணன் தவழ்ந்த நிலையில் வெள்ளிக்குடமேந்தி, பல்லக்கில் வரும்போது, பக்தர்கள் வெண்ணெயால் குடத்தை நிரப்பி, கண்ணன் திருமேனி முழுவதும் வெண்ணெயால் அர்ச்சித்து மகிழ்வார்கள்.

ஸ்ரீராஜகோபாலன் திருமேனி முழுவதும் வெண்ணெயால் நிரம்பி வழிந்து ததும்பும்.

காலை 7.30 மணிக்கு நவநீத சேவை. ராஜகோபாலசாமி தவழும் குழந்தையாக கண்ணன் அலங்காரத்தில் பல்லக்கில் கோவிலில் இருந்து புறப்படுவார். கோவில் முன்பு கருடஸ்தம்பம் வந்து கோவிலைச் சுற்றியுள்ள கோபாலசமுத்திரம், கிழக்கு வீதி, தெற்குவீதி, மேற்குவீதி, வடக்கு வீதி வழியாக மீண்டும் கிழக்கு வீதி வந்தடைவார்.

தொடர்ந்து மேலராஜவீதி, காமராஜர் வீதி, பெரிய கடைத்தெரு, பந்தலடி, காந்தி ரோடு வழியாக பக்தர்களுக்கு தரிசனம் தந்து காந்தி ரோட்டில் உள்ள வெண்ணெய்த்தாழி மண்டபத்தைச் சென்று அடைவார். வீதிகள் தோறும் பக்தர்களும், பெண்களும் கோபாலனுக்கு பிடித்தமான வெண்ணெயை கோபாலன் மீது தெளிப்பார்கள். காலைத் திருவிழாவை யாதவர் சமூகத்தினர் செய்வார்கள். இந்த விழாவின் போது பள்ளி, கல்லூரிகளுக்கு விடுப்பு அளிக்கப்படுகின்றது.

"வெண்ணெய் விழியை கையில் அணைத்து
வீதியில் வாரார் கண்ணன்
மண்ணை உண்ட மாயவனும்
எண்ணெய்க் குடத்தை உருட்டிவிட்டே
பெண்களின் நடுவில் நின்று
கண்களை உருட்டி விழித்துக் கொண்டு
வண்ணமாக வார்த்தைச் சொல்லி
திண்ணமாக திருடி வந்த

பரந்தாமன் பல்லக்கில் செல்ல
பஜனைக் கோஷ்டிகள் பின் தொடர

என்று இராஜகோபாலசாமி கீர்த்தனங்களை தீட்சதர்கள் பாடி வருவார்கள். [3]

மதியம் 3 மணிக்கு வெண்ணெய்த்தாழி மண்டபத்தில் செட்டி அலங்காரத்தில் ராஜகோபாலசுவாமி பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார். ஊரே ஜனத்திரளாக காட்சியளிக்கும்.

17. தேர்த்திருவிழா

கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பது வசனம். தேர், கோபுர வடிவத்தில் அமைந்த மேற்பகுதியைக் கொண்டது. நமக்கு புண்ணியம் தேடித்தர அது வீதியில் வருகிறது.

பூதாகரமாக மரத்தில் டன் கணக்காக செதுக்கி வைக்கப்பட்ட தேரைச் சற்று அருகில் சென்று அக்கறையோடு கவனித்தால் அங்கே நாம் அருமையான தச்சு வேலையில் தசாவதாரம், ராமாயணம், சிவலீலைகள், கீதாபதேசம், கந்தலீலைகள் இப்படி நம் அரிய இதிகாசப் புராணக் காட்சிகளைப் பார்க்கலாம்.

கோவிலுக்குள்ளே கற்சிற்பங்கள் என்றால் வெளியே தேரில் மரவேலைப்பாடுகள். கலை நுணுக்கம் மிகுந்த கவினுறு காட்சிகள். ஊரே தேர் செல்வதற்கான வீதியமைப்புக் கொண்டிருக்கும்.

அந்த ராஜவீதிகளைத் தேரோடும் வீதி என்று சொல்வார்கள். வீதிவலமாக வரும்போது ஒவ்வொரு வீதியின் முடிவிலும் நேரே சிறிது தூரம் குறுகிய சந்து செல்லும். அதை வடம் போக்கி சந்து என்பர்.

கீழவீதியில் செல்லும் தேரை, தெருக்கோடியில் உள்ள வடம் போக்கி சந்து தொடங்கும் வரையில் இழுத்துச் சென்று வடத்தை வெளியே எடுத்து வந்து தெற்கு வீதியில் இழுக்கத் தொடங்குவார்கள்.

இப்படியே தேர் செல்லும் பாதையில் ஆங்காங்கு வீட்டு வாசலில் அர்ச்சனைக்கு அளிக்கும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, சூடத்தை தேர் மேலேயிருந்து கயிற்றில் தொங்கும் குடலையில் வாங்கி, மேலே இழுத்து அதே போல திருப்பி வழங்குவார்கள்.

தேர் ஆடியாடி வருவதே தனி அழகு. மேலே எங்கிருந்தோ நாதஸ்வரக் கலைஞர் இன்னிசை வழங்குவார். அசைந்தாடிகள், அலங்காரங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்பவையாக இருக்கும்.

வீதியெல்லாம் ஜே ஜே என்று ஆரவாரம் செய்வார்கள். ஊர்க்காரர்கள் எல்லோரும் சேர்ந்து வடம் பிடித்து இழுப்பார்கள். ஊர் கூடி தேர் இழுத்தல் என்பது பழமொழி. சாதி, குலம், உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகளை மறந்து அனைவரும் அடுத்து அடுத்து நின்று ஆம், ஒருவர் மீதொருவர் இடித்துக் கொண்டு, துணை நின்று ஒருசேர வடம் பிடித்து வியர்க்க, விறுவிறுக்க சப்தம் போட்டுக் கொண்டு உற்சாகமாக இழுப்பதுதான் தேர்த்திருவிழாவின் தனித்துவம்.

தேரில் சாமியை ஏற்றி எல்லோருமாகச் சேர்ந்து உடலுழைப்பினால் சமூகத்தோடு ஒத்துழைத்து, தெருவெல்லாம் இழுத்து, தேர்முட்டிக்கு அல்லது நிலைக்கு கொண்டு சேர்க்கப் பொறுப்பேற்று, அதற்கேற்ப பணியாற்றுவது பக்தியும் பணிவும் நிறைந்த தொண்டாகும்.

உடல் வலிமையும் உள்ளத்தில் உரமும் பெற்றவர்கள், முதியவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் தேர்த்திருவிழாவை நடத்தி வைப்பதில் பெருமை கொள்கிறார்கள்.

கி.பி. 1776ல் தஞ்சை பெருவுடையார் தேர்த் திருவிழாவிற்கு 27,394 நபர்கள் அமர்த்தப்பட்டனர். இதில் மன்னார்குடி வட்டத்தில் மட்டும் 4,200 பேர்கள் பணிபுரிந்துள்ளனர்.[4]

18. கிருஷ்ண தீர்த்தம்

கோவிலிலுள்ள கோபுரங்கள் மீது விழும் மழைநீர், பரந்த முற்றவெளியில் பெய்யும் மழைநீர் அனைத்தும் இக்குளத்தில் சேகரமாகும் வண்ணம் திருக்குளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. **சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் நம் முன்னோர்கள் இதனை உருவாக்கியிருப்பதைக் காணும்போது, வியப்பும், பெருமையும் மேலிடுகிறது.**

19. தெப்பத் திருவிழா

பங்குனி மாத பிரம்மோற்சவ நிறைவில் கோவிலுக்கு அருகேயுள்ள அழகிய நீராழி மண்டபத்துடன் கூடிய கிருஷ்ணதீர்த்தம் எனும் திருக்குளத்தில் ஸ்ரீராஜகோபாலன் தெப்போற்சவம் கண்டருளுவார்.

பங்குனிப் பெருவிழா 30 நாட்களிலும் பல்வேறு சாதிச் சங்கங்கள், பல்வேறு சமூக, வணிக அமைப்புகள், அரசு ஊழியர் சங்கங்கள் பொறுப்பேற்று திருவிழாவினை பன்னெடுங்காலமாக சிறப்புடன் கொண்டாடி வருவது சமூக ஒற்றுமைக்கு, சமுதாய நல்லிணக்கத்திற்கு சான்றாகத் திகழ்கின்றன.

மேலும் விழா நாட்களில் ஸ்ரீராஜகோபாலனுக்கு முன் மேள வாத்தியங்கள், யானைக்கும் முன்னதாக நாலாயிர திவ்வியப் பிரபந்த கோஷ்டியினர் தமிழ்ப் பாசுரங்களைப் பாடிச் செல்வது. தமிழ்மொழியின் சிறப்பை முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

ஸ்ரீராஜகோபாலனே தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில், தீந்தமிழ்ப் பாசுரங்களைப் பாடச் செய்து பக்தர்களுக்கு அருட்காட்சி தருவதும், காணக்கூடிய நற்பேறுமாகும்.

வேதபாராயணக் குழுவினர் ருக், யசூர், சாம, வேதங்களை ஓத ஸ்ரீராஜகோபாலன் பின்னால் வருவர். ஓசை நயத்துடன் தமிழ்ப் பாசுரங்களைப் பாடிவரும் அந்த அந்தணப் பெரியோர்களின் அழகிய பாடல்கள் காண்போரையும் கவரும், கருத்தையும் கவரும்.

இத்தனை பெருமைகள் கொண்ட ஸ்ரீராஜகோபாலன் பங்குனிப் பெருவிழாவினைக் கண்டு தரிசனம் செய்வது பெரும் பாக்கியமே.

20. தொகுப்புரை

இராஜ மன்னார்குடியில் வாழும் மக்கள் அறச்சிந்தனையும், பொது நல நாட்டமும் உடையவர்களாய் விளங்குகின்றனர். இராஜகோபாலசாமி கோயிலில் நடைபெறும் விழாக்களில் இந்துக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு கடவுளை வழிபடுகின்றனர்.

தொடக்க காலத்தில், மன்னர்கள் ஏற்படுத்திய விழாக்கள் அனைத்தும் இன்று மக்களால் நடத்தப்படுகின்றன. இல்விழாக்களைக் குறிப்பிட்ட சாதியினர் தங்கள் பொறுப்பில் நடத்துகின்றனர்.

வாழ்க்கையில் ஒரு முறையாவது காசிக்குப் போக வேண்டும் என்பது போல வாழ்க்கையில் ஒரு முறையாவது மன்னார்குடியில் 18 நாள் திருவிழாவை தரிசிக்க வேண்டும். அந்த அளவுக்கு பிரமோற்சவமானது மிகச்சிறப்பாக வேறு எந்த ஊரிலும் இல்லாத அளவுக்கு நடைபெற்று வருகிறது. தீட்சதர்கள் பெருமாளுக்கு அழகுக்கு அழகு செய்வதைக் கண்டால் மெய் சிலிர்க்கும்.

காலம் காலமாக மரபுகள் துளியும் மாறாமல் நடைபெற்று வரும் இத்திருவிழாக்கள் நாம் கண்டு தரிசிக்க வேண்டிய அருங்காட்சிகள்!


மன்னார்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில், அய்யனார் கோயில் திருவிழாக்கள், தீமிதி, அங்காள பரமேஸ்வரி அம்மன் மயானசூறை முதலிய திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.


ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு, மறுமலர்ச்சி, வீழ்ச்சி முதலியவற்றை அந்தச் சமுதாயம் காலம் காலமாகப் போற்றிக் கொண்டாடிக் கொண்டு இருக்கும் விழாக்களின் வழியே அறிய முடியும்.


அடிக்குறிப்புகள்

1. ராஜகோபாலசாமி திருக்கோயில் மலர் 1995 பக் -83
2. ஞாபகம் வருதே ... ஊர் ஞாபகம் வருதே - பானுகுமார் - பக். 96
3. ராஜகோபாலசாமி கீர்த்தனைகள் - செங்கமலவல்லி - பக். 14
4. Modi Translation - Saraswathi Mahal Bundle -115C-7/1.





கோவர்த்தனகிரி
கலை பேரண்ட பட்சி
ஸ்ரீ சண்டும் கையும் சொக்கமலத்தாயார்
ஸ்ரீ கோபாலன் ஆண்டாள் திருக்கோலம்
யானை வாகனம்
குதிரை வாகனம்



ஸ்ரீ சொக்கமலத்தாயார்



பத்ரபுர ஆஞ்சநேயர்



கருட வாகனம்



சிறப்பு தபால் முத்திரை

9. சமயமும் சமுதாயமும்

1. முன்னுரை

ஒரு தேசத்தின், ஓர் மாவட்டத்தின், ஓர் ஊரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அங்குள்ள சமயங்கள் - சமுதாயவியல், பண்பாடு, வட்டார வழக்குகள் ஆகியவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

2. சமயங்கள்

மானுடத்தை நல்வழிநடத்திச் செல்ல நல் லெண்ணங்களை விதைத்து அவைகளின் மூலம் மானிடப் பிறவியின் நோக்கத்தை உணரச் செய்வது சமயமாகும்.

இச்சமயங்கள் காலத்தின் தேவைகளுக்கேற்ப பலவாறாக திருத்தம் பெற்றும், வளர்ந்தும், தேய்ந்தும் மாறி மாறி வந்துள்ளன.

நதிகள் பல்வேறு இடங்களில் தோன்றி கடலில் கலப்பது போல எல்லா மதங்களும், தத்துவங்களும் அன்பு என்ற ஒன்றிலேயே சங்கமிக்கின்றன. சமய வாழ்விலும் இவ்வட்டம் சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறது.

3. சைவம்

பாரதத்தில் சைவமும், வைணவமும் இரு கண்களாகப் பாதுகாத்து வரப்பட்டிருக்கின்றன. சோழர்கள் ஆட்சியில் சைவம் நன்கு வளர்ந்தது. சமயக் குரவர்களில் திருஞானசம்பந்தர் மன்னார்குடி வட்ட கோயில்களைப் பாடி பரவசமடைந்துள்ளார்.[1] பாமணி, கோட்டூர், திருக்களார், திருவெண்டுதுறை முதலிய ஊர்கள் பாடல் பெற்ற கோயில்களைக் கொண்டவையாகும்.

4. வைணவம்

மன்னார்குடி, திருமக்கோட்டை முதலிய இடங்களில் உள்ள பெருமாள் கோயில்கள் குறிப்பிடத்தக்கன. ஸ்ரீராஜகோபாலசாமி கோயில் புகழ் பெற்ற வைணவத் தலமாக விளங்குகிறது. நாயக்க மன்னர்கள் காலத்தில் வைணவம் இங்கு தழைத் தோங்கியது.[2] பல்வேறு வைணவப் பெரியார்கள் இச்சமயத்தைப் பாடிப் புகழ்ந்துள்ளனர்.

5. பௌத்தம்

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய சோழநாட்டில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே பௌத்த சமயம் சிறப்புற்று விளங்கிற்று. சமீப காலங்களில் இவ்வட்டத்திலும் அதன் எல்லையை ஒட்டிய பகுதிகளிலுள்ள ஊர்களிலும் பௌத்தம் தொடர்பான சான்றுகள் கிடைத்துள்ளன.[3] இவற்றில் குறிப்பிடத்தக்க ஊர்களில் பூதமங்கலம் என்ற ஊரும் ஒன்று.

6. சமணம்

திருவாரூர் மாவட்டத்தில் சோழ மன்னர்களின் ஆதரவுடன் சமணப்பள்ளிகள் தோன்றியிருக்கின்றன. மன்னார்குடி, சோழர்காலத்தில் சமணத் தலமாக இருந்திருக்கக் கூடும். இன்றும் இவ்வூரில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர். சைவ, வைணவ சமயங்களின் எழுச்சியில் இங்கிருந்த சமணப்பள்ளி

பள்ளன்கோயில் சமணப்பள்ளியைப் போன்று முற்றிலுமாக அழிந்துபட்டிருக்க வேண்டும்.[4]

இங்குள்ள இராஜகோபாலசாமி கோயில் முன்பாக நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ள கொடிக்கம்பம் சமணர் கோயிலின் வாயிலில் காணப்படும் மானஸ்தம்பம் போன்றே காட்சி அளிக்கிறது. எனவே இவ்வூரில் இருந்த சமணக் கோயிலின் கட்டிடக்கலையின் தாக்கம் வைணவக் கோயிலுக்கும் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.[5]

இங்குள்ள ஜைனத் தெருவில் இருக்கும் சமணக்கோயில் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 19வது தீர்த்தங்கரர் மல்லிநாதர் சிலையைப் பிரதிஸ்டை செய்து சமணர்கள் வழிபட்டு வருகின்றனர்.

"சமணர்களின் மையமாக முக்கிய நகரமாக இருந்துள்ளது. பல யாத்ரீகர்கள் ஜைனக் கோயிலுக்கு வந்துள்ளனர். இங்கு 153 பேர் வாழ்ந்துள்ளனர்" என்று தஞ்சாவூர் கெஜட்டியர் வரலாறு கூறுகிறது.[6]

மன்னார்குடியில் மிகத் தொன்மை வாய்ந்த, அகிம்சையை உயிர் நாடியாகக் கொண்ட பௌத்த, சமண சமயங்கள் பண்பாட்டின் அங்கமாக விளங்கியமைக்கான சான்றுகள் உள்ளன.

7. கிறித்துவம்

கிறித்துவச் சமயம் மன்னார்குடிக்கு சிறப்பான கல்விப் பணியின் மூலமும், இறைப்பணியின் மூலமும் பெரும் வளர்ச்சியை உண்டாக்கியது.

8. இஸ்லாம்

இஸ்லாம் மதத்தின் சாரங்களையும் தமிழ் தன்னுள் ஈர்த்துக் கொண்டது. பல அரிய கருத்துக்களைத் தமிழ் மொழியின் மூலம் பரப்பியது. தமிழ் மொழியின் பெருமையை உயர்த்தி பல இலட்சியங்களையும் தந்துள்ளது.

கூத்தாநல்லூர் இஸ்லாமியர் அதிகம் வாழும் பகுதி. "மன்னார்குடிக்கு ஐந்து மைல் கிழக்கே - வடகிழக்கில் உள்ள கூத்தாநல்லூர் மக்கட் தொகை 3104 பேர்களில் 2677 பேர்கள் இஸ்லாமியர்கள் என்று கெஜட்டியர் கூறுகிறது.[7] இந்து மத விழாக்களிலும் இவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

தெய்வீகப் பேரொளியைச்சிந்தி எழில் சிறந்திலங்கும் நகரம் மன்னார்குடி. ஆநிரை காப்பான் விரும்பி விளையாடும் விண்ணகக் கோயில்களும், பிறையணிந்த பெருமான் பீடு நிறை ஆலயங்களும், மடாலயங்களும், சத்திரங்களும் சார்ந்துள்ள நகரம். வைணவமும் சைவமும் வளர்த்த பெரு நகரம். ஜைனமும், கிறித்துவமும் இஸ்லாமும் இணைந்த நகரம்.

பெசண்ட் அம்மையார் தந்த பிரம்மஞானசபையும், வள்ளலார் பெயரில் வளரும் திருச்சபைகளும், வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலை மன்றங்களும், பங்காரு அடிகளாரின் ஓம் சக்தி மன்றங்களும் இங்கு உண்டு. எதிலும் குறைவில்லை.

9. வாழும் மக்கள்

இந்துக்கள், இஸ்லாமியர், கிறித்துவர்கள், சமணர்கள் போன்ற பல்வேறு மக்கள் இங்கு வாழ்கின்றனர். இந்து சமயத்தில் பிராமணர், கள்ளர், வன்னியர், யாதவர், நாடார், தேவர்,

செட்டியார், முதலியார் போன்ற பிரிவுகளில் உள்ளவர்கள் இங்கு வாழ்கின்றனர். அதில் பிராமணர்கள் அதிகம் வாழ்கின்றனர்.

மன்னார்குடியைப் பொறுத்தவரை வாழுகின்ற எல்லா இனத்தவர்களும் தங்களின் இன, பிரிவு வேற்றுமைகளை மறந்து சகோதரத்துவம் நிலவும் வகையில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் மன்னை மண்ணின் மாண்புக்கு எடுத்துக்காட்டாக வாழ்கின்றனர்.

10. இருப்பிடங்கள்

மன்னார்குடி நகரத்தில் நடுத்தர வருவாயுள்ள மக்கள் பெருமளவில் வசிக்கின்றனர். பெரும்பாலானவர்கள் தங்களது வாழ்க்கைமுறைக்கு ஏற்ப ஓடு வேய்ந்த வீடுகளில் வாழ்கின்றனர். குறைந்த வருவாய்ப் பிரிவு மக்கள் கூரை வேய்ந்த குடிசைகளில் வாழ்கின்றனர். உயர் வருவாய் உள்ளவர்கள் குறைவாக இருக்கின்றனர்.

தற்சமயம் அரபுநாடுகளிலும் பலரும் பணியாற்றுவதால் வட்டம் முழுதும் ஓடு வேய்ந்த கட்டிடங்கள் அதிகரித்து வருகின்றன. நாடோடி வாழ்க்கை நடத்தும் நரிக்குறவர்கள் ஊரின் எல்லை அருகே காலனியில் வசித்து வருகின்றனர்.

11. குடும்ப வாழ்க்கை

கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை இன்றும் பல இடங்களில் உள்ளன. தனிக் குடும்பங்களாகவும் வாழ்கின்றனர். குடும்பத் தலைவராக கணவர் வீட்டின் மூத்தவராக விளங்குகிறார். குடும்பத் தலைவர் சொற்படி அனைவரும் நடக்கின்றனர். குடும்பத் தலைவி (மனைவி) அவசியமான உரிமைகளைப் பெற்று இருக்கிறார்.

12. உறவு முறைகள்

பல்வேறு இன மக்களும் கூடி வாழ்கின்றனர். இவர்கள் உறவு முறையை மூன்று வகையாக பகுத்துணரலாம். அவை பெற்றோர் உறவு முறை, திருமண உறவு முறை, பழக்க வழக்க உறவு முறை.

பெற்றோர்கள் வழி உறவுகளில் பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சின்னம்மா, தாத்தா, ஆத்தா (பாட்டி), அத்தை (தந்தையின் சகோதரி) போன்ற உறவினர்கள்.

திருமண வழி உறவுகளில் கணவன், மனைவி, மனைவியின் தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள் போன்றவர்களாவார்கள். இந்த உறவு முறையில் உறவினர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மூன்றாவதாக வேறுபட்ட இனத்தவர்களும் பழக்க வழக்கங்களால், ஒருவருக்கொருவர் அன்புடன் உடன்பிறந்த சகோதரர் போலவும், மாமன், மைத்துனர் போன்றும் வேற்றுமையின்றி உறவுகளுடன் பழகுவது குறிப்பிடத்தக்கதாகும்.

13. திருமணம்

பெரும்பாலான குடும்பங்களில் குறிப்பாக இந்துக்களில் நெருக்கமான உறவு முறைகளிலேயே திருமணம் செய்து கொள்கிறார்கள். கிறித்துவர்கள் நெருங்கிய உறவினர் வீட்டிலும், அக்காள் மகளையும் மணப்பதில்லை.

இஸ்லாமியர்கள் உடன் பிறந்த அக்காள் மகளைத் திருமணம் செய்து கொள்வதில்லை. ஒன்றுவிட்ட சின்னம்மா மகளைத் திருமணம் செய்து கொள்வது வழக்கமாக இருந்து வருகிறது.

சமணர்கள் உடன் பிறந்த அக்கா மகனையும், பங்காளி உறவுமுறைப் பெண்களையும் திருமணஞ் செய்யும் முறையினை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இந்துக்கள், சமணர், கிறித்துவர் போன்ற சமயத்தினர் திருமணத்தில் மணமகன் மணமகளுக்கு தாலி கட்டுவதை மரபாகக் கொண்டுள்ளனர். கிறித்துவர்கள் பயன்படுத்தும் தாலியில் மணமகனின் முதல் எழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இஸ்லாமியர்கள் மணமகனுக்கு நெருக்கமான ஒரு சுமங்கலிப் பெண் மூலம் தாலிகட்டுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

14. சடங்குகள்

பெண்கள் பூப்பெய்துவதை இந்துமதத்தில் சடங்காகக் கொண்டாடுகின்றனர். மற்ற மதத்தினர் இவ்வாறு செய்வதில்லை.

இந்துக்களில் அந்தணர், கம்மாளர், செட்டியார் போன்ற பிரிவினர் பூணூல் அணிகின்றனர். சமணர்களும் பூணூல் அணிகின்றனர்.

பிறந்த குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதில் இந்த நான்கு மதத்தினரிடமும் கால வேறுபாடு காணப்படுகிறது. அவரவர்கள் மதக் கோட்பாட்டிற்கு ஏற்ப பெயர் சூட்டுகின்றனர்.

குழந்தைகளுக்குக் காது குத்துவதை இந்துக்கள் ஒரு சடங்காக மேற்கொள்வது போல் இஸ்லாமியர், சமணர், கிறித்துவர் மேற்கொள்வதில்லை.

15. நம்பிக்கைகள்:

இந்துக்களில் தலைவிதி, சகுணம் போன்ற நம்பிக்கைகளைக் காணமுடிகிறது. மற்ற மதத்தினர்களிடம் காண்பது அரிதாகவுள்ளது. மறுபிறவிக் கொள்கையை இந்துக்கள் நம்புகின்றனர். மற்ற மதத்தினர் இந் நம்பிக்கையில் மாறுபடுகின்றனர். கிறித்துவமதத்தில் கத்தோலிக்கப் பிரிவினர், ஏசுவிடம் மன்னிப்பு கேட்டு வேண்டினால் மன்னிக்கப்படும்

என்று நம்புகிறார்கள். ஆனால் பிராட்டஸ்டண்ட் பிரிவில் இந்த நம்பிக்கை இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

16. நோன்புகளும் வழிபாட்டு முறைகளும்

உருவ வழிபாட்டில் இந்துக்கள், கத்தோலிக்க கிறித்துவர்கள், சமணர்கள் ஆகியோரிடம் ஒற்றுமை உள்ளது. இந்த வழிபாட்டில் இஸ்லாமியர்களும், பிராட்டஸ்டண்டு கிறித்துவர்களும் வேறுபடுகின்றனர்.

இங்கு அனைத்து மதத்தவர்களும் உண்ணா நோன்பு மேற்கொள்கின்றனர். இந்துக்களும் சமணர்களும் கோயில் திருவிழாக்களைக் கொண்டாடுவது போல் இஸ்லாமியரும் கிறித்துவரும் கோயில் விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

இந்துக்கள் மற்ற மதத்தினர் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுகின்றனர். ஆனால், மற்ற மதத்தினர் வழிபாட்டு நோக்குடன் இந்து ஆலயத்திற்கு வருவதில்லை.

இந்துக்களும், சமணர்களும் தீப வழிபாட்டுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். ஆனால், இஸ்லாமிய மசூதிகளில் குர்ஆனும், கிறித்துவ தேவாலயங்களில் விவிலியமும் வழிபாட்டுக்குச் சிறப்பிடம் பெறுகின்றன.

17. வட்டார வழக்குச் சொற்கள்

குசும்பு	=	குறும்பு
உள்ளார	=	உள்ளே
கருக்கலில்	=	அதிகாலையில்
இந்தாண்ட	=	இந்தப் பக்கம்
அந்தாண்ட	=	அந்தப்பக்கம்
எம்பளது	=	எண்பது (80)
பக்கத்தாப்ல	=	அருகில்
ஓரண்டையும்	=	ஒரு இடத்திற்கும்
கடுப்பாயிடுவேன்	=	கோபம் கொண்டு விடுவேன்

நிப்பாட்டு	=	நிறுத்து
விடைக்கிறியா	=	கிண்டல் பண்ணுகிறாயா?

18. பண்பாடு

நமது பண்பாட்டில் பலவகையான வேறுபாடுகள் உள்ளன. இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம், சமுதாயத்திற்கு சமுதாயம் இவை மாறுபடுகின்றன. பண்பாடு என்பதை கற்றுத் தெரிந்து கொண்ட **'மனித நடத்தை'** எனலாம். இதன் மூலம் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கருத்துக்களையும் பிரதிமங்களையும் பரிமாறிக்கொள்ள இயலும்.

ஒரு பண்பாட்டுக் குழுவில் பிறந்த ஒரு குழந்தை மாறுபட்ட ஒரு பண்பாட்டில் வளர்க்கப்படின் அதன் பண்பாட்டுப் பண்புகள் வேறாகவே அமையும். பண்பாடு என்பதைப் பரிமாற்றம் செய்வதில் குறியீடுகளும் மொழியும் சிறப்பான அங்கம் வகிக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை ஒட்டு மொத்தமான பண்பாட்டினைப் பெற்றிருப்பினும் மாவட்டத்திற்கு மாவட்டம் அந்தப் பண்பாட்டின் நிலை சிறிது மாறுபட்டுத்தான் இருக்கிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் செயல்களிலும் தங்களின் மண்ணின் பண்பாட்டை ஒட்டியே தரம் பார்த்து வேறுபட்டு நிற்கின்றனர்.

மன்னார்குடி வட்டமும் இத்தகைய மாறுதலுக்கும் முரண்பாடுகளுக்கும் உட்பட்டுத்தான் உள்ளது. இங்கு வாழும் மக்கள் அறச்சிந்தனையும், பொது நல நாட்டமும் உடையவர்களாக விளங்குகின்றனர்.

இந்த வட்டத்துக்காரர்களின் தலையாய பண்பாடு **'விருந்தோம்பல்'** ஆகும் 'செல்விருந்தோம்பி வருவிருந்து' பார்த்திருக்கும் பண்பாளர்கள். முன்பின் தெரியாதவர்கள் வீடு தேடி வந்து விட்டாலும் அவர்களுக்கும் விருந்து படைக்கும் குணம் இவர்களிடம் இயற்கையாக அமைந்துள்ளது.

19. பழக்கவழக்கங்கள்

மரியாதை வழங்குவதில் பெயர் போனவர்கள் மன்னார்குடிக்காரர்கள். வாங்க, போங்க, உட்காருங்க என்று தான் பேசுவார்கள். வயதில் பெரியவர்களை ஐயா என்றழைப்பார்கள். பல வீடுகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வாங்க ஐயா, போங்க ஐயா, சின்ன ஐயா, பெரிய ஐயா, நடு ஐயா என்றுதான் அழைப்பார்கள்.

வயதில் சிறியவர்களானவர்களைப் பெரியவர்கள் அறிமுகமாயிருந்தால்தான் வா தம்பி, போ தம்பி என்பார்கள். புதியவர்களாயிருந்தால் வாங்க தம்பி, உட்காருங்க தம்பி, சாப்பிடுங்க தம்பி என்று மரியாதையுடன் கூறுவார்கள்.

பெண்களையும் மிகவும் மரியாதையுடன் அம்மா, அக்கா என்ற வார்த்தைகளால் அழைப்பார்கள்.

வம்பு, வழக்குகள், தகராறுகள் போன்றவற்றில் 'நாட்டுப் பஞ்சாயத்து' மூலம் தீர்க்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. (எட்டு நாட்டு பஞ்சாயத்து முறையும் அமுலில் உள்ளது).

இங்குள்ள கிராமங்களில் வழிகேட்டாலோ, முகவரிகள் கேட்டாலோ, 'தெற்கு திரும்பி மேற்காகப் போனா' என திசைகளைக் குறித்தே வழிகளைக் கூறுவார்கள்.

சில கிராமங்களில் குறிப்பிட்ட நபர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அடைமொழியாக, தெக்கி வீட்டார், வடக்கி வீட்டார், மேல் வீட்டார், கீழே வீட்டார் என்றே கூறுவார்கள்.

ஒரு இல்லத்தில் ஒருவர் இறந்து விட்டால் அதனை "தண்டோரா" மூலமும், நெருங்கிய உறவினர்களுக்கு ஆள் அனுப்பியும் தெரிவிப்பார்கள்.

திருமணம், காதணி விழா போன்ற நிகழ்ச்சிகளில் முதலிடம் அளிப்பது தாய் மாமனுக்குத்தான். மாமன் சீர் கொடுத்தால்தான் திருமணம், காதணி விழா போன்றவைகள் நிறைவாக இருக்கும் என்ற வழக்கத்தில் உள்ளவர்கள். இது மட்டுமல்ல துக்க காரியங்களிலும் மாமன் மரியாதையை ஏற்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெரும்பான்மையினரைக் கொண்ட ஜாதியினரை முதன்மையாக வைத்து அக்கிராம நிகழ்ச்சிகள் நடைபெறும்.

20. வெற்றிலை சீவல்

இங்குள்ள எல்லா விசேசங்களிலும் வெற்றிலை, சீவலுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். திருமணம், மற்றும் பிற சடங்குகளுக்கு விருந்தினர்களாகிய உறவினர்களை அழைப்பதற்கு அழைப்பிதழுடன் வெற்றிலை சீவல் வைத்து ஒரு குறிப்பிட்ட தொகையையும் வைத்து அழைப்பார்கள். "பாக்கு பணம் வைத்து அழைப்பது" என்ற சம்பிரதாயம் நடைமுறையில் உள்ளது. துக்கம் கேட்க வருபவர்களுக்கு வெற்றிலை சீவல் தட்டு வைப்பது இங்கு மட்டும்தான்.

மன்னார்குடிக்காரர்கள் வெற்றிலைப் பிரியர்கள்.. அவர்கள் வெற்றிலை போடுகிற அழகைப் பார்த்திருக்கிறீர்களா? வெற்றிலையை வலிக்காமல் எடுத்து அதன் முதுகைத் தடவிக்கொடுத்து, சுண்ணாம்பை துளி விரலால் ஓவியம் வரைவது போலத் தீட்டி மெதுவாக மடக்கி பாக்கை வாசனை பார்த்து... சரி போதும்... சுருக்கமாக அவர்கள் வெற்றிலை போடுவது ஏதோ ராக ஆலாபனை பண்ணுவது போல இருக்கும்.

சாதாரணமாகவே வெற்றிலைக்கு நம் மரபில் அதிகமாகத் தொடர்பு உள்ளது. கல்யாணம் தொடங்கி காட்டுக்குப் போகிற வரை நம் வீட்டு வைபவங்களில் பிரதானமாகப் பங்கெடுத்துக்

கொள்கிற வெற்றிலை, தமிழகத்தில் கும்பகோணம் சுற்று வட்டாரப் பகுதிகளில் சிறப்பாக விளைகிறது.

கருகருவென கரும்பச்சையில் இருக்கும் வெற்றிலைகள் ஆண் வெற்றிலைகள் என்றும், இளம்பச்சை வெற்றிலைகள் பெண் வெற்றிலைகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. மருத்துவ குணம் வெற்றிலைக்கு உண்டு. உணவு செரிக்கரணங்கள் தீர என்று நிறைய குணங்கள். இசைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்களின் கற்பனை ஊற்றுக்கும் இது தான் காரணமாம். இது என்ன விஞ்ஞானத்துக்கு எட்டாத காரணியாக இருக்கிறதே என்று வியக்கிறீர்களா?

வெற்றிலை போடுவதில் இருக்கும் விவகாரங்களை, நுட்பங்களையெல்லாம் அதன் ரசிகர்கள்தானே அறிவார்கள். மன்னார்குடி தந்த இலக்கிய மேதை ஜானகிராமன் எழுதிய வேதாந்தியும் உப்பிலியும் என்று ஒரு சிறுகதை. அதில் ஒரு வெற்றிலை வியாபாரிக்கும், வெற்றிலை வாங்குபவருக்கும் இடையே நடக்கும் ஒரு சுவாரஸ்யமான பகுதி இது. இதைப் படித்தாலே போதும். வெற்றிலை போடுவது ஒரு கலை என்று ஒப்புக் கொண்டுவிடுவீர்கள்.

"நேத்து ஒரு கவுளி குடுத்தே... அதென்ன வெத்தலையா கருவேப்பிலையா? எல்லாம் துக்கிணியூண்டு துக்கிணியூண்டு ...! சுண்ணாம்புக் கலையத்தை கழுத்தில் கட்டிக்க வேண்டியிருந்தது. போதும் போதாத்துக்கு ஒரு மருமான் வந்து சேர்ந்தான் மாயவரத்துலேர்ந்து! ஒரு மணிக்கு கால் கவுளின்னு அரைத்துத் தீர்த்துப்பிட்டான்!"

மாயவரத்து ஆளுங்களுக்கு காப்பி கொடிக்கால் வெத்தலபோட்டுப் பழக்கம் நர.. நரன்னு மாடு கடிக்கறாப்புல கடிக்கணும். துருப்பிடிச்ச டின்னு கணக்கா... மொத்தமா இருக்கும். சில வேளை பாத்தா வெள்ளையா இருக்கும். ஆனா

எலையெல்லாம் கூம்பாத்தான் இருக்கும். இந்தமாதிரி குஞ்சுங்களை எங்க கண்டிருப்பாங்க! இதை வாயிலப் போட்டா புள்ளியார்பட்டி வெள்ளரிப்பிஞ்சு; இதுக்குப் பல்லா வேணும்? பொக்க வாயை ஒரு தடவை அப்படி லேசா அசைச்சிட்டாலே அப்படியே அரைஞ்சு அமிர்தம் ஊறுமே...

அதுசரிய்யா...குஞ்சு குஞ்சுன்னு சுண்ணாம்பு கலையத்தை யேவா கழத்துல கட்டிக்க விடறது...? நீயே பாரு தோ... இந்த உள்ளங்கையிலே மூணு வெத்தலை வெச்சுண்டுட்டேன். இந்த வெத்தலய பரமக்குடிகாரன் மாதிரி நிறையிலே வாங்கினாத் தான் கட்டும். இப்படி எண்ணி எண்ணி வாங்கினா நூறு வெத்தல நாலு தடவைக்குதான் வரும்.

21. உணவு முறைகள்

மன்னார்குடி வட்டம் என்றாலே (பழைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் ஜில்லா) சுழித்தோடும் காவிரி, பச்சைப் பசேல் என்று பயிர்கள் தலையசைக்கும் வயல்கள், வானுயர்ந்த கோபுரங்கள், ரசனையான மனிதர்கள், சங்கீதம், பரத நாட்டியம், டிகிரி காபி, தாட்டு இலை சாப்பாடு, வெற்றிலை சீவல் - இப்படி நினைவலைகள் விரிந்து கொண்டே போகும்.

அது என்ன தாட்டு இலை சாப்பாடு? சாப்பாட்டு ரசனை சாப்பிடும் இலையிலிருந்தே தொடங்கி விடுகிறது. நல்ல அகலமான பெரிய நுனி இலையை இப்படிக் குறிப்பிடுகிறார்கள். எப்போது எந்தக் காம்பினேஷனில் உணவு இருக்க வேண்டும், அதை எப்படிப் பக்குவமாகத் தயாரிக்க வேண்டும். எப்படிப் பறிமாற வேண்டும், எப்படி சாப்பிட வேண்டும் என்பதெல்லாம் மன்னார்குடிக்காரர்களின் இரத்தத்திலேயே ஊறியுள்ள பெருமை மிக்க சம்பிரதாயங்கள். விசேஷங்களில் சமையல், சாதாரணமாக அன்றாட வீட்டுச் சமையல் ஆகிய இரண்டிலுமே இத்துணை அம்சங்களையும் காண முடியும்.

ஒரு சிறப்பு விருந்தில் எந்தெந்த உணவு வகைகள் இடம் பெறும்? எப்படிப் பரிமாற வேண்டும்?

பாயசம், தயிர்ப் பச்சடி, மாங்காய் அல்லது நார்த்தங்காய் இனிப்புப் பச்சடி, இரண்டு கோசு கறி ஒரு தேங்காய் போட்ட கறி, பருப்பு, உசிலி, பூசணிக்காய் அல்லது கத்தரிக்காய் ரசவாங்கி, அவியல், வறுவல், பருப்பு, வடை, அப்பளம், ஸ்வீட், முக்கனி (மா, பலா, வாழை) இரண்டு கலந்த சாதம்.

இவை இலையில் இடம் பெற வேண்டிய முறை:

இலையின் நுனிப்பகுதி சாப்பிடுவரின் இடப்பக்கம் இருக்கும்படி இலை போடப்பட வேண்டும். பாயசம், வலப்பக்கம் ஓரமாக இலையின் கீழப்பகுதியில் ஒரு ஸ்பூன் அளவு வைக்கப்பட வேண்டும். மேலே கூறிய உணவு வகைகள் வரிசைப்படி இலையின் மேல்பகுதி வலப்பக்க ஓரத்திலிருந்து வரிசையாக வைக்கப்பட வேண்டும். தயிர்ப் பச்சடி முதல் காய்கறிகளை வைத்துக் கொண்டே வந்தால், வடை, வறுவல் முதலியவை நுனி இலைப் பகுதிக்கு வந்து விடும். பருப்பு மட்டும் இலையின் எதிர்ப்பக்கத்தில் நடு நரம்பிற்கு மேல் வலப்புறத்திலிருந்து சற்றே தள்ளி இடம் பெறும்.

இதற்குப் பிறகு, இலையின் கீழ்ப்பகுதியில் நடுவில் சாதம் வைக்கப்பட்டு நெய் ஊற்றப் பட்ட பிறகு, பாயசத்தை முதலில் சாப்பிட, சற்றே நேரம் கொடுத்து, சாம்பார் - அல்லது பிட்ளை; இது முடிந்ததும் மோர்க் குழம்பு; ரசத்திற்கு சாதம் கேட்டு ரசம் மீண்டும் அப்பளம் - பிசைந்த சாதங்களும் பாயசமும் ஒன்றன் பின் ஒன்றாகப் பரிமாறப்பட வேண்டும். ஊறுகாய், சாதம், மோர் தேவைப்படுகிறவர்களுக்கு சாம்பார் (தொட்டுக் கொள்ள) போன்றவை முறையாக பரிமாறப்படும்.

எல்லோரும் சாப்பிட்டு முடியும் நேரத்தில் 'சந்தேகத்திற்கு சாதம்' என்று கூறியவாறே சாதமும், மோரும் வலம் வரும். யாருக்காவது இன்னும் கொஞ்சம் சாப்பிடலாம் போல் தோன்றினால் சாப்பிட்டுக் கொள்ளலாம்.

இது கட்டாயமான வட்டார சம்பிரதாயம், இதைப் போல ரசத்திற்கு முன்னால் 'சந்தேகத்திற்கு சாம்பார்' வலம் வரும்.

திருமணத்தன்று மதிய சாப்பாட்டு மெனுவும் இதுதான், பழைய சம்பிரதாயத்தில், கலந்த சாதங்கள், வடை கிடையாது. பாயசமும், பருப்பு வெல்லப் பாயசம்தான். ஸ்ரீவைஷ்ணவ வீடுகளில் புளியோதரை, அக்கார அடிசில், தயிர்வடை கட்டாயம் இடம் பெறும். ஸ்வீட், அவரவர்கள் வசதிக்கேற்ப உதிர்த்த பூந்தி, குஞ்சாலாடு, மைசூர்ப்பாகு, பாதுஷா, ஜாங்கிரி இவற்றில் ஒன்று போடப்படும். ஸ்வீட்களின் ராஜா மன்னார்குடியைப் பொறுத்த வரை பதிர்ப்பேணி தான். இதில் பதிர்ப்பேணி, சேமியா பேணி என்று இரண்டு வகை, பதிர்ப்பேணி என்பது பெரிய வடிவிலான பூரி, சேமியா பேணி என்பது பெரிய வடிவில் இடியாப்பம். மைதா மாவினால் செய்யப்படும் இதன் மீது பூரா சர்க்கரையையும் (அரைத்த ஜீனி) அதன் மீது பாலையும் ஊற்றி ஊற வைத்து சாப்பிட வேண்டும்.

எந்த விருந்தாக இருந்தாலும் சாப்பிடுபவர்கள் வந்து அமர்ந்த பின்னர்தான் பரிமாறத் தொடங்க வேண்டும். முதலிலேயே பரிமாறி வைக்கக்கூடாது.

மன்னார்குடிக்காரர்களின் அன்றாட சமையலும் ரசனையோடுதான் அமைந்திருக்கும்.

இந்துக்களில் அந்தணர்கள் முழுமையாகவும் முதலியார், செட்டியார் போன்ற இனங்களில் பலரும் அசைவ உணவு உட்கொள்ளும் வழக்கமில்லை.

இந்துக்களில் ஏனைய இனத்தவர்கள் அசைவ, சைவ உணவுகளை உட்கொள்கின்றனர். இஸ்லாமியர், கிறித்துவர் இருவரும் பெரும்பாலும் அசைவ உணவையே உட்கொள்கின்றனர்.

சமணர்கள் அசைவ உணவைக் கண்டிக்கின்றனர். சூரியன் மறைந்த பிறகு இம்மதத்தினர் உணவு உட்கொள்வதில்லை. காலைச் சிற்றுண்டியும், மதிய சைவ உணவும், மாலை ஆறு மணிக்குள் இரவு உணவும் உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். உணவில் வெங்காயம் முதலிய உணர்ச்சி ஊட்டக்கூடிய பொருட்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் வழக்கமும் சமணரிடையே இல்லை. மனக்கட்டுப்பாட்டின் மூலம் பிள்ளைப் பேற்றை குறைத்துக் கொள்கின்றனர். இஸ்லாமியர்களிடமும் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் வழக்கம் இல்லை.

22. விளையாட்டுக்கள்

எல்லா இனத்தவரும் அநேகவிதமான விளையாட்டுகளை விளையாடி மகிழ்கின்றனர். புளியங்கொட்டைகளை வைத்துக்கொண்டு ஒத்தையா - இரட்டையா?' 'எண் கட்டம் - ஆடுவது' கட்டு கண்ணாம்பூச்சி, 'நிலாப்பூச்சி நிழல்பூச்சி' 'கிட்டுப்புள்ளு' 'பச்சைக்குதிரை', 'பலிஞ்சடுகுடு' 'கோலாட்டம்', 'அம்மானை', 'அச்சாப் பொங்கல்' முதலியன முக்கியமானவை.[8]

23. தொகுப்புரை


வரலாற்றுப் பின்னணி, சமுதாயம், வாழும் மக்கள், பண்பாடு, கல்வி, தொழில், வணிகம், சமயங்கள், மதநல்லிணக்கம், சிற்பக் கலை, ஓவியம், நாடகம், இலக்கியம் போன்றவற்றில் எந்த வகையிலும் ஒன்றுக்கொன்று குறைவில்லாமல் நிறைவுடைய மன்னார்குடி வட்டம்


தமிழகத்தின் தலையாய வட்டமாக சிறப்புற்று திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

அடிக்குறிப்புகள்


1. திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு, தொல்லியத் துறை பக். 12
2. மேலது பக். 15
3. மேலது பக். 20
4. மேலது - பக் 21
5. மேலது - பக் 22
6. மேலது பக். 18
7. தஞ்சாவூர் கெஜட்டியர் 1906 பாகம் XV பக். 225.
8. ஜில்லா சரித்திரம் - ஜெகதீச அய்யர், பி.வி. பக் 8.

*****





மன்னார்குடியில் மிகப்பழமையான சமணர் கோயில்



சமணர் கோயிலில் புத்தர் சிலை

10. நீர்ப்பாசனமும் விவசாயமும்

1. முன்னுரை

தமிழ்நாட்டின் கடந்த 3000 ஆண்டு காலப் பாசனப் புலமைக்குச் சான்று பகரக்கூடியதாகப் பல எச்சங்கள் உள்ளன. மாமழை தருவது நீர். அந்நீரைச் சேமித்துப் பயிர்களின் தேவைக்கேற்ப வயலுக்கு எடுத்துச் செல்லும் புலமையே பாசனப் பொறியியல் ஆகும்.

2. பாசன வகைகள்

இயற்கையாகக் கிடைக்கும் நீர் ஆதாரங்களை நல்லமுறையில் பயன்படுத்தும் உத்தியே நீர்ப்பாசனமாகும். சிந்துவெளி நாகரீகக் காலத்தில் ஆறுகளில் அமைக்கப்பட்ட தடுப்பணைகளே பாரத நாட்டின் தொன்மையான நீர்ப்பாசன முயற்சியாகும்.

தமிழகத்தில் வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் காவிரியில் எழுப்பப்பட்ட கல்லணையே இத்தகு முயற்சிக்கு சான்றாகும்.

ஆறுகளையும் கால்வாய்களையும் சீரான நிலையில் வைத்திருக்க தமிழக அரசு நீர்ப்பாசனத்துறையில் மூன்று

பிரிவுகளை பழைய தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. காவிரி பிரிவு - வெண்ணாறு பிரிவு - கல்லணைக் கால்வாய் பிரிவு. நிலத்தின் மதிப்பு அதற்குரிய பாசன வசதியைப் பொறுத்ததாகும்.

நிலத்தைக் கொடையாக வழங்கும் போதோ விற்கும் போதோ அதற்குரிய நீர் ஆதாரமும் ஒரு சேரக் கூறப்படுகிறது. நீர் ஆதாரமான குளம், கிணறு, வாய்க்கால் முதலியனவற்றில் நிலத்திற்குரிய உரிமையைக் குறிப்பிட்டு பத்திரம் எழுதுவார்கள்.

மன்னார்குடி வட்டத்தில் குளம், ஏரி, ஆறு, வாய்க்கால், கிணறு பாசனங்கள் உள்ளன.

3. நிலத்தடி நீர்

நிலப்பரப்பின் மீது விழுகிற மழைநீரின் ஒரு பகுதி ஓடையாகவும், ஆறாகவும் ஒடுகிறது. ஒரு பகுதி நீர் ஆவியாகிறது. எஞ்சிய மழைநீர் நிலத்தினுள் கசிந்து செல்கிறது. இந்நீரே நிலத்தடிநீராக வீடுகளுக்கும், விவசாயம் மற்றும் தொழிலகங்களுக்கும் பயன்படுகிறது. நிலத்தடிநீரும் ஆதாரங்களில் ஒன்றாகும். இந்நீர் சில இடங்களில் அபரிமிதமாக எடுக்கப்படுவதால், அவ்விடங்களில் எல்லாம் நீர்வளம் குன்றுதல், நிலம் தாழ்தல், உவர்நீர் ஊடுருவுதல் மற்றும் நிலத்தடி நீரை எடுத்தலுக்கான செலவு அதிகரித்தல் போன்ற விளைவுகள் தோன்றுகின்றன.

4. ஆறுகள்

நில அமைப்பியல் செயல்பாடுகளுள் ஆற்றின் செயல்களே மனித வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. குடிநீருக்காகவும், நீர்ப்பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும், பயணத்திற்காகவும் ஆற்றுநீரை நம்பியே வாழ்கிறோம். மனித நாகரீகம் வளர்ந்த காலந்தொட்டே ஆற்றின் வெள்ளச் சமவெளிகள் மனிதர்களின் முன்னேற்றத்திற்கு பேராதரவாக

இருந்து வந்துள்ளன. மேலும் புவிப்பரப்பில் காணப்படும் நிலவெளிக்காட்சிகளை மாற்றி அமைப்பதில் தலைசிறந்த காரணியாக விளங்குவது ஆறுகளே. அதுபோலவே நாம் வாழ்கின்ற இயற்கை சுற்றுப்புறச்சூழலின் பெரும் பகுதிகளையும் ஆறுகளே வடிவமைக்கின்றன.

5. காவிரித்தாய்

குடகுநாட்டு மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிற காவிரி நதி மைசூர், சேலம், கோவை, திருச்சி வழியாகத் தஞ்சைக்குப் பாய்ந்து கொள்ளிடம் எனும் கிளையாறாகப் பிரிந்து - கொள்ளிடம் கிளையாறும் காவிரியும் கலக்காதவாறு தடுத்து எழுப்பப்பட்ட கல்லணை வழியாக நீர் பிரித்து அனுப்பப்பட்டு, பல கிளையாறுகளாகப் பிரிகின்றன.

புனிதமான காவிரியை, காவிரித்தாய் என்றே தமிழகம் அழைத்து வருகிறது.

ஜாதி, மத, இன வேறுபாடுகளின்றி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமக விழாவின் போது காவிரி வணங்கப்படுகிறாள். மகாமக முழுக்கு முடிந்தவுடன், காவிரியில் நீராடி, மக்கள் புனிதமடைகின்றனர்.

ஆடிமாதத்தில் ஆடிப்பெருக்கின் போது வாழ்வில் வளம் பெற காவிரித் தாயை வணங்குகிறார்கள். மயிலாடுதுறையில் காவிரியின் கரையில் ஐப்பசி மாசத்தில் கொண்டாடப்படும் **குட முழுக்கில்** ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மகிழ்கின்றனர்.

காவிரி மற்றும் அதன் 33 கிளை நதிகளின் கரைகளில் பல புகழ்பெற்ற கோயில்கள் அமைந்துள்ளன. புனித திருத்தலங்கள், இயற்கைக் காட்சிகள் நிறைந்த காவிரியின் கரைகள் மனப்

புழுக்கத்தை நீக்கி அமைதி தரும் இடங்களாகத் திகழ்கின்றன.

6. கோரையாறு

கல்லணையில் காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் வெண்ணாறு 43 வது மைலில், நீடாமங்கலம் அருகே முக்கொம்பு என்ற இடத்தில் கோரையாறு, பாமிணியாறு என்று பிரிகிறது. இரண்டு ஆறுகளும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வட்டங்கள் மூலமாகச் சென்று முத்துப்பேட்டை அருகே கடலில் கலக்கின்றன. முக்கொம்பு என்னுமிடத்தில் கோரையாற்றின் நீர்ப்பாசன கொள்ளளவு 22,965 மீட்டராகும். நீர்ப்பாசனம் பெறும் பரப்பளவு 1,20,957 ஹெக்டேராகும்.[1]

இந்த ஆற்றின் நீளம் 41.4 மைலாகும். இதனால் பயன்பெறும் ஆயக்கட்டின் பரப்பளவு 37,344 ஏக்கராகும்.[2] கோரையாற்றிலிருந்து அரிச்சந்திரனாறு, முள்ளியாறு என்று கிளை நதிகள் பிரிகின்றன.

7. பாமிணியாறு

நீடாமங்கலம் அருகே முக்கொம்பில் பிறந்த பாமிணியாற்றின் நீர்ப்பாசனம் 38,357 ஹெக்டேராகும்.[3]

பாமிணியாற்றின் நீளம் 33 மைலாகும். இதனால் பயன்பெறும் ஆயக்கட்டுகளின் பரப்பளவு 37,344 ஏக்கராகும்.

8. முள்ளியாறு

முள்ளியாற்றின் நீளம் 27 மைலாகும். இதனால் பயன்பெறும் ஆயக்கட்டுகளின் பரப்பளவு 26,879 ஏக்கராகும்.[4]

9. பகிர்மானம்

ஆற்றுப்பாசனத்தில் ஆற்றில் தடுப்பணைகள் எழுப்பப்பட்டுத் தலைவாய் எனும் மதகனம்பின் மூலம்

வாய்க்கால், மடைகள், சிறுகால்கள், கண்ணாறுகள் கொண்ட அமைப்பின் வழியே நிலத்திற்கு நீர்கிட்டுகிறது.

பாசன மேலாண்மையில் பகிர்மானம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. மன்னார்குடி வட்டத்தில் நீர் ஆதாரத்திலிருந்து நிலத்திற்கு அதிக சேதாரமின்றி நீர் கொண்டு செல்லப்படுகிறது. அனைத்து நிலங்களுக்கும் உள்ள நீர் உரிமை மதிக்கப்பட்டு முதற்பாசனம் மூலம், நீர்தட்டுக் காலத்திலும் உரிய நீர் கிடைக்கும் வகையில் வசதிகள் வகுத்து பாசனம் செய்யப்படுகிறது.

10. பாலங்கள்

மன்னார்குடி நகருக்குள் **பாமிணியாறு** பாய்கின்றது. இதன் பிரிவுகளாய் கால்வாய்களும் இப்பகுதில் ஓடுகின்றன.

இவ்வட்டத்தில் உள்ள வேளாண்மை வளத்தால் சாலைகளின் அகலம் மிகவும் குறையாக இருப்பதும் ஆறு, கால்வாய் ஆகியவற்றின் மிகுதியால் எங்கே பார்த்தாலும் குறுகலான பாலங்கள் இருப்பதும் அடிக்கடி பாலங்களைக் கடந்து வேறு திசையில் செல்ல வேண்டியிருப்பதும் வட்டத்தில் போக்குவரத்துக்குத் தடையாக உள்ளன. போக்குவரத்திற்காக ஆறு, கால்வாய் போன்ற இடங்களில் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீடாமங்கலம் வழியாகக் கும்பகோணம் செல்வதற்காக இந்நகரின் வடக்குப் பகுதியில் மேம்பாலம் என்னும் பெயரில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

கெழுகத்தூர் வழியாக முத்துப்பேட்டை செல்வதற்கும், கோட்டூர் வழியாகத் திருத்துறைப் பூண்டி செல்வதற்கும், கூத்தாநல்லூர் வழியாக திருவாரூர் செல்வதற்கும் மன்னார்குடி நகரின் கிழக்குப் பகுதியில் பாமிணியாற்றில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கீழப்பாலம் என்று அழைப்பர்.

ஊரின் வடக்கே பாமிணி ஊருக்குச் செல்ல, 1916ல் கட்டப்பட்ட பழமையான பாலம் ஒன்றுள்ளது.

இந்நகரிலிருந்து பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்குப் பேருந்துகள் செல்ல சாலை வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

11. ஏரிப்பாசனம்

இயற்கையான பள்ளங்களிலோ, செயற்கையாகப் பள்ளங்களை வெட்டியோ மழைநீர் தேக்கி வைக்கப்படுகிறது. இவை ஏரிகள் எனப்படுகின்றன. இதிலிருந்து பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றன. பழங்காலத்திருந்தே தமிழர்கள் இம்முறையைப் பின்பற்றினர். தமிழகத்தில் சுமார் 39,000 ஏரிகள் உள்ளன. மாநிலத்தில் நீர்ப்பாசனம் பெறும் பயிர் நிலங்களில் 22% இம்முறையில் நீர்ப்பாசனம் பெறுகிறது. மன்னார்குடி வட்டத்தில் வடுவூரில் 316 ஏக்கர் மிகப்பெரிய ஏரி உள்ளது. இதனால் பல ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்த ஏரி பறவைகள் சரணாலயமாகவும் அமைந்துள்ளது.

12. குளம்

"காடு கொன்று நாடாக்கிக் குளம் கொட்டு வளம் பெருக்கி" எனும் பட்டினப்பாலைத் தொடர் குளப்பாசனத்தின் தொன்மையை உணர்த்தும். குளங்களை அகழ்வதிலும் பராமரிப்பதிலும் சோழநாடு பேரார்வம் காட்டியே வந்துள்ளது. மன்னார்குடி நகரத்தில் 64 குளங்கள் இருந்துள்ளன. தற்சமயம் 17 குளங்களே உள்ளன.

13. கிணறுகள்

நிலத்தின் அடியில் உள்ள நீரோட்டத்தைச் சாகுபடிக்குப் பயன்படுத்துவதற்குக் கிணறுகள் தோண்டப்பட்டன. **கூபதர்சகர்** (Water divener) எனும் வல்லுநர்கள் நிலத்தடி நீரோட்டத்தை

அறிந்து கிணறு தோண்டுமிடத்தைத் தெரிவு செய்தனர். உல்லியர் எனும் கைவினைஞர்கள் கிணறுகளைத் தோண்டினர்.

கிணற்று நீரை மேலே கொண்டுவர இரண்டு உத்திகள் பயன்பட்டன. கிணற்றில் ஆழம் குறைவாக இருந்தால் ஏத்திறைவை மூலம் நீர் பெறப்பட்டது. கிணற்று மேட்டில் நடப்பட்ட குத்துக்கல்லில் ஏத்தமரம் பொருத்தப்பட்டது.

ஏத்த மரத்தின் முன்னும் பின்னுமாக ஒரு ஆள் நடந்து அதை இயக்குவார். இவர் கிணற்றை நோக்கி முன்னோக்கி ஏத்தமரத்தில் நடக்கையில் ஏத்தமரத்தில் பொருத்தப்பட்ட நெடிய கம்பு கிணற்றக்குள் செல்ல அதன் நுனியில் உள்ள நீர் முகரும் சாலில் நீர் நிரம்பும்.

ஏத்தமரத்தில் பின்னோக்கி நடக்கையில் நீர் முகரும் சால், மேலே வரும், கிணற்று மேட்டில் நிற்கும் மற்றொருவர் சாலிலுள்ள நீரை வாய்க்காலில் ஊற்றுவார். ஏத்தமரத்தை இயக்க இரண்டு ஆட்கள் தேவை.

ஆழமான கிணறுகளில் மனிதர்களால் இயக்கப்படும் ஏத்து மரம் பயன்படாது. இக்கிணறுகளில் கபிலை இயந்திரம் பொருத்தப்பட்டு இரு மாடுகளால் இவ்வியந்திரம் இயக்கப்படும்.

இம் முறைகளில் நீர் இறைக்கும் பாத்திரம் சால் எனப்படும். கிணற்றுப் பாசன நிலங்களில் - பாத்திகளாக நிலம் பிரிக்கப்படும். இவை ஒவ்வொன்றும் ஒரு சால் அளவு நீர் கொண்டு பாய்ச்சும் அளவினதாக அமைக்கப்படுவதால் சால் என அழைக்கப்பட்டன.

மன்னார்குடி வட்டத்தில் கிணற்றுப் பாசனம் அதிகமுள்ளன.

பாசன வசதிகளை அமைப்பதில் மூன்று நிலைகள் உண்டு. அணை, தடுப்பு பலகைகள் முதலியன. ஆற்றுப்பாணி

அமைப்புகளை அரசும், குளம், ஏரிப்பாசன அமைப்புகளை உள்ளாட்சி நிர்வாகமும் கிணறுகளை தனியாரும் அமைத்து வருகின்றனர்.

14. கால்வாய்கள்

காவிரி ஆற்றின் நீரைத் தொலைவிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கென்றே ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டன. காவிரியின் கிளை நதிகளின் குறுக்கே மரத்தடுப்புக்கள் வைத்து, இவற்றிலிருந்து சிறகு விரித்துச் செல்லும் கால்வாய்கள் பண்டைக் காலம் முதல் அண்மைக் காலம் வரை தோண்டப்பட்டுள்ளன.

தமிழக மாவட்டங்களுக்குப் பாசன வாசதிகள் செய்து கொடுப்பதற்கு கரிகாலச் சோழனின் கல்லணை தான் முன்மாதிரியாகத் திகழ்ந்தது.

15. கல்வெட்டுக்களில் வாய்க்கால்கள்

இவ்வூர் பிடாகையான சோழநல்லூரில் இராசாதிராசவதி என்ற வாய்க்காலும், ஜெயங்கொண்ட சோழ வாய்க்காலும்[5] இருந்துள்ளது. இதனை இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

"ஐவூர் பிடாகை தில்லை நாயகநல்லூர் இராஜராஜவதி"
"சோழகுல மாணிக்க வதி"
"வீர நாராயணன் வாய்க்கால்"
"கேரளாந்தக வாய்க்கால்"[6]

ஆகியவற்றை கைலாசநாதர் கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

"ஆகோ மல்ல குலகால வாய்க்காலுக்கு"[7]
"ராஜேந்திர சோழ வாய்க்காலுக்கு"[8]

"கைரலோக்கிய மாதேஷிவதிக்கு"[9]

"ராசராச வதிக்கு"[10]

என்ற வாய்க்கால்களை ஜெயங்கொண்டநாதர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

"... யக நல்லூர் பாண்டிமாதேவி வதி"[11]

"குந்த தேவி வதிக்கு"[12]

"ராஜராஜ வாய்க்கால்"[13]

"ராஜாயிஜை வாய்க்கால்"[14]

என்ற வாய்க்கால்களை அண்ணாமலைநாதர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் (கி.பி. 1343) நிலத்தின் எல்லையாக இராசராஜ வதி, வீர நாராயண வாய்க்கால், சோழகுல மாணிக்க வதி, கேரளாந்த வாய்க்கால் எனப் பல நீரோடு வாய்க்கால்களும் வடிகால்களும் சோழ மன்னர்களின் பெயரில் காணப்படுவதால், இப்பகுதி சோழர் காலத்தில் வளப்படுத்தப்பட்டடுள்ளதெனலாம்.

16. குடிநீர் வசதி

இவ்வட்டத்தில் விரிவான குடிநீர்த் திட்டம் நடைபெறுகிறது.

மன்னார்குடி நகரத்தில் மேல் நிலை நீர்த்தேக்கம் ஒன்றுள்ளது. தினசரி ஒரு நபருக்கு 41 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

17. வேளாண் தொழில்

வேளாண்மை நம் நாட்டின் முக்கியத் தொழிலாகும். மன்னார்குடியில் 70 விழுக்காடு மக்கள் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மையிலிருந்து மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவையும், உடை

தயாரிப்பதற்கான இழைப்பயிர்களையும் செய்கிறான். இதில் கால்நடைத் தீவனமும் கிடைக்கின்றது. மேலும் இது நாட்டின் வருவாயில் பாதியைக் கொடுக்கின்றது. தமிழ்நாட்டில், மாநில வருவாயில் 40% வேளாண் தொழிலிருந்து கிடைக்கின்றது.

18. வானிலையும் பருவங்களும்

மழையளவும், வெப்ப நிலையும் வேளாண் தொழிலைத் தீர்மானிக்கும் முக்கிய வானிலைக் காரணிகளாகும். இங்கு வடகிழக்குப் பருவ மழையே அதிகம். ஆரோக்கியமான சீதோஷ்ண நிலை உள்ளது. வானிலைக்கேற்ப பொதுவாக நால்வகைப் பருவங்கள் பகுக்கப்பட்டு அவை ஆண்டுதோறும் மாறி மாறி வருவதின் அடிப்படையில் பல புராணக் கதைகளும் மனிதகுல வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. மாறி வரும் பருவநிலைக்கேற்ப வேளாண் உத்திகள் வகுக்கப்பட்டன. 'ஆடிப்பட்டம் தேடி விதை', 'தை பிறந்தால் வழி பிறக்கும்' முதலான முதுமொழிகளும் இதன் அடிப்படையிலேயே தோன்றின.

ஆடி மாதத்தில் விதைக்கும் பருவத்தின் போது நல்ல விளைச்சல் வேண்டியும், தை அறுவடைக்குப் பின்னர் நன்றி தெரிவிக்கும் பொருட்டும் இம்மாதங்களில் சிறு தெய்வ வழிபாடாக வளமைச் சடங்குகள் இன்றும் நடைபெற்று வருகின்றன. பெரிய ஆலயங்களிலும் ஆடி முளைகட்டு உற்சவம் முதலான சடங்குகள் மேற்கொள்ளப்படுவது இதன் எச்சமே எனலாம். தற்காலத்தில் வேளாண் தொழில் இயந்திரமயமாக்கப்பட்டிருப்பினும், சாகுபடிப் பருவங்கள் போன்றவை வானிலையால் தீர்மானிக்கப்படுவதால் அவை இன்றும் மாற்றமின்றித் தொடர்வது மானுடத்தின் நம்பிக்கையைக் காட்டுகிறது.

இவ்வட்டத்தில் ஆற்று நீர் பாயும் நீண்ட காலப்பயிரை பாசனம் அல்லது சம்பா என்றும், குறுகிய காலத்தில் மழைநீரால் நடைபெறும் விவசாயத்தைக் குறுவை அல்லது கார் என்றும் அழைப்பார்கள்.

19. சோழநாடு சோறுடைத்து

காவிரியின் மூன்று கிளைநதிகளும் பாசனப்பகுதிகளுக்கு நீரினை வழங்குகின்றன. தென்மேற்குப் பருவக் காற்றும், வடமேற்குப் பருவக்காற்றும் மழை பொழிந்தருள்கின்றன. குளங்களும், கிணறுகளும், ஆழ்குழாய் கிணறுகளும் இந்தப் பகுதிக்கேயுரியது. இங்குள்ள நீர்வளத்தால்தான் "சோழநாடு சோறுடைத்து" என்ற பழமொழி அமையக் காரணமாயிற்று.

20. நெல் உற்பத்தி

வளத்தின் காரணமாக, **'புனல் பரந்து பொன் கொழிக்கும்'** நெல்மணிகள் வயல்களில் நிறைந்து காணப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் தமிழகத்தின் தானியக் களஞ்சியமாக இம்மாவட்டம் (பழைய தஞ்சை) சிறப்புப் பெற்றுள்ளது.

இவ்வட்டத்தில் முக்கிய விளைபொருள்களில் முதன்மையானது.

நெற்பயிர்களுடன் கரும்பும் பயிரிடப்படுகின்றன. வடபாதி மங்கலம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியை ஊக்கப்படுத்தி வந்தது. தற்சமயம் இந்த ஆலை செயல்படவில்லை. இப்பகுதியில் விளையும் கரும்புகள் தஞ்சாவூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும் இங்கு வாழையும், மக்காச் சோளமும், பருத்தியும் பயிர் செய்யப்படுகின்றன.

21. மூன்று போக சாகுபடி

மன்னார்குடியைச் சுற்றியுள்ள 128 கிராமங்களிலும் அனைத்துச் சிறுநிலச் சுவான்தார்களும் பண்ணையார்களும் மூன்று போகச் சாகுபடி செய்வர். அதாவது ஆனி அல்லது ஆடி மாதத்தில் குறுவை நாற்று விடப்படும்.

இதற்கென்று ஒரு முகூர்த்த நாளில் 'விதை முகூர்த்தம்' நடத்தப்படும். அன்று ஊர்ப் பொது மக்கள் ஒன்று கூடிக் குறிப்பிட்ட பொதுவான இடத்தில் சிறுபகுதி நிலத்தை உழுது அதில் விதை நெல்லைத் தெளிப்பர். அன்றைய தினம் குறுவை நாற்று விடுவோர் அவரவர் வயலின் ஒரு பகுதியில் விதை நெல்லைத் தெளிப்பர்.

சிறுவிவசாயிகள் இவ்வாறு பயிரிடப்படும் நாற்றினை விலைக்கு வாங்கித் தங்கள் வயலில் நடுவர். ஆற்றில் நீர் வந்தவுடன் வயல்கள் உழப்பட்டு, அதில் குறுவைச் சாகுபடி தொடங்கப்படும். இது ஒரு குறுகிய காலப் பயிர். இந்தக் குறுவைப் பயிர் முதிர்ந்து புரட்டாசி மாத இறுதியில் அல்லது ஐப்பசி மாதத் தொடக்கத்தில் அறுவடைக்குத் தயார் நிலையில் இருக்கும்.

கிராமங்களில் உள்ள மக்கள் குறுவை நெல்லை வியாபாரிகளிடம் விற்று விடுவார்கள். இந்த நெல்லைத் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பொன்னி அல்லது ஐ.ஆர்.எட்டு கலப்பினச் சேர்க்கை (ஒட்டு) நெற்பயிர்களைப் பயிரிடுவர். இவை சம்பா வகையினைச் சார்ந்ததாகும்.

குறுவைப் பயிர் அறுவடை செய்யப்பட்ட பிறகு, குறுவைச் சாகுபடியிலிருந்த 75 சதவீத வயல்கள் மீண்டும் உழப்பட்டு தாளடி சம்பா நடப்படும். குறுவைப் பயிரின் பயிர்க்காலம் மே 15-இல் தொடங்கி செப்டம்பர் 15 வரை ஆகும். (120-135 நாட்கள்)

குறுவை நடவு 9950 ஹெக்டேரிலும், சம்பா நடவு 30444 ஹெக்டேரிலும், தாளடி நடவு 8110 ஹெக்டேரிலும், கரும்பு நடவு 271 ஹெக்டேரிலும், நிலக்கடலை 142 ஹெக்டேரிலும், உளுந்து 192 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகிறது.

சம்பா சாகுபடி ஜூலை 15 தொடங்கி டிசம்பர் 14 வரை நடைபெறும் (155-165 நாட்கள்). தாளடி சம்பா செப்டம்பர் 15 தொடங்கி சனவரி 31 வரை (120-135 நாட்கள்). தாளடி சம்பா நெல் அத்தனை தரமுள்ளதாக இருக்கும்.

உற்பத்தியான நெல் மூட்டைகளை விவசாயிகளிடமிருந்து பெற்று இருப்பில் வைத்து, சுந்தரக் கோட்டையில் உள்ள (Modern Rice Mill) நவீன அரிசி ஆலையின் மூலம் அரிசியாக மாற்றி மக்கள் பயன்படுத்த உதவுகிறது.

நெல் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு மிகக் கருத்துடன் கவனித்து வருகிறது.

சம்பா அறுவடை முடிந்தபிறகு அந்த வயல்களில் உளுந்து அல்லது பயிறு தெளிக்கப்படும். இவை ஊடு பயிராக வளர்ந்து நல்ல பலனைத் தரும். விவசாயிகளைப் பொறுத்த வரையில் எவ்வித கடின உழைப்பும் இல்லாது பெறப்படும் தானிய வகைகள் இவை. வீட்டு உபயோகத்திற்குச் சேமித்து வைக்கப்பட்ட பகுதியினைத் தவிர மற்றவை வியாபாரிகளிடம் விற்கப்படும்.


22. தொகுப்புரை


தொன்மைக் காலம் தொட்டு இன்றளவிலும் விவசாய உற்பத்தியிலும், நீர்ப்பாசனத்திலும் மன்னார்குடி வட்டம் தலையாய இடம் வகிக்கிறது. இதன் இயற்கைச் சூழலும், மண் வளமும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.


அடிக்குறிப்புகள்


1. செய்திமடல் செப்டம்பர் 2006 - பக். 25
2. நெஞ்சை அள்ளும் தஞ்சை - நா. எத்திராஜ் - பக். 184
3. மேலது - பக். 184
4. மேலது - பக். 184
5. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 105/1897
6. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 100/1897
7. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 87/1897
8. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 88/1897
9. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 87/1897
10. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 88/1897
11. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 94/1897
12. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 93, 93A/1897
13. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 94/1897
14. தெ.இ.க. தொகுதி VI A.R. No. 93A/1897

*****


LAND USE PATTERN
N
NAGAPATTINAM
NANNILAM
PONDI STATE
VALANGAIMAN
THIRUVARUR
THANJAVUR
KODAVASAL
NEEDAMANGALAM
NAGAPATTINAM
MANNARGUDI
THIRUTHURAI POONDI
PALK STRAIT
Uncultivable waste
Land put to non Agrl. uses
Cultivable waste
Permanent pasture
Land under tree crops
Current fallows
Other fallows
9
Net area sown


CROP AREA
N
NAGAPATTINAM
NANNILAM
PONDI STATE
VALANGAIMAN
THIRUVARUR
THANJAVUR
KODAVASAL
NEEDAMANGALAM
NAGAPATTINAM
MANNARGUDI
THIRUTHURAI POONDI
PALK STRAIT
LEGEND
PADDY
PULSES
OIL SEEDS
MILLETS
SUGAR CANE
OTHER CROPS


JURISDICTION MAP OF VADAVAR LOWER SECTION-MANNARGUDI.



11. மன்னார்குடியில் கல்வியும் தொழிலும்

1. முன்னுரை

தனிமனிதன், குடும்பம், சமுதாயம், சமூகம், நாடு என்பவற்றின் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்குவது ஒரு நாட்டில் உள்ள கல்விச்சாலைகள் ஆகும். தமிழ்நாட்டின் இலக்கியங்களும், சரித்திரமும் முன்பொரு காலத்தில் தமிழ்நாடு கல்வி கேள்விகளில் மிகச்சிறந்து விளங்கின என்பதைக் காட்டுகின்றன. வேதபாடசாலைகளும் குருகுலமும் போதித்து வந்த கல்வி, ஆங்கிலேயர்களின் வரவால் மாற்றம் பெற்றது. இன்று ஆங்கிலக் கல்வியை அவர்களது கல்வி முறையைப் பின்பற்றி பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்ப மருத்துவ கல்லூரிகள் போன்றவற்றில் பல விதமான பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

2. பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் என்பது வெறும் கட்டிடம் அல்ல. அது ஒரு விளைநிலம், தாயின் கருவறையைக் காட்டிலும் அதிக நாட்களைக் கழிப்பது, பள்ளியின் கருவறையில்தான். நாம் அதனை மறந்தாலும் காற்று மாதிரி, மழை மாதிரி, சூரிய ஒளி மாதிரி அது தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. குருமார்களையும், நண்பர்களையும் அறிமுகப்படுத்திய இடம் பள்ளிக்கூடம்.

3. பின்லே உயர்நிலைப்பள்ளி

மன்னை நகருக்கு பெருமை சேர்த்த கல்வி நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கது பின்லே காலேஜ் ஆகும். 1845 இல் வெஸ்லியன் மிஷினின் ஆக்கத்தால் பள்ளியாக (Lower Secondary School) இது உருவானது. இதனுடைய கல்லூரி, தொடக்கத்தில் (1883-இல்) நாகப்பட்டிணம் வெஸ்லியன் உயர்நிலைப் பள்ளியோடு இணைக்கப் பட்டிருந்தது. இதன் முதல்வராக ரெவரன்ட் W.H. பின்லே என்பவர் இருந்தார். 1895 இல் நாகப்பட்டிணத்திலிருந்த இந்தக் கல்லூரி மூடப்பட்டு பின்பு 1898இல் இதனை மன்னார்குடியில் துவக்கினர். அப்போது உதயமானதே பின்லே காலேஜ். இது சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருந்தது.[1]

1900 இல் இக் கல்வி நிறுவனத்தில் 649 பேர் பயின்றார்கள். இவர்களுள் 62 பேர் கல்லூரியிலும் 209 பேர் உயர் நிலைப்பள்ளியிலும், 234 பேர் இடைநிலைப்பள்ளியிலும் 144 பேர் துவக்கப் பள்ளியிலும் பயின்றார்கள் என்று கெசட்டியர் கூறுகின்றது. இப்பள்ளியின் முக்கிய கட்டடத்தை 1871இல் லார்ட் நேப்பியர் என்பவர் திறந்தார் என்று குறிப்பும் உள்ளது. இதுபோதுமானதாக இல்லை. பல வகுப்புகள் தற்காலிக கூரையில் நடைபெற்றன.

கல்லூரி படிப்பிற்கு ஒரு பருவத்திற்குக் கட்டணம் ரூ. 21 வசூலிக்கப் பட்டதாகவும் இரண்டு ஆங்கிலேயர்கள், நான்கு இந்திய பட்டதாரி ஆசிரியர்கள், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பண்டிதர்கள் இங்கு பேராசிரியர்களாகப் பணிப்புரிந்ததையும், சில ஆவணங்கள் குறிக்கின்றன. நாகை, திருவாரூர், தஞ்சை போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து மாணவர்கள் கல்வி பயின்றதாகவும் அறிய முடிகிறது.[2]

பள்ளியில் தங்கும் விடுதி வசதி இல்லை. நகரத்தில் பாதுகாப்பில்லாத மாணவர்களை அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு வகுப்பு ஆசிரியர்கள் சென்று மேற்பார்வை செய்தனர். நான்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. வெஸ்லியன் மிஷின் நடத்திவரும் கல்லூரி தஞ்சை மாவட்டத்திலேயே உயர்தரக் கல்லூரியாக திகழ்ந்தது. கிறிஸ்துவ சமயம் பின்லே காலேஜ் மூலம் மன்னார்குடியில் கல்வி வளர்ச்சிக்கு தளம் அமைத்தது. அயல்நாட்டுக் கல்வி மூலம் ஆசிரியர், நிர்வாகிகள், அஞ்சல், சட்டத்துறை மற்றும் தொழில் நுட்பக் கல்வியிலும் மாணவர்கள் பங்கு பெற உதவியது.

4. ராஜ சாஸ்திரிகள்

பிரம்மஸ்ரீ ராஜ சாஸ்திரிகள் மன்னார்குடியில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தனது அதிசயத்தக்க புனித வாழ்க்கையாலும், தன்னிகரற்ற புலமையாலும் பிரகாசித்து, வந்தவர்.

நாயக்க மன்னர்களில் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீமத் அப்பய்ய தீட்சிதர் அவர்களின் வம்சத்தில் ஒன்பதாவது நேர் தலைமுறையைச் சார்ந்தவர் சாஸ்திரிகள். கி.பி. 1815 மே மாதம் 28ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (யுவ வருஷம் வைகாசி மாதம் 17ம் தேதி) திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார். இவருடைய தந்தையும் பாட்டனாரும் திருவாரூருக்கு அண்மையில் உள்ள கூத்தம்பாடி என்ற கிராமத்தில் வசித்துவந்தனர். இவர்களுக்கு இக்கிராமம் மானியமாக கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

பிரம்மஸ்ரீ ராஜ சாஸ்திரிகள் ஸாமவேத லஷணங்களை தன் பாட்டனாரிடமும், தனது தந்தையாரிடம் காவிய, நாடகங்களையும் கற்றுத் தேர்ந்தார். தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே வடமொழியில் நன்கு பேசவும், அழகான கவிதைகளைப் புனையவும் ஆற்றல் பெற்றிருந்தார்.

மன்னார்குடியில் இவருடைய முதல்குரு நாராயண ஸரஸ்வதி. பிறகு இவர் இங்கு தாய்மாமன் வீட்டில் தங்கிக்கொண்டு கோபாலாச்சாரியார் அவர்களிடம் சில வருடங்கள் தர்க்கம், வியாகரண சாஸ்திரங்களைக் கற்றார். இருபது வயதில் சாஸ்திரங்களில் நடந்த விவாதங்களில் வெற்றிவாகை சூடத் துவங்கினார்.

மஹாபாஷ்யம் படிப்பை மேலக்காவேரி சின்னண்ணா தீட்ஷதரிடமும், மீமாம்ஸாவை கும்பகோணம் ரகுநாத சாஸ்திரிகளிடமும் கற்று, மன்னார்குடி வந்து நிரந்தரமாகத் தங்கினார். இவருக்கு சாஸ்திரி என்ற பட்டம் இவருடைய குருவான கோபாலாச்சாரியாரால் வழங்கப்பட்டதாகும்.

இவர் வசித்துவந்த மன்னார்குடி கீழமுதல் தெரு கதவு இலக்கம் 82 என்ற வீடு, தற்போது சங்கரமடமாகத் திகழ்கிறது.

குருகுலவாசம் முடிந்த பிறகு சாஸ்திரிகள், பராசரஸ்ம்ருதி, மாதவீய ஸ்ம்ருதி, வைத்தியநாத தீஷதயம், ஸ்ரீமத் அப்பய்ய தீஷதரின் கிரந்தங்கள், வேதாந்ததேசிகரின் கிரந்தங்கள் முதலியவைகளைக் கவனமாக ஆராய்ந்தார். பிருஹத் ஜாதகம், காலாம்ருதம், காவ்யபிரகாசம், காவீயதர்ப்பணம் முதலிய மற்ற நூல்களையும் ஆராய்ந்து தெளிந்தார்.

சாஸ்திரிகள் தினமும் அதிகாலை மூன்று மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்து சிஷ்யர்கள் பின்தொடர கோபிநாதன் குளத்திற்கு ஸ்நானம் செய்யச் செல்வார். அப்போது அவருடைய சீடர்கள் பின்னே செல்வார்கள். போகும்போது பாடங்களை சந்தேக நிவர்த்தி என்ற வகையில் சொல்லித் தருவார்.

காலையில் செய்ய வேண்டிய வைதிகக்காரியங்கள், ஜபங்கள் முடிந்தபிறகு எட்டு மணி முதல் 11 மணி வரை பாடம் நடக்கும். பிற்பகலில் தர்க்கம், வியாகரணம், மீமாம்சா, அலங்காரம் ஆகிய பாடங்கள் குழுக்களாக நடைபெறும்.

மறுபடியும் சூர்யாஸ்தமன வேளையில் ஸந்தியா வந்தனம் செய்வதற்கு சிஷ்யர்களுடன் குளத்திற்குச் செல்வார். ஓய்வு நேரம் கிடைக்கும் பொழுது மஹாபாரதத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். இவரைத்தேடி தரிசிக்கும் எண்ணத்துடன் வெகு தூரத்திலிருந்து புலவர்களும், வித்வான்களும் வருவது வழக்கமாகிப்போனது.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, மைசூர் ஆகிய மன்னர்களின் தர்பார்களிலும் வித்வத் ஸ்தலங்களிலும் இவருக்கு முதன்மை இடம் உண்டு. அங்கு ஆண்டுதோறும் சென்ற இவரால் இம்மன்னர்கள் கௌரவம் பெற்றனர்.

இவரிடம் பாடம் பயில வருபவர்கள் அனேகமாக (நம்நாட்டில் எல்லா மாநிலங்களிலிருந்தும்) முதல்தெருவின் எல்லா வீட்டின் திண்ணைகளிலும் ஓய்வுபெற உறங்குவது வழக்கம். இவர்கள் தங்கும் வீட்டின் சொந்தக்காரர்கள், அவர்களுக்கு அன்னமிடுவதையே தங்களின் புனிதமான செயலாகக் கருதினர். அதனால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த முதல் தெரு, தங்கிப்படிக்கும் பல்கலைக்கழகமாகவே இருந்தது என்றால் அது மிகையாகது.

இவருக்கு அப்போதைய ஆங்கில அரசு மிக உயர்ந்த விருதான "மஹாமஹோபாத்யாய" என்ற விருதை அளிக்க முன்வந்தபொழுது இவர் அதனை ஏற்க சென்னை போக மறுத்துவிட்டார். ஆனால் அரசு அதனை இவருக்கு தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் தந்து, சகல மரியாதைகளுடன் இவருடைய வீட்டிலேயே கொண்டுபோய்த் தரும்படி பணித்தது.

ஜெர்மனியைச்சேர்ந்த மாக்ஸ்முல்லர் என்ற வடமொழி அறிஞரிடம் ஒருவர், "நீங்கள் ஸ்மஸ்க்ருதத்தில் இத்தனை புலமை பெற்றிருக்கிறீர்களே, அம்மொழியின் நாடான இந்தியாவிற்கு ஏன் செல்லவில்லை?" என்று கேட்டபொழுது அதற்கு அவர் அளித்தபதில் மிக மிக அற்புதமானது.

"நான் இந்தியா செல்லவேண்டும் என்று விரும்பினால் அது சென்னை மாகாணத்தின் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியில் வசிக்கும் ஸ்ரீமத் ராஜூ சாஸ்திரிகளைச் சந்திப்பதற்காக மட்டும் இருக்கும்".

இதிலிருந்து இவருடைய புலமையின் கடல் கடந்த புகழையும் அறியலாம். இப்படி இவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல அற்புதங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவர் வாழ்ந்த காலத்தில் மன்னார்குடியிலிருந்த பின்லே கல்லூரியின் முதல்வர் ஒரு வெள்ளைக்காரர். அவரும் இவரிடம் சில சமயங்களில் மதம் தொடர்பான சந்தேகங்களைக் கேட்க வருவாராம்.

தற்போதைய காஞ்சிகாமகோடி மடத்தின் முக்தியடைந்த பரமாச்சார்யாரின் குருவிற்கு இவர் குரு. அவ்விதமே சிருங்கேரி மடத்தின் பூர்வீக பீடங்களுக்கும் இவர் குருவாக விளங்கினார்.

இவரால் இயற்றப்பட்ட நூல்கள்

1. ந்யாயேந்து சேகரம்
2. ஸ்த்வித்யாவிலாசம்
3. ஸாமருத்ர பாஷ்யம்
4. சிவமஹிம கலிகா ஸ்துதி பாஷ்யம்
5. ஸ்ரீராஜகோபால மஹநித்வை

இதில் ராஜகோபால மஹோத்சவ அனுக்ரமானிகா என்பதில் 18 நாள் உற்சவத்தை 23 ஸ்லோகங்களால் அற்புதமாக வர்ணித்து எழுதியிருக்கிறார். இதிலிருந்து இவர் மன்னார்குடியில் இருந்த நாட்களில் உற்சவ காலங்களில் இரண்டு வேளைகளிலும் ஸ்வாமி தரிசனம் செய்ய வந்தார் என்று தெரிகிறது.

4-3-1903 மாசிமாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை இவர் முக்தியடைந்தார். இவருக்கு முன்னரே இவருடைய மனைவி சுமங்கலியாக இறைவனடி சேர்ந்தார்கள்.

மனைவி இறந்தபொழுது இவர் துக்கத்துடன் குறிப்பிட்டவை மிகவும் சாரமானது. மனைவி இறந்த துக்கத்தில் இவர் அழுதபொழுது ஒருவர் இவரை அணுகி "மிகப்பெரிய ஞானியான நீங்களே இப்படி அழலாமா?" என்று கேட்டபொழுது, இவர், மனைவி இறந்த துக்கம் ஒருபுறம் இருந்தாலும், இவள் தன்னுடன் என்னுடைய அக்னிஹோத்திரத்தையும் எடுத்துச் செல்கிறாளே என்றுதான் அழுகிறேன்" என்றாராம். மனைவியில்லாதவன் அக்னிஹோத்ரம் செய்யும் தகுதியை இழக்கிறான். இவர் நிர்வாணம் அடைந்தபோது எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களும் அந்திம ஊர்வலத்தில் கலந்து கொண்டதும், அப்பொழுதிருந்த பின்லே கல்லூரி முதல்வர், மயானம் வரை வெறுங்காலுடன் நடந்து வந்து, இவருக்கு புகழஞ்சலி செய்ததும் மறக்கவோ, மறுக்கவோ முடியாதவைகளாகும்.[3]


5. தேசீய உயர்நிலைப்பள்ளி

அறிவு ஜீவிகளை உண்டாக்கும் கல்வித் தொழிற்சாலையாக நகரின் மையப்பகுதியில் இந்தப் பள்ளி அமைந்துள்ளது. 1899 ஆம் ஆண்டில் 100 மாணவர்களுடன் தொடங்கி, நூற்றாண்டைக் கடந்து இன்று 4000 மாணவர்களுக்கு மேல் கொண்டுள்ளது இப்பள்ளி. மன்னார்குடி தேசீய உயர்நிலைப்பள்ளி என்றால் மாநிலம் அறிந்த பள்ளி என்றாகியது.


சமுதாய நலன்கருதி சீரிய நோக்குடன் திருவாளர்கள். T.S. சிங்காரவேலு உடையார் மற்றும் S.ராமதுரை அய்யர் இவர்களின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட பாரம்பரியமிக்க பள்ளியாகும். திருவாளர்கள் N.S. வெங்கட்ராம அய்யர், T.S. வீரராகவாச்சாரியார், திரு. S. வைத்தியநாத அய்யர், திரு. வி. ஸ்ரீனிவாசன் ஆகியோரது சீரிய முயற்சி மற்றும் கடின உழைப்பால் உயர்ந்தது இப்பள்ளி.[4]



பின்லே மேல்நிலைப் பள்ளி



தேசிய மேல்நிலைப் பள்ளி



தேசிய மேல்நிலைப் பள்ளி பார்வையாளர் புத்தகத்தில்
மகாத்மா காந்தி எழுதி கையொப்பமிட்டது

இப்பள்ளியின் பழைய மாணவர்கள் நாட்டின் பல முக்கிய பதவிகளை வகித்து புகழ் பெற்றவர்கள்.

* அமரர் ஏ.வி. விஸ்வநாத சாஸ்திரி (ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதி)
* அமரர் சி.ஆர். சீனிவாசன் (சுதேசமித்திரன் நாளிதழ் ஆசிரியர்)
* எஸ். ராஜகோபால அய்யங்கார் (உச்சநீதிமன்ற நீதிபதி)
* டாக்டர் என்.ஆர். சீனிவாசன் (பிரபல விஞ்ஞானி)
* திரு. கே. சந்தானம் (முன்னாள் மத்திய அமைச்சர்)
* மன்னை நாராயணசாமி (தமிழக அமைச்சர்)
* கே. எஸ். பக்தவத்சலம் (சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி)
* முன்னாள் டி.ஜி.பி. வைகுந்த், I.P.S.
* டி. எஸ். இராகவன் (முன்னாள் இந்தியன் வங்கி தலைவர்)
* கோபால்சாமி, I.A.S. (தேர்தல் கமிஷனர்)
* டாக்டர் கண்ணையன் (விவசாய பல்கலைக்கழக துணைவேந்தர்)
* எஸ். ரெங்கநாதன் (காவிரி நடுவர் மன்றம் அமையக் காரணமாக இருந்தவர்.)
* காகாஜி (சுதந்திரப் போராட்ட வீரர்)
* திரு. வி. திவாகர் (கல்வியாளர்)

6. மன்னை நாராயணசாமி

இப்பள்ளியின் பழைய மாணவர். மன்னார்குடியில் பிறந்த மன்னை நாராயணசாமி, பெரியாரின் திராவிடக்கழக சுயமரியாதைக் கொள்கையில் கவரப்பட்டு, அக்கட்சியின் சிறந்த தொண்டனாக விளங்கியவர். பெரியார், அறிஞர் அண்ணா இவர்களுடன் நெருங்கிப் பழகியவர். மன்னார்குடியிலும், அதன் சுற்று வட்டாரத்திலும், கட்சி பேதமின்றி அனைவருடனும்

பாசத்துடன் பழகும் நல்ல பண்பாளராக விளங்கியதால் இவரை அனைத்துக் கட்சியினரும் நேசித்துப் பழகினர்.

அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து, தஞ்சை மாவட்டச் செயலாளராக பணியாற்றிய இவர், அக்கழகம் நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். கலைஞர் கருணாநிதி அமைச்சரவையில் கூட்டுறவு மற்றும் உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பணிபுரிந்தார்.

இவர் அமைச்சராகப் பணியாற்றியபோது. மன்னார்குடியில், குடிநீர்மேல் நிலைத் தொட்டியையும், பாமணி உர ஆலையையும், அரசினர் ராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரியையும் உருவாக்கினார்.

பாவேந்தர், பாரதிதாசன் பாடல்களில் மிகவும் ஈடுபாடு உள்ளவர். ஒரத்த நாட்டில் பாவேந்தர் தமிழ் இயக்க மாநாட்டை 1982-ல் நடத்தினார். தனது எழுபத்தைந்தாவது வயதில் 17-10-98 அன்று காலை மரணமடைந்தார்.[5]

7. இதர பள்ளிக் கூடங்கள்

*தூயவளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
*லார்ட் கென்ஹில்ஸ் மேல்நிலைப்பள்ளி
*அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
*ஸ்ரீகணபதிவிலாஸ் உயர்நிலைப்பள்ளி
*ஸ்ரீஜெயந்திரர் உயர்நிலைப்பள்ளி
* விவேகானந்தர் உயர்நிலைப்பள்ளி
* தேவி மெட்ரிக்குலேசன் பள்ளி
* பாரதிதாசன் மெட்ரிக்குலேசன் பள்ளி
* சண்முகா மெட்ரிக்குலேசன் பள்ளி
* சுபாஷ்சந்திரபோஸ் மெட்ரிக்குலேசன் பள்ளி
* அசோகா விசுவிஹார் மெட்ரிக்குலேசன் பள்ளி

8. தொழிற்பயிற்சி நிலையங்கள்

* இந்திரா காந்தி I.T.I.
* கிராம ஜெயத்தம்மாள் I.T.I.
* விஸ்வேஸ்வரய்யா I.T.I.
* ஹைடெக் I.T.I.

9. கணிப்பொறி நிலையங்கள்

* ஆப்டெக் கம்யூட்டர்ஸ்
* C.S.I. கம்யூட்டர்ஸ்
* S.S.I. கம்யூட்டர்ஸ்
* இன்போ கம்ப்யூட்டர் ஸ்கூல்
* ரீஜினல் கம்ப்யூட்டர் டெக்
* கேம்பிரிட்ஜ் கம்ப்யூட்டர்ஸ்
* பிட்ஸ் கம்ப்யூட்டர்ஸ்

10. கல்லூரிகள்

1. ஏ.ஆர். பொறியியல் கல்லூரி
2. மன்னை ராஜகோபாலசாமி அரசினர் கலைக்கல்லூரி
3. செங்கமலத்தாயார் கலை அறிவியல் கல்லூரி, சுந்தரக்கோட்டை
4. அல் - இராவுத்தர் கலை அறிவியல் கல்லூரி, கூத்தாநல்லூர்
5. மாவட்ட ஆசிரியர் பயிற்சிபள்ளி நிறுவனம், குமரபுரம்
6. தூயவளனார் பெண்கள் ஆசிரியர் ப. நிறுவனம்.
7. சுருளை மழலை ஆசிரியர் பயிற்சிபள்ளி நிறுவனம், குமரபுரம்
8. அருண் கேட்டரிங் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கல்லூரி, சஞ்சீவிகுளம்
9. ராயல் ஹேட்டரிங் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கல்லூரி, குமரபுரம்
10. மருதன் கேட்டரிங் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், மேலவாசல்
11. வெங்கடேஸ்வரா பாரா மெடிக்கல் கல்லூரி
12. ஸ்ரீகுமரகுருபரர் பாரா மெடிக்கல் நர்சிங் கல்லூரி
13. கார்த்திகேயன் பாரா மெடிக்கல் கல்லூரி

இவ்வட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் ஐம்பது விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றுள்ளனர். மன்னர்குடி வட்டத்தில் அதிக அளவிலான மேல்நிலைப்பள்ளிகளும்

உயர்நிலைப் பள்ளிகளும் ஆரம்பப் பள்ளிக் கூடங்களும் இயங்குகின்றன. இரண்டு வேதபாட சாலைகளும் இயங்குகின்றன.

11. முதியோர் கல்வியில் மூத்த மன்னார்குடி

அனைத்திந்திய அளவில் அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் என்றும் குறிப்பாக தமது இளமைக்காலத்தில் படிக்கத் தவறியவர்கள் முதியோர் கல்வித் திட்டத்தில் சேர்ந்து கல்வியறிவு பெறவேண்டும் என்ற நோக்கம் இந்தியாவில் 1938ல் செயல்படத் துவங்கியது. இந்தியாவில் முதல் அனைத்திந்திய முதியோர் கல்வி மாநாடு டெல்லியில் 1938ம் ஆண்டில் நடைபெற்றது. முதல் அகில இந்திய முதியோர் கல்வி மாநாடு கேம்ப்ரிட்ஜில் 1929-இல் நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி நகரத்தில் 1927ம் ஆண்டிலேயே முதியோர் கல்வி இயக்கம் முழுவீச்சில் நடைபெற்றது.

12. எஸ்.வி. கனகசபை பிள்ளையின் கல்வித் தொண்டு

மன்னார்குடி நகரத்தில் சஞ்சீவிகுளம் அருகில் வாழ்ந்து வந்த திரு. எஸ்.வி. கனகசபைப் பிள்ளை அவர்கள் பொதுப்பணித்துறையில் உதவிப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அவர் 1924 ம் ஆண்டில் தமது பணியிலிருந்து ஓராண்டு காலம் விடுப்புப்பெற்று சென்னை சென்றார். அங்கு அவர் அன்னிபெசண்ட் அம்மையாரின் சர்வசமய சமரசக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டார். அதே இயக்கத்தில் ஒரு பிரிவாக உதய நட்சத்திர சபை என்ற பெயரில் ஒரு அமைப்புக்காக புது யுகம் என்ற தமிழ் மாத இதழைத் துவக்கி நடத்தி வந்தார்.

28.4.1925 ம் ஆண்டு சென்னையில் உள்ள கோகலே மன்றத்தில் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் பேசும் போது கனகசபை

பிள்ளையவர்கள் தன்னுடைய நகரத்தில் கிராம மக்களின் கல்வியறிவைப் பெருக்க முதியோர் கல்வித் திட்டத்தை தம் செலவில் நடத்த முன்வருவதாக தெரிவித்தார்.

உடனே அன்னிபெசண்ட் அம்மையார் அவர்கள் சென்னையில் அந்த மன்றத்தில் அதே நாளில் அதே நேரத்தில் மன்னார்குடியின் முதியோர் கல்வி இயக்கத்தின் தொடக்கவிழா இதுதான் என்று அறிவித்தார். **இவ்வாறாக இந்தியாவின் முதல் முதியோர் கல்வி இயக்கம் மன்னார்குடியில் துவங்கப் பெறுவதற்கு 1925 இல் சென்னையில் தொடக்கவிழா நடைபெற்றது.**[6]

13. முதியோர் கல்வி பாடநூல்

கனகசபை பிள்ளையவர்கள் மன்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத மக்களுக்கு கல்வியறிவினை எளிமையாக ஏற்படுத்த, ஒரு முன்மாதிரியான பாடநூலை உருவாக்கினார். அதை சென்னையிலிருந்த தம் இயக்கத்தின் உறுப்பினர்களான கல்லூரி மாணவர்களிடம் கொடுத்து அவர்கள் தங்களது கிராமங்களுக்கு கோடை விடுமுறைக்குச் செல்லும் போது அப்பாட நூலைப் பயன்படுத்தி முதியோர்களுக்கு கல்வி கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். அந்தப் பாடநூலில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் குறிப்பெடுத்து வந்து தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். இவ்வாறு 1925-இல் தயாரிக்கப்பட்ட பாடநூல் பயன்பாட்டிற்குப் பிறகும் பல திருத்தங்கள் செய்யப்பட்டு 1927-இல் அச்சடிக்கப்பட்டது.[7]

இப்புத்தகத்தற்கு 'முதியோர் கல்வி நூல்' என்று பெயரிடப்பட்டதற்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்தது. (அரசாணை - பகுதி 1 - 4-4-1933) பல்வேறு பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்கள் அங்கிருந்து இந்த புத்தகங்களைப் பெற்று

கல்வி கற்பித்தனர்.[8] முதியோர் கல்வி என்ற பெயர் உண்மையிலேயே முதியோராக இருந்தாலும் அவர்கட்கு மனநிறைவு அளிக்காது என்று உணர்ந்து முதியோர் கல்வி என்ற பெயருக்குப் பதிலாக **வாலிபர் கல்வி** என்ற பெயரினை தம்முடைய முதல் நூலுக்கு தலைப்பாக அமைத்தது அவருடைய உளவியல் நுட்பத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

14. கௌமார குருகுலம் :

மன்னார்குடி கௌமாரகுருகுலத்தில் இலவசமாக கல்வி கற்பிக்கப்பட்டது. வேளாண்மைக் காலம் முடிந்த பிறகு வருகின்ற ஆறு மாத காலத்தில் வகுப்புகள் நடைபெற்றன. கற்பிக்கப்பட்ட பாடங்கள்

1. மதம், ஒழுக்கம்
2. கிராமப் பொருளாதாரம்
3. சுகாதாரம்
4. தமிழ்மொழி
5. வரலாறு புவியியல்
6. அரசியல் நிர்வாகம்
7. இயற்பியல்

ஒரு குழுவிற்கு 8 வாலிபர்கள் விகிதம் வேளாண்மைக் கல்விக்காக 18 லிருந்து 25 வரை வயதுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் பத்து ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற முதல்வர் ஒருவரை அழைத்து வந்து மாணவர்களுக்கு கரும்பு சாகுபடி செய்யும் முறைகள் கற்பிக்கப்பட்டது.

மாணவர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களில் வேலை செய்தனர். ஒவ்வொரு மாணவரும் ரூ.500 செலுத்தினர். கரும்பு அறுவடை முடிந்த பிறகு கிடைத்த தொகை மாணவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதியோர் கல்வி கௌமார குருகுலம் தனது மாணவர்களை எந்தவித வேறுபாடுமின்றி நடத்தி வந்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்கு வகுப்புகள் நடக்கும் காலங்களில் இலவசமாக உணவு அளிக்கப்பட்டது.

கௌமார குருகுலத்தின் வாலிபர் கல்வி பாடத்திட்டத்திற்காக எட்டு பாடநூல்கள் மாணவர்களுக்காக அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

15. இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம்

முதியோர் கல்விப் பணிகள் கௌமார குருகுலத்தில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டும் அமைந்தால் போதாது என்று எண்ணி மன்னார்குடி நகரத்தைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கும் கல்வி அறிவினைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு இரண்டு மாடுகள் இழுக்கக்கூடிய வண்டி ஒன்று செய்து, அதில் நூல்கள், கல்வியறிவிற்கான ஒளிப்படவில்லைகள், இசை ஒலித்தட்டுகள், அறிவியல் படங்கள் ஆகிய பொருட்களையும் வைத்து நிர்வகிக்கும்படியான ஒரு நடமாடும் நூலக வண்டி தயாரிக்கப்பட்டது.

இதற்கு உரிய அளவுகள் அறிவுரைகள் நூலகத் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் வழங்கினார்கள். அவரே நேரில் வந்து 18.10.1931 ம் நாள் விஜயதசமி தினத்தில் இந்த நடமாடும் நூலக வண்டியைத் துவக்கி வைத்தார். முதன்முதலில், மன்னார்குடியிலிருந்து புறப்பட்டு இந்நூலகம், மேலவாசல் சிற்றூருக்குச் சென்றது. மன்னார்குடியிலிருந்து பன்னிரண்டு மைல் சுற்றளவிலிருந்த 95 சிற்றூர்களுக்கு இந்த நடமாடும் நூலக வண்டி சென்று வந்தது. இந்திய நாட்டிலேயே முதல் நடமாடும் நூலகம் இதுதான் என்பது **மன்னார்குடி நகரத்திற்கு பெருமை சேர்க்கக் கூடியதாகும்.**

ஒவ்வொரு நூலிலும் நூல்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்பு அச்சடிக்கப்பட்டு முதல் பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு சிற்றூரிலும் சிலர் பொறுப்பேற்று நூலக வண்டியிலிருந்து தேவையான நூல்களைக்

கடனாகப் பெற்று அடுத்த முறை நூலக வண்டி வரும்போது அவற்றைத் திரும்பக் கொடுத்து புதிதாக வேறு நூல்களைப் பெற்று வந்தனர்.

இந்த நடமாடும் நூலக வண்டியில் 1931ம் ஆண்டு துவக்க நிலையில் 280 நூல்கள் இருந்தன. 1933ல் நூல்களின் எண்ணிக்கை 2211 ஆக உயர்ந்தது. ஒரு வருடத்திற்கு 275 முறை சிற்றூர்களுக்கு இந்நூலகம் சென்று வந்தது. ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 3782 நூல்கள் கொடுத்து வாங்கப்பட்டன.[9]

கௌமார குருகுலத்தின் சிறப்பான கல்வித் தொண்டு மற்றும் நடமாடும் நூலகத் தொண்டு ஆகியவை பல அறிஞர்களாலும் போற்றப்பட்டது. இந்த நடமாடும் வண்டி நூலகத்தின் மாதிரி இன்றும் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மன்னார்குடியில் அரசு கிளை நூலகம் ஒன்றும், கோட்டூர் அரங்கசாமி நூல் நிலையமும் உள்ளன. கல்கிப்பூங்கா நகராட்சி அலுவலக வாசக சாலையும், நகராட்சி படிப்பகமும் உள்ளன. வட்டம் முழுதும் பதினாறு அரசு கிளை நூலகங்கள் உள்ளன.

16. கௌமார குருகுலத்தின் தொடர்பணிகள்

1933 ம் ஆண்டு கனகசபை பிள்ளை அவர்கட்கு கண்பார்வை குறைந்ததால் கல்விப்பணிகளில் அதிகமாக உழைக்க முடியவில்லை. அவருடைய பணியினை அவரது மருமகன் திரு. எம். இராமலிங்கம் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார். 1937 ம் ஆண்டில் நடமாடும் நூலக வண்டிப் பணியில் ஈடுபட்டிருந்த உதவியாளர்களில் சிலரை வேலைநீக்கம் செய்தது தெரிய வருகிறது.

மேலும் 1936 ல் தஞ்சை மாவட்ட போர்டின் ஆதரவில் ஒரு மோட்டார் வாகனத்தில் நடமாடும் நூலகம் அமைக்கப்பட்டு அதில் பேசும்படம் காண்பிக்கப்பட்டதால் சிற்றூர் மக்கள் மோட்டார் வண்டி நூலகத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டனர். மேலும் மோட்டார்வண்டி நூலகத்தில் நூல்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் ஒரு மருத்துவக் குழுவும் இணைந்து வந்து சிறிய அளவில் அறுவைச் சிகிச்சைப் பணிகளும் செய்து வந்ததால் அது மன்னார்குடி மாட்டுவண்டி நூலகப் பணியின் பயன்பாட்டைக் குறைத்து விட்டது.

மன்னார்குடியில் இந்தியாவின் முதல் முதியோர் கல்வித்திட்டமும் முதல் நடமாடும் நூலகமும் செயல்பட்டன என்பது மன்னார்குடிக்கு மேன்மேலும் பெருமை சேர்க்கும் பணிகளாகும்.[10]

17. கோட்டூர் இரங்கசாமி முதலியார் - நூலகம்

கோட்டூரில் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த ரங்கசாமி முதலியார் தனது சொத்துக்கள் முழுவதையும் பல்வேறு அறச் செயல்களுக்காக 10.01.1907ஆம் நாளன்று உயில் எழுதி வைத்தார். மாணவர்களுக்கான இலவசக் கல்வி, இலவச உணவு, இருப்பிடம், போன்ற காரியங்களுக்காக தனித்தனியாக உயில் எழுதிவைத்தார். இந்த அறச் செயல்களுள் ஒன்றே இந்த நூலகம்.


தமிழகத்தில் மிகச் சிறந்த தொன்மையான நூலகங்களில் இதுவும் ஒன்று. இந்நூலகத்தின் முதல் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் 1938 லும் இரண்டாவது 1948லும் வெளியிடப்பட்டது. இதில் 5053 தமிழ்புத்தகங்களும், 729 சமஸ்கிருத புத்தகங்களும், 274 ஆங்கிலப் புத்தகங்களும் சேர்த்து 6056 புத்தகங்கள் இருந்தன. 30.6.1973-ல் 10,216 புத்தகங்களாக இருந்தது.

புத்தகங்கள் மரஅலமாரியில் ஒழுங்காகவும் வரிசைக் கிரமமாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இங்குள்ள

கௌமார குருகுலக் கல்வித்தொண்டின் எல்லை.

குறிப்பு:-(1) முன்பு மாட்டங்களும் மன்னார்குடியைச் சுற்றி முறையே 6, 8, 12வைகல் தூரத்தில் உள்ளன. 12 கைம்ல் வட்டமே எல்லை.

(2) செப்பு முகிகோணல்கள் கௌமார குருகுலக் கிளைகளைக் காண்பிக்கின்றன.



மெனை அறியச்செய்வதாகும். அவர்களை புத்தகங்களிடம் அன்பு பாராட்டும்படி செயலாற்றவேண்டியதாகும். அவர்களுடைய வாழ்க்கையில் புத்தகங்களை இன்றியமையாத தாகச் செய்யவேண்டி அவர்களுக்கு அறிவூட்டவேண்டியதாகும். அப்போதுதான் அவர்களுக்குப் புத்தகசாலையின் அருமை தெரியவரும். புத்தகசாலை அவர்களுக்கு அத்தியாவசியமாகும்."

ஆகவே நமது நிலையங்கள் புத்தகசாலைகளை வளர்ப்பதற்கு முயலவேண்டுமென நம்புகிறோம்.

14—12—'12

கு. வி. கனகசபை.

MOBILE LIBRARY - MAP OF SERVICE AREAS

வாலிபர் கல்வி.

முதல் வாசகப் புஸ்தகம்

(Adult Education—First Reader.)




ஆசிரியர்
இராவ்சாகிப்
கு. வி. கனகசபைப் பிள்ளை.
அஸிஸ்டண்ட் இஞ்சினியர் P. W. D.
சமசமாஜ்க்கம் பத்திராதிபர்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

பிரபலமுறை

1927.

THE FIRST ADULT EDUCATION PRIMER IN TAMIL



BULLOCK CART MOBILE LIBRARY - INAUGURATION

மதிப்புமிக்க மிகப்பழைய நூல்களைத்தேடி எழுத்தாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் குறிப்பெடுத்துப் பயன்பெற்றுள்ளனர்.

இந்த நூலகத்தின் கணக்குகள் மாவட்ட நீதிபதியின மேற்பார்வையில் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்ட கெசட்டில் வெளியிடப்படுகிறது.[11] மேலும் இந்த அறக்கட்டளையின் ஆண்டு வரவு செலவு கணக்குகளும் மாவட்ட கெசட்டில் வெளியிடப்படுகிறது.

கே.ஆர்.எம். எஸ்டேட் என்றழைக்கப்படும் இந்த அறக்கட்டளை தற்சமயம், தமிழக அரசின் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.[12]

18. தொழில்கள்

தொழில்களே வாழ்க்கைக்கு ஆதாரங்கள். அவைகள் இல்லையேல் மானுட வாழ்க்கை எளிதாக இராது. தொழில்களைக் கொண்டு மனிதனின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலும். உலகில் பல புரட்சிகள் தோன்றி பல முன்னேற்றங்களுக்கு வழிகோலின. அவற்றுள் வேளாண்புரட்சியும், தொழில்புரட்சியும் இன்றியமையாதவை.

மனிதன் சுமார் 10,000 வருடங்களுக்கு முன்பே வேளாண்மையைக் கண்டறிந்து உணவு, உடைகள் தேவையைப் பூர்த்தி செய்யத் தெரிந்து கொண்டான். ஆனால் வேளாண்மை உலகில் நிலைத்த நீண்ட நாட்களுக்குப் பிறகே அவன் மற்ற தொழில்களை, இரண்டாம் வகைத் தொழில்களாகக் கற்றுத் தெரிந்து கொண்டான். தொழிற்புரட்சி சக்கரத்தை மனிதன் கண்டுபிடித்த பிறகு எழுந்ததாகச் சொல்லலாம் என்றாலும், உண்மையில் தொழிற்புரட்சி 200 வருடங்களுக்குள்தான் நிகழ்ந்தது எனலாம்.

19. தொழிற்சாலைகள்

விவசாய நகரமான மன்னார்குடியைச் சுற்றி பெரிய தொழிற்சாலைகள் ஏதும் கிடையாது. ஆனால் வடபாதிமங்கலம் கரும்பாலையும், (தற்சமயம் செயல்படவில்லை) பாமணி உரத் தொழிற்சாலையும் ஊரின் அருகே செயல்பட்டு வருகிறது.

தஞ்சை மராட்டியர்களின் காலத்தில் மன்னார்குடியில் மிகப்பெரிய காகிதத் தொழிற்சாலை ஒன்று இருந்துள்ளதை வரலாறு கூறுகிறது. அரண்மனைக்குத் தேவைப்படும் காகிதம் முழுவதும் மன்னார்குடி காதிப்பட்டரைத் தெருவிலிருந்து தான் சென்றதாகப் பல ஆவணங்கள் குறிக்கின்றன. 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட மன்னை நகரத்துக் காகிதங்கள் இன்றும் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஏட்டுச் சுவடிகளாகத் திகழ்வதைக் காணலாம். இவை மிகநேர்த்தியாகவும், உயரிய தன்மை உடையதாகவும் விளங்குவதால், இத் தயாரிப்பின் தொழில் நுட்பம் பற்றி மேலை நாட்டவர் பலர் வியக்கின்றனர்.

இவ்வட்டத்தில் உள்ள நிலக்கிழார்களுக்கு நிறைய விளைச்சல் நிலங்கள் உள்ளன. இங்கு 70 விழுக்காட்டினர் விவசாய வருவாயின் வாயிலாகவே வாழ்ந்து வருகின்றனர். சிலர் வணிகர்களாகவும், அரசு ஊழியர்களாகவும், இரும்பு, நெசவுத் தொழிலை மேற்கொண்டவர்களாகாவும், பெரும்பான்மையோர், சிறு தொழில்களான, பாய் பின்னுதல், தையல் தொழில், தீப்பெட்டி தயாரித்தல், சுருட்டு செய்தல், சிறுவாணிகம் செய்தல், மட்பாண்டங்கள் செய்தல், சிற்பங்கள் உருவாக்குதல், கயிறு திரித்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்கள் மேற்கொண்டவர்களாகவும் உள்ளனர்

20. மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்

மன்னார்குடி வட்டம் முழுதும் விவசாயத் தொழிலின் உபதொழிலாக மாடு வளர்ப்பு முக்கிய தொழிலாக அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் ஒத்துழைப்பால் 22.8.1938 ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக இன்று வரை செயல்பட்டு வருகிறது. வட்டம் முழுதும் 36,779 உறுப்பினர்களிடம் 160 கறவை மையங்கள் மூலம் நாள் தோறும் 4,785 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தஞ்சாவூர், சென்னை போன்ற இடங்களுக்கும் இங்கிருந்து பால் விற்பனை செய்யப்படுகிறது. இச்சங்கத்தில் 208 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகம். பால் அளவுகுறைவு.

திரட்டுப் பால் காய்ச்சப்பயன்படுத்தப்பட்டு வந்த 120 சேர் பால் கொள்ளவுடைய பாத்திரம் இன்றும் மன்னார்குடி பெரிய கோயிலில் உள்ளது. யாது காரணத்தினாலோ காசி வரை பெருமையாகப் பேசப்பட்டு வந்த இந்த திரட்டுப் பால் காய்ச்சும் மரபு பின்னாளில் நின்று விட்டது.[13]

21. தொகுப்புரை

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"


என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கல்வி வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும் மன்னார்குடி சிறப்புற்று விளங்குகிறது. இனிவரும் காலங்களில் மண்ணின் மைந்தர்கள் தொழில்துறையில் கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் மன்னார்குடி காத்திருக்கிறது. நம்பிக்கைதானே வாழ்க்கை.

அடிக்குறிப்பு

1. Thanjavur Gazetteer Vol. I Chapter X p. 165-166.
2. மேலது பக். 166
3. ராஜகோபாலசாமிகோயில் மலர் 1995 - பக் 47, 48
4. தேசிய மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு மலர் பக். 15
5. புதுயுகம் 1924, 1925, 1926
6. World Associatione of Adult Education, Fibteenth Annuval Report 1933-34 London - P.2
7. முதியோர் கிராமக்கல்வி மன்னார்குடி 1932
8. சென்னை நூலக அசோசியேசன் ஆண்டறிக்கைகள் - 1929,1930 31,1932,1937
9. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995 பக். 71
10. மேலது பக். 72
11. தமிழக அரசாணை எண் 4957 நாள் 27.7.1978
12. மேலது பக். 73
13. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995-பக் 64

*****





மன்னை நாராயணசாமி

12. மன்னார்குடியும் வணிகமும்

1. முன்னுரை

வணிகர்கள் வாழும் இடத்தைப் பொதுவாக நகரம் என அழைப்பதுண்டு. வாணிய நகரம், சாலிநகரம், வீரபட்டணம், சங்கரப்பாடி என்று பல நகரங்கள் உண்டு. மக்களுக்குத் தேவையான நுகர்பொருட்களை செய்கின்ற அல்லது வெளியிடங்களிலிருந்து கொண்டு வந்து வியாபாரம் செய்கிறவர்கள் வாழ்வது நகரமாகும். மன்னை வட்டத்தின் வணிகத் தேவைகளை மன்னை நகரமே பூர்த்தி செய்து வருகிறது.

2. வணிகர்களது குடியமர்வு

பழங்காலத்தில் வணிகர்களது நகரங்கள் தனி ஊர்களாகவே அமைந்திருந்தன. சமயங்களில் பிராமணர்கள் வாழ்கின்ற பிரம்ம தேயங்களிலும் அதன் ஒரு பகுதிகளிலும் வணிகர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மன்னார்குடி பிராமணர்கள் வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட பிரம்மதேய ஊராகும். அரசனின் வரிவிதிப்பு விலக்கு பெற்ற இத்தனி ஊரிலும் வணிகர்கள் குடியேறி வாழ்ந்துள்ளனர். மன்னார்குடியில் வணிகர்களது குடியமர்வு இருந்துள்ளதை முதலாம் குலோத்துங்கனின் ராஜகோபாலசாமி கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.[1]

3. சாரிகைக் கோட்டை

சாரிகை என்ற சொல்லுக்கு 'கூட்டம்' என்று பொருள். இன்றைய நாட்களில் கோயில்களிலும், பேரணிகளிலும் ஒருவர்பின் ஒருவராகச் செல்வதைச் சாரிசாரியாகச் சென்றனர் என்பது வழக்குச் சொல்லாகும். சாரிகை என்ற இச்சொல்லே சாரி என்று மருவியுள்ளது. சாரிகை என்பது வணிகக் கூட்டத்தைக் குறிப்பதாகும்.

வியாபாரப் பொருள்களையும், சரக்குப் பொதிகைகளையும் கழுதை மீதும், வண்டிகளின் மீதும் ஏற்றி வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் வணிகக் கூட்டத்திற்கு சாரிகை என்று பெயரிடப்பட்டிருந்தது.

மன்னார்குடி அண்ணாமலைநாதர் கோயிலில் உள்ள மூன்றாம் ராஜேந்திரனது கல்வெட்டு மூலம் சாரிகைக் கோட்டை மன்னார்குடியில் இருந்ததை அறியமுடிகிறது.[2] இக்கோட்டை ராஜாதிராஜச் சதுர்வேதி மங்கலத்தின் மேல் பிடாகையாக அதாவது, ஊரின் மேற்கில் அமைந்த பகுதியாக இருந்ததாக இக்கல்வெட்டு கூறுகிறது.

இப்போதுள்ள அண்ணாமலைநாதர்கோயில் பகுதியே சோழர் காலத்தில் சாரிகைக் கோட்டையாக இருந்தது என்பது தெரிய வருகிறது.

4. மடி(ளி)கைகள்

தற்காலத்தில் பலசரக்குகளை 'மளிகை' என்றும் அவை வியாபாரம் செய்யும் கடைகளை மளிகைக்கடை என்றும் அழைக்கிறோம். இந்த மளிகை என்ற சொல்லே அந்தக் காலத்தில் மடிகை என்றழைக்கப்பட்டது. இத்தகைய மடிகைகள் மன்னார்குடி சாரிகை கோட்டையினுள் இருந்துள்ளது. ஆங்கில, டச்சு, பிரெஞ்சு வணிகக் கம்பெனியார்கள் சென்னை,

தரங்கம்பாடி, பாண்டிச்சேரி, கடலூர் போன்ற இடங்களில் இருந்த கோட்டையுடன் கூடிய வகைப் பண்டகசாலைகளுக்கு ஒப்பாகக் கூறலாம்.[3]

5. பதினென் விஷயத்து நகரத்தார்

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹைகோல் என்ற இடத்தை தாயகமாகக் கொண்டு 500 உறுப்பினர்களுடன் இந்த வணிகக் கூட்டம் தொடங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு நானாதேசிகன் என்றும் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்றும் ஐய்யபொழில் திசையாயிரத்து ஐநூற்றுவர் ஆகிய பெயர்களும் உண்டு.

இவர்கள் உள்நாட்டிலும், கடல்கடந்து அயல்நாடுகளிலும் (திசை ஆயிரம்) சென்று வணிகம் செய்ததை கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

இவர்களுக்கு புவனேகவீரன், விக்ரமபாண்டியன் என்ற இரு மடிகைகள் மன்னார்குடியில் இருந்துள்ளன.


6. வரிவசூல்

மன்னார்குடிக்கு மிளகு, பாக்கு, துணிவகைகள் கொண்டு வரப்பட்டு அதற்கு வரிவசூல் செய்த விபரங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

சாரிகைக் கோட்டையில் விக்ரமபாண்டியன் மடிகைகளில் உள்ள திசை பதினென் விஷயத்தார்கள் 13.9.1289 ல் ஜெயங்கொண்ட நாதர் கோயில் இருக்கும் திருமண மண்டபத்தில் ஒன்று கூடினர்.

தங்கள் சாரிகைக் கோட்டைக்குள் நுழைகின்ற சரக்கு வண்டிகளில் கொண்டு வரப்படும் மிளகு மூட்டை ஒன்றுக்கு உழக்கு மிளகு வீதமும் புடவைக் கட்டு (நெய்யப்பட்ட துணிமுட்டை) ஒன்றுக்கு மாதாணிப்பணம் வீதமும் வசூலித்து அதைக்கொண்டு இறைவனுக்கு கறியமுது படைத்திட ஆவன செய்தனர்.

இராஜ கோபாலச் சக்கரம் பொதித்த நாணயங்கள்



மேலும், இச்சாரிகைக் கோட்டைக்குள் நுழையாமல் புறவழியாகச் செல்லும் சரக்குப் பொதிகள் மீதும்கூட இத்தகைய வரிவிதிப்பு செய்துள்ளனர்.[4]

இதே போன்று பாக்கு மூட்டை ஒன்றுக்கு ஒரு உழக்கு பாக்கு வீதம் வசூலித்து அதைக்கொண்டு இறைவனுக்கு அமுதுபடி படைத்திட முடிவு செய்ததாக கி.பி. 31.12.1288 ஜெயங்கொண்ட நாதர்கோயில் கல்வெட்டு கூறுகிறது.[5]

சாரிகைக் கோட்டையில் புவனேக வீரன்மடிகையில் உள்ள நான்கு திசை பதினென் விஷயத்து நகரத்தார்கள் ஒன்று கூடினர். திருவண்ணாமலை உடையாற்று திருப்பணிக்கும் கறிஅமுதுக்கும் ஆக மிளகு மூட்டை ஒன்றுக்கு ஒரு உழக்கு மிளகு வீதம் வசூலித்து இதனைச் சரி செய்வது என்று முடிவு செய்ததை அண்ணாமலை நாதர் கோயிலில் இராச கேசரிபன்மரான வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் கல்வெட்டு கூறுகிறது.[6]

7. வணிகர்களது கோயில் கொடை

இவ் வணிகக் கூட்டத்தினர் மன்னார்குடி கோயில்களுக்கு தாராளமாக கொடைகள் வழங்கியுள்ளனர். இந்நிகழ்ச்சியைக் கல்வெட்டு தன்மக சைம காரியம் எனக்குறிப்பிடுகிறது. சமையம் என்பது வணிகக் குழுவைக் குறிப்பதாகும்.[7]

இச்சாரிகைக் கோட்டையில் வல்லங்கிழான் திருவிடை மருதுடையான் என்பவரின் தாய் அம்மை பெரியநாச்சி என்ற பெண்மணி இராசேந்திர சோழ திருவண்ணாமலை உடையார் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்றைக் கட்டுவித்தார் எனக் கல்வெட்டு கூறுகிறது.[8]

இத்தகைய வணிகக்குழுவினர் பெரும்பாலும் புத்த, சமண மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.[9] எனவே

தான், இவர்கள் வழிபாட்டிற்காக மன்னார்குடியில் புத்த, சமணக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

8. இன்றைய வணிகம்

மன்னார்குடி வட்டத்தைச் சேர்ந்த 128 கிராம மக்களின் தேவைகளையும் மன்னார்குடியில் இருக்கும் வணிகர்கள் பூர்த்தி செய்கின்றனர். செட்டியார், நாடார்கள், முகமதியர்கள் போன்றவர்களே பெரும்பாலும் வணிகர்களாக இருக்கின்றனர்.

9. சந்தைகள்

மன்னார்குடி கீழராஜவிதியில் காந்திஜி காய்கனி அங்காடி, வடுவூர் சாலையில் காளவாய்க்கரையில் காய்கனி சந்தை மற்றும் சிறிய மீன் அங்காடி, பேருந்து நிலையம் எதிரே உழவர் சந்தை ஒன்று, தாமரைக்குளம் வடகரையில் பெரிய மீன் அங்காடி என்று தினசரி சந்தை வகையில் ஏழும், வாரச் சந்தை ஒன்றும் இயங்கி வருகின்றன.

10. நாணயங்கள்

பண்டைய தமிழகமும் சீனாவும் கொண்டிருந்த வாணிகத் தொடர்பான எச்சங்களாக தமிழகத்தில் கிடைத்த சீன நாணயங்கள் விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது. சீன நாணயங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தோடு நிலவிய வணிக உறவுகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

மன்னார்குடிக்கும் சீனாவுக்கும் வணிகத் தொடர்பு நடைப்பெற்றுள்ளதை உறுதிப் படுத்துவதற்கு தஞ்சை மாவட்டத்தில் கிடைத்த கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன நாணயங்கள் அமைந்துள்ளன.

பட்டுக்கோட்டை வட்டம் ஓலயக்குன்னம் என்ற ஊரில் கிடைத்த புதையலில் 323 நாணயங்களும், மன்னார்குடி வட்டம்

தளிக்கோட்டை கிராமத்தில் 1822 நாணயங்களும் இடைத்துள்ளன.[10]

நாணயங்கள்தான் வணிகத்திற்கு பரிமாற்றுக் குறியீடாகும். இங்குள்ள ஸ்ரீராஜகோபால் பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மன்னர்கள் தங்களது தனித்தன்மையை வெளிக்காட்டும் காசுகளை வெளியிட்டதைப் போன்றே விஜயராகவ நாயக்கரும் காசுகளை வெளியிட்டுள்ளார். தெலுங்கில் பொறிக்கப் பெற்ற காசுகளும் கிடைத்துள்ளன.[11]

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள கல்வெட்டுக்கள், செப்பேடுகள், காசுகள் புறச் சான்றுகளாகவும், இலக்கியம் கருவி நூலாகவும் நமக்கு சாட்சியாகி காட்சி தருகின்றன. ஆய்வுத்துறையில் நாணயவியல் ஒரு முக்கியப் பங்கைத் தழுவியுள்ளது.[12]

11. இராஜகோபாலச் சக்கரம்

விஜயராகவ நாயக்கர் தன் குலதெய்வமாகப் போற்றியது இராஜமன்னார் எனும் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானையேயாகும். இத்திருக்கோயிலில் கோபாலன் ஒரு கையில் செண்டு ஏந்தி மறுகரத்தைப் பசுவின் முதுகின் மீது வைத்துள்ள கோல நிலையில் பாமா, ருக்மணி சமேதராகச் செப்புத் திருமேனி வடிவில் காட்சி நல்குகின்றார். இராஜகோபாலனின் திருவுருவத்தோடு தன் உருவத்தையும் பொறித்துத் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் விஜயராகவ நாயக்கரின் காசுகள் வெளிவந்தன.

இராஜகோபாலச் சக்கரம் எனும் பெயரில் வெளிவந்த இக்காசுகள் பற்றிக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், மெக்கன்சியின் சேகரிப்பு ஓலைகள் ஆகியவற்றில்

பல குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. விஜயராகவ நாயக்கருக்குப் பின்பு மராட்டிய மன்னர்களான சகஜி, பிரதாப சிம்மன் ஆகியோர் காலம் வரை இக்காசுகள் சோழநாட்டில் புழக்கத்தில் இருந்தன என்பதை மேற்கூறிய சான்றுகள் வாயிலாக அறியமுடிகின்றது.

இராஜகோபாலச் சக்கரம் எனும் விஜயராகவ நாயக்கரின் காசுகளில் இரண்டு வகையான செப்புக் காசுகள் பல தஞ்சை மாவட்டத்தில் கிடைத்துள்ளன. முதல் வகைக் காசுகளில் ஒருபுறம் இராஜகோபாலன் செண்டேந்தி நிற்கப் பின்புறம் விஜயராகவ நாயக்கர் தன் உடைவாளை இடக் கரத்தால் உடலோடு அழுத்திப் பிடித்தவண்ணம் இருகரங்களையும் கூப்பி வணங்கும் கோலத்தில் காணப் பெறுகின்றார். சிற்பங்களில் உள்ளது போன்றே கொண்டை ஒருபுறம் சாய்ந்த நிலையில் காணப்பெறுகின்றது.

இரண்டாம் வகைக் காசுகள் திருமாலின் சக்கராயுதம் வடிக்கப் பெற்று அதன் நடுவே செண்டேந்திய கோபாலனின் திருவுருவம் காணப்பெறுகின்றது. மறுபுறம் சாய்ந்த கொண்டையுடன் கூடிய விஜயராகவ நாயக்கர் தன் தோளில் உடைவாளை அணைத்த வண்ணம் நிற்கும் காட்சி உள்ளது.[13]

12. கோபாலிச் சக்கரம்

இவ்வகைக் காசுகளில் ஒருபுறம் கோபாலன் நடனமாடும் கோலமும் (நர்த்தன கண்ணன்) பின்புறம் திருமாலின் சக்கரம் நான்குபுற தீபச் சுடர்களோடு காணப் பெறுகின்றன. சில காசுகளில் கோபாலன் காளியன் எனும் பாம்பின் மீது நடனமிடும் கோலமும் உள்ளது.

13. செப்பேடுகளில் இராஜகோபாலச் சக்கரம்

இராஜகோபாலச் சக்கரம் குறித்த செய்திகளை நமக்கு முதன்முதலாக அறிமுகப்படுத்துவது கி.பி.1657 ஆம் ஆண்டு (விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக்காலம்) குறிக்கப் பெற்ற செப்பேட்டுச் சாசனம்[14] ஒன்று தான். விளம்பி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் குறிக்கப் பெற்ற இச்செப்பேட்டில் சாளுவம்பேட்டை எனும் ஊரின் பாதி உரிமையை உடைய நமசிவாய உடையான் என்பவர் இதே கிராமத்தின் மறுபாதிக்கு உரிமையாளரான சிதம்பரத்துடையான் என்பவருக்குத் தனது உரிமையை 350 இராஜகோபாலச் சக்கரத்திற்கு விற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

இதே போன்று கி.பி.1669 ஆம் ஆண்டாகிய சகம் 1591, கலி 4769, சௌமிய வருடம் வைகாசி மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை குறிக்கப் பெற்ற மற்றொரு செப்பேட்டில்[15] திருவையாறு சீமையைச் சார்ந்த காருகுடி கிராமத்தினை, ஜெயங்கொண்ட சோழவளநாடு காவிரி, முடிகொண்டான் ஆற்றின் தென்கரையிலுள்ள பாபநாசத்தில் இருக்கும் பாபநாசநம்பி அய்யன் என்பவருக்கு, பரத்வாஜ கோத்திரம், வேங்கடபதி அய்யன் 430 இராஜகோபால சக்கரத்திற்கு விற்ற செய்தி பதிவுசெய்யப் பட்டுள்ளது.

இச்செப்பேட்டுச் சாசனங்களால் இராஜகோபாலச் சக்கரம் எனும் பொற்காசுகள் விஜயராகவ நாயக்கரால் வெளியிடப் பட்டு, புழக்கத்தில் இருந்தன என்பது உறுதியாகின்றது. இக்காசுகள் நாயக்கர் ஆட்சிக்குப் பின்பும் மராட்டியர் ஆட்சிக் காலத்தில் புழக்கத்தில் இருந்தன என்பதற்குப் பலசான்றுகள் கிடைத்துள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிங் (கி.பி. 1739-1763) காலத்தில் அளிக்கப் பெற்ற நான்கு சாசனங்கள் அடங்கிய

இரண்டு செப்பேடுகள்[16] கிடைத்துள்ளன. இவை மன்னார்குடி ஜெயங்கொண்டநாதசுவாமி கோயிலுக்கு அளிக்கப் பெற்ற அறக்கட்டளைகளை விவரிப்பதாகும். முதற்சாசனம் பாப்பநாடு ஜமீன்தார் இராசராசவளநாடு, ராஜேந்திர சோழவளநாடு, பொய்யூர்க் கூற்றத்துப் பாப்பாகுடி, சிறுநெல்லிக்கோட்டை, நெமேலி இருக்கும் நல்லவன் விசையாத் தேவர் மகன் இராமலிங்கவிசயாத்தேவர் மன்னார்குடி ஜெயங்கொண்ட நாதர் அர்த்த ஜாம பூஜைக்கு 46 இராஜகோபாலச் சக்கரங்களை 11.5.1757 இல் கொடுத்ததை விவரிக்கின்றது.

இரண்டாம் சாசனம் பாப்பாகுடி மேல்கரை கீழ்கரையைச் சேர்ந்த 16 கரை பெருமக்களும் 45 இராஜகோபாலச் சக்கரப் பொன்னை மன்னார்குடி ஜெயங்கொண்ட நாதர் கோயிலின் அறக்கட்டளைகளுக்காக அளித்ததைக் கூறுகின்றது.

மூன்றாம் சாசனம் சிங்கவனம் ஜமீன்தார் ஸ்ரீசவ்வாயி விசையரகுநாத வாளோசி மெய்க்கன் கோபாலார் கி.பி.1758 இல் மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயிலுக்கு 91 இராஜகோபாலச் சக்கரப் பொன் அளித்ததைக் கூறுகின்றது.

14. இலக்கியத்திலும் இராஜகோபாலச் சக்கரம்

கி.பி. 1684-1710 வரை தஞ்சையை ஆட்சி புரிந்த சகஜி மன்னரின் அவைக் களப்புலவராகத் திகழ்ந்தவர் வாசுதேவகவி என்பவராவார். இவர் எழுதியுள்ள பதங்களில் ஒன்றில் இராஜகோபாலச் சக்கரம் பற்றிய சுவையான செய்தி கூறப்பெற்றுள்ளது.[17]

பொது மாது ஒருத்தியிடம் மயங்கிய ஆடவனிடம் அப்பெண் எவ்வாறெல்லாம் பேசி மயக்குவாள் என்பதையும், அவனிடம் கோபாலச் சக்கரப்பொன் இல்லை என்றால் அவள் எப்படி விலகுவாள் என்பதையும் வாசுதேவகவி கூறுகிறார்.

மக்கென்சி (கி.பி. 1753-1821) என்ற ஆங்கிலேயர் 18-19 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று எண்ணற்ற சுவடிகளைச் சேகரித்தார். இவற்றின் ஒரு பகுதி கி.பி.1828 ஆம் ஆண்டில் சென்னை கல்லூரிப் புத்தக சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இச்சுவடிகளில் இராஜகோபாலச் சக்கரம், கோபாலிச் சக்கரம், இராஜகோபாலன் மாடை போன்ற பலவகையான காசுகள் பற்றிய குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. இச்சுவடிகள் தற்போது கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலும், (GOML) தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திலும் உள்ளன.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது 17 ஆம் நூற்றாண்டில் விஜயராகவ நாயக்கரால் வெளியிடப் பெற்ற இவ்வகைக் காசுகள் 18,19 ஆம் நூற்றாண்டுகளிலும் புழக்கத்தில் இருந்தன என்று அறிய வாய்ப்பாகிறது.

15. வங்கிகள்

பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் எவ்வளவு முக்கியம் என்பது எல்லாரும் அறிந்ததே. அதற்கு மன்னார்குடியின் வங்கிகள் பெரிதும் உதவுகின்றன. கிராம வளர்ச்சித் திட்டங்களின் மூலம் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு நிதி உதவியும், தொழில் மேம்பாட்டிற்காக கூட்டுறவு வங்கிகள், கட்டுமானப் பணிக்காக பொது, மற்றும் தனியார் பன்னாட்டு வங்கிகள் பெரிதும் உதவும் வண்ணம் செயல்படுகின்றன.

வட்டத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, பாங்க் ஆப் மதுரை, பாங்க் ஆப் பரோடா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி, தஞ்சாவூர் லெட்சுமி விலாஸ் பாங்க், சிட்டி யூனியன் பாங்க், கூட்டுறவு தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவை இயங்குகின்றன.

மேலும் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியின் கிளைகளும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் இயங்குகின்றன.

16. சாலைகள்

சாலைப் போக்குவரத்து வட்டத்தின் எல்லாப் பெரிய கிராமங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைக்கிறது. இவ்வூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை ஒன்றுமில்லை. இந்நகர எல்லைக்குள் செல்லும் நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 11.245 கிலோ மீட்டராகும்.

சிமெண்டு சாலைகள், தார்ச் சாலைகள், கப்பிச் சாலைகள், மண் சாலைகள் எனப் பலவகையான சாலைகள் இவ்வட்டத்தில் அமைந்துள்ளன.

17. போக்குவரத்து

போக்குவரத்து என்பது மிகவும் முக்கியமானதொரு சேவையாகும். வேளாண்மை, தொழில் குறிப்பாக வர்த்தகம் போன்றவை, வளரவும், குடியிருப்புகள் - வேலை செய்யும் இடத்திற்கு சென்றுவரவும், போக்குவரத்து மிகவும் முக்கியம். மன்னார்குடியைப் பொருத்தவரை போக்குவரத்து நன்கு முன்னேறியுள்ளது என்றே சொல்லலாம்.

இவ்வூரில் 'பி' வகுப்புப் பேருந்து நிலையம் ஒன்று 'காமராஜர்' என்ற பெயரில் இயங்கி வருகிறது. இங்கிருந்து சென்னை, பாண்டிச்சேரி, மதுரை போன்ற ஊர்களுக்கு நேரடி பேருந்து போக்குவரத்து உண்டு. பேருந்து ஒன்றுக்கு தினசரி குறிப்பிட்ட கட்டணம் நகராட்சியால் வசூல் செய்யப்படுகின்றது. இங்கு கட்டணக் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளன.

சோழன் போக்குவரத்துக் கழகம், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆகிய பெயர்களில் இயங்கி வந்த பேருந்து நிறுவனங்கள், தற்பொழுது 'தமிழ்நாடு அசுசுப்போக்குவரத்து' என்ற ஒரே பெயரில் இயங்கி வருகின்றன. இங்கு பணிமனைகள் இரண்டு உள்ளன.

இவ்வூருக்கு ஆங்கிலேயர் காலத்திலிருந்து இருப்புப் பாதை வசதியிருந்திருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் போதிய வருமானம் இல்லாத காரணத்தால் இரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஊரிலிருந்து வடக்கே சுமார் 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நீடாமங்கலம் என்னும் ஊரிலிருந்துதான் இரயில் போக்குவரத்து இயங்கி வருகிறது.

18. தொகுப்புரை

நூறாண்டுகளுக்கு முன்பு மிகச் சிறந்த வணிகக் கேந்திரமாகவும் இவ்வூர் திகழ்ந்துள்ளது. மன்னையின் சுற்றுப்புற ஊர்கள் மட்டுமின்றி தஞ்சை, நாகை, திருவாரூர் மக்களும் இங்கு வந்து பயன் பெற்றனர் என்ற குறிப்புகளும் உள்ளன. இவையனைத்தையும் தொகுத்து நோக்கும் போது நூறாண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்திலேயே மிகச் சிறந்த நகரமாக மன்னை விளங்கியது என்பதை அறிகிறோம்.


அடிக்குறிப்பு

1. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 103/1897
2. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 93/1897
3. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 89,90,95/1897
4. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 89 /1897
5. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 89 /1897
6. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 90 /1897

7. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 90/1897
8. தென்னிந்திய கல்வெட்டு A.R. No. 93/1897
9. ஸ்ரீராஜகோபாலசாமி கோயில் மலர் 1995 - பக்.70
10. பண்டைய தமிழகம் - 1991 - சிற்றம்பலம், சி.க குமரன் பதிப்பகம் பக் 365
11. தொல்லியல் நோக்கில் தமிழகம் - தொல்பொருள் **ஆய்வுத்துறை** பக். 60
12. தஞ்சை நாயக்கர் காசுக்கள் 1996 - ஆறுமுகசீதாராமன் : ஆவணம்: இதழ் 7 ஜூலை - பக். 84,85
13. மேலது - பக். 86
14. ஆண்டு கல்வெட்டு A.R.E. No.17/1945-46
15. ஆண்டு கல்வெட்டு A.R.E. No. 18/1945-46
16. ஜெயங்கொண்டநாதர் கோயில் செப்பேடுகள் - இராசு பெ. - கோயில் மலர். 1995
17. தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும் - சீனிவாசன் -என்.

சரஸ்வதி மகால் வெளியீடு.

::*:*:*



13. சுற்றுலாவும் மன்னார்குடியும்

1. முன்னுரை

வாழ்வில் சுற்றுலா ஒரு முக்கியமான திருப்பு முனையாகும். சுற்றுலா மேற்கொள்வதினால் மனதிற்கும், உடல் வலிமைக்கும், அறிவு வளர்ச்சிக்கும், குடும்ப நல முன்னேற்றத்திற்கும் எனப் பொதுவாக வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திற்கும், சுற்றுலா ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது.

சுற்றுலா மேற்கொள்ளுவதால் பல நன்மைகள் ஏற்படுகிறது. நமது வாழ்க்கையின் தரத்திற்கும் மேம்பாட்டிற்கும் சுற்றுலா முக்கியமாக தேவைப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. மாவட்டத்தின் மத்திய பகுதியில் மன்னை நகரம் அமைந்திருப்பதால் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் உள்ள அனைத்து சுற்றுலாத் தளங்களையும் நேரில் காண சாலை வசதிகள், பேருந்து வசதிகள் நிறைய உள்ளன.

2. கோயில்கள்

தமிழக வரலாற்றில் பொற்காலம் படைத்தவர்கள் **சோழர்** ஆவர். இவர்காலத்துச் சாதனைகளை இன்றும் நிலைத்து நின்று

பறைசாற்றிக் கொண்டு வருபவை இவர்கள் கட்டுவித்த கோயில்களும், செதுக்கிய கல்வெட்டுகளும் ஆகும். சோழர்களின் கோயில் ஏராளமாக இந்நகரில் உள்ளன. பாடல் பெற்ற ஸ்தலங்களும் உள்ளன. சோழர் மற்றும் நாயக்கர் காலத்திய கட்டிடக் கலை, ஏராளமான சிற்பங்கள், சுதைச் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், கருடஸ்தம்பம் முதலியன பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள். உலகை வியக்க வைக்கும். செப்புத் திருமேனிகள் மன்னார்குடியில் நிறைந்து காணப்படுகின்றன.

3. ஹரித்ராநதி

இந்தியாவிலேயே மிகப்பெரிய தெப்பக்குளம் ஹரித்ராநதி

தெப்பக்குளம் எனப்படும் ஹரித்ரா நதிக்குளத்தை 'நதி' எனக் கூறுகின்றனர். 'காவிரியின் மகள் என்பதால் 1000 கோபியர்கள் குளித்ததால் குளத்து நீர் மஞ்சளாகி 'ஹரித்திராநதி' (ஹரித்திரா-மஞ்சள்) ஆகியது. இது 23 ஏக்கர் பரப்புள்ள தமிழகத்தின் பெரிய நீர்நிலையாகும். 1158 அடி நீளமும், 847¼ அடி அகலமும் உள்ளது. 66 கோடி புண்ய தீர்த்தங்களைச் சேர்ந்தது என்பார்கள்.

மன்னார்குடி திருக்கோயிலுக்கு பரப்பளவு எவ்வளவோ அவ்வளவு பரப்புடையது ஹரித்ராநதி என்று வழங்கப்படும் திருக்குளம். இது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

குளத்தின் நடுவே வேணுகோபாலன் சந்நிதி மிகச் சிறப்புடன் உள்ளது. மாசிமாதத்தில் நியமத்துடன் ஹரித்ராநதியில் நீராடத் தொடங்க வேண்டும் என்பது நியதி.

இத்தீர்த்தத்திற்கு நிசா தீர்த்தம் என்றும் பெயர். பெருமாளுக்கு நித்யதிருஞ்சன தீர்த்தம் இக்குளத்திலிருந்தே கொணர்கிறார்கள். பிரமோற்சவ முடிவில் இத்திருக்குளத்திலேயே தீர்த்தவாரியும் நிகழ்கின்றது.

கோபியரும் கோப்பிரையையரும் இதில் நீராடி திருஎட்டெழுத்தையும் பன்னிரண்டெழுத்தையும் ஓதிப் பெருமானைக் கண்டு மோட்சம் அடைந்தனர்.

ஹரித்ராநதியில் நீராடி, துவாதசாட்சரமந்திரத்தை ஓதி, ஸ்வாயம்புவ விமானத்தின் கீழ் விளங்கும் பரந்தாமனைப் பணிந்தால் முக்தி கிடைப்பது உறுதி என்று மக்கள் நம்புகின்றனர்.

4. வடுவூர் பறவைகள் சரணாலயம்

மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் செல்லும் வழியில் 15 கீ.மீ. தூரத்தில் வடுவூர் என்ற ஊர் உள்ளது. இங்கு 316 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரி தமிழகத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாகும். தமிழக அரசு இந்த ஏரியை பறவைகள் சரணாலயமாக அறிவித்துள்ளது.

ஐரோப்பா, ரஷ்யா, ஜப்பான், தைவான், கொரியா, ஆஸ்திரேலியா, இலங்கை, இமயமலைச் சாரல் பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பறவைகள் வந்து செல்கின்றன. அக்டோபர் முதல் சனவரி வரையிலான பருவ காலங்களில் நிலவும் தட்பவெட்பம், இடவசதி, உணவு ஆகியவற்றுக்காகவும், இனப் பெருக்கத்திற்காகவும் பறவைகள் இங்கு வருகின்றன. இதில் கடல் காகம், வேதவால் குருவி, ஊசிவால் குருவி, சாம்பல் நிற கூழக்கடா, நத்தைக் கொத்தி நாரை, வெள்ளை அரிவாள் மூக்கன், புள்ளி மூக்கு வாத்து உள்ளிட்ட 43 வகையான பறவைகள் ஆண்டுதோறும் வருகின்றன. ஏரியில் சுத்த தண்ணீரும் மரங்களும் உள்ளன. ஆண்டு மழையளவு சுமார் 1400 மி.மீ. இங்குள்ள ஸ்ரீ கோதண்டராமர் கோயில் மிகவும் சிறப்புப் பெற்றது.[1]

5. உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம்

இச்சரணாலயம் மன்னார்குடியிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆகஸ்டிலிருந்து, மார்ச் வரையான மாதங்களில் ஆண்டுதோறும் அயல்நாட்டுப் பறவைகள் வருகின்றன. மழை

அளவு ஆண்டுக்கு 1200 மி.மீ. நிலப்பரப்பில் 45 ஹெக்டர் உடையது 1991ஆம் ஆண்டிலிருந்து இது பறவைகள் சரணாலயமாக உள்ளது.[2]

6. முத்துப்பேட்டை வனப்பகுதி

மன்னார்குடியில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள முத்துப் பேட்டையில் உள்ள **"மாங்குரோவ்"** எனப்படும் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் அழகிய கடற்கரைப் பகுதி படகு சவாரிக்கு ஏற்ற இடம். பேருந்து வசதிகள் நிறைய உள்ளன.

7. விலங்குகள் சரணாலயம்

மன்னார்குடியில் இருந்து 70 கி.மீ. தூரத்தில் கோடியக்கரை உள்ளது. பறவைகள், விலங்குகள் சரணாலயம் இரண்டுமே ஒன்றிணைந்துள்ளது நம் நாட்டில் இங்கு மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இது 1725 ஹெக்டர் பரப்புள்ளது. 1967ஆம் ஆண்டு முதல் இது சரணாலயமாக இருந்து வருகிறது. வேதாரண்யம் வழியாகச் செல்ல நிறையப் பேருந்து வசதிகள் உள்ளன. இந்த விலங்குகள் சரணாலயம், மிகப்பெரியதாகும். இங்குள்ள வேதாரண்யம் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகும்.

8. கேளிக்கைகள்

மக்களின் பொழுது போக்கிற்காக திரையரங்குகளும், ஐந்து பூங்காக்களும் மன்னார் குடியில் உள்ளன. மேலும், இளைஞர் கலா மன்றம் இலக்கிய வட்டம் போன்ற அமைப்புகளும் இருக்கின்றன.

பொங்கல் பண்டிகையின் போது விளையாட்டுப் போட்டிகள் கிராமங்கள் தோறும் நடைபெறும். சிறுவர், சிறுமியர் ஓட்டப் பந்தயம், கபடி, பாட்டுப் போட்டி, இசைப் போட்டி, சைக்கிள் பந்தயம், மாட்டு வண்டிப் பந்தயம், மாடு பிடிப்பது போன்ற போட்டிகள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

9. இளைப்பாறும் விடுதிகள்,

இங்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி மற்றும் கிராமப்புற பணித் துறையினர்களால் பராமரிக்கப்படும் பயணியர் விடுதிகள் உள்ளன.


10. தொகுப்புரை

சுற்றுலாவினால் மனிதவாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஓய்வு நேரம் கிடைப்பதுடன் மனதுக்கும் கண்ணுக்கும் அமைதியும் குளிர்ச்சியும் கிடைக்கிறது. கல்வி வளர்ச்சியுறுகிறது. தொழில் வளர்ச்சி பெருக்கம் ஏற்பட்டு பொருளாதார மேம்பாடு அடைகிறது. தமிழக சுற்றுலாப் பகுதிகளில் மன்னார்குடியும் சிறப்பான இடத்தை வகிக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. தமிழ்ஓசை நாளிதழ் - நாள் 6.11.2006 - பக் 9
2. தமிழக சுற்றுலா மையங்கள் - 2000 - திருநாவுக்கரசு. வே.பக் 190

*****



திருக்கோயில் கோபுரத்துடன் அமைந்த புனித திருக்குளம்

14. கலைகள் வளர்த்த மன்னார்குடி

1. முன்னுரை

"காவிரி பாயும் கன்னித்தமிழ்நாடு
கலைகளுக் கெல்லாம் தாய்வீடு"

கலைகளிலும், பண்பாட்டிலும் பாரதத்தில் முதன்மை பெற்று விளங்குவது தமிழகமே, கலைகளின் பிறப்பிடமாக பல எண்ணற்ற கலைஞர்களை மன்னார்குடி பிரசவித்துள்ளது.

சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை, கவிதை, நாடகம், இலக்கியம் என்று ஒவ்வொரு துறையிலும் மன்னார்குடி தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

முடியாட்சியின் போதும், குடியாட்சியின் போதும் இவ்வட்ட மக்கள் கலைகளைத் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கருதி வளர்த்துள்ளனர், வளர்த்தும் வருகின்றனர்.

2. சிற்பக்கலை

கல்லில் உளி எழுப்பும் ஜதிக்கேற்றாற்போல் சிற்பியின் கரங்கள் உருவாக்கிய உயிருள்ள சிற்பங்கள் அழியாத கலைச்சுடராய் இன்றும் பிரகாசிக்கின்றன.

மன்னார்குடி வட்டத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் சிற்பங்களின் அழகு பிரமிக்கத்தக்கதாய் அமைந்துள்ளன. எண்ணற்ற சிற்பங்களும், கற்கோபுரங்களும் மனிதனுடைய ஐந்து விரல்களால் படைக்கப்பட்டது என்பதை எண்ணிப்பார்க்கும் போது வியப்பு மேலிடுகிறது. உலோகத்தில் சிற்பங்கள் மற்றும் சுதைச் சிற்பங்களும் உள்ளன. பஞ்சலோகத்திலான சிற்பங்கள் பார்க்கப் பார்க்க கண் கொள்ளக் காட்சியாகும்.

ஆகா! சோழர் காலத்திற்குப் பிறகு நாயக்கர் முதல் மராட்டியர், ஆங்கிலேயர் வரை இந்த மன்னை மண்ணிலே கால் ஊன்றிய கலாச்சாரங்கள் தான் எத்தனை! எத்தனை!

தொன்மையும் புராதன கலைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்று தமிழகத்தின் வைணவத் திருக்கோயில்களில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படும் பெருமை உடையது அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில் ஆகும். இக்கோயிலின் நந்தவனத்தை ஒட்டி அமைந்துள்ள இரண்டாவது உட்கோபுரம் பல அழகிய சிற்பங்களைக் கொண்ட ஒரு கலைப் பெட்டகமாக உள்ளது. அற்புத சிற்பங்கள் - அழியாத சின்னங்கள்- இடிபாடுகளுக்கு இடையேயும் பேசும் பதுமைகள்.

கோயிலின் மேற்கு வாயிலில் காணப்படும் யோக நரசிம்மர், கருடன் மீது திகழும் திருமால், கண்ணபிரானின் எழிற் கோலங்கள் ஆகியன நம் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன. குழல் ஊதும் கோலத்தில் சங்கு சக்கரம் ஏந்தி நிற்கும் திருமாலின் வடிவம் எழில் கொஞ்சுகின்றது.

இதே கோபுரத்தின் கீழ்ப்புறம் எண்ணற்ற சிற்பங்கள் கோபாலனின் எண்ணிலா கோலங்கள். அத்தனையும் தெவிட்டாத தெள்ளமுதம்.

இக்கோயில் கோபுரத்தின் உட்பக்கச் சுவர்களில் சில அபூர்வமான சிற்பங்கள் காணப்படுகின்றன. கலைஞன் ஒருவன் தப்பாட்டம் (பறையடிப்பது) ஆடுவதை அற்புதமான ஒரு சிற்பத்தில் வடிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் கிராமியக் கலை குறித்த சுவர் விளம்பரங்களில் காணப்படுகின்ற புதிய ஓவியங்கள் இந்த சிற்பத்தை அப்படியே ஒத்துள்ளன என்பதை எண்ணிப் பார்க்கையில் வியப்பு மேலிடுகிறது.[1]

இக்கோபுரத்தில் காணப்பெறும் கலைப் படைப்புகளில் தலையாயதாகப் போற்றப்பெறும் சிறப்பு, வாயில் நிலைக்கால்களுக்கே உரியதாகும். நான்கு நிலைக்கால்கள் இங்கு எழிலுடன் திகழ்கின்றன. இவை கருங்கல்லில் செதுக்கபட்டவைதானா அல்லது மரத்தில் கடைந்தெடுக்கப்பட்டவையா என சந்தேகம் எழும் வண்ணம் அத்தனை வேலைப்பாடுகள். அழகிய பாவைகளும், திருமாலின் பத்து அவதாரக் காட்சிகளும், விலங்குகளும், பறவைகளும் இந்த நிலைக் கால்களை அலங்கரிக்கும் காட்சியைப் பார்க்கப் பார்க்க பரவசமூட்டும்.

கோகுலத்துப் பெண்கள் நீராட, கோவிந்தன் மரமேறும் காட்சியில் தான் எத்தனை நவீனம். அத்தனை சிற்பங்களும் நம் சிற்பக்கலையின் முத்திரைகள்.

மன்னார்குடி இராஜகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் நான்கு சிற்பத் தொகுப்புக்கள் உள்ளன. இவற்றுள் முதல் தொகுதியில் இரகுநாதனும் கோவிந்த தீட்சிதரும் கோதானம் கொடுக்கும் காட்சி வடிக்கப் பெற்றுள்ளது. இதில் இரகுநாதன் வளைந்த தொப்பி அணிந்து, இடுப்பில் ஆடையும் குத்து வாளும் திகழ நெற்றியில் திருமண் தரித்துக் கொண்டு எதிரே இருக்கும் தீட்சிதர் ஐயன் கையில் ஏதோ ஒரு பொருளைக் கொடுக்கும்

காட்சி உள்ளது. தீட்சிதரும் தலையில் நீண்ட குல்லாய், நெற்றியில் விபூதிப்பட்டை, மார்பில் நீண்ட ஆடை ஆகியவை திகழ மன்னனிடமிருந்து எதையோ பெறும் காட்சி சிற்பமாகக் காணப்பெறுகின்றது. இதனை அடுத்துத் தீட்சிதர் ஐயன் பசுவின் பின்புறம் நின்று கொண்டு எதிரே நிற்கும் ஒருவனுக்கு கோதானம் அளிக்கும் காட்சியும் உள்ளது. சிறப்புமிகு இச்சிற்பத்தொகுதி இம்மண்டபத்து வடபுறத்தூணில் காணப்பெறுகின்றது.

இதே மண்டபத்தின் தென்புறத்தூணில், குவிக்கப் பெற்றுள்ள தங்கப்பாளங்களுக்கு எதிரே ஒருபுறம் இரகுநாதனும், அவனது பட்டத்தரசி கலாவதியும் இருக்க, மறுபுறம் தீட்சிதர் ஐயனும் மற்றொருவரும் அமர்ந்திருக்கக் கைகளை நீட்டி இருவரும் நீர்வார்ப்பது போன்ற காட்சி சிற்பமாக வடிக்கப் பெற்றுள்ளது. இது ஸ்வர்ண மேரு தானத்தைக் குறிக்கும் சிற்பமாகும்.

இதே மண்டபத்தின் தென்புறம் உள்ள மற்றொரு தூணில் இரகுநாதன் துலாத்தட்டில் அமர்ந்திருக்க எடைக்கு எடை பொன் நிறுக்கப் பெறும் காட்சி இடம் பெற்றுள்ளது. வடபுறமுள்ள நான்காவது தூணில் இரகுநாதனும், அவனது தேவியர் இருவரும் (கலாவதி, லெட்சுமியம்மா) சேர்ந்து நின்றுகொண்டு இராஜகோபாலனை வணங்கும் கோலத்திலுள்ளனர்.

3. சுதையில் இரகுநாதன்

இத்திருக்கோயிலின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு இராஜகோபுரங்களில் இரகுநாதன், அவனது தேவியர், கோவிந்த தீட்சிதர், மகன் விஜயராகவன் ஆகியோரது சுண்ணச்சுதைச் சிற்பங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஆளுயரச் சிற்பங்களாகும். இராஜகோபாலனையும், பூரணி புடகலை சகிதராக அமர்ந்துள்ள சாஸ்தாவையும் (அய்யனார்) வணங்கும்

இரகுநாதனின் சுதைப் படைப்புக்கள் பேரழகு மிகுந்தவையாகும். இக்கோபுரங்கள் அண்மையில் திருப்பணிக்கு உட்பட்டபோதும் அவற்றில் இடம்பெற்றுள்ள சுதைச் சிற்பங்களைச் சிதைக்காமல் அப்படியே காப்பாற்றியுள்ளமை மனநிறைவளிப்பதாகும்.[2]

இத்திருக்கோயிலினுள் உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் தூண்களில் இரகுநாத நாயக்கன், மற்றும் கோவிந்த தீட்சிதரின் உருவச்சிலைகள் இடம்பெற்றுள்ளன. தீட்சிதரின் சிற்பத்தில் மூக்கு மட்டும் உடைந்து காணப்படுகிறது. இம்மண்டபத்திலுள்ள அனைத்துச் சிலைகளுமே திருமண் தரித்துள்ளபோது தீட்சிதர் மட்டும் நெற்றி மற்றும் உடலெங்கும் விபூதி அணிந்துள்ளதைச் சிற்பத்தில் தெளிவாகக் காணலாம். நீண்ட குல்லாய், மடிசார் வேட்டி, இடுப்பில் துண்டு, இறுக்கமாக உடலை ஒட்டிய மேலாடை, காதில் குண்டலங்கள் திகழக் காட்சி நல்குகிறார்.[3]

4. விமானத்தில் சுதைச்சிற்பங்கள்

பெருமாள் யானைக்கு அருள்பாளிக்கும் நிகழ்ச்சி (கஜேந்திர மோட்சம்) நஞ்சுப்பாலை உண்ணும் நிகழ்ச்சி, இரணியனின் குடலை உருவுதல், வாலி சுக்ரீவன் போர், இராவணன் அம்பு எய்து அழித்தல், கோபியர்களுடன் கண்ணனின் காதல் காட்சிகள், கோகுலக் கன்னியர்களின் ஆடைகளைக் கவர்ந்து கொண்டு மரத்தின் மீது அமர்ந்திருக்கும் காட்சிகள். இது போல பலவும் காட்டப்பட்டுள்ளன.

சுவர்ப்பகுதியில் தேவகோஷ்டிகளுக்கு இருபுறமும் கும்ப பஞ்சகரம் அழகு மிக்கதாய் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மேற்குப் பகுதியில் மகர தோரணம் சிறப்புற விளங்குகிறது. இதன் நடுவில் இலக்குமியும், நீராடும் யானைகளும் சிறிய வடிவில் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன.

5. ஓவியம்

ஓவியம் என்பது உலகமொழி. சொல்லாமல் சொல்வதே ஓவியம். ஓவியக் கலை சிறப்பிலும் மன்னார்குடி தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் மன்னார்குடி ராஜகோபாலன் ஓவியம் சிறப்புற அமைந்துள்ளது.[4]

ஓவியர் சூர்யா

தற்போது புழக்கத்தில் இருக்கிறதே பாரதியார் படம். இதை வரைந்தது யார் தெரியுமா? சேராங்குளத்தைச் சேர்ந்த சூர்யா என்ற பாஷ்யம். இவர் ஒரு மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர். நீண்ட சிறை வாசங்களுக்குப் பின் பாஷ்யம் வெளியே வந்தார். மனம் அமைதியை நாடியது.

1945 முதல் ஓவியத் தொழிலிலுக்கு வந்தார். பாரதியார் படத்தை வரைந்தார். காந்தியார் சிலையை வடித்தார். வியாபார ரீதியான விளம்பரங்களுக்கு டிசைன் போட்டுத் தரும் நிறுவனம் ஒன்றை அமைத்தார்.

6. கூத்து

கூத்து என்றால் நடனம், நாட்டியம், நாடகம் என்றெல்லாம் வழங்கப்பட்டாலும் கிராம மக்கள் தெருக்கூத்தை மட்டும் தான் 'கூத்து' என்கிறார்கள். கிராமங்களில் விரும்பிப் பார்ப்பது கூத்து.

அறுவடை முடிந்து ஓய்வுக் காலங்களில் கிராமம் முழுவதும் இணைந்து கூத்தைப் பார்ப்பார்கள். தமிழகத்தின் மரபு சார்ந்த கலைகளுள் ஒன்று கூத்துக் கலையாகும். தெருக் கூத்தும் பாகவத மேளாவும் உலகப் புகழ் பெற்ற அரிய கலைகளாகத் திகழ்கின்றன.

சிறுத்தொண்ட நாயனார் இசைக்கூத்து, உருக்கமாங்கத பாகவதமேளா, பிரகலாத நாடகம், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, திரௌபதி அம்மன் கூத்து, மனுநீதிச் சோழ மகராச நாடகம்

போன்ற பாரம்பரிய கூத்துக்கள் மன்னார்குடி வட்டத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. வடுவூருக்கருகில் உள்ள பாகவதமேளம் என்ற ஊர் இக்கலைஞர்களுக்குத் தானமாக கொடுக்கப்பட்ட ஊர்களில் ஒன்று.

மன்னார்குடி வட்டத்தில் தொன்றுதொட்டு கூத்துக்கள் கட்டப்பட்டுள்ளதைக் கல்வெட்டுக்களும், சிற்பங்களும் உணர்த்துகின்றன. ஆசிரியர்கள் கூத்துக்கலைஞர்களை உருவாக்கி வருகின்றனர். இன்றும் கூத்துக்கலைஞர்கள் எம். ஜி. நடராஜப்பிள்ளை, சத்தியமூர்த்தி, காமராஜ் போன்றவர்கள் கூத்து, நாடகம் நடத்தி வருகின்றனர். காரக்கோட்டை திரு. எஸ். சத்தியமூர்த்தி சமீபத்தில் கலைமாமணி பட்டம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.[5]


7. நாட்டியம்

விரல்களும், விழிகளும், பாதங்களும், பாவனைகளும் தாளத்தின் ஒசைக்கேற்றவாறு பேசும் ஒரு திறமையான கலையே நாட்டியம்.

முகபாவங்கள் மூலமும் அபிநயங்கள் மூலமும் பாடல் கருத்தை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தும் அழகுக்கலை நாட்டியம். பெண்களின் நளினங்களை அழகுற வெளிப்படுத்தும் தெய்வீகக்கலை . உள்ளத்தில் மகிழ்ச்சியையும் உடற்பயிற்சியையும் தரும் கலை.

சிற்பங்களில், ஓவியங்களில் இத்தகைய உயிர்த் துடிப்புள்ள நிலை கலை உணர்வை வெளிப்படுத்துகின்றது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கோயில்களில் தேவரடியார்கள், வழிபாட்டுத் தொண்டுகளில் ஈடுபாடு கொண்டு, ஆடியும் பாடியும் மக்களை மகிழ்வித்து வந்தார்கள்.[6]



விஜயராகவ நாயக்கரின் பெயரைப் பொறிப்புடன் திகழும் மன்னார்குடிச் செப்புத் திருமேனிகள்



இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள மன்னார்குடி ராஜகோபாலன் ஓவியம். ஓவியத்தின் கீழ் தெலுங்கில் "உபய நாச்சியாருல ஸமேதமுக ராஜ மன்னாரு ஸ்வாமி" - என்று எழுதப்பெற்றுள்ளது.

பல நாட்டிய நாடக நூல்களை இயற்றிய விஜயராகவ நாயக்கர் நாடகம் மற்றும் ஆடற்கலை வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றியுள்ளார். தஞ்சை அரண்மனையின் நாடக சாலையில் பல நடனங்களை அரங்கேறச் செய்து அக்கலைக்கு ஆக்கம் நல்கியுள்ளார். **'பாகவதமேளா'** எனும் நாட்டிய நாடக மரபு இவர் காலத்தில் உன்னத நிலையைப் பெற்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மன்னார்குடி இராஜகோபால சுவாமி கோயிலில் பல சிறந்த நாடகங்கள் நிகழ்த்தப் பெற்றதற்கான சான்றுகளை இவர்கால நாடக நூல்கள் மூலமாக அறியமுடிகிறது. [7]

மோகனாங்கி, ரூபாவதி, சந்திரரேகா, லோகநாயகி, சசிரேகா, கீரவாணி, மூர்த்தி, செண்பகவல்லி, கோமளவல்லி, பாகீரதி போன்ற ஆடற்கலையரசிகள் இம்மன்னரின் அவையை அலங்கரித்தவர்கள்.

கே. ஜெயலெட்சுமி (பரதநாட்டியக் கலைஞர்)

பிறந்த நாள் : 19.1.1958
தந்தை : சாமிநாதன்
தாய் : பட்டம்மாள்
ஊர் : மன்னார்குடி

மரபு பயிற்சி : தஞ்சாவூர் கே. பி.கிட்டப்பாபிள்ளை, இந்திராஜன் ஆகியோரிடம் நடனப் பயிற்சி பெற்றார். வேம்பட்டி சின்ன சத்தியம் அவர்களிடம் குச்சிப்புடி நடனம் பயின்றார். கனடா போன்ற வெளி நாடுகளுக்குச் சென்று வந்தவர்.

அனுபவம் : 20 ஆண்டுகள்

பட்டங்கள் : 'பரத நாட்டியப் பேரொளி',
நாட்டியரத்னா, கலைமாமணி.

8. நட்டுவனார்கள்

தஞ்சை நகரில் வாழ்ந்து வந்த நாட்டிய ஆசான்களில் ஒருவரது குடும்பத்தில் தோன்றியவர், கோபாலகிருஷ்ண நட்டுவனார் என்பவர். மன்னார்குடி இராஜகோபாலசுவாமி ஆலயத்தில் நாட்டிய மேளத்தை நிருவகித்துச் சேவை செய்யும் பணியில் விஜயராகவ நாயக்கரால் நியமிக்கப்பெற்று, மன்னார்குடியில் குடியேறினார் கோபாலகிருஷ்ண நட்டுவனார். பல நாட்டியக் கலைஞர்களை உருவாக்கி உள்ளார். வைத்தியலிங்கம் நட்டுவனார், சுவாமிநாத நட்டுவனார் போன்ற புகழ் பெற்ற நட்டுவனார்களையும் உருவாக்கியுள்ளார்.

நாட்டியக் கலையில் நாட்டியக் கலைஞர்களை சிறப்புறச் செய்து தானும் சிறப்புற்று விளங்கி வந்துள்ளது மன்னார்குடி வட்டம்.

9. நாடகக் கலை

நாட்டின் நாகரிகக் கண்ணாடி, நாடகம். பாமரர்களின் பல்கலைக் கழகம் நாடகம். சிறந்த நாடகக் கலைஞர்களையும் நாடக ஆசிரியர்களையும் உருவாக்கிய பெருமை மன்னார்குடிக்கு உண்டு.

வரலாற்று ஏடுகளைப் புரட்டும்போது தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள் நாட்டிய - நாடகக் கலையைப் போற்றி வளர்த்த அளவுக்கு வேறு எந்த அரச மரபினரும் செய்யவில்லை என்றே கூறலாம்.

மன்னார்குடி இராஜகோபால சுவாமியைத் தன் குலதெய்வமாக வரித்துக் கொண்ட தஞ்சை விஜயராகவநாயக்கர் 32க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதி, அவற்றில் பெரும்பாலான நாடகங்களை மன்னார்குடி **இராஜகோபால் சுவாமி திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்திலேயே**

நடிக்கவும் செய்தார் என்பதை அறிய முடிகிறது. குறிப்பாக பாகவதமேளா என்ற நாட்டிய நாடக மரபில் பிரதான நாடகமாகப் போற்றப்பெறும் பிரகலாத நாடகம் எனும் தெலுங்கு பாகவதமேளா நாடகத்தினை விஜயராகவனே எழுதி மன்னார்குடி கோயிலில் அரங்கேற்றினார் என்பதைச் சுவடிகள் வாயிலாகக் காணும்போது, குச்சுப்புடி நாட்டிய மரபின் பல அம்சங்கள் மன்னார்குடியிலிருந்துதான் சென்றுள்ளது என்று நிச்சயமாக நம்பலாம்.

இசை, நாடகம் முதலிய துறைகளில் நிபுணராக விளங்கிய விஜயராகவன் இராஜகோபாலன் மீது கொண்ட பக்தியினால் தன்னை மன்னாருதாசன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைந்தான். மன்னாருமீது கொண்ட பக்தியினால் தன் மகனுக்கு மன்னாருதேவன் என்று பெயரிட்டான். தந்தையைப் போலவே தானும் இசை, நாடகம் இயற்றுவதில் வல்லமையோடு வளர்ந்தான். மன்னாரு தேவன் எழுதிய 'ஹேமாப்ஜ நாயகி ஸ்வயம்வரமு' எனும் செங்கமலவல்லியின் திருமண வைபவம் பற்றிய நாட்டிய நாடகம் மிகச்சிறந்த தெலுங்கு நாடகம் என்பதில் ஐயமில்லை.

இந்நாடகம் மன்னார்குடி இராஜகோபால சுவாமித் திருக்கோயிலில், மன்னன் விஜயராகவ நாயக்கர், குலகுரு ஸ்ரீனிவாச தாத்தாச்சாரியார் ஆகியோர் இருக்க, இராஜகோபாலப் பெருமானையும் செங்கமலவல்லி நாச்சியாரையும் எழுந்தருளச் செய்து, நாடகமாக நடிக்கப் பெற்றது என்பதை இந்நூலில் காணப்படும் குறிப்பால் அறிய முடிகிறது.

1632 லிருந்து 1675 வரை தஞ்சாவூரை ஆட்சி செய்த விஜயராகவ நாயக்கரின் குலதெய்வம் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமான் என்பதைப் பல இலக்கியங்கள் கூறுகின்றன. இம்மன்னனின் அவையை அலங்கரித்த பெண்பாற்

புலவர் ரங்காஜம்மா என்பவராவார். ரங்காஜம்மாவின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கது **மன்னாருதாச விலாசம்** எனும் நாடகநூலாகும். இந்நூலில் மன்னார்குடி கோயில், திருவிழாக்கள், மன்னனார், செங்கமலவல்லி, மன்னன் விஜயராகவன், அவனது பரிவாரத்தார் என்று நம் கண்முன் காட்சிப்படுத்துகிறார். இது சுவையான நாடகம் மட்டுமன்று சுவையான வரலாறு காட்டும் ஆடி என்றே சொல்லலாம்.[8]

இதே நாடகத்தில் கோயிலில் நடப்பதாக விவரிக்கப்பட்டுள்ள காட்சி ஒன்றின் மூலமாக இக்கோயிலின் ஆண்டு வருமானமும், சொந்தமான கிராமங்களின் எண்ணிக்கையும் கூறப்பெறுகின்றது.

தஞ்சை அரண்மனையிலிருந்து இக்கோயிலுக்கென ஒவ்வொரு நாளும் 50 பொற் காசுகள் வழங்கப்பட்டது என்ற செய்தியையும் இந்நாடகத்தின் வாயிலாக அறிகிறோம்.

மன்னாருதாசவிலாசம் எனும் **இந்நாடகம்** மன்னாருதாசன் எனும் விஜயராகவனின் வரலாறு, மன்னார்குடி திருக்கோயில், மன்னனார் எனும் இராஜகோபாலப் பெருமானின் கீர்த்திகள் ஆகிய பல செய்திகளை அறியப் பெரிதும் துணைபுரிகின்றது.

தற்சமயம் ஐம்பதாண்டுகளாக இளைஞர் கலாமன்றம் என்ற அமைப்பின் மூலம் திரு வெங்கடாசலம் சிறந்த நாடகங்களை நடத்தி வருகிறார்.

10. திரைப்படம் - பத்மஸ்ரீ மனோரமா

காரைக்குடி ஒரு கண்ணதாசனைத் தந்தது. மன்னார்குடி ஒரு மனோரமாவைத் தந்தது. மன்னார்குடியில் பிறந்த இவர் பெயர் பாப்பா, ஆச்சி, பெண் சிவாஜி என்று அழைக்கப்படுகிறார். இவர் வளர்ந்தது காரைக்குடிக்கு அருகில் உள்ள பள்ளத்தூர். பன்னிரண்டு வயதில் (1958) நடிக்கத் தொடங்கினார். சொந்த

நாடகக்குழு, தொலைக்காட்சி, திரைப்படம் என்று எல்லாவற்றிலும் நடிப்பில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளார்.

தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, தமிழ் உட்பட இதுவரை 1200 திரைப்படங்களில் நடித்துள்ளார். 1985 ஆம் ஆண்டு தன்னுடைய 1000-வது திரைப்படத்தை நிறைவு செய்தார். இவர் நடித்த முதல் படம் நீதிபதி (1955). கலைஞர் கருணாநிதியின் மணிமகுடத்தில் (1958) நடித்துள்ளார்.

கொஞ்சும்குமரி படத்தில் கதாநாயகியாகவும் (1963) மாலையிட்ட மங்கையில் (1958) நகைச்சுவை நடிகையாகவும் நடித்தார். தில்லானா மோகனாம்பாளின் **"ஜில் ஜில் சுந்தரியாகவும்"**, சம்சாரம் அது மின்சாரத்தில் "ஆண்டாளாகவும்", அண்ணாமலையில் ரஜினியின் தாயாராகவும் நடித்த பாத்திரங்கள் ரசிகர்களின் மனதைக் கவர்ந்தவையாகும்.

தமிழகத்தின் நான்கு முதலமைச்சருடனும் நடித்த ஒரே குணச்சித்திர நடிகை மனோரமா.

திரு. அண்ணாதுரையோடு - நான்கண்ட இந்து ராஜ்யம்

திரு. கருணாநிதி - உதய சூரியன்

திரு. எம்.ஜி.ஆர். - நீதி

செல்வி. ஜெயலலிதா - கலாட்டா கல்யாணம்

மன்னார்குடியில் பிறந்ததைப் பெருமையாகக் கருதும் இவர் அடிக்கடி தான் பிறந்த ஊரோடு தொடர்பு கொண்டுள்ளார்.[9]

11. இசை

உணர்ச்சியின் சுருக்கெழுத்தே இசை. இசையில்லா விட்டால் வாழ்க்கை பிழைபடும். மனித இனத்தின் மொழியே இசை.

இசைக்கு மயங்காதவர் யாருமில்லை. வாய்ப்பாட்டின் மூலமும், இசைக் கருவிகளான நாதஸ்வரம், தவில், வீணை, மிருதங்கம், கஞ்சிரா, புல்லாங்குழல் போன்றவைகளின் ஒலிகள் மூலமும் தேனெனப் பாய்ந்து செவிக்கும் மனதிற்கும் நிறைவளிக்கும் நிறைவான கலை இசையேயாகும்.

வாய்ப்பாட்டிலும், இசைக் கருவி இயக்கும் கலையிலும் மன்னார்குடி வட்டம் எண்ணற்ற கலைஞர்களை இசை உலகிற்கு அளித்துள்ளது. அளித்தும் வருகிறது.

கர்நாடக இசையில் பல சாகித்ய கர்த்தாக்களை மன்னார்குடி தந்துள்ளது. கோட்டூவாத்தியக் கலைஞர் சாவித்திரியம்மாள், முகர்சிங் கலைஞர் சீதாராமையர், நடேசபிள்ளை, கஞ்சிராவித்வான் தெட்சிணாமூர்த்தி பிள்ளை போன்றோர் பிறந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் மன்னார்குடியில் தான்.

12. கதாகாலட்சேபம்

ஹரிகதா என்னும் கதாகாலட்சேபம் மகாராட்டிரத்தில் தோன்றியது. தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் தமிழகம் வந்தது. இதனைத் தமிழில் அழகுற அமைத்தவர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் (1807 - 1907) ஆவார். இவரைத்தொடர்ந்து இந்நூற்றாண்டில் கதாகாலட்சேபம் நடத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் செம்மங்குடி சீனிவாச ஐயரின் பாட்டனார் குப்புசாமி பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், கனகாம்புஜம் அம்மாள், மன்னார்குடி சாம்பசிவ பாகவதர் போன்றவர்களாவார்கள்.

மன்னார்குடி சாம்பசிவ பாகவதர் (கதாகாலட்சேபம்)

வயது : 78
தந்தை : ராஜமய்யர்
தாய் : மீனாட்சி அம்மாள்

மரபு-பயிற்சி : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிறிது காலம் இசைபயின்றார். தாம் பொறுப்பேற்றுள்ள சபாவில் கதாகாலட்சேப கலைஞர்கள் வராத போது தாமே காலட்சேபம் புரிந்து கலைத்திறனை வெளிப்படுத்தினார். மகாராஜபுரம் விஸ்வநாத அய்யரிடம் வாய்ப்பாட்டும், மதுரை நாராயண பாகவதரிடம் ஹரிகதையும் கற்றார். சென்னை அரசு இசைக் கல்லூரியில் ஹரிகதை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.[10]

சென்னை தியாகராஜ வித்வத் சமாஜத்தின் செயலாளர். 200க்கு மேற்பட்ட சுருதிகளும், வர்ணங்களும் இயற்றியவர். கதாகாலட்சேபக் கலைக்காக நூற்றுக்கணக்கில் **'நீருணங்களும்'** அமைத்தவர். நினைத்தவுடன் கவி இயற்றும் சிறப்பினர்.

அனுபவங்கள் : 60 வருடங்கள்

பட்டங்கள் : **'சங்கீத ரத்தனம்' 'சங்கீத சாகித்ய ஜோதி', 'சங்கீத கலாசிகாமணி' கலைமாமணி (1974)**

மன்னார்குடி ஆர். வேதவள்ளி (வாய்ப்பாட்டுக் கலைஞர்)

பிறந்த தேதி : 09.11.1935
தந்தை : கே.ராமசாமி
தாய் : பத்மாசினி
அனுபவங்கள் : 40 வருடங்கள்

மரபு-பயிற்சி : இசைத்துறையில் பி.ஏ. பட்டம் பெற்றார். தம் ஏழாவது வயது முதல் ஸ்ரீரங்கம் அய்யங்கார், முடிகொண்டான் எல்.வெங்கட்டராம அய்யர் முதலானோரிடம் இசை பயின்றார். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் துணைப்பேராசிரியாகப் பணிபுரிகிறார். சென்னை சங்கீத வித்வத் சபையின் சிறப்புக் குழு உறுப்பினராய் உள்ளார். பல இசை விளக்க நிகழ்ச்சிகளை அளித்துள்ளார். அகில இந்திய வானொலியின் முதல் நிலைக் கலைஞர்.[11]

பட்டங்கள் : **'சங்கீத சூடாமணி' 'இசை அரசி', 'சுஸ்வர சுகலய சங்கீத இசை அரசி'**11

13. கொன்னக்கோல் மன்னார்குடி பக்கிரிப்பிள்ளை (1866-1937)

தந்தை : சொக்கலிங்க நட்டுவனார்
தாய் : பார்வதி அம்மாள்

மரபு-பயிற்சி : பாரம்பரியமான இசைக்குடும்பத்தில் தோன்றியவர். ஆடலரங்குகளில் நட்டுவனாராயிருந்தார். பின்பு சிறந்த தவில் வித்வானாக பிரகாசித்தார்.

கொன்னக்கோல் : தாளவாத்தியங்களுக்கான சொற்கட்டுக்களை, வாயால் தொனிப்பித்தலே **'கொன்னக்கோல்'** எனப்படும். இக்கலையைத் தோற்றுவித்து அதிலே ஈடு இணையற்ற வராய்த் திகழ்ந்தார். பெரிய லய மேதையாக நாடெங்கும் பிரகாசித்தார். இக்கலைக்கு தனிச் சிறப்புடைய இடத்தையும், கௌரவத்தையும் தேடித் தந்தார். மன்னார்குடிக்கே பெருமையை ஈட்டித் தந்தார்.

சிறப்புகள் : இசையுலகமே இவருக்கு மரியாதை அளித்தது. அருணகிரிநாதரின் திருப்புகழில் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர். மன்னார்குடியில் அருணகிரிநாதர் மடம் ஒன்றை நிர்மாணித்து. அதன் குடமுழுக்கு விழாவினை 10.02.1936 அன்று நடத்தினார்.[12]

பட்டங்கள் : 'லயச்சுரங்கம்

14. நாதஸ்வரம்.

சீர்மிகுந்த விழாக்களை செந்தமிழ் மக்கள்மங்களகரமான நாதசுர இசையோடுதான் நடத்துவார்கள். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளை இந்த மங்கள இசையுடன் தொடங்குவது நம் முன்னோர்களின் நடைமுறை. நெடுங்குழல் என்றும் பெருங்வங்கியம் என்றும் போற்றப்படும் நாதஸ்வரம் அமுத இசை

வளர்க்கும் கருவி. நீண்ட குழலுடன் சீவாளி இணைத்து வாசிக்கும் போது நாதஸ்வரம் இசைவெள்ளம் பூம்புனல் வெள்ளமாகப் பொங்கிப் பெருகும். மன்னார்குடி பல புகழ் பெற்ற நாதஸ்வரக் கரைஞர்களைத் தந்துள்ளது.

மன்னார்குடி நாராயணசாமி பிள்ளை (நாதஸ்வரம்)

காலம் : 1880 - 1940

தந்தை : சாமிநாத நட்டுவனார்

மரபு - பயிற்சி : கொன்னக்கோல் பக்கிரி பிள்ளையின் உடன்பிறந்த சகோதரர். சின்ன பக்கிரிப்பிள்ளையின் சீடராகப் பயிற்சி பெற்றார். வாய்ப்பாட்டுக் கச்சேரிகளும் செய்வார். இவருக்கு தவில் வாசித்தவர்களில் மன்னார்குடி நடேச பிள்ளை, வேதாரண்யம் வேணுப்பிள்ளை, சிக்கல் ருத்ராபதி பிள்ளை முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஈடிணையற்ற நாதஸ்வரக் கலைஞர்.[13]

மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை (1898-1947) (நாதஸ்வரம்)

தந்தை : மெய்கண்டபிள்ளை

தாய் : ருக்மணி அம்மாள்

மரபு-பயிற்சி : கோட்டூர் சௌந்தராஜ பிள்ளையிடம் பயிற்சி பெற்றார். மெட்ரிகுலேசன் வரை படித்த ஒப்பற்ற நாதஸ்வர வித்வானாகப் பிரகாசித்தார். ராக ஆலாபணை செய்வதில் இணையற்ற கற்பனை நிறைந்தவர். ஓரிரு நிமிடங்களிலேயே ராகத்தின் ஜீவனை, பூர்ணமான ஸ்வருபத்தில் அதன் சுவையை வெளிப்படுத்தும் வன்மை பெற்றிருந்தார். மன்னார்குடி நாதஸ்வரச் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவர்.[14]

கோட்டூர் என். ராஜரத்தினம் (நாதஸ்வரம்)

தந்தை : நடராஜசுந்தரம் பிள்ளை

தாய் : கண்ணம்மாள்

மரபு-பயிற்சி : பாட்டனார் நாகப்பட்டிணம் வேணுகோபால் பிள்ளை, தந்தையார், நாதஸ்வரக் கலைஞர். என். சௌந்தரம் பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வரம் பயிற்சி பெற்றார். இலங்கைக்குச் சென்று கலை நிகழ்ச்சி செய்தவர்.

அனுபவம் : 40 ஆண்டுகள்

பட்டங்கள் : **"நாதஸ்வர கலாநிதி", "இன்பகான திலகம்" "கலைமாமணி".**

மன்னார்குடி பரமசிவம் பிள்ளை (1929-1976) (நாதஸ்வரம்)

தந்தை : சண்முகம் பிள்ளை

தாய் : நாகரத்தினம்

மரபு-பயிற்சி : குரு பொன்னையா பிள்ளையிடம் நாதஸ்வரப் பயிற்சி பெற்றார். தனது மாயக் குழலிசையால் இப்பிரபஞ்சத்தையே தன்னிடம் கவர்ந்த ராஜகோபாலனை யொப்ப, தன் நாதஸ்வரக் குழலிசையால் கேட்பவரையெல்லாம் 'பிரம்மாஸ்திரம்' போல் கவர்ந்திழுத்தார். பங்குனித் திருவிழாவில் இவரது கச்சேரி ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக இருக்கும். முதலமைச்சர்கள் திரு. அண்ணா, திரு. கருணாநிதி ஆகியோரிடம் பாராட்டுகளைப் பெற்றவர்.[15]

பட்டங்கள் : **'நாதஸ்வர வித்வான்மணி' 'நாதஸ்வரகேசரி'**

15. மிருதங்கம் - தவில்

தமிழர்களின் இசைக் கருவிகளில் குறிப்பிடத்தக்க ஒன்று மிருதங்கம் என்னும் தாளக்கருவியாகும். பெண்கள், ஆடும் நடனத்தினை 'லாஸ்யம்' என நூலோர் கூறுவர். இந்நடனத்தில் பெண்மையின் நளினமும் மென்மையும் மீதூன்றி நிற்கும். இத்துடன் மென்மையும் மீதூன்றி நிற்கும். இத்தகைய மென்மையான ஆட்டத்திற்கு மெருகூட்டுவது மிருதங்கம் என்றே கூறலாம்.[16]

மன்னார்குடி ஏ.ஈஸ்வரன் (மிருதங்கம்)

பிறந்த நாள் : 01.04.1947
தந்தை : சுப்பையா தீட்சதர்
அனுபவங்கள் : 35 ஆண்டுகள்
மரபு-பயிற்சி : சுப்பையா தீட்சதரின் மரபினர். குன்னிசேரி A. கிருஷ்ணசாமி அய்யரிடம் இசை பயின்றார். எட்டு வயதில் கச்சேரி செய்தார். புகழ்பெற்ற மிருதங்க வித்வான். அகில இந்திய வானொலியில் 'ஏ' நிலைக் கலைஞராகப் பணியாற்றுகிறார். உயர்முதல் நிலைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளில் பக்க வாத்தியம் வாசித்தவர். உலகம் முழுதும் கச்சேரி நடத்தியுள்ளார். 'லய கலாதார சாம்ரா' 'கலைமாமணி' போன்ற பட்டங்கள் பெற்றுள்ளார்.

மன்னார்குடி எம்.ஆர். வாசுதேவன்

பிறந்த நாள் : 25.04.1961
தந்தை : எஸ். ராமகிருஷ்ணபிள்ளை
தாய் : அமராவதிஅம்மாள்
அனுபவம் : 20 வருடங்கள்

மரபு-பயிற்சி : கீழ்வேளூர் குஞ்சு சிங்காரவேல் பிள்ளையிடம் பயிற்சி பெற்றார். இந்தியாவில் பல நகரங்களின் மேடைகளில் தவில் இசைத்து முழக்கியவர். அகில இந்திய வானொலியின் 'ஏ' நிலைக் கலைஞர்.[17]

பட்டங்கள் : **'இசை மாமுரசு', 'இன்பகான திலகம்', கற்பனைகலாநிதி'**
'கலைமாமணி' (1991)

மன்னார்குடி நடேசப்பிள்ளை (தவில்கலைஞர்)

தந்தை : கோவிந்தசாமி பிள்ளை

தாய் : தங்கம்மாள்

மரபு-பயிற்சி : இசைக் குடும்பத்தில் தோன்றியவர், தனது சித்தப்பா பக்கிரிப் பிள்ளையிடம் தவில் கற்றார். கற்பனையூற்று மிக்க தவில் கலைஞராக விளங்கினார். திருகிவிட்ட வானொலிப் பெட்டியைப் போலச் சற்றும் சோர்வு, தளர்வின்றி, ஒலியும் குறையாமல், கற்பனையெனும் விதவிதமான வண்ணங்களுடன் வாசித்துக் கொண்டே இருப்பார். ஐந்து மணி நேரமானாலும் ஒற்றைத் தவிலாகவே வாசிக்க வல்லவர்[18]

இவர்களைத் தவிர புகழ்பெற்ற நாடக, திரைப்படக் கலைஞர் எம்.ஜி. நமராஜப்பிள்ளை:, தவில் கலைஞர் சின்னபக்கிரியா பிள்ளை, வலையப்பட்டியின் குருநாதராக விளங்கிய ராஜகோபால் பிள்ளை போன்ற பலர் பிறந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் மன்னையில் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

16. இலக்கியம்

ஒரு தேசத்தின், ஒரு நாகரீகத்தின், ஒரு பண்பாட்டின் உரைகல் இலக்கியம். மன்னார்குடி வட்டத்தில் தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கிற படைப்புகளும் இலக்கியப் பெருமையைப் பெற்றுள்ளன. மன்னார்குடி ஒரு பெரிய இலக்கியக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. எண்ணற்ற இலக்கிய படைப்பாளிகளையும் இலக்கிய படைப்புக்களையும் தமிழ் மொழிக்கு அளித்து வருகிறது.

17. செண்டலங்காரன் விறலிவிடு தூது

யாதவர் குலத்தில் தோன்றிய செண்டலங்காரன் என்னும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனைப் புகழும் வகையில் அமைந்தது இச்சுவடி.

வாகுபட்டனென்னும் அந்தணன், தன்னிடம் ஊடல் கொண்ட மனையாளிடத்து ஆடலில் வல்ல விறலியைத் தூது விடல்.

சரசுவதிமஹாலில் இந்தச் சுவடி உள்ளது. புகழ் பெற்ற செண்டலங்காரன் என்னும் வள்ளல், தஞ்சை சகசி அரசருக்குரிய கிராமமணியத்து அட்டவணை அதிகாரியாக இருந்தான் என்பதை,

"தன் மதுரை தஞ்சைச் சகசிமா ராசனுக்குப்
பொன் முதிர வேண்டிப் புதுக்கியே - நன்மணியத்
திட்டமிட்டு நாளுந் திகழ் நல்லவன் வாசல்
அட்டவணையாஞ் செண்டலங்காரன். (கண்ணி 544545)

தஞ்சையில் மராட்டிய மன்னர் மரபில் சகசி மன்னர் ஆட்சி செய்த காலம் கி.பி. 1634 முதல் கி.பி.1714 வரையிலாகும். இதனால் இந்நூலாசிரியர் இன்றைக்கு இரு நூற்று எழுபத்தைந்தாண்டுகட்கு முன்னர் சோழ நாட்டில் வாழ்ந்த புலவர் என்பது தெளிவாகும்.

பாட்டுடைத் தலைவன் செண்டலங்காரனின் சிறப்பியல்புகள் கூறுமிடத்து,

"சீர் கொண்ட செம்பதுமச் செல்வி மணவாளன்
கார் கொண்டமேனிக் கருணைமால் - ஏர்கொண்ட
செண்டழகன் பேரழகன் செய்யதனிச் சேலையுள
தண்டழகன் செண்பகப் பூந் தாரழகன் - வண்டுவரை
தன்னில் வருவோன் தனிமாலைத் தாரழகன்
பொன்னி லழகன் புகழழகன் - நென்நெலார்
சீராசை வாழந் திகழ் செண்டலங்காரன்."

வண்டுவரை - வளம் நிறைந்த தக்கண துவாரகை. இந்நகர் இராச மன்னார்குடியாகும். இதன் மரூஉ பெயர் - துவரை என்பதாம் என இந்நூலில் மன்னார்குடியின் சிறப்பியல்புகள் பல இடங்களில் பேசப்படுகின்றது.

"வண்டுவரை ராசை வளம்பதியான்"
இயற்கை வளங்கள்
இந்நூலில்,
சத்த தலமுந் தடமதிலுங் கோபுரமும்
பத்தி பத்தியான பலகணியும் - கொத்துமலர்ச்
சோலையுங் காய்கறித் தோட்டமும் செங்களும்
பாலையும் ஆலயமும் அம்பலமும் - சாலைகளும்
மண்டபமுஞ் தீர்த்த வசதியும் சாவடியும்
புண்டரீக வாவிகளும் பூம்புனலும் - மண்டலிகர்
தங்க வரன்மனையுஞ் சத்திரமும் திண்ணைகளும்
மங்கை நல்லார் வீதிகளும் வன்மைகளுள் - தங்க
கடையும் கடைத்தெருவுங் கம்பமுங்கொற்றக்
குடையும் கொடியும் குழுறுங் - கடகளிறுஞ்
செண்டிகர் சன்னதியுஞ் சேர்ந்து வளம் பொருந்து
வண்டுவரை ராசை வளம்பதியான் - வண்டைரசய

(கண்ணி 39 - 44)

இவ்வாறு மன்னார்குடியின் இயற்கை வளச் சிறப்பையும், அருள்மிகு இராசகோபால சுவாமி கோயில் "செண்டடிகர் சன்னதி" என்றும் இவ்விலக்கியம் வாயிலாக அறியப்படுகின்றது.[19]

18. விஜயகுனா சரிதம்

இராச மன்னார்குடியின் இயற்கை வனப்பை எடுத்தியம்புகிறது விசயகுனா சரிதம் என்னும் சமஸ்கிருத நூல்.

பசுஞ் சோலைகளும் ஓங்கி வளர்ந்துள்ள தென்னை மரங்களும் ஞாயிற்றின் கதிர்கள் உள்ளே புகமுடியாதபடி அடர்ந்திருந்தன என்று கூறுகிறது.[20]

19. திருவாய் மொழி

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனை அல்லால்
நும் இச்சை சொல்லி நுந்தோல் குலைக்கப்படும் அன்னனுமீர்
மன்னப்படு மறைவாணனை வண்டுவராபதி மன்னனை
ஏத்து மின் ஏத்தலும் தொழுதாடுமே.

திருவாய்மொழி 4-6-10

என நாலாயிரத்திவ்யபிரபந்தத்தில் நம்மாழ்வார் திருவாய்மொழியில் "வண்டுவராபதி" என்று குறிப்பிடும் இறைவன் எந்த ஊருக்குச் சொந்தமானவர் என்பது ஆய்வுக்கு உரியதாக உள்ளது.[21]

20. தி.ஜானகிராமன் (எழுத்தாளர்)

திரு. தி. ஜானகிராமன் அவர்கள் 1921 ஆம் ஆண்டு மன்னார்குடி வட்டத்தைச் சேர்ந்த தேவங்குடியில் பிறந்தவர். இளம் வயதில் சங்கீதத்தின்பால் ஆர்வம் கொண்டு முறையாக சங்கீத வித்வானிடம் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்றார். அரங்கேற்ற நாளில் ஆசையுடன் அரங்கம் நோக்கிச் சென்றபோது, எதிரே தனது குருவின் சவ ஊர்வலம் வருவதை அறிந்ததும், சங்கீத மேடைக்குப் போவதையே விட்டுவிட்டார்.

தனது 15வது வயதில் சிறுகதை எழுதத் தொடங்கிய இவர், கும்பகோணம் பள்ளியில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றிய காலத்தில் பல சிறுகதைகள் எழுதி தமிழகத்தின் சிறுகதை எழுத்தாளர்களில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றார். இவர் எழுதிய சிலிர்ப்பு, முள்முடி, நாலுவேலி நிலம் போன்ற கதைகள் அனைவருடைய மனத்தையும் கொள்ளைகொண்டது.

சிறுகதையைத்தவிர, நாவல்கள், பயணக்கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், நாடகங்கள் என்று பல துறைகளிலும் இவருடைய கைவண்ணத்தைக் காணமுடியும். மன்னார்குடி

வட்ட வழக்கில் புழங்கிய மொழியினை இவர் கதையில் நிறைய காணலாம். அம்மொழியினை இவர் நன்கு கலை ரசனையுடன் கையாண்டுள்ளார். தமிழில் வெகு அற்புதமாக, நேர்த்தியாக, நெகிழ்ச்சியோடு, மனங்கவரும் வண்ணம் எழுதக்கூடிய ஆற்றல் மிக்க எழுத்தாளர் இவர்.

1956ல் 'சிவப்பு ரிக்ஷா' என்ற இவருடைய சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. இவருடைய சிறுகதைகள் அநேகமாக எல்லா தலைசிறந்த பத்திரிகையிலும் வெளிவந்தன. திரு. பி.எஸ். ராமையாவினால் நடத்தப்பட்ட மணிக்கொடி பத்திரிகையில் இவர் கதைகள் வெளிவந்து சிறுகதை இலக்கியத்தில் உறுதியான இடத்தை திரு. ஜானகிராமன் பெற்றுவிட்டார். 'கொட்டுமேளம்' என்ற மற்றொரு கதைத் தொகுப்பு வெளிவந்ததும், தமிழகத்தில் தலை சிறந்த எழுத்தாளராக இடம்பெற்றுவிட்டார். 'சக்தி வைத்தியம்' என்ற பெயரில் இவருடைய சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்தது.

மன்னார்குடி மக்களின் அன்றாட வாழ்வை நுட்பமாக வைத்து கதை எழுதும் ஆற்றல் பெற்ற இவர்நாவல் எழுதுவதில் வல்லவர் என்பதை 1935 ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் வெளிவந்த 'மோகமுள்' என்ற நாவல் நிரூபித்தது. மோகமுள் சிறந்த தமிழ் நாவல். இவர் 'செம்பருத்தி', 'அன்பே ஆரமுதே', மலர்மஞ்சம், நளபாகம், மரப்பசு போன்ற நாவல்களை பல பத்திரிகைகளில் தொடராகவே எழுதினார். பின்னர் 1966ல் 'அம்மா வந்தாள்' என்ற நாவலை ஒரே மாதத்தில் எழுதி முடித்தார்.

நடிகர் சகஸ்ரநாமம், எழுத்தாளர் பி.எஸ். ராமையாவின் தொடர்பால் இவர் நாலு வேலி நிலம், வடிவேலு வாத்தியார் என்ற மேடை நாடகங்களை எழுதினார். இந்த நாடகங்கள் நடிகர் சகஸ்ரநாமம் அவர்களால் மேடை ஏற்றப்பட்டன. 1967ல்

சங்கீதநாடக அகாதெமி இவருக்கு விருது வழங்கி கௌரவித்தது. 1979ல் இவருக்கு சாகித்ய அகாதெமி விருதும் வழங்கப்பட்டது.

ஆசிரியர் பணியைவிட்டுவிட்டு, அகில இந்திய வானொலியில் சென்னை கல்வி ஒலிபரப்பில் பணியாற்றினார். பின்னர் புதுடெல்லியிலும் பணியாற்றினார். ஜப்பான் சென்று வந்து அந்நாட்டைப் பற்றிய பயணக் கட்டுரையை எழுதிய இவர் 1978ல் ஓய்வு பெற்றார்.

இவர் அமரராகி விட்டாலும் இவருடைய படைப்புக்கள் சிரஞ்சீவித் தன்மை பெற்றனவாக உள்ளன. மன்னார்குடிக்குப் பெருமை சேர்த்த தலைசிறந்த தமிழ் எழுத்தாளர் இவர்.[22]

21.மண்வாசனை:

தி. ஜானகிராமன் எழுத்தில் தஞ்சைத் தமிழ் மணக்கும். 'திண்ணைவீரா' என்ற அவருடைய சிறு கதையில் திண்ணையில் உட்கார்ந்தபடி ஊர் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் பெரிய மனிதருக்கும் கடனைத் திருப்பிக் கொடுக்காதவனுக்கும் நடக்கும் படு சுவாரஸ்யமான உரையாடல் இது.

"எல என்ன கட்டை ரொம்பத் துளுத்துப் போச்சு? ம்ஹ்ம், சீ.... கையைக் கீளப்போடு... ஏண்டல, கணக்குத் தீக்க அம்மாசிக்கே வரென்னு சொன்னியால்லியாடா?... ஏண்டா! சொன்னியால்லியாடா? சொன்னியால்லியாடா? ஏண்டா சும்மா நிக்கிறியே? ஏல, உன்னைத்தாண்டா?... ஏன், பேசமாட்டியா? இப்ப, எழுந்த வந்தேனா...?"

"அம்மாசிக்குத்தான் என் மாமியா இளுத்துக்கிட்டு கிடந்துச் சங்க. காலங்காட்டியும் கிளம்பி வரணும்னுதான் படுத்தேன். ரண்டு சாமத்துக்கு ஆள் வந்திரிச்சு... முன்னெத்தி மயிரைப் படிச்சாத் தெரியாதுங்கு. அப்படி இருட்டு கும்பிக்கிட்டு இருந்தது. அதிலேயே உளுந்தடிச்சிகிட்டுப் போனோம். விடிஞ்சு போய்

சேர்றதுக்குள்ளாக திருவாலூர் ஆசுபத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிட்டாங்களாம். அப்புறம் மேலே போயி... ரொம்ப அவதியாப் பூட்டுங்க..."

"சரி அப்புறம்? மருமவன் கைராசிதான் மாமியா பொளச்சு கிட்டா. சரி உடனே வர்றதுக்கென்னவாம்? அம்மாசி போயி பதினோரு நாளாச்சிடா?

"போன இடத்திலே டாகுட்டருக்கும் மருந்துக்கும் நாப்பது ரூவாக்கு மேலே போயிடுச்சுங்க. அப்புறம் மேலே..."

"சரி, எடு பணத்தை!"

அதாங்க சொல்ல வந்தேன்... இந்த மருந்துச் செலவு ரொம்ப அடாபுடியாப் பூட்டுங்க...!"

அதுக்காக...?"

"இந்த மார்களி முச்சும் பொறுத்துக்கிட்டா, பொங்கல் களிஞ்சு மூணா நா கொண்டாரெனா இல்லியா பார்த்துக்கங்க"

ஏல, இங்க வா இப்படி; வாடாங்கறேன். வாடா இப்படி, வர மாட்டியா? இப்ப எழுந்து வந்தேனா, தெரியுமா"

பந்தல் காலடியில் நின்ற ஆசாமி திண்ணைப் பக்கம் போனான். "இங்க வாடா இப்படி... இப்படிக் கிட்ட வாடா, வர மாட்டே! இப்ப எழுந்து வந்நதன்னா.. பாத்துக்க..."

ஆசாமி அருகில் போனான்.

"போட்டுக்கடா... என்னடா பாக்கிறியே? கன்னத்திலே போட்டுக்கடாங்கறேன்... பளார் பளார்னு நாலு போட்டுக்கணும். மாட்டியா? நான்தான் போடணுமா?"

ஆசாமி பளார் பளார் என்று கன்னத்தில் நாலு போட்டுக் கொண்டான்.

"போட்டுக்கிட்டியா?... இதைக் கையில எடு... எடுத்துக்கிட்டியா? என்னிக்குப் பணம் கொண்டாரே?"

தை மாசம் நாலாம் தேதி"

"நிச்சயமா?"

"நிச்சயமா!"

"கிழக்கே பார்த்துக்கிட்டு சொல்லுறே பாத்துக்க, கையிலே எடுத்துட்டு நிக்கிறியே... அது என்ன தெரியுமாடா?"

"பொய்த்தவம்"

"பொய்த்தவமில்லெடா, பொஸ்தகம்... சும்மா 'தங்கமத்தில்லால' இல்லே, திருமுருகாற்றுப்படை, சுப்பிரமணிய சாமி இருக்குறார் பாரு, அவர் மேலே பாடின பாட்டுங்க, அத கையிலே வச்சு கிட்டு கிழக்கை பாத்துக்கிட்டு, தை மாசம் நாலாம் தேதி கொண்டா ரென்னு சொல்லியிருக்கே, ஜாக்குதெ. பயலே, தேதி தப்பிச்சோ, கண்ணைப் பிடுங்கிப் புடுவாரு சுப்ரமணியரு! உஜாரா இரு... தெரிஞ்சுதா? ஏய், செல்றான்... சவநாது நீயும் கேட்டுக்க!"

"கேட்டுதுங்க என்று பந்தல் ஓரத்திலிருந்து இரண்டு ஆட்கள் சாட்சி கொன்னார்கள்.

22. சுவாமிநாத ஆத்ரேயர்

மன்னார்குடியைச் சார்ந்த திரு. சுவாமிநாத ஆத்ரேயர், சிறந்த தமிழ் சிறுகதை எழுத்தாளர். நல்ல சமஸ்கிருத நூலாசிரியர். சமஸ்கிருதத்தில் சிரோண்மணி பட்டம் பெற்ற இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இணையான பாண்டித்தியம் பெற்று சிறந்து விளங்குகிறார்.

சுதேசமித்திரன், கல்கி, கலைமகள், மஞ்சரி போன்ற பல பத்திரிக்கைகளில் இவருடைய கதைகள் நிறைய வெளிவந்தன.

காந்தியடிகளின் மைந்தர் தேவதாஸ் காந்தி அவர்கள் நடத்திய டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையும், கல்கியும் இணைந்து நடத்திய உலக சிறுகதைப் போட்டியில் இவருடைய 'பூக்காரி' என்ற சிறுகதைக்கு மூன்றாவது பரிசு கிடைத்தது. திருச்சி வானொலி நிலையத்தில் சமஸ்கிருத நிகழ்ச்சியில் பங்கேற்று புகழ் பெற்றவர்.

தஞ்சை ராஜா சரபோஜி மன்னர் சரஸ்வதி மகாலில் சமஸ்கிருதத்திலிருந்து அஸ்வசாஸ்திரம், கஜசாஸ்திரம் போன்ற நூல்களை தமிழில் மொழி பெயர்க்க உதவியுள்ளார். சரஸ்வதி மகாலின் சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியராகப் பணியாற்றிஇருக்கிறார்.

தியாகையர் எந்த சந்தர்ப்பத்தில் இன்ன இன்ன பாடல்களைப் பாடினார் என்பதை விளக்கி, தியாகராஜர் கதைகள் என்ற நூலை எழுதியுள்ளார். மாணிக்கவீணை என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். மன்னைக்கு பெருமை சேர்க்கும் பழம் பெரும் எழுத்தாளர் இவர்.[23]

23. வடுவூர் துரைசாமி ஐயங்கார்

தமிழ் நாவல்களில் துப்பறியும் பாத்திரங்களைப் புகுத்தி கதையின் நிகழ்ச்சிகளில் விறுவிறுப்பையும், திகைப்பையும் உண்டாக்கி, திருப்பங்களையும் தந்து படிப்போரின் ஆவலைத் தூண்டும்படியான நாவல்களை எழுதிப் புகழ் பெற்ற துரைசாமி ஐயங்கார், மன்னார்குடிக்கு அருகில் உள்ள வடுவூரில் கிருஷ்ணஐயரின் மகனாகப் பிறந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான இவர், பொழுது போக்காக தமிழில் நாவல்களை எழுதினார். பல ஆண்டுகள் அரசு ஊழியராகப் பணியாற்றிய இவர் "மேனகா" என்ற நாவலை எழுதிப் பெரும் புகழ் பெற்றார். இவருடைய இந்த

நாவல் நாடகமாக நடிக்கப்பட்டது. பின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது ஒரு சமூக சீர்த்திருத்தப்படமாக கருதப்பட்டது.

இவருக்கு மேலும் புகழைத் தந்த நாவல் "கும்பகோணம் வக்கீல்" அல்லது திகம்பரசாமியார்" என்ற நாவலாகும். இந்த நாவலும் திரைப்படமாக்கப்பட்டது. இதைத் தவிர மாயாவிநோதப் பரதேசி, பாலாமணி அல்லது பக்காத்திருடன், மதனகல்யாணி, சௌந்திர கோகிலம் முதலிய சிறந்த நாவல்களை எழுதினார். நகைச் சுவையுடன் எழுதக் கூடியவர், நாவலைத் தவிர பல கதைகளையும் எழுதியுள்ளார். செய்யுள் உரை நடையுடன் கூடிய மாணிக்கவாசகர் என்ற நாடகம் ஒன்றையும், திலோத்தமா என்ற முழுச் செய்யுள் நூல் ஒன்றையும் படைத்துள்ளார். இவருக்கு ஆங்கிலத்திலும் நல்ல புலமை இருந்தது. மறைந்த இணைப்புகள் (Missing Links) என்ற ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுமார் நாற்பது ஆண்டுகள் வரை, இவருடைய நாவல்களை மக்கள் விரும்பிப் படித்து மகிழ்ச்சி அடைந்தனர்.[24]

24. படைப்பாளிகள் பலர்.

மன்னார்குடியில் பிறந்து தமது படைப்புக்கள் மூலம் மண்ணுக்கு பெருமை சேர்த்த பெருமக்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்:-[25]

* ஆரியதான கே.வி.சந்தான கிருஷ்ணநாயுடு (1880)
  (திரைப்படப்பாடலாசிரியர்).
* என். வீராச்சாமி நாயுடு (1914)
  (நூல் - ஹரிபஜனா - திருமால் புகழ் பக்திப்பாடல்கள்)

* ஜி. ராமச்சந்திர நாயுடு (1914)
  (நூல் - தலையணை மந்திரம்)
* ஏ.சீனிவாச ரெட்டி (1913)
  (நூல் - வைத்திய போதனை விளம்பரச் சஞ்கை)
* கே. சுந்தரராஜு செட்டி
  (நூல் - காலை அலங்காரம்)
* கே. சுந்தரராஜு செட்டி (1914)
  (நூல் - ராஜகோபாலசாமி தெப்ப உற்சவ தெம்மாங்கு பாடல்கள் 1911)
* சொக்கலிங்க தாஸ் (1914)
  (நூல் உச்சவ கும்பி 1914)
* பத்மாட்சி சுந்தரம்மாள் (1912)
  (நூல் - பிரஷ்ம உத்ஸவக் கும்மி)
* பெரியசாமி புலவர் - 1912
  (நூல் - காரனேஷன் கும்பி)
* டி.வி. ராஜ கோபாலநாயுடு - 1911
  (நூல் விகட புலம்பல்)
* டி.ஏ. அருணாச்சலம் செட்டி - 1911
  (முடிசூட்டு வாழ்த்து)
* டி.எஸ்.ஏ. சாமி - 1913
  (நூல் - கருங்குயில் குன்றத்துக் கொலை)
* திருமாவழக பிள்ளை - 1912
  (நூல் - முனையிடுவார் நாயானார்புராணம் சரித்திரம்)
* வி. நாராயணசாமி ஐயர் - 1912
  (காரைக்கால் அம்மையார் சரித்திரம்)
* வேங்கடாச் சார்யார் - 1912
  (மகாபாரதம் வராட பர்வம்)
* தி. குப்புசாமி ஐயர் - 1918
  (திருகண்ணப்பநாயனார் இராட்டை மணிமாலை)

* கரிச்சான் குஞ்சு - 1909
  மணிக்கொடிக் காலத்து சிறந்த சிறுகதை எழுத்தாளர்.
* து.ப. நடனம் - 1929
  (செய்தி ஆசிரியர் - எழுத்தாளர்)
* வடுவூர் நாராயணன் - 1932
  (சிறுகதை எழுத்தாளர்)
* விஸ்வநாதன் - 1919
  (எழுத்தாளர்)
* பானுகுமார் - 1951 (இந்நூலாசிரியர்)

குமார் என்பது இயற்பெயர். மன்னார்குடி அரிசிக்கடைத்தெரு வடிவேல், எத்திராஜம் தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வராக 1951-ல் பிறந்தவர். முதுகலை பட்டம் பெற்று தலைமைச் செயலகத்தில் அதிகாரியாகவும், கூட்டுறவுத் துறையில் துணைப்பதிவாளராகவும் பணியாற்றியவர்.

தனது எழுத்தில் பன்முகப்பட்ட தளங்களை வலுவோடு சித்தரிப்பவர். கட்டுரை ஆற்றலும் படைப்பிலக்க துறைகளும் வசப்பட்டவர். இவரது கதைகளிலும், கவிதைகளிலும், கருத்துக்களிலும் வரலாறும், தத்துவமும், நவீனத்துவமும் பிரமிக்கத்தக்கவை.

அடடா...! எத்தனை கலைகளும், கலைஞர்களும் பிறந்த மண் இது. இன்னமும் கூட மன்னையின் மாட்சியை உலகுக்கு உணர்த்தி வருகிறார்கள்.

25. கவிதைகள்

கவிதை ஆற்றலில் சிறந்து விளங்கும் பல இளம் கலைஞர்களையும் மன்னை மண் பெற்றுள்ளது. அவர்களின் கவிதைகள் இலக்கியத் தரம் பெற்றுத் திகழ்கின்றன. இயல், இசை, நாடகம் மூன்றிலும் மிகச் சிறந்து விளங்குவது மன்னார்குடி வட்டம்.

26. திரு. தி. இராஜகோபாலன் (சுரதா)

பிறந்த தேதி	:	23.11.1921
பெற்றோர்	:	திரு. திருவேங்கடம், திருமதி. செண்பகம் அம்மையார்
ஊர்	:	பழையனூர், மன்னார்குடி வட்டம்
கல்வித் தகுதி	:	முறையாகத் தமிழ் பயின்றவர்
பணி விவரம்	:	இலக்கியப்பணி, எழுத்தாளர், பல்வேறு தமிழியக்கப் பணிகள்

'உவமைக்கவிஞர்' என வழங்கப்பட்டவர். 2000 கவிதைகளுக்கு இவர் சொந்தக்காரர். கவிதைக்காகவே முதன் முதலில் 'காவியம்' என்ற இதழை நடத்தியவர். பாவேந்தருக்குப் பிறகு, தமிழ்க்கவிஞர் பெரு மன்றத்தின் தலைவராகச் செயல்பட்டவர். இவரது கவிதைகள் ஆங்கிலம், இந்தி, மலேயா, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது போன்ற பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களிலும், கேரளப் பல்கலைக் கழகத்திலும் இவரது நூல்கள் பாடநூல்களாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இவர் 'காவியம்' (1955), இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), சுரதா (1968) ஆகிய ஏடுகளை நடத்தி வந்தார். மங்கையர்க்கரசி, அமரகவி, ஜெனோவா போன்ற திரைப்படங்களுக்கு உரையாடல்கள் எழுதியுள்ளார்.

படைப்புகள்

முதற்கவிதை - 1946 சாவின் முத்தம் (கவிதை - 1946), மங்கையர்க்கரசி (திரைப்பட உரையாடல் - 1951), தொடாத வாலிபம் (நாடகம் - 1953), உதட்டில் உதடு (கவிதை - 1953), எப்போதும் இருப்பவர்கள் (வாழ்க்கை வரலாறு - 1955), பட்டத்தரசி (கவிதை - 1956), அமுதும் தேனும் (வரலாற்றுக்

கவிதைகள் 1960), தேன்மழை (கவிதை - 1965), சுவரும் சுண்ணாம்பும் (கவிதை - 1974), நெஞ்சில் நிறுத்துங்கள் (கட்டுரை - 1975), துறைமுகம் (கவிதை - 1976), சொன்னார்கள் (தொகுப்பு நூல் -1976), எச்சில் இரவு (உரைநடை - 1981), வார்த்தைவாசல் (கவிதை - 1984), வெட்டவெளிச்சம் (தொகுப்பு நூல் - 1986). கவிதைத் தொகுப்பு 8, நாடகம் 1, திரைப்பட உரையாடல் 1, வரலாறு 1, கட்டுரை 2, தொகுப்புகள் 2 எனப் பல படைப்புகளைத் தந்துள்ளார். 'தேன்மழை', 'எச்சில் இரவு', 'பட்டத்தரசி', 'சாவின் முத்தம்' போன்ற படைப்புகள் பலரது பாராட்டுகளையும் பெற்றவை.

பட்டயங்கள் - விருதுகள்

கலைமாமணி, கவியரசர் போன்ற பல பட்டங்களையும், ராஜராஜன் விருது (1995). கலைஞர் விருது (1999), ஆதித்தனார் விருது (2000) என்று பல விருதுகளையும் பெற்றவர்.[26]

27. தொகுப்புரை

இசை, நாடகம், ஓவியம், சிற்பம், நடனம் முதலிய ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஆதரித்த பெருமை இவ்வட்டத்திற்கு மட்டுமே உரிய தனிப்பெருமையாகும்.[27] இந்தியாவின் கலைப் பொக்கிஷங்களைக் கொண்டுள்ள மன்னார்குடி வட்டம் இயல், இசை, நாடகம் மூன்றுக்கும் தாயகமாக விளங்குகிறது என்றால் மிகையாகாது. மன்னார்குடி - தமிழகத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தின் பெருமையை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

அடிக்குறிப்பு

1. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995 பக். 38
2. தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு - குடவாயிற் பாலசுப்பிரமணியம் பக். 199.
3. மேலது பக். 237
4. ஞாபகம் வருதே - பானுகுமார் 2005 - பக்-207
5. மேலது - பக் - 173
6. தமிழக வரலாறும் பண்பாடும் - டாக்டர் கே.கே. பிள்ளை உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் - பக். 546
7. தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு - குடவாயிற் பாலசுப்பிரமணியம் - பக். 281
8. ராஜகோபாலசாமி கோயில் மலர் 1995 - பக். 30
9. இண்டர்நெட் அலைவரிசை - நடிகை மனோரமா
10. யார் எவர்? தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - பக். 45
11. மேலது பக்.
12. மங்கல இசை மன்னர்கள் - பி.எம். சுந்தரம் - பக். 255
13. மேலது - பக். 114
14. மேலது - பக். 128
15. மேலது - பக். 251
16. மேலது - பக். 311
17. மேலது - பக்.
18. யார் எவர்? தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பக். 8
19. விறலிவிடுதூது - பக்கம் 50
20. விஜயகுனா சரிதம் - பக். 25
21. திருவாய்மொழி - பக். 10
22. நெஞ்சை அள்ளும் தஞ்சை - நா. எத்திராஜ் - பக். 381
23. மேலது - பக். 385
24. மேலது - பக். 386
25. தியாக தீபங்கள் - து.ப. நடனம் - பக். 15,16
26. புகழ்பெற்ற 100 கலைஞர்கள்.
27. தஞ்சாவூர் மவாட்டம் சோமலே - பக் 13

******



கொன்னக்கோல் வித்துவான் எஸ். பக்கிரியா பிள்ளை

15. மன்னார்குடி வட்ட கல்வெட்டுக்கள்

மன்னார்குடி - இராஜகோபாலசாமி திருக்கோயில்

வ. எண்	மன்னர்கள்	வரலாற்று ஆண்டு	ஆட்சி ஆண்டு	கல்வெட்டு எண் - மொழி - வரிகள்
1.	கோனேரின்மை மெய்கொண்டான்		12	A.R. No. 102/1897 - தமிழ் - 58 வரிகள்
2.	முதலாம் குலோத்துங்கன்	கி.பி. 1070	48	A.R. No. 103/1897 - தமிழ் - 37 வரிகள்
3.	மூன்றாம் ராஜராஜன்	கி.பி. 1216	22+1	A.R. No. 104/1897 - தமிழ் - 66 வரிகள்
4.	மூன்றாம் ராஜேந்திரன்	கி.பி. 1246	21	A.R. No.1051897- தமிழ் - 23 வரிகள்
5.	மன்னன் பெயர் தெரியவில்லை	13ஆம் நூற்றாண்டு	31	A.R. No. 106/1897 - தமிழ் - 18 வரிகள்
6.	மன்னன் பெயர் தெரியவில்லை	கி.பி. 1577	சகம் 1499	A.R. No. 107/1897 - தமிழ் - 14 வரிகள்
7.	மன்னன் பெயர் தெரியவில்லை	கி.பி. 16		A.R. No. 108/1897 - தமிழ் - 9 வரிகள்
8.	திரிபுவன சக்ரவர்த்தி சுந்தரபாண்டியன்	-	-	A.R. No. 109/1897 - தமிழ் - 10 வரிகள்

மன்னார்குடி - கைலாசநாதர் கோயில்

9.	திருபுவனசக்ரவர்த்தி இராஜராஜதேவன்		22	A.R. No. 96/1897 - தமிழ் - 34 வரிகள்
10.	வைசால மன்னர் வீரசோமேசுவரதேவன்		26	A.R. No. 97/1897 - தமிழ் - 17 வரிகள்
11.	திரிபுவனசக்ரவர்த்தி இராஜ ராஜதேவன்		22	A.R. No. 98/1897 - தமிழ் - 70 வரிகள்
12.	திரிபுவனசக்ரவர்த்தி இராஜ ராஜதேவன்		22	A.R. No. 99/1897 - தமிழ் - 8 வரிகள்
13.	மாறவர்ம பராக்கிரம பாண்டியதேவன்	கி.பி. 1130		A.R. No. 100/1897 - தமிழ் - 26 வரிகள்
14.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	-	A.R. No. 100A/1897 - தமிழ் - 5 வரிகள்
15.	மன்னன் பெயர் தெரியவில்லை	-		A.R. No. 100B/1897 - தமிழ் - 11 வரிகள்
16.	மாறவர்ம பராக்கிரம பாண்டிய தேவன்	-	8	A.R. No. 101/1897 - தமிழ் - 12 வரிகள்

மன்னார்குடி - ஜெயக்கொண்டநாதர் திருக்கோயில்

17.	வீரராமநாதன்	13ஆம் நூற்றாண்டு	3	A.R. No. 85/1897 - தமிழ் - 53 வரிகள்
18.	விக்கிரமபாண்டியன்	13ஆம் நூற்றாண்டு	-	A.R. No. 86/1897 - தமிழ் - 75 வரிகள்
19.	மாறவர்ம பராக்கிரம பாண்டியன்	கி.பி. 1130	8	A.R. No. 87/1897 - தமிழ் - 22 வரிகள்
20.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	-	A.R. No. 88/1897 - தமிழ் - 24 வரிகள்
21.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	-	A.R. No. 88A/1897 - தமிழ் - 10 வரிகள்
22.	பாண்டியர்	கி.பி. 1288	12	A.R. No. 89/1897 - தமிழ் - 31 வரிகள்
23.	ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்	கி.பி. 1287	12	A.R. No. 90/1897 - தமிழ் - 31 வரிகள்

மன்னார்குடி - அண்ணாமலைநாதர் கோயில்

24.	திருபுவனச்சக்கரவர்த்தி இராஜேந்திரசோழதேவன் ராஜன்	-	22	A.R. No. 91/1897 - தமிழ் - 2 வரிகள்
25.	முதலாம் இராஜேந்திரன்	கி.பி. 1278	32	A.R. No. 92/1897 - தமிழ் - 14 வரிகள்
26.	மூன்றாம் இராஜேந்திரன்	கி.பி. 1246	32	A.R. No. 93/1897 - தமிழ் - 7 வரிகள்
27.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	-	A.R. No. 93A/1897 - தமிழ் - 53 வரிகள்
28.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	-	A.R. No. 94/1897 - தமிழ் - 62 வரிகள்
29.	வீரபாண்டியதேவன்	கி.பி. 1255	19	A.R. No. 95/1897 - தமிழ் - 23 வரிகள்

திருக்களர் - பாரிஜாத ஈஸ்வரஸ்வாமி கோயில்

29.	வீரபாண்டியதேவன்	கி.பி. 1255	19	A.R. No. 95/1897 - தமிழ் - 23 வரிகள்
30.	சடாவர்ம ஸ்ரீ வல்லபதேவன்	-	25	A.R. No. 642/1902 - தமிழ் - 52 வரிகள்
31.	ராஜராஜசோழன் III	கி.பி. 1216	6	A.R. No. 643/1902 - தமிழ் - 29 வரிகள்
32.	குலோத்துங்க சோழதேவன்	-	3	A.R. No. 644/1902 - தமிழ் - 12 வரிகள்
33.	குலோத்துங்க சோழ தேவன்	-	3	A.R. No. 645/1902 - தமிழ் - 6 வரிகள்
34.	மாறவர்ம குலசேகரதேவன்	-	44	A.R. No. 646/1902 - தமிழ் - 48 வரிகள்

35.	குலோத்துங்க சோழ தேவன்	-	10	A.R. No. 647/1902 - தமிழ் - 16 வரிகள்
36.	குலோத்துங்க சோழ தேவன்	-	12	A.R. No. 648/1902 - தமிழ் - 14 வரிகள்
37.	விருப்பண்ண உடையார் s/o. அரியண்ண உடையார்	1315 + 78	-	A.R. No. 649/1902 - தமிழ் - 38 வரிகள்
38.	குலோத்துங்கன் I	-	4	A.R. No. 650/1902 - தமிழ் - 21 வரிகள்
39.	வீரராசேந்திரன்	-	2	A.R. No. 651/1902 - தமிழ் - 15 வரிகள்
40.	ராஜாதிராஜதேவன்	-	10	A.R. No. 652/1902 - தமிழ் - 13 வரிகள்
41.	வீரபூபதி உடையார்	1343 + 78	10	A.R. No. 653/1902 - தமிழ் - 31 வரிகள்
42.	விற்பன்ன உடையார்	1304 + 78		A.R. No. 654/1902 - தமிழ் - 19 வரிகள்
43.	விற்பன்ன உடையார்	1304 + 78		A.R. No. 655/1902 - தமிழ் - 8 வரிகள்

கோட்டூர் - கொழிந்தீஸ்வரர் கோயில்

44.	பிரதாப் சிங்	கி.பி.		A.R.E.No. 462/1912 - தமிழ் - 28 வரிகள் A.R.E.No. 463/1912 - தமிழ் - 23 வரிகள்

மகாதேவப்பட்டிணம்

45.	துக்கோஜி	2.8.1728		மராட்டியர் கல்வெட்டுக்கள் - தமிழ் எண். 100 - 25 - வரிகள்

46.	மூன்றாம்இராஜராஜன்	கி.பி.	10 1225	A.R. No. 256/1917 - தமிழ்
47.	மன்னன் பெயர் தெரியவில்லை	16ஆம் நூற்றாண்டு	-	A.R. No. 257/1917 - தமிழ்
48.	மன்னன் பெயர் தெரியவில்லை	13ஆம் நூற்றாண்டு	-	A.R. No. 258/1917 - தமிழ்
49.	மன்னன் பெயர் தெரியவில்லை	16ஆம் நூற்றாண்டு	-	A.R. No. 259/1917 - தமிழ்
50.	மாறவர்மன் திரிபுவன சக்கர-வர்த்தி குலசேகர தேவன்	-	22	A.R. No. 260/1917 - தமிழ்
51.	அச்சுதேவராயர்	-	-	A.R. No. 261/1917 தமிழ்
52.	ராஜராஜ தேவர் மூன்றாம் இராசராசன்	கி.பி. 1225	31	A.R. No. 262/1917 - தமிழ்
53.	மாறவர்மன் குலசேகர பாண்டியன்	-	-	A.R. No. 263/1917 - தமிழ்
54.	மன்னன் பெயர் தெரியவில்லை	-	சக 1476	A.R. No. 264/1917 தமிழ்
55.	மூன்றாம்ராஜராஜன்	கி.பி.	31 1225	A.R. No. 265/1917 தமிழ்
56.	முதலாம் ராஜராஜன்	-	13	A.R. No. 266/1917 - தமிழ்
57.	குலோத்துங்கசோழன்	-	3	A.R. No. 267/1917 - தமிழ்


திருமக்கோட்டை - ரெங்கநாதர் பெருமாள் கோயில்

58.	மாறவர்ம குலசேகரதேவன்	-	சிதைந்துள்ளது	A.R. No. 268/1917 - தமிழ்
59.	-	-	-	A.R. No. 269/1917 - தமிழ்
60.	-	-	-	A.R. No. 270/1917 - தமிழ்
61.	-	-	-	A.R. No. 271/1917 - தமிழ்
62.	அச்சுத தேவராயர்	கி.பி.	1458+78	A.R. No. 272/1917 - தமிழ்

செப்பேடுகள்


மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில்

வ.எண்.	அரசன்	காலம்	அளவு	வரிகள்	மொழி
1.	பிரதாப்சிங்	11.5.1757	23.5 செ.மீ x 16 செ.மீ.	26	தமிழ்
2.	பிரதாப்சிங்	12.5.1758	24 செ.மீ x 16 செ.மீ.	18	தமிழ்
3.	பிரதாப்சிங்	26.6.758	23.5 செ.மீ x 16 செ.மீ.	58	தமிழ்
4.	பிரதாப்சிங்	31.1.1760	24 செ.மீ x 16 செ.மீ.	56	தமிழ்



மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் செப்பேடு - 11.5.1757

கோட்டூர்க் கல்வெட்டு



மகாதேவப்பட்டிணக் கல்வெட்டு



16. துணை நின்ற நூல்கள் (தமிழ்)

1. தமிழ் பேரகராதி - (லெக்சிகன்) தொகுதிகள் - மைலாப்பூர் - 1927
2. கலைக்களஞ்சியம் - தொகுதிகள் - தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
3. தமிழ் பேரகராதி - சென்னைப் பல்கலைகழகம்.
4. தமிழக ஊரும் பேரும் - ரா.பி. சேதுப் பிள்ளை.
5. கல்வெட்டுகளில் ஊரும் பேரும் - தா. கிருட்டிணமூர்த்தி - 2001
6. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் - மெய்.சந்திரசேகரன் - 1983
7. சோழர்கள், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் - 1987
8. தமிழ்நாட்டு வரலாறு - மக்களும் பண்பாடும் - கே.கே. பிள்ளை உலகதமிழராய்ச்சி நிறுவனம்.
9. தமிழக வரலாறும் பண்பாடும் - வி.டி. செல்வம்.
10. தஞ்சாவூர் மாவட்டம் - சோமலே - 1961.
11. வரலாற்றில் தஞ்சை - கு. தாமோதரன், தொல்லியல் துறை.
12. தஞ்சை மராட்டிய வரலாறு - 1984 - கே வெங்கட்ரமணய்யா
13. தென்னாட்டுப் போர்கள் - கா.அப்பாதுரை
14. தமிழகக் கோயில் கல்வெட்டு - ஆர். வசந்தகல்யாணி 1004
15. பாண்டியர் வரலாறு, என். சேதுராமன், 1989

16. ஜில்லா சரித்திரம் தஞ்சாவூர் - பி.வி. ஜகதீசஐயர்
17. இராசமன்னார்குடி தலவரலாறு - சோமசுந்தரம் - 1965
18. ஸ்ரீ ராஜகோபாலசாமி கீர்த்தனைகள் - செங்கமலவல்லியார் - 1938 கணபதி அச்சகம் - மன்னார்குடி
19. சண்பகராண்யம் என்னும் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசாமி திருக்கோயில் வரலாறு - ஆர்ராமமேஷகன் 1985
20. செண்டலங்காரன் விறலிவிடுதூது - தஞ்சை சரஸ்வதி மகால் வெளியிடு - புலவர் கோவிந்தராஜனர் 1963
21. எழில்மிக்க இராஜமன்னர் - ஜெய்ராம்ஜி மஞ்சரி - ஜனவரி 1983
22. சோழர் கலைப்பணி - S.R. பாலசுப்பிரமணியம் 1966
23. நுண்கலைகள் - மயிலை சீனி வேங்கடசாமி - 2001
24. சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும் - குடவாயிற் பாலசுப்பிரமணியம்
25. கலை வளர்க்கும் தஞ்சை - கு. தாமோதரன் - தொ. து.
26. விடுதலைப் போரில் தமிழகம் - ம. பொ.சி
27. கல்வெட்டுக்களில் அரசியல் சமயம், சமுதாயம் - மா. இராசமாணிக்கனார்.
28. தேவாரம் - மூன்றாம் திருமுறை - வர்த்தமானன் பதிப்பகம்
29. திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு - 2006 தொல்லியல் துறை
30. இராஜகோபாலசாமி திருக்கோயில் - தல வரலாறு.
31. பாரதியார் கவிதைகள்
32. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 தமிழ்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 1983
33. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 1987
34. தஞ்சாவூர் - கு. பாலசுப்பிரமணியம் - சரஸ்வதி மகால்.

ஆங்கில நூல்கள்

1. Encyclopeadia of India - Geology. H.B. Medlicott Cosmos Publication Delhi - 1994
2. Encyclopeadia of Britanica.
3. Geology of Tamil Nadu and Pondicherry - Geo - Sec - Ind 2001.
4. Hand Book of Geology - J.D. Dana Modern Books, Delhi.
5. The Physical Earth - University of California 1977.
6. Gazater of Indian - Tamil Nadu
7. The Art of South India - K.N. Soundarajan, Delhi 1978
8. South Indian Bronzes C. Sivarama Murthy.
9. Madras District Gazatteer, Tanjore Vol-I - Heming way.
10. Annual Report - South Indian Epigraphy - 1887 onwards.
11. Annual Report of Indian Epigraphy - 1945 - 46 onwards.
12. Temple of India Vol. VIII (ii) Thanjavur - K. Chocalingam
13. Encyclopeadia of Religion and Ethics Ed. James Hartinigs - 13. volumes

வரைபடங்கள்

1. மன்னார்குடி நகரம்
2. மன்னார்குடி வட்டம்
3. Land Use Pattern
4. Crop Area
5. Pamani River
6. Vadavar Lower Section

ஆசிரியரின் பிற நூல்கள்

ஆன்மீகம்

1. **தியானம் பழக 100 தியான சிந்தனைகள்**
2. **அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்**
3. **கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்**
4. **திருவாசகம் திருவாசகம்தான் அரியசெய்திகள் 1000)**
5. **வரலாறு போற்றும் குரு சீடர்கள்**

வாழ்க்கை வரலாறு

1. **நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
2. **புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
3. **இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
4. **நபிகள்நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
5. **குருவுடன் வாழ்ந்தவர்**
6. **வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

தன்னம்பிக்கை

1. **தன்னம்பிக்கை மலர்கள்.**
2. **டென்சனை வெல்வது எப்படி?**
3. **காலமே உன் உயிர்**

4. **வேதாத்திரி மகரிசியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

ஒப்பாய்வு (வேதாத்திரி மகரசி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரசியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரசியும்
3. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிசியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞானஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள்
10. பாமரமக்களின் தத்துவஞானிகள்
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிசியும்.
12. **புத்தரும் வேதாத்திரியும்**
13. **இயேசுவும் வேதாத்திரியும்**
14. **புரட்சி சித்தர்கள்**

ஒப்பாய்வு (தாயுமானவர்)

1. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்
2. தாயுமானவரும் மௌனகுருவும்.
3. தாயுமானவரும் பட்டினத்தாரும்
4. தாயுமானவரும் அருணகிரிநாதரும்
5. தாயுமானவரும் திருஞானசம்பந்தரும்

6. தாயுமானவரும் சனகாதி முனிவர்களும்
7. தாயுமானவரும் திருஞானசம்பந்தரும்.
8. தாயுமானவரும் திருநாவுக்கரசரும்.
9. தாயுமானவரும் சுந்தரரும்
10. தாயுமானவரும் மாணிக்கவாசகரும்,
11. தாயுமானவரும் பத்திரகிரியாரும்,
12. தாயுமானவரும் சுகதேவரும்.
13. தாயுமானவரும் ஜனகரும்.
14. தாயுமானவரும் மார்க்கண்டேயரும்
15. தாயுமானவரும் திருமூலரும்.
16. தாயுமானவரும் திருவள்ளுவரும்
17. தாயுமானவரும் பாரதியாரும்
18. தாயுமானவரும் புத்தரும்
19. தாயுமானவரும் மகாவீரரும்

வேதாத்திரி மகரிசி

1. **வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.**
2. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (மூன்று பாகங்கள்)**
3. **இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி**
4. **தினசரி தியானம்.**
5. **வேதாத்திரி மகரிசி காட்டும் வறுமை**
6. **மனைவிக்கு மரியாதை**
7. **குடும்பச் சிக்கல்களுக்கு வேதாத்திரியம் தரும் தீர்வுகள்**
8. **வேதாத்திரியத்தை ஏற்றால் வெற்றியே**
9. **வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்**
10. **மனைவிக்கு மரியாதை**

தாயுமானவர்

1. தாயுமானவர் பாடல்களில் உவமைகள்
2. தாயுமானவரும் தரும் உயிர் விளக்கம்
3. தாயுமானவர் தாயுமானவர்தான் (அரியசெய்திகள் 1000)
4. தாயுமானவரின் சமரச நெறி
5. தாயுமானவர் ஒரு சித்தர்
6. தாயுமானவரின் மெய்ப்பொருள்
7. தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு
8. தாயுமானவர் பாடல்களில் மனம்
9. தாயுமானவரின் உவமைகள் 100
10. வாசக ஞானத்தால் வருமோ ஞானம்.
11. தாயுமானவர் தரும் பிரபஞ்சக் கோட்பாடு
12. இன்பத் தமிழுக்கு இலக்கியமான தாயுமானவர்
13. தாயுமானவரின் இலக்கிய நயம்

பயணங்கள்

1. ஞாபகம் வருதே ஞாபகம் வருதே
2. அமெரிக்க மண்ணில் ஆறுமாதங்கள்.
3. சிம்லாவில் ஐந்து நாட்கள்

வரலாறு

1. மன்னார்குடி வரலாறு
2. ராஜமன்னார்குடி அரிய செய்திகள் 1000

சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

ஆய்வு நூல்கள்.

1. **நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்.**

நாவல்

1. **வர்ஷா**

சொற்பொழிவுகள்.

Youtube speeches 'vethathiriam banukumar''

இணையதளம் - banukumar.in

Website App

Spiritual thoughts Vethathiriam

முகநூல் .FACE BOOK

MANNARGUDI BANUKUMAR

வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.

தாயுமானவர் தாயுமானவர்தான்

Natives of Mannargudi

Pages - சேரவாரும் ஜெகத்தீரே



* இந்திய - தமிழக வரலாற்றுப் பக்கங்களை உள்ளடக்கிய ஊர்
* தென்னகத்து துவாரகை
* சோழ மன்னர்களின் சொர்க்க பூமி
* நாயக்கமன்னர்களின் கலைக்கூடம்
* பாடல்பெற்ற கோயில்களும் குளங்களும் சூழ்ந்த புண்ணிய பூமி
* ஆண்டு முழுவதும் விழாக்கோலம் கொண்ட நகரம்
* சித்தர்களும், ஞானிகளும், அரசியல் சாணக்கியர்களும், பகுத்தறிவாதிகளும், சான்றோர்களும் வாழ்ந்த, வாழும் ஊர்
* இந்தியாவில் முதல் முதியோர் கல்வி தொடங்கிய ஊர்
* இந்தியாவில் முதல் நடமாடும் நூலகம் தொடங்கிய பூமி
* தென்னாட்டு பர்தோலி
* பென்சனர்கள் நகரம்
* கோட்டையில் முதலில் கொடியேற்றிய பாஸ்யம் அய்யங்கார் பிறந்த பூமி
* கொன்னக்கோல் இசை பிறந்த நகரம்
* பாரதியாருக்கு அடைக்கலம் தந்த ஊர்
* கலைகள் வளர்த்த ஞானபூமி

"ஊரின் பெருமையை உலகுக்கு கொண்டு செல்வோம்"